
Koviloor Digital Library

Acc. No. 44965
R689



சித்தர் உடல் தத்துவம்

எஸ்.பி.ராமச்சந்திரன்

தாமரை நூலகம், சென்னை-26

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

சித்தர்
உடல் தத்துவம்

எழுதியவர்

எஸ். பி. ராமச்சந்திரன்

KOVILOOR ANDAVAR
A. No. 44965
LIBRARY, KOVILOOR

தாமரை நூலகம்
7, N.G.O. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் 23620240

Koviloor Digital Library

தாமரை வெளியீடு எண் : 190

முதல் பதிப்பு : ஜூலை - 1997.

இரண்டாம் பதிப்பு : ஜூன் - 2002.

மூன்றாம் பதிப்பு : ஜூலை - 2014

நான்காம் பதிப்பு: மே 2017

ஐந்தாம் பதிப்பு : ஏப்ரல் : 2022

உரிமைபெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	சித்தர் உடல் தத்துவம்
பதிப்பாசிரியர்	:	எஸ். பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, N.G.O. காலனி 3வது தெரு வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	**ஏப்ரல் : 2022**
உரிமை	:	ஆசிரியருக்கு
நூல் வடிவம்	:	21 செ. மீ. x 14 செ. மீ
அச்சுத்தாள்	:	16.கி. மேப்லித்தோ
எழுத்துக்கள்	:	12 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	184 +XXIV
பிரதிகள்	:	1000
நூல் விலை	:	ரு. 100.00
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை - 34

Koviloor Digital Library

91/4



க. அன்பழகன் எம்.ஏ.,
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் 25-5-97

அணிந்துரை

உலகில் தோன்றிய தொன்மையான மருத்துவ முறைகளுள் ஒன்று சித்த மருத்துவம். இம்முறை குறித்துத் தோன்றிய பாக்கள் - ஏடுகள் எல்லாம் தமிழிலேயே உள்ளதால், இது தமிழர்களிடையே வளர்ந்த தனிமருத்துவம் எனப்படும்.

சித்தர் கண்ட மருத்துவ முறை என்றும். சித்தி தரும் மருத்துவ முறை என்றும் இதற்கு விளக்கம் கூறுவர். சித்தர்களாகச் சிறந்தோர் மனக்கட்டுப்பாடு, மூச்சுப் பயிற்சி (யோகம்) ஆசனம் முதலானவற்றால் அன்றி, தமது அரிய மருந்துகளைப் பயன் படுத்தியும் 'சித்தி' பெற்றனர் என்பர்.

சித்தி பெறுதல் என்பது பலவகை. அதில் 'உணவு' கொள்ளாமலே நெடிது வாழ்தலும் ஒன்று. அதற்கு உடலைப் பக்குவப்படுத்தத் துணையான சித்த மருந்தும் உண்டு.

மேலும் உடலைக் காத்து ஓம்பி - நெடிது வாழும் முறையைச் சித்த மருத்துவம் வழங்கியது. அகமுக நோக்கில் தமது உடல் அகத்துறுப்புக்கள் இயக்கத்தை ஒருவாறு தெளிந்தும் - பிறர் உடல்

Koviloor Digital Library

நோயை - நோய்க் குறிகளைக் கொண்டும், நாடி பார்த்தும் உய்த்துணர்ந்தும் சிகிச்சை வழங்குவதே அம்முறை.

'நாடி' பார்ப்பதில் தேர்ச்சி மிக்கவர், ஒருவரது ஆயுட்காலத்தையும் கணித்தறிய வல்லராக இருந்தனர் என்பது உண்மை. மருத்துவ முறைகளுள் இயற்கை மருத்துவத்தை ஒட்டியதாக, உணவுப் பொருள்களாகும் மூலிகைகளான கீரைகள், கனிகள், கிழங்குகள், பூக்கள், மரப்பட்டைகள், வேர்கள். முதலானவற்றையே மிகுதியும் பயன் கொண்டது சித்த மருத்துவம். அத்துடன் உலோகங்களை அதன் நச்சு நீக்கி, பஸ்பம் ஆக்கிப் பயன் கொண்டனர். காலத்தால் கெடாத கட்டு மருந்து செய்து அதைத் தேனிலோ, நெய்யிலோ தேய்த்து மருந்தாகக் கொடுப்பதும் சித்த மருத்துவ முறையாகும்.

மனித உடலுக்கு ஒவ்வாமையும், பின் விளைவும் ஏற்படுத்தாத மருந்துகள் அவை.

மஞ்சட்காமலைக்குக் கீழாநெல்லியும், கண் புரைக்கு நந்தியா வட்டைச் சாறும், நச்சுக்கடி முறிவுக்கு வாழைப்பட்டைச் சாறும் போன்று, வைத்திய வசதியற்ற நாட்டுப்புற மக்களுக்கும் எளிதாகக் கிடைத்த மருந்துகள் பல. இம்முறையில் பயன்படுத்தப்பட்ட பல மூலிகைகளும் வேர்களும், பூக்களும் இன்று மேல்நாட்டவரால் கைக் கொள்ளப்பட்டு, அவர்தம் (அலோபதி) மருந்துகளாக வடிவம் பெற்று வருகின்றன என்பதை அறிவோர் வியப்புறுவர்.

சித்தமருத்துவம், தமிழர்கள் பலநூறு தலைமுறையாகப் பயன்கொண்ட முறையே ஆயினும், அண்மைக் காலத்தில் நவீன கருவிகளைத் துணைக்கொண்டு நோய்நிலை அறியவும், நவீன கருவிகளால் ஏராளமான அளவில் மருந்து உற்பத்தி செய்யவும், பரவலாக எங்கும் கிடைக்கச் செய்யவும் வல்லதாகியுள்ள 'அலோபதி' மருத்துவ முறை தமிழ் மக்களிடத்திலேயே பெருஞ் செல்வாக்குப் பெற்றுள்ளது. அதன் செல்வாக்கு, நவீன நாகரிகப் போக்குடன் ஒட்டியதாக உள்ளதால் நம்முடைய நாட்டிலேயே சித்த மருத்துவம் ஒதுக்கப்பட்ட நிலைக்கு ஆளாகியுள்ளது.

அறிவியல் சிந்தனை அடிப்படையில், மருத்துவத்தைப் பயன் கொள்வதில் நம்முடைய்து என்றோ அந்நியருடையது என்றோ கருதத் தேவை இல்லை என்பது உண்மையே. ஆனால் அதிகப் பயன் தருவதும், நோயினை முற்றிலுமாக நீக்கவல்லதும், அலோபதி போன்று பின்விளைவுகள் ஏற்படுத்தாததுமான சித்த மருத்துவ முறையின் அருமை உணராமையாலும், அதனைப் பயன்படுத்தும் ஆர்வம் இல்லாமையாலும்.

Koviloor Digital Library

91/4

அதன் பயனை நாம் நாளும் இழந்து வருகிறோம் என்பது வருத்தம் தருவதாகும். தமிழர்களிடம் தோன்றி வளர்ந்த கலைகள் பலவற்றையும் அவற்றின் தனிச் சிறப்பையும் இன்று இழந்து நிற்பது போன்றே, சித்த மருத்துவம் வழங்கிய உடல் நலத்தையும் உயிர் வ்ளத்தையும் நாம் இழந்தவர்களாகவே உள்ளோம்.

இந்நிலை மாற்றப்பட வேண்டின், சித்த மருத்துவத்தின் பயனை மக்கள் அறியச் செய்யவும், தகுந்த சிகிச்சை வழங்க அந்த நாட்களில் பயன்பட்ட அனைத்து மருந்துகளையும் உற்பத்திச் செய்யவும் வழி காணவேண்டும். மேலும் இந்த மருந்துகளை விவரிக்கும் சித்தர் நூல்கள் யாவும் விளக்கமுடன் வெளியிடப்பட்டாக வேண்டும். அந்த நோக்கமுடனேயே 1973இல் கலைஞர் ஆட்சியில் நான் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோது சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை அச்சில் கொண்டுவரத் தகுந்த சித்த மருத்துவ அறிஞர் குழு ஒன்றை அமைத்து அப்பணியைத் துவக்கி வைத்தேன். கலைஞர் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அந்த முயற்சியும் தொடரவில்லை. ஆனாலும் தனிப்பட்ட முறையில் அம்முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருவது பாராட்டப்பட வேண்டியதாகும். அந்த வகையில், சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்புக்களை உள்ளங் கொண்ட திரு. எஸ். பி. இராமச்சந்திரன் அவர்கள், சித்தர்களில் அரிய நூல்களை அச்சிலேற்றி வெளியிடுவதைத் தனது வாழ்நாள் கடமையாக மேற்கொண்டு பலரும் பாராட்டும் வண்ணம் சிறந்த தொண்டாற்றி வருகிறார் என்றறிய நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவரது முயற்சியால் உருவான 'தாமரை நூலகம்' சித்தர் சுவடிகளைத் தேடிப் பெற்று, வணிக நோக்கமின்றி, வெளியிட்டு வருவது நமது நன்றிக்குரியதாகும்.

அவர்தம் அரிய முயற்சியால் 'சித்தர் உடல் தத்துவம் என்னும் நூல் இயற்றப்பட்டு இன்று நமக்குக் கிடைத்துள்ளது. திருமூலர், போகர், யூகிமுனி, அகத்தியர், ஊர்வசி முதலான பல சித்தர்கள் உடற்கூறு, உடல் தத்துவங்கள், இயங்கு ஆற்றல்கள் குறித்து விளக்கிய செய்திகள் இதில் விரிவாக இடம் பெற்றுள்ளன.

பழம்பெரும் சித்தர்கள் பெயரை வேறு சிலரும் மேற் கொண்டிருக்கலாம் எனினும், இந்த நூலில் அறியப்படும் செய்திகள் அக்காலத்தில் உய்த்துணர்ந்த முறைப்படியும், அதற்கு அவர்கள் கருத்திற் கொண்ட ஐம்பூதங்கள், ஆதாரங்கள், தசநாடி, தத்துவங்கள் முதலான வாய்பாட்டின் படியும் எடுத்துரைக்கபட்டுள்ளன.

Koviloor Digital Library

பழங்காலத்தில் பயன்படுத்திய அளவைகள், நாணயங்கள், அவற்றின் பெயர்கள், மதிப்புகள் எல்லாம் இன்று மாறியுள்ளன எனினும் அவை அன்று பயன்கொள்ளப்பட்டதை மறுப்பார் இல்லை. அதே போன்ற சித்த மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றோரும் சித்த மருத்துவ மாணவரும் ஆராய்ச்சி ஆளாரும் அன்று பயன்பட்ட வாய்பாடுகளை மேலும் ஆழ்ந்து சிந்தித்து ஆராய முன்வரவேண்டும்.

அறிவியல் முறையோடு முற்றும் ஒத்துவரவில்லை என்று அவற்றைப் புறக்கணித்துவிடாது, அவற்றால் அறியப்பட்ட, அறியலாகும் உடலியல்பு - இயங்குதிறன் யாவை என்பதைக் கண்டறிய முன்வரவேண்டும்.

அறிவியல் கருவிகட்கு ஆட்படாத சில இயற்கைத்தத்துவங்களை, உடலின் இயங்கு திறனை அறியும் வழிமுறையாக அந்தக் குறியீடுகள் பயன்பட்டிருக்கலாகும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

உலகம் அணுவைக் குறித்து அறிவியல் முறையில் அறியாத காலத்திலேயே, 'அணுவைத் துளைத்து' என்று ஔவை குறிப்பிட்டது போன்று, சில அரிய உண்மைகளைச் சித்தர் பாடலால் நாம் அறியக்கூடும். அதற்கான ஆய்வு வளருவதற்கு ஏதுவாக, திரு. எஸ். பி. இராமச்சந்திரன் அவர்கள் இந்த நூலை இயற்றி வழங்கியுள்ளார்.

அவரது ஆர்வத்தைப் பாராட்டுகிறேன் !
தொண்டு தொடர வாழ்த்துகிறேன் !

அன்பன்,
(ஓ-ம்) *க. அன்பழகன்.*

Koviloor Digital Library

புது. செயப்பிரகாசு நாராயணன்,
சித்த மருத்துவ அறிஞர்,
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

சிறப்பு மருத்துவத்துறை,
அரசினர் சித்தமருத்துவக்கல்லூரி,
அரும்பாக்கம்,
சென்னை 600 106.

நாள்: 7.4.1997

அணிந்துரை

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே."

– திருமந்திரம்

தாமரை நூலகம் வெளியிடவிருக்கின்ற 'சித்தர் உடல் தத்துவம்' நூலைப்படிக்கின்ற வாய்ப்பைப் பெற்றேன்.

தாமரை நூலகம் சித்த மருத்துவ நூல்கள் வெளியிடுவதைத் தொழிலாக மட்டுமல்ல தொண்டாகவும் செய்து வருகிறது என்பதனை அறிந்து மகிழ்கிறேன்.

ஆசிரியர் திரு. இராமச்சந்திரன், திருமூலர் திருமந்திரம், யூகி தத்துவம், அகத்தியர் வாத சௌம்யம், ஊர்வசி பஞ்சரத்தினம், போகர் ஏழாயிரம் ஆகிய நூற்களிலிருந்து உடலைப் பற்றிய அடிப்படைத் தத்துவங்களைத் தொகுத்திருக்கிறார்.

மேலே சொன்ன நூற்களெல்லாம் ஏற்கனவே படித்தவை தானே, புதிதாகப் படிப்பதற்கு என்ன இருக்கிறது? என எண்ணினேன்.

பெரியவர் இராமச்சந்திரனின் பொங்கி வழியும் தமிழுணர்வு வரிக்கு வரி மேலோங்கி நூல் முழுவதையும் என்னைப் படிக்க வைத்தது.

உலகம் உய்ய சித்தர் பெருமக்கள் வழங்கிய இன்பத் தமிழ்க் கல்வியை எல்லோரும் கற்றறிய வேண்டும் என்கின்ற பேரார்வத்தில் திரு. இராமச்சந்திரன் அவர்கள் இந்நூலைத் தொகுத்திருப்புதாக அறிகிறேன்.

தொன்மைத் தமிழகத்தின் அறிவியலாளர்களாகிய சித்தர்கள் உலகம், உயிர், இறைக்கோட்பாடு இவைகளைப் பற்றியெல்லாம் தங்களுடைய தெளிந்த அறிவால் உணர்ந்து, உணர்ந்தவற்றைச் செய்யுட்களாக இயற்றியுள்ளனர்.

Koviloor Digital Library

சித்தர்கள் விளக்கிய கரு உற்பத்தி, வாழ்நாள், உடலை இயக்குகின்ற அடிப்படையான இயற்கை விதிகள் இந்நூலில் திரட்டித் தரப் பட்டிருக்கிறது.

இந்நாளில் சித்த அறிவியல் பற்றியும் அடிப்படைத் தத்துவங்கள் பற்றியும் அறிந்து கொள்வதில் பேரார்வம் ஏற்பட்டிருக்கின்றது. ஆர்வலர்கள் படித்து அறிந்து கொள்கின்ற எளிய தமிழ் உரையோடு இராமச்சந்திரன் இந்நூலை எழுதியுள்ளார்.

சித்தர்கள் கூறியிருக்கும் அறிவியல் உண்மைகளை ஆராயத் தொடங்கினால் பல ஆய்வுக் கூடங்களில், பட்டாளம் பட்டாளமாக விஞ்ஞானிகள் பல ஆண்டுகள் ஆய்வு நடத்த வேண்டியிருக்கும் என் கின்ற ஆசிரியருடைய கருத்து மிகவும் அனுபவ பூர்வமானது.

சித்தர்களுடைய வழி எப்போதுமே புதுமையான வழிதான்! ஐம் புலன்களையும் அடக்குவதைவிட அவற்றைச் சரியான வழியில் நெறிப் படுத்துவது தான் அறிவுடைய செயல் என்கிறார் திருமூலர்.

"அஞ்சும் அடக்கடக்கென்பார் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கி அசேதன மாமென்றிட்
டஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே!"

– திருமந்திரம்

கரு உற்பத்தி (Embryology) பற்றிக் கூறுகின்ற பஞ்சரத்தின நூலின் கருத்துக்கள் இக்காலத்து கருவியல் அறிஞர்கள் கூறும் கூற்றுக்களோடு ஒத்து இருக்கின்ற தன்மை சித்த அறிவியலின் ஆழத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு.

ஆனால் அதே நேரத்தில் சில உண்மைகளை ஆய்வுக்கூட பரிசோதனைகள் மூலமாகக் கண்டறிய முடியாது. உய்த்துணர்தலின் மூலமாகவும் அனுபவத்தின் மூலமாகவும் மட்டுமே அறிய முடியும் என்பதை நாம் மறக்கலாகாது.

மூளைக்குச் செல்லுகின்ற பெரு நரம்புகள் கத்தரிக்கோல் மாறலாகச் செல்லுகின்றன என்ற உண்மை நவீன உடற்கூறு அறிஞர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான்.

உடலில் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. முறையான மூச்சுப் பயிற்சி மூலமாகவும், உடற்பயிற்சி, மனப்பயிற்சியின் மூலமாகவும்

Koviloor Digital Library

இவ்வாதாரங்களின் வழியாகப் பேராற்றலை எழுப்ப முடியும் என்பது. சித்தர் கருத்து.

ஆறு ஆதார நிலைகளை அனுபவத்தால் அறிய முடியுமே தவிர பிணக்கூறு ஆய்வு செய்து கண்டறிய முடியாது.

உடல் தத்துவங்களை தொண்ணூற்றாறாக வகைப்படுத்தியுள்ளனர் சித்தர்கள். அவற்றை சித்தர்கள் வழிநின்று எளிய தமிழில் உரையோடு விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

மூல நூற்களின் செய்யுட்களை நிறையத் தாங்கியிருக்கின்ற இந்நூல் சித்தமருத்துவ பட்டதாரிகளுக்கும் ஒரு நல்ல துணை நூலாகப் பயன்படும் என்பதே என் கருத்து.

கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்ட சித்த மருத்துவ நூற்களைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கின்ற இராமச்சந்திரன் தொண்டு தொடர வாழ்த்துகிறேன்.

ஆன்மீக இயலும் அறிவியலும் கலந்த ஒரு கல்வி சித்த அறிவியல். இதில் அறிவியல் தத்துவங்களைத் தனியே தொகுத்து சிறந்த ஆங்கில அறிஞர்களின் ஒத்துழைப்போடு தாமரை நூலகம் ஆங்கிலத்திலும் வெளியிட முன்வர வேண்டும். சித்த மருத்துவத்திற்குத் தேசிய கல்வி நிலையம் அமைத்திட தமிழக அரசு பெருமுனைப்போடு செயலாற்றி வருகின்ற இந்த நேரத்தில் திரு. இராமச்சந்திரன் போன்ற தமிழ்த் தொண்டர்கள் ஆங்கிலத்தில் சித்த மருத்துவ நூற்களை வெளியிடுகின்ற அருந்தொண்டினைச் செய்தால் அது வரலாற்றுச் சாதனையாக அமையும் என்பது என் கருத்து.

"ஒண்டமிழ்த்தாய்ச் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்."

– பாவேந்தர்

55, பாஞ்சாலி அம்மன்
கோவில் தெரு,
அரும்பாக்கம்,
சென்னை – 600 106.

புது. செயப்பிரகாசு நாராயணன்.

Koviloor Digital Library

டாக்டர் சே. பிரேமா, எம்.டி.(சி).,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்.

சித்த மருத்துவத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

நாள் : 23.3.1997

அணிந்துரை

"அண்டத்தில் உள்ளதே பிண்டம்
பிண்டத்தில் உள்ளே அண்டம்.
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே"

(சட்டைமுனி ஞானம்)

உலகின் அசைவுகள், தன்மைகள் மாற்றங்கள் அனைத்தும் மனிதர், மிருகங்களின் உடல்களிலும் நிகழ்கின்றன. இவற்றைப் பார்த்தறிந்து. அதற்கேற்ற முறையில் தேகத்தைப் பாதுகாத்தல் வேண்டும் என்பது சித்தர்களின் தத்துவம்.

"முப்பதும் முப்பதும் முப்பத்தாறுவரும்
செப்பமதிலுடைய கோயிலுள் வாழ்பவர்
செப்பும் மதிலுடைக் கோவில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத்தார்களே"

(திருமந்திரம் பா.எண்.159)

96 தத்துவங்களைக் கொண்டது இவ்வுடல். இதன் இயற்கை நிலை மிகுந்தாலும், குறைந்தாலும் உண்டாகும் விளைவுகள் இவற்றை அறிந்து மக்கள் செயல்பட வேண்டும்.

ஆனாலும் உடல் தத்துவத்தை அறிந்து கொள்ளுவது அவ்வளவு எளிய செயலன்று. உடல் தத்துவத்தைப் படிக்கும்போது அதன் கூறுகளை எளிமையாகக் கூறிப் படிப்போர் மனத்தில் பதியவைத்தல் ஒரு கடினமான வேலை உடல் தத்துவத்தை ஒரு வரையறைக்குள் கொண்டு வந்து இவ்வளவுதான் என அறுதியிட்டுக் கூற இயலாது.

அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளில் 'உடல் தத்துவம்' என்பது ஒரு பாடப்பகுதி. மற்ற பாடங்களில் நடைபெறும் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் வாங்கும் மாணவர்கள்கூட இப்பாடத்தில் அவ்வளவு மதிப்பெண்கள் பெறுவது இல்லை. ஏனெனில் இது ஒரு தெளிவில்லாத

Koviloor Digital Library

பாடப் பகுதி. உடல் தத்துவத்தைப் பயன்படுத்தி நோய் நாடுவதோ நோய் நீக்குவதோ இயலுவதில்லை. உடல் தத்துவம் என்பது படித்து மறந்துவிடும் ஒரு சுவையில்லாத பாடமாகத் தனித்து நிற்கிறது. இதனை மற்ற பாடப் பகுதிகளுடன் இணைந்தறிந்து செயலாற்ற வேண்டும். இதுவே நம் முன்னோர்களான சித்தர் எனப்படும் அக்கால அறிவியல் அறிஞர்களின் கூற்று இதனை விடுத்து. நோயறிதலிலும், மருந்துகள் வழங்குதலிலும் நவீன மருத்துவத்தின் பாணியைக் கடைப்பிடித்து வருகிறோம். இதுவே சித்த மருந்தகள் பல செயலாற்ற முடியாமல் போவதற்குக் காரணமாக அமைகிறது எனலாம்.

உடல் தத்துவங்கள் என்ற முறையில் பூதங்கள், பொறிகள், தன் மாத்திரைகள், ஆறாதாரங்கள், தசவாயுக்கள், தசநாடிகள் முதலிய புற உடம்பு, அக உடம்பு பற்றிய உறுப்புகள் அவற்றின் செயல்களைச் சித்தர்கள் சூக்குமமாக விரித்துரைத்துள்ளார்கள். திருமூலர் தத்துவங் களையும், யோகம் முதலிய நெறிகளையும் விரித்துக் கூறுவார். அவற்றை எல்லாம் தொகுத்துச் சில தலைப்புகளில் இந்நூல் படிப்போர் விளங்கிக் கொள்ளும் முறையில் விளக்குவது போற்றத்தக்கது. தொடக்க நிலையில் சித்தர்கள் பற்றியும் உடல் கூறுகள் பற்றியும் அறிய விரும்புவோர்க்கும் சித்த மருத்துவம் பயிலும் மாணவர்க்கும் இந்நூல் பெரிதும் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

உடல் தத்துவம் என்னும் பெருங் கடலை இங்கே சிறு குடுவையில் அடைத்துக் கொண்டு வந்திருக்கிறார் உயர்திரு. எஸ்.பி. இராமச்சந்திரன் அவர்கள். படிப்போர்க்கு சுவை குன்றா வண்ணம் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து எளிய முறையில் விளக்கிச் சென்றுள்ளார். சித்தர் தத்துவங் களுக்கு இந்நூல் இன்னுமொரு அணிகலன். இதுபோன்ற சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை அச்சுநூலாகக் கொண்டுவரும் பணியில் சிறப்புற்று விளங்கும் உயர்திரு. எஸ்.பி. இராமச்சந்திரன் அவர்கள் மேலும் பல சித்த மருத்துவ நூல்களை உலகுக்கு அளிக்க வேண்டும். இத் தொண்டினை பாராட்டி மகிழ்கின்றேன்.

வணக்கங்களுடன்,

சே. பிரேமா.

Koviloor Digital Library

டாக்டர் அரங்க. இராமலிங்கம்
எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி.,
தமிழ் இணைப்பேராசிரியர்

அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
சென்னை பல்கலைக்கழகம்
சென்னை 600 005

நாள் : 18.4.1997

அணிந்துரை

அருள்ஞானப் பெருவெளியில் அசையா நிலையில் சிவப் பரம்பொருள் நின்று ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. தனிப்பெருங் கருணை காரணமாக 'சிவம்' சக்தியாக மாறி அசைவை உண்டாக்கிக் கொண்டு விண்ணிலிருந்து மண்ணுக்குக் கீழிறங்கி வருகிறது. 'அ' கரப் பொருள் 'உ' கரமாக வடிவெடுக்கும் அதியற்புதச் செயல் நிகழும்பொழுது விந்து நாதமாகவும் ஒளி ஒலியாகவும் செயலுக்கு வருகின்றது. அறிவான தேஜோமயானந்தமாக நின்று ஒளிரும் அந்த அறிவுப்பெரும்பொருள் கோடிக்கணக்கான உயிர்களைப் படைத்தும், காத்தும், அருளியும், அழிக்கின்றது. தான் படைத்த பலகோடி உயிர்களுக்குள் மானுட தேகத்தையே தான் குடியிருப்பதற்குரிய இடமாக அவ்வறிவுப்பொருள் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளது. பேரறிவுப் பெரும்பொருளாக இருக்கும் கடவுளை அறிந்து கொள்ளுவதற்குக் (கடத்திற்குள்ளே உறைந்து ஒளிரும்) கடமாகிய உடம்பினைப்பற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் தோன்றிய சித்தர்கள் அனைவரும் கடத்திற்குள்ளே உறைந்துள்ள இறைவனைக் காண்பதற்கு இடமாகிய உடம்பினைப் போற்றியுரைத்துள்ளனர். பிண்டத்தை உணர்ந்தால் அண்டத்தையும் உணரலாம். அண்டத்தையும் அதில் அடங்கியுள்ள அனைத்துக் கோள்களையும் அசைத்து இயக்கிக் கொண்டிருக்கும் அவ் ஆதிப்புள்ளியையும் அறியலாம். அதற்கு ஒரு-மை (மெய்) - உள்ளே ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கி உடம்பின் இயல்பை - இயற்கையை உணர வேண்டும்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே" (725)

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" (724)

Koviloor Digital Library

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே" (1823)

எனத் திருமூலரும்.

"உடம்பினைப் பெற்ற பயனாவது எல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்" (11)

"உணர்வாவது எல்லாம் உடம்பின் பயனே
உணர்க உணர்வுடையார்" (12)

"மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு" (16)

என அவ்வையாரும் உணர்த்தியுள்ளனர்.

சித்தர் பாடல்களில் பொதிந்துள்ள உடல் தத்துவங்களை மிகச்சிறப்பாகத் தொகுத்துரைத்துள்ளார். திரு. எஸ்.பி. இராமச்சந்திரன் அவர்கள். சித்தர் பாடல்களில் ஏமாற்றும் எளிமை மிகுதியாகக் காணப்படும். அவர்கள் சொல்ல வந்த பொருளை மறைத்து வேறுபொருள் தெரியும்படியாகப் பாடியிருப்பர். பாமர மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்து வழக்கிலிருக்கும் சாதாரண சொற்களைப் பயன்படுத்தியிருப்பர். இதைக் கொண்டு இவர்கள் காலத்தால் பிற்பட்டவர் எனக் கூறுதல் முறையாகாது. இதனை நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளார் ஆசிரியர். உயிரும் உடலும் இணைந்திருக்கும் தன்மை மிக விரிவாகவே விளக்கப்பெற்றிருக்கிறது. உயிர் கருவாகி, உருவாகி மானுடதேகம் இருக்கிறவரை அதன் பல்வேறு பரிமாணங்களையும் மிகத் தெளிவாகவே நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

பட்டினத்து அடிகள் 'உடற்கூற்று வண்ணம்' பகுதியில் கருப்பிடித்த நாள் தொடங்கி இந்த உடல் வளர்ந்து வெந்து சாம்பலாகும் வரை மிகத்தெளிவாகவே பாடியுள்ளார். உடம்பிற்குள்ளே இயங்கும் காற்றை கணக்கறிந்து இயக்கவல்லவர் கூற்றினை உதைக்கும் உபாயம் அறிந்தவர்களாவர். இந்நுட்பத்தினை எல்லாம் தெளிவாகத் திருமூலர் உரைத்திருப்பவற்றை எல்லாம் நூலாசிரியர் அரிதின் முயன்று எடுத்துக்காட்டி உணர்த்தியுள்ளார்.

உடம்பிற்குள்ளே உணர்வு நிலையில் அமைந்துள்ள ஆறு ஆதாரங்களையும் பஞ்சபூதங்களோடு தொடர்புப் படுத்தி விளக்கியிருப்பது நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக்

Koviloor Digital Library

காட்டுகிறது. "ஆறு ஆதாரங்களும் ஒன்றே தான். அது யோக சாதனையில் பலபடிகளைக் கடந்தவர்களுக்கு. ஆனால் ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் அதை அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது". (பக்-56) என ஆசிரியர் உரைத்திருப்பது அவரின் பரந்துபட்டப் பட்டறிவினையும் படிப்பறிவினையும் காட்டுகிறது.

தச நாடிகள் பற்றியும் பத்து வாயுக்கள் பற்றியும் 96 வகை தத்துவங்கள் பற்றியும் மிகத் தெளிவாகவே நூலாசிரியர் புலப் படுத்தியுள்ளார். கரு - தன் மேல் (கருடன் மேல்) காத்துவரும் காக்கும் கடவுளாகிய கண்ணபிரானை 'ஓம் நமோ நாராயணா' எனச் செபித்து வணங்கும் நுட்பத்தையும் (பக்-146) மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். மேலே இரு புருவங்களுக்கும் நடுவில் வட்டமாக முட்டை போல் நிற்கும் வளையம் ஒன்று. இதழ்கள் இரண்டு (பக்-154) என ஆக்கினை சக்கரத்தினை நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளார். அங்கு மனோன் மணித்தாய் வீற்றிருப்பதையும் அதை உணர்ந்து மயிர்ப்பாலம் நெருப்பாறுகளைத் தாண்டினால் நிராதாரமாக நின்று ஒளிரும் ஞானமணித்தாயைக் கண்ணாரக் காணலாம். இதுபோன்ற தேவரக சியங்களைப் புலப்படுத்தியுள்ள நூலாசிரியரை எத்துணைப் பாராாட்டினாலும் தகும்.

'கற்பம் உண்ணாமல் காய சித்தி பெறாமல் ஞானப் படிகளில் ஏறிச் செல்லவே முடியாது' (பக்- 180) என ஆசிரியர் மிகத் தெளிவாகவே இறுதியில் உறுதியாகவே கூறியுள்ளார். ஆனால் கற்பத்தையும் காய சித்தியினையும் உணர்ந்துக் கொள்வதற்கு திருவருளாகிய குருவருள் தேவை. எது எப்படியிருப்பினும் சித்தர் பாடல்களில் பொதிந்து மறைந்துள்ள உடல் தத்துவங்களை அரிதின் முயன்று வெளிக் கொணர்ந்துள்ள நூலாசிரியர் எஸ்.பி. இராமச்சந்திரன் தமிழர்களின் வாழ்த்திற்குரியவர். 190 நூல்களுக்கு மேல் சித்தர் இலக்கியங்களைப் பதிப்பித்துள்ள நூலாசிரியரை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.

தமிழ்ச் சித்தர்களின் பாடல்களைப் பதிப்பிக்கும் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ள நூலாசிரியரின் தொண்டு மேலும் மேலும் தொடர்ந்து சிறந்திட சித்தர்களின் அருள் அமிழ்தமாய் அவருக்குக் கிட்டிட இறையருளை இறைஞ்சுகிறேன்.

314. அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

அன்புடன்,
அரங்க. இராமலிங்கம்.

Koviloor Digital Library

டாக்டர் சேதுராமன், B.Sc., B.I.M.S.,
அரசு சார்புச் செயலாளர்.

ஊரக வளர்ச்சித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

நாள் : 24.3.1997

அணிந்துரை

தமிழகம் ஐந்து மண்டலங்களாக பரந்துவிரிந்து இருந்தது. அம்மண்டலம் முழுதும் ஞானப்பயிர் தழைத்து இருந்தது. அந்த ஐந்து மண்டலங்களும் ஐந்து தத்துவமே என்பது கீழ்கண்ட திருமந்திரச் செய்யுளால் அறியக் கிடக்கிறது.

தமிழ் மண்டலமைந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகந் திரிவார்
அவிழுமனமு மெம்மாதி யறிவுத்
தமிழ் மண்டல மைந்துத் தத்துவமாமே.

சங்க காலத்திற்கு முன்பே தமிழ் மருத்துவம் சித்தர்களால் வளர்ந்துள்ளது. திருவள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தில் "நூலோர் வளி முதலாக எண்ணிய மூன்று மருந்து நான்கு கூறுபடும் என்றும், உடம்பு பெற்றார் நெடிது உயக்கும் ஆறு'' என்றும் பல மருந்து நுட்பங்களைக் குறித்துள்ளார். அவர் காலத்திற்கு முன்பே மருத்துவத்தில் மிக உயர்ந்த நிலையில் சித்த மருத்துவம் விளங்கியுள்ளது தெளிவாகிறது. இம்மருத்துவம் உண்டாகிய காலத்தை வரையறுக்க இயலாமல் உள்ளது. இதை காலவரையறைக்கு உட்படாததால் அநாதி என்று கூறலாம். சித்த மார்க்கம் காலவரையில் அகப்படாமல் உள்ளது. ஒப்பில் ஏழுகோடி யுகமிருந்தேன் என்றும் ஊனமில் ஒன்பது கோடி யுகத்தினுள் ஞானப்பாலூட்டி நாதனை அர்ச்சித்து நானும் இருந்தேனே என்று கூறும் சித்த ஞானிகளுக்கு அழிவில்லை. வருவதும் இல்லை போவதும் இல்லை. இறப்பு பிறப்பு இல்லை குணம் இல்லை இதனை திருமூலர் கீழ்கண்டவாறு குறிக்கின்றார்.

"பேசுவதொன்றில்லை வருவதுதானில்லை
சாவதொன்றில்லை தழைப்பது தானில்லை
தாமதமில்லை தமருகத்திநொளியாவதுமில்லை
அறிந்து கொள்வார்க்கே''

Koviloor Digital Library

எனவே உடல் அழியாமல் காக்கும் நெறியினை தமிழ்ச் சித்தர்கள் கண்டு உலகுக்கு அறிவித்துள்ளனர். உடல் இறந்த பின் பஞ்ச பூதங்களும் அதனதன் கூற்றில் கலந்து விடும். அவ்வாறாயின் பிறப்பு இல்லை என்க. உலகம் அணுவின் சேர்க்கை என்க. உடலும் அவ்வாறே. பஞ்ச பூதங்களால் ஆன இவ்வுடலை இந்த சக்திகள் பிணைத்து பிடித்துக் கொண்டுள்ளன. பஞ்ச பூதங்கள் மண் ஒன்றேகால் பகுதியும், தண்ணீர் ஒன்றரை பகுதியும் நெருப்பு ஒரு பகுதியும் காற்று முக்கால் பகுதியும், ஆகாயம் அரைப் பகுதியும் பரந்து இயாகம் செய்கிறது. சிவசக்தியின் கிரியா இயக்கத்தால் பஞ்ச பூதங்களும் தம்தமது நிலை திரிபுற பிறப்பு தோன்றும். இதனை நோக்குக.

"பரமாய சத்தியுட் பஞ்சமா பூதம்
தறமாறித் தோன்றும் பிறப்பு"

என்றும், இச்சையின் பொருளாக ஐம்புலன்களினில் ஏற்படும் அசைவு காரணமாக மனம் தன்நிலை குலைவதால் உடலில் ஐம்பூதங்களின் அளவு முறை பிறழந்து கெடும் என்பதை

"மனத்தொடு உறுபுத்தி ஆறாதாரம்
சித்தம் அனைத்துமில்லை"

என்று ஔவையாரும் தம் ஞானக் குறளில் குறிப்பிட்டுள்ளமை காண்க.

சித்தர்கள் உடலை ஓம்பவதும் காப்பதும் முக்கியம் என்று கருதினர், உயிர் மெய்ஞ்ஞானம் அடைவதற்கு உடல் வேண்டும். எனவே உடலைக் காக்க வேண்டுமானால் அதன் இயல்பு தத்துவம் அறிய வேண்டும். புலவர் ஏறு இராமச்சந்திரன் இதனை தமது நூலாகிய சித்தர் உடல் தத்துவத்தில் மிகச் சிறப்பாக வழங்கியுள்ளார்கள்.

இந்நூல் நுவலும் பொருள் மற்றும் தலைப்புக்கள் தம் உட்கருத்துக்களின் விளக்கத்திற்கு பொருத்தமாக இருப்பது ஆசிரியரது நுண் மாண் நுழை புலத்திற்கும், பட்டறிவுச் சிறப்பினையும் உலகுக்கு உபகாரமாக வழங்கிய உண்மை நெறி விளக்கத்தினை வெளிப்படுத்தும். இவர் இந்நூலின்கண் போகர், திருமூலர், அகஸ்தியர். யூகிமுனி,ஊர்வசி ஆகிய சித்தர்களின் நூலிலிருந்து பற்பல பாடல்களும் பாடற் பகுதிகளும் மேற்கோள் காட்டியுள்ளது மக்களை நம்பிக்கையோடு இந்நெறியில் ஒழுகிப் பயன் பெறச்செய்யும்.

இந்நூலின் கண் உடலுக்கும் உயிர்க்கும் உள்ள பிணைப்பு, கருத்தோற்றம். உடல் அமைப்பு, அதன் தத்துவம். பஞ்ச பூதத்தின் தன்மை, ஆறாதாரம் பற்றிய விளக்கம், தசவாயுக்கள். மூன்று குணங்கள்,

Koviloor Digital Library

துரியநிலை. வாசியோகம், குருபதம் போன்றவைகளை சிறப்பாக சித்தர் பாடல்களை கொண்டு விளக்கி உள்ளார்.

ஆறாதாரம். மூன்று மண்டலம், மூன்று குணங்கள், சொல் ஐந்து, கருவி ஐந்து. வசனம் ஐந்து, வினை இரண்டு, நாடி பத்து. தாது ஏழு, மலம் மூன்று, வியாதி மூன்று போன்றவைகளை முப்பத்தாறு தத்துவங்களையும் விளக்கியுள்ளார், எனினும் மனம் பிரம்மத்துடன் இணைய வேண்டும் என்று முடிவாகக் கொள்ளப்படுகிறது.

இறப்பில்லா இன்ப வாழ்வு எய்த விழைவோர் இந்நூலைத் துணையாகக் கொள்ளலாம், சித்தமருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு தத்துவம் விளக்கும் நூலாகவிது அமையும், திருமூலரும் திருமந்திரத்தில்

"தன்னையறியத் தனக்கொரு கேடில்லை
தன்னையறியாமற்றான் கெடுகிறான்
தன்னையறியு மற்றவையறிந்தபின்
தன்னையர்ச்சிக்கத் தானிருந்தானே"

தன்னையறிந்து அர்ச்சிக்க உடல் தத்துவம் உணர்ந்து அதனை நிலை நிறுத்த கூடிய தெளிவும் வன்மையும் பெற்றிருக்க வேண்டும். இதற்கு திரு இராமச்சந்திரன் ஆக்கிய நூல் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. இவர் சித்தர் தத்துவத்தின் பால் கொண்டுள்ள பற்று பல சித்த மருத்துவ நூல்களை. வெளிக் கொணர்ந்து தமிழ்ப் பண்பாட்டிற்கும், தமிழ் மருத்துவத்திற்கும் தனிமனிதராகச் செய்து வரும் பணி ஒப்பில்லாதது, அரசு செய்ய முடியாத ஒரு பணியை இவர் தனி மனிதராக செய்து சாதனை படைத்துள்ளார். இவரது தமிழ்ப் பற்றும் சுவைத்துச் சுவைத்துக் கவிநயம் காணும் பண்பும் இந்நூலில் பல இடங்களிலும் விரவியுள்ளன. வளர்க இவர் தொண்டு. இவர் பன்னெடுங்காலம் வாழ்ந்து இவரது பணியினை தொடர இறையருள் பாவிக்கட்டும்.

சேதுராமன்

Koviloor Digital Library

பதிப்புரை

சித்தர்களின் நூல்களைப் பயிலும்பொழுது ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு நுணுக்கமாகவும் ஆழமாகவும் அவர்கள் சிந்தித்துள்ளனர் என்பதைக் கண்டு பெரிதும் வியப்படைகிறோம்.

காயசித்தி, வாதசித்தி, யோகசித்தி, ஞானசித்தி என்று எல்லைக் கோடுகளை வகுத்துக் கொண்டு ஒவ்வொரு துறை பற்றியும் ஏராளமான பாடல்கள் - வெளிப்படையானவை சில - மறைப்புச் சொற்களால் மறைக்கப்பட்டவை சில என்றிப்படியாக ஏராளமான பாடல்களைப் பொழிந்துள்ளனர்.

சித்தர்களின் நூல்களைப் பற்றிய பரிமாணங்களை அறியாதவர்களே சித்தர்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்தார்கள். பதினாறாம் நூற்றாண்டில் இருந்தார்கள் என்று பேசுவார்கள். செடி, கொடி, புல், பூண்டிலிருந்து, கற்கள், மணல், மண், மலை - அவற்றில் உண்டாகும் உப்புக்கள் பாஷாணங்களைப் பற்றியெல்லாம் சித்தர்கள் கூறும் வேதியல் விளக்கங்களைப் படிக்கும்பொழுது ஒரு மனிதன்அல்லது அவன் தலைமையில் உள்ள ஒரு குழு ஒரு நூற்றாண்டில் அல்லது ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடித்திருக்கக் கூடிய காரியமா இது என்று மலைத்துப் போகிறோம்.

சித்தர்கள் செடி கொடிகளைப் பற்றிக் கூறியிருக்கும் வேதியல் உண்மைகளை ஆராயத் தொடங்கினாலே பல ஆய்வுக் கூடங்களில் பட்டாளம் பட்டாளமாக விஞ்ஞானிகள் பல ஆண்டுகள் ஆய்வு நடத்த வேண்டியிருக்கும்.

சித்தர்கள் காயசித்திக்கே முதலிடம் கொடுத்தனர். சுவற்றை வைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுத வேண்டும். 'உடம்பார் அழியின் உயிரார் அழிவார்'. பிறகு அதோடு எல்லாம் முடிந்துபோகும். உயிரைக் காப்பாற்றிக் கொண்டுதான் ஆன்ம விடுதலை என்ற குறிக்கோளை நோக்கி முன்னேற வேண்டும். அப்படியென்றால் உடம்பைக் காப்பாற்றியே ஆக வேண்டும். காயத்தைச் சித்தி செய்தே ஆக வேண்டும் என்று நெறிவகுத்தனர்.

Koviloor Digital Library

இவ்வாறு சித்தர் நெறியில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்ட உடல் -

அதை அணு அணுவாக ஆராய்ந்தனர். கருவில் உருவாகும் பொழுதே ஒரு மனிதனின் ஆயுள் எவ்வளவு? ஆரோக்கியம் எப்படி? அவன் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பவை எல்லாம் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன என்று கூறுகிறார் திருமூலர்.

இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆய்வுகள் நடத்திய போதிலும் எத்தனை அதிசயக் கருவிகள் கண்டு பிடித்த போதிலும் சித்தர்கள் தொட்ட இடங்களை மேல்நாட்டு மருத்துவ வல்லுநரால் சென்று தொடவே முடியாது.

ஏனென்றால் சித்த மருத்துவம் ஒன்றுதான் எந்த ஒரு பொருளையும் அது உலகின் ஆரம்ப காலத்தில் எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலைக்குக் கொண்டு போகும் முறையில் வெற்றி பெற்றது. உலோகங்களைச் செந்தூரங்களாகவும், பஸ்மங்களாகவும் உடல் ஏற்றுக் கொள்ளும் நிலைக்குக் கொண்டு போகும் முறையை முதன் முதலாகக் கண்டு பிடித்தது சித்த மருத்துவம் தான்!

அந்நிலையையும் தாண்டி இந்த உலகம் வாயுக்களாலும், ஆவிகளாலும் சூழப்பட்டு தீத்துண்டுபோல் சூரியனைச் சுற்றிக் கொண்டிருந்த காலத்தில் உலோகங்களும், உப்புக்களும் எப்படி இருந்திருக்குமோ அப்படித் தயார் செய்ய வேண்டும் என்ற முறையைக் கூறியதும் சித்த மருத்துவம்தான். இது இந்நாள் வரை மேல் நாட்டவரால் ஆராயப்படவில்லை.

சித்தர்கள் கூறும் குரு மருந்துகள் இவ்வகையைச் சேர்ந்தவையாகும். ஒரே ஒரு வேளை மருந்தால் புற்றுநோய், குஷ்டம் போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்திய சித்தர்கள் இருந்தனர்.

இப்படிப் பட்டவர்கள் அண்மைக் காலம் வரை இருந்தார்கள் என்பதைக் கேள்விப்படலாம், இன்றும் உள்ளனர். ஆயினும் அவர்கள் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளுவதில்லை.

உலகத்தில். முதல் மருத்துவம் சித்த மருத்துவமே! தலையாய மருத்துவமும் சித்த மருத்துவமே! இதை நிலை நாட்ட வேண்டுமென்றால் சித்த மருத்துவங்கள் தங்களுக்குள் வளர்த்துக் கொண்டிருக்கும் தீராப்

Koviloor Digital Library

பகைமையினையும், போட்டி பொறமைகளையும் கைவிடவேண்டும். நான்தான் பெரியவன் என்ற அகங்காரத்தைக் கைவிடவேண்டும். சித்தர்கள் உலகத்திற்கு உதவும் பொருட்டு அருளிய சித்த மருத்துவத்தை ஒளிவு மறைவு இன்றி எல்லோரும் அறிந்து கொள்ள உதவ வேண்டும். எதிர்காலம் அதற்கு உதவும் என்று நம்புகிறோம்.

இந்த நூலுக்குச் சிறப்பான ஒரு அணிந்துரை நல்கிய பெருந்தகை நமது கல்வி அமைச்சர் க. அன்பழகன் அவர்களுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவது என்பது விளங்கவில்லை. அவர் ஆரம்பித்து வைத்த பணியைத் தொடரும் நான் அவருக்கு ஒருவகையில் உடன்பிறவா இளவல் ஆவேன் என்ற பாசத்தாலோ என்னவோ தமது ஆயிரக் கணக்கான அலுவல்களைப் பொருட்படுத்தாமல் நூலை முழுவதும் படித்துப் பார்த்து தக்கதோர் அணிந்துரை வழங்கியுள்ளார்.

மேலும் அணிந்துரைகள் வழங்கிய ஆன்றோர் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, துறைத் தலைவர் புது. செயப்பிரகாசு நாராயணன் அவர்களுக்கும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர். எஸ். பிரேமா எம்.டி., அவர்களுக்கும், சென்னைப் பல்கலைக்கழகம், இணைப் பேராசிரியர் அரங்க. ராமலிங்கம் அவர்களுக்கும், தலைமைச் செயலகம் ஊரக வளர்ச்சித்துறை சார்புச் செயலாளர் டாக்டர். சேதுராமன் அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கு தமது எல்லா அலுவல்களையும் விட்டு விட்டு இந்நூல் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காகப் பிழை திருத்துவது முதல் அணிந்துரைகள் பெறுவது வரை எல்லாப் பணிகளையும் தமது முதற்கடமையாகக் கருதி அரும்பாடுபட்ட நண்பர். குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர் சு.சௌந்தரராசன் எம்.ஏ., எம்.எட்., (சௌந்தர்) அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழின் தொன்மைக்கும் பெருமைக்கும் கற்கண்டு போன்ற தனிச்சுவைக்கும் களனாக விளங்கும் பாடல்கள் இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. படிப்பவர்கள் பயன் பெற வேண்டும்.

நாள்: 30.5.1997

எஸ்.பி. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

Koviloor Digital Library

சித்தர் உடல் தத்துவம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

இந்நூல் அமைப்புக்கு உதவிய நூல்கள்

திருக்குறள்

திருமூலர் திருமந்திரம் 3000

திருமூலர் வைத்தியம் 1000

திருமூலர் கருக்கிடை 600

அகஸ்தியர் வாத செளமியம் என்னும்
செளமிய சாகரம் 1200

அகஸ்தியர் தத்துவம் 300

யூகிமுனிவர் தத்துவ ஞானம் 1000

ஊர்வசி பஞ்சரத்னம்

போகமுனிவர் சத்த காண்டம் என்னும்
போகர் 7000

போகர் ஞான சூத்திரம் 100

கொங்கணவர் வாத காவியம் 3000

டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதி.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

கடவுள் துணை

சித்தர் உடல் தத்துவம்

கல்தோன்றி...

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய தமிழ் என்பர் - தமிழின் தொன்மை கூறுவர்.

மண்தோன்றாக் காலத்தில் மனிதன் எங்கிருந்தான்? அப்படி யென்றால் தமிழ்?

நீளப்பா பிர்மாவில் வானந்தோன்றி
நிலையான வானத்தில் வாயுதானே ...

- போகர் ஞான சூத்திரம் 100
3ஆம் பாடல்

வானந்தோன்றிய காலத்திலிருந்தே தமிழன் ஆய்வு செய்யத் தொடங்குகிறான். நாம் காணும் அண்டங்கள் சந்திரன், செவ்வாய், சுக்ரன், குரு, சனி, புதன் அனைத்தும் ஒளிப்பிழம்பாய் விளங்குகின்ற சூரியன் என்ற எரிகோளிலிருந்து சிதறிய தீத் துண்டுகளே என்பர் அறிவியலார்.

சூரியனிலிருந்து நெடுந்தொலைவில் விழுந்த தீத்துண்டு சனிக் கோள் தணிந்து ஆறிப்போய்விட்டது. மிக அண்மையிலுள்ள புதன் என்ற கோள் வெப்பம் தணியாத அனல் துண்டுபோலவே உள்ளது. நாம் வாழும் இந்த உலகு - அனல் பிழம்பாகச் சுற்றிச் சுழன்றபடி சூரியனையும் சுற்றிவந்து கொண்டிருந்த நிலைபோய்க் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்தது.

அது சுழலும் வேகமும் சுற்றும் வேகமும் அதன் அணுத் திரள்களை எவ்வளவு வேகமாக இயக்கியிருக்கும் என்பதைக் கற்பனைதான் செய்து பார்க்க இயலுமா?

Koviloor Digital Library

சூடு தணியத் தணிய நிலக் கோளின் உட்பகுதி இறுகியது. மேற்பகுதி அணுத் திரள்களாக அலையத் தொடங்கின. அந்த வேகத்திலிருந்து பிறந்ததுதான் வாயு - காற்று. கல் தோன்றிய காலத்திலேயே - அல்லது அதற்கு சற்று முன் பின்னாகத் தோன்றியது வாயுவே என்பதை ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா?

இதைத் தமிழன்தான் முதன்முதலாகக் கூறியிருக்கிறான்.

நீளப்பா பிர்மாவில் வானந் தோன்றி
நிலையான வானத்தில் வாயுதானே
தானென்ற வாயுவில் வன்னி தோன்றி
தணலான வன்னியிலே நீருண்டாகி.

வாயு தோன்றிய பின் எது தோன்றியது? உதயனைச் சுற்றும் உலகு ஒரே வட்டமான பாதையில் சுற்றவில்லை. சிறிது காலம் மிகவும் நெருங்கியும் சிறிது காலம் மிகவும் விலகியும் சுற்றுகிறது. இது துவக்கப் பள்ளிகளில் பயிலும் பிஞ்சுகளுக்கும் தெரியும். நெருங்கி வரும் காலத்தில் அதன் மேற்பரப்பில் அனல் பறக்கிறது. சூடேறிய காற்று மேலேறுகிறது. அதன் சூன்யத்தை (வெறுமையை) நிரப்ப வேறிடத்திலிருந்து அழுத்தம் அதிகம் உடைய காற்று விரைகிறது.

இவ்வாறு காற்றோட்டங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்ட நேரங்களிலே தீப்பொறிகள் சிதறின. பிற கோள்களிலிருந்து சிதறல்கள், எரிக்கோள்கள் மோதுவதாலும் உலகை நோக்கி ஈர்க்கப்படும் பொருள்களின் உராய்வாலும் தீத் தோன்ற ஆரம்பித்தது.

சூரிய வெப்பத்திற்கு எட்டாத மூலைகளான - உலகின் அச்சுப் பகுதிகள் மிகவும் குளிர் வாய்ந்தவையாக இருந்ததால் அங்கு வாயு, இயற்கையாக அதன் மூலக்கூறுகளாகப் பிரிக்கப்பட்டது. உயிர்க் காற்றும், நீர்க் காற்றும் வாயுவும் கூடிப்பிறந்தது நீர்.

நெருப்பிலிருந்து நீர் உண்டாயிற்று என்பதை - முதன் முதலாச் சிந்தித்தவன் தமிழன்; உலகிற்கு உணர்த்தியவன் தமிழன்; நுணுக்க ஆய்வோர் சிந்தனை - எண்ணம் - தோன்றியதே தமிழ் மண்ணில்தான். அறிவு என்ற ஒளியைப் படைத்ததே தமிழ்தான் என்றே துணிவர்.

Koviloor Digital Library

தானென்ற வாயுவிலே வன்னி தோன்றி
தணலான வன்னியிலே நீருண்டாகி
தேனென்ற நீருக்குள் பூமி யுண்டாய்ச்
செனிப் பிறப்பு மாய்கையினால் கோடாகோடி

என்று நீருக்குப் பின் மண்ணும் மண்ணிலே உயிர்களும் தோன்றிய வரலாற்றைக் கூறுகிறான் தமிழன்.

இதைத்தான் திருமூலர்பிரான் அழகாக ஒரே வரியில் கூறுவார்.

கா(ல்) அங்கி நீர் பூக் கலந்த வாகாய
மா(ல்) அங்கி யீசன் பிரமன் சதாசிவன்
மே(ல்) அஞ்சு மோடி விரவ வல்லார்கட்குக்
காலனு மில்லை கருத்தில்லை தானே.

- திருமந்திரம் - எட்டாவது தந்திரம் - நின்மலவவத்தை இரண்டாம் பாடல்

காற்று, நெருப்பு, நீர், பூமி இவை தோன்றிடக் காரணமான ஆகாயம் என்று கூறுகிறார்.

அகத்தியப் பெருமான்,

பேணப்பா பூதமைந்து சொல்லக்கேளு
பிருதிவி அப்புவுடன் தேய்வுமாக
பூணப்பா வாய்வுடனே ஆகாசந்தான்
பொருந்திநின்ற பூதமடா ஐந்துமாச்சு

என்று கூறுவார்.

சித்தர்கள் கண்ட செந்நெறி இத்தமிழ் நெறி.

Koviloor Digital Library

சித்தர்களின் காலம்

இங்கு சித்தர்கள் காலத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்புத் தர விழைகிறோம். திருமூலர் இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

நந்தி யருள்பெற்ற நாதனை நாடிடின்
நந்திக(ள்) நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவீர் என்னோ டெண்மருமாமே.

குரு பரம்பரையைச் சொல்லவந்த மூலர்பிரான், நந்திகள் நால்வரும், சிவயோக மாமுனிவரும், பதஞ்சலியும், வியாக்ரமரும் நானும் ஆக எண்மர் - நந்தியருளாலே நாதனாம் பேர் பெற்றோம் என்கிறார்.

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரம னுருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த வெழுவரு மென்வழி யாமே

– திருமந்திரம் – 69

நந்தி என்ற பெயரால் மூலர்பிரான் பல இடங்களில் சிவ பெருமானையே குறிப்பிடுகிறார். அதோடு சிவத்தன்மை பெற்றவர் களையும் சேர்த்துக் கொள்கிறார்.

அவ்வாறு சிவத்தன்மை பெற்ற மூலர்பிரான் வழிவந்தோர் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்சமலையன் என்ற எழுவருமாவர்.

வந்த மடமேழு மன்னுஞ் சன் மார்க்கத்தின்
முந்தி யுதிக்கின்ற மூலன் மடவரை
தந்திர மொன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர வாகமச் சொல்மொழிந் தானே.

Koviloor Digital Library

சன்மார்க்கத்தில் வந்த மடங்கள் ஏழு. அவற்றில் மூலனாகிய என்னுடைய மடமும் ஒன்று. நான் அழகிய ஆகமத்தை ஒன்பது தந்திரங்களில் (பகுதிகள்) மூவாயிரம் மந்திரங்களாகக் (பாடல்களாக) கூறினேன். தம்மையே வேறொருவர்போல் கூறிக்கொள்வது ஞானியர் மரபு.

சுந்தரவாகமச் சொல் மொழிந்தேனே என்று தாம் கூறியதாகக் கூறிக்கொள்ள வில்லை. மூலன் கூறினான் என்கிறார். அடுத்த பாடலிலும் தம்மைச் சேர்த்து ஏழுவர் நிராமயத்தோர் அப்பழுக் கற்றவர்கள். குற்றமற்றவர்கள் என்கிறார். சிவ நெறி நின்றவர் களாகையால் குற்ற மற்றவர்களாயினர்.

கலந்தருள் காலாங்கர் தம்பால்அ கோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலங்கொள் பரமானந்தர் போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே.

– திருமந்திரம் – 101-102

காலாங்கி, அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் – இவர்கள் என்வழித் தோன்றல்கள் என்கிறார் மூலர்பிரான்.

போகரின் சீடர் கொங்கணவர். இவர் மூலர்பிரானோடு தர்க்கிப்பதை கொங்கணவர் வாதகாவியத்தில் காண்கிறோம். சட்டை முனியின் நூலை மூலர்பிரான் கிழித்துப்போட்டதாக வரலாறு. அகத்தியர் பெருமானும் அதைப் பற்றிக் கூறுகிறார்.

எனவே. மூலர்பிரானோடு வாழ்ந்தவர்கள்தான் மேற்கூறிய சித்தர்கள் அனைவரும் என்பது வெளிப்படை.

* * *

மொழி ஆய்வர்கள் 'இச்சொற்கள் இக்காலத்தின் பாற்பட்டவை' என்று கூறுவதைக் கொண்டு சித்தர்களின் காலத்தைக் கணக்கிட முயல்வது தவறு.

Koviloor Digital Library

சங்க காலப் பாடல்கள் அவை தோன்றிய காலத்திற்குப் பிறகு நெடுங்காலம் வரை பெயர்த்தெழுதப்படவில்லை. ஆனால் சித்தர் பாடல்கள் அவற்றின் மருத்துவப் பயன்கருதிப் பலமுறை பலராலும் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஒருவர் சொல்லப் பிறர் கேட்டு அதை அப்படியே மனப்பாடம் செய்து கொள்ளும் முறையிலேயே ஆரம்பகாலத்தில் நூல்கள் அழியாமல் காப்பாற்றப்பட்டன. சித்தர்களின் நூற்களுக்கும் இது பொருந்தும்.

விளையாட்டுச் சித்தர் என்றொரு சித்தர். இவருடைய பாடல்கள் சில யோக ஞான சாஸ்திரத் திரட்டின் ஏழாம் பாகத்தில் உள்ளன. அழகான பாடல்கள்; அவருடைய பாடல்கள் மேலும் கிடைக்குமா என்று தேடியபோது திருச்சிக்கு அண்மையிலுள்ள ஒரு சிற்றூரில் விளையாட்டுச் சித்தரின் பாடல்களை அப்படியே ஒப்பிக்கக் கூடிய ஒருவர் உள்ளார் என்பது தெரிய வந்தது.

பாடல்கள் பெயர்த்தெழுதப்படும்போதே, சுவடிக்குச் சுவடி மாறுதல் ஏற்பட்டுச் சிறிது காலத்திற்குப் பின் மூல ஏட்டில் என்ன இருந்தது என்பதே தெரியாதபடி மறைந்துபோய் விடுகிறது. புத்தரின் மொழிகள் சீன நாட்டு மடங்களில் படி எடுப்பவர்களால் சிதைக்கப்பட்டு முரணான கருத்துக்களை வெளியிடுவனவாக மாறிவிட்டதால் மூலநூல்களைப் பார்த்து ஒப்பு நோக்கித் திருத்தமான பாடங்களை எழுதிக் கொள்வதற்காகவே சீன நாட்டிலிருந்து யுவான் சுவாங் - பாஹியான் போன்ற பௌத்த துறவிகள் இந்திய நாட்டிற்கு வந்தனர் என்பதை வரலாறு கூறும்.

எனவே மனப்பாடம் செய்து வைத்திருந்து ஒப்பித்தவர்களாலும் அப்பாடல்கள் கால வழக்கு சமுதாய வழக்கு என்பவற்றிற்கேற்பப் பிறழ்ந்து போயிருக்கலாம். ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட காலத்திலும் இதே வழிமுறைதான் தொடர்ந்திருக்கும்.

எனினும் போகமுனிவர், அகத்திய முனிவர் என்பாரின் பெயர்களால் காணப்படும் எண்ணற்ற நூல்களில் இடைச் செறுகல்கள்

Koviloor Digital Library

மிகுதி என்பதையும் ஏற்க வேண்டும். அவர்களால் எழுதப்படாத முழு நூல்களே அம்முனிவர்களின் பெயர்களால் வழக்கில் உள்ளன என்பதும் உண்மையே.

மருத்துவப் பயன் காரணமாகவே இந்நூல்கள் தலைமுறை, தலைமுறையாகத் தொடர்ந்து வந்தன என்ற அடிப்படை உண்மையை வைத்து ஆய்வோர் - நூல்கள் கூறப்பட்டுள்ள மொழி, நடை என்பன போன்ற எல்லாவற்றுக்கும் அப்பால் அக்கருத்துக்கள் தோன்றிய காலத்தை வைத்தே சித்தர்களின் காலத்தைக் கணக்கிட வேண்டும்.

இன்றைக்கும் அகத்தியர் என்ற பெயரில் இருவர் உளர். போகர் என்ற பெயரிலும் ஒருவர் நடமாடுகிறார். இவர்களை வைத்துக் கொண்டு அகத்தியர் பெருமானும் போகமுனிவரும் இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் என்று வாதாட முயன்றால் அது பெருநகைப்பிற்கிடமாகும் என்பதில் ஐயமில்லை.

அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள திருமூலரின் காலத்தைக் கருத்தில் கொண்டு அகத்தியர், போகமுனிவர், கொங்கணவர், சட்டைமுனி முதலான சித்தர்களின் காலத்தையும் கணக்கிடுவதே அறிவுடைமையாகும்.

* * *

ஆயினும்
சித்தர்களுக்கு முதல்வர் சிவனே!

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தா சுத்தத்துடன் றோய்ந்தும் தோயாதவர்
முத்த ரம்முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சுத்தர் சதாசிவத் தன்மைய ராமே.

- திருமந்திரம் - எட்டாம் தந்திரம் - நவாகவத்தை -2

சித்தர்கள் சிவத்தைக் கண்டவர்கள். சுத்த அசுத்த மாயைகளால் தீண்டப்பட்டாலும் எதனாலும் கரைப்படாதவர்கள் (பற்றுக்களால் பற்றப்படாமல் வாழ்பவர்கள்). முத்தியடைந்த நிலையில் உள்ளவர்கள்.

Koviloor Digital Library

அம்முத்தியைப் பிறர் அடைய வழிகாட்டிகளாக விளங்குபவர்கள். மூலாதாரத்தில் உள்ள குண்டலியின் சக்தியை வசப்படுத்திய்வர்களாதலால் சதாசிவத்தின் தன்மையில் இருப்பவர்களும் ஆம்.

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி யருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி யருளாலே மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி யருளாலே நானிருந் தேனே.

- திருமந்திரம் - முதல் தந்திரம் - குருபாரம்பரியம் - 20

இங்கு மூலனை என்பது மூலாதாரத்தில் உள்ள கணபதியைக் குறிப்பிடுகிறது. பின் வரியில் சதாசிவன் ஆயினேன் என்று கூறுவது. ஆக்ஞா சக்கரத்தில் உள்ள பெருமானைக் குறிப்பிடுவதால் இப்பொருள் கொள்வதே பொருந்தும்.

சிவபெருமான் அருளால் மூலர்தாரத்தில் விளங்கும் கணேசப் பெருமானை நாடி - அவர் அருளால் சதாசிவனும் ஆயினேன். அவர் அருளாலேயே உண்மையான ஞானத்தைப் பெற்றேன் அவர் அருளாலேயே நான் இன்றுவரை இருந்தேன் (இனியும் இருப்பேன் என்பது சுட்டாமல் சுட்டப்படுகிறது).

திருமூலர் மட்டுமன்றிச் சித்தர்கள் அனைவரும் இவ்வாறே கூறியுள்ளனர். சீவனே சிவன் என்று துணிவதே சித்தர் தம் மதம். எனவே சித்தர் தம்மைக் காலங் கடந்தவராகக் கூறிக்கொளல் மிகையும் அன்று. பொய்யும் அன்று.

Koviloor Digital Library

விண்ணும் மண்ணும் தோன்றிய கதை

கல்தோன்றி மண் தோன்றி உலகில் புல், பூண்டு, செடி கொடிகள் என்ற நடமாடா உயிர் வகைகளும், நீந்துவன, ஊர்வன, பறப்பன, நடப்பன என்ற நடமாடும் பிராணிகளும் தோன்றிய விதத்தை அகத்தியர் பெருமான் தமது சௌமிய சாகரத்தில் பின் வருமாறு கூறுகிறார்:

காணவே பரமசிவன் வானுண் டாக்கக்
கருணையுள்ள திருமாலைக் கண்ணால் மேவிப்
பூணவே சதாசிவத்தைப் பார்க்கும் போது
புத்தியுடன் பேரண்டம் படைத்து நின்றார்
ஊணவே மயேசுரனைப் பார்க்கவே தான்
உருமுயிடி வாய்வ தனைப் படைத்து நின்றார்
தோணவே ருத்திரனைக் கண்ணால் பார்க்க
துலங்குமின்னல் அங்கியும் படைத்தார் பாரே.

- அகஸ்தியர் சௌமிய சாகரம்

பரம்பொருளாகிய சிவபெருமான் வானை உண்டாக்கிப் பின் கருணையுள்ள திருமாலைப் பார்த்துவிட்டுச் சதாசிவனைப் பார்க்க அவர் ஒரு பெரிய அண்டத்தைப் படைத்தார். பின் மகேஸ்வரனைப் பார்க்க அவர் விண்வெளியில் முழங்குகின்ற இடியையும் வாயுவையும் படைத்தார். பின் ருத்திரனைப் பார்க்க அவர் மின்னலையும் நெருப்பையும் உண்டாக்கினார்.

ப்ரான திருமாலைப் பார்க்கும்போது
பதிவான அகண்டமேகம் படைத்து நின்றார்
ஆரான பிரமனையும் நோக்கும் போது
அளவற்ற பூமிதனைப் படைத்து நின்றார்
....
....

- அகஸ்தியர் சௌமிய சாகரம்

Koviloor Digital Library

பின் சிவபெருமான் திருமாலைப் பார்க்க அவர் அகண்ட மேகங்களைப் படைத்தார். (இதனால் நீரின் படைப்புக் கூறப்பட்டது). பின் பிரமனைப் பார்க்க அவர் அண்டத்தின்மேல் பூமியில் உள்ள உயிர் வகைகளைப் படைத்தார்.

அயன் முதற் கொண்டு ஐவருடல் உயிருஞ்சத்தி
ஆதியந்த சிவனாகும் உயிர்க் குயிராய் நின்று
தயவு பெற எடுத்தவுயிர் ஆண் பெண் கோடிச்
சங்கையிலா மூப்பிளமை சாக்கா டின்றி
ஜயம் பெறவே வெகு கோடி காலம் வாழ்ந்து
தீர்க்கமுடன் இருக் கையிலே மைந்தா கேளு.

- அகஸ்தியர் சௌமிய சாகரம் 129

பிரமன் முதலான ஐவரும் உடல், உயிரே சக்தி, ஆதிப் பிரானாகிய சிவபெருமான் உயிர்களுக்கெல்லாம் உயிராக நின்று ஆணாகவும் பெண்ணாகவும் பல உயிர்கள் தோன்றி இளமை, மூப்பு என்பதில்லாமலும், சாக்காடில்லாமலும் வெகு காலம் வாழ்ந்திருக்கச் செய்தார். இப்படி இருந்த காலத்தில் -

ஆதியிலே தோன்றிய மனிதர்களுக்குப் பிணி மூப்புச் சாக்காடில்லை என்று அகத்தியர் பெருமான் கூறுகிறார்.

Koviloor Digital Library

உடலும் உயிரும்

கல்தோன்றி மண் தோன்றிக் காற்றும் நெருப்பும் நீரும் தோன்றியதன் காரணமாக உயிரணுக்கள் தோன்றின. பாசியிலிருந்து புல்தோன்றி நெல் தோன்றி எண்ணற்ற செடி கொடிகள், புதர்கள், மரங்கள் அடர்ந்த காடுகள் இப்படியாக இடம் விட்டுப் பெயராத உயிர் வகைகள் வளர்ந்து கொண்டிருந்த அதே காலத்தில் மார்பால் ஊர்ந்து நகர்வன, நெளிவன, நீந்துவன, பறப்பன, நடப்பன என்று நடமாடும் பிராணியினங்களும் தோன்றலாயின.

மற்ற உயிர்களுக்கும் மனிதனுக்கும் என்ன வேறுபாடு? மனிதனை மிகவும் முதிர்ச்சியடைந்த உயிரினமாகக் குறிப்பிடுவதன் காரணம் என்ன?

ஆச்சப்பா மாந்தருக்குப் பஞ்ச பூதம்
அப்பனே ஆத்துமமாம் என்ன லாகும்
மூச்சடங்கும் மிருகமதுக் கறிவு நாலு
முனையான சீவன் என்றே செப்பலாகும்
பாச்சலுடன் பறக்கின்ற பட்சி யப்பா
பாங்கான அறிவதுவும் மூன்றே யாகும்
மேச்சலுடன் மார்பதனால் நகரும் ஐந்து
மேன்மையுடன் அறிவது தான் ரெண்டதாமே.

- போகர் 7000/5603

இரண்டான விருட்சத்துக்கு அறிவு ஒன்று
எழிலான சாத்திரத் தொகுப்பின் கூறு
திரண்டதொரு கவிவாணர் சொன்ன வாக்கு
திக்கெட்டும் சித்தர் முனி கண்டாராய்ந்து

....

- போகர் 7000/5603

மனிதர்களுக்கு ஐம்புலன்களால் அறியப்படும் அறிவு ஐந்தும் ஆத்மா ஒன்றுமாக ஆறறிவு. மிருகங்களுக்கு நான்கு அறிவுகளும் சீவனுமாக ஐந்து. பறவைகளுக்கு அறிவு மூன்றே மார்பினால்

Koviloor Digital Library

நகரும் பிராணிகளுக்கு இரண்டு அறிவு. தாவரங்களுக்கு அறிவு ஒன்று. இதை எட்டுத்திக்குகளிலும் உள்ள சித்தர்கள் முனிவர்கள் கண்டு ஆராய்ந்து அறிந்து கூறினர். உயிரினத்தில் வேறுபாடுகள் தோன்றிய காரணத்தை போகமுனிவர் அழகாக விளக்கிக் கூறுகிறார்.

இவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்த மனித உடலின் சிறப்பை நன்கு உணர்ந்து அதை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் சித்தர்களே எனலாம். சமயச் சார்வான உள்ளங் கொண்டவர்கள் உடலை இழிவானதாகக் கருதினர். உடலை வருத்திக் கடும் தவம் செய்வதும் கடினமான விரத நியமங்களைக் கைக்கொள்வதும்தான் முக்திக்கு - ஆன்ம விடுதலைக்கு வழி என்றே கருதினர். எல்லா மதங்களும் இதை ஒப்புக் கொள்கின்றன. இதையே கூறுகின்றன.

ஆனால் சித்தர்கள் இதற்கு முற்றிலும் மாறான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

உடம்பினை முன்னும் இழுக் கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்
றுடம்பினை யானிருந் தோம்புகின்றேனே.

- திருமந்திரம் - 725

எவ்வளவு அழகாக, அழுத்தமாக, ஆணித்தரமாக இங்கு சித்தர் நெறி பேசப்படுகிறது. அதுவும் திருமூலர் பிரானால்.

மாந்தர்களே! உங்களைப்போல் நானும் இந்த உடல் ஓட்டைப் பாண்டம் - ஒன்றுக்கும் உதவாதது என்றுதான் இருந்தேன். ஆனால் இந்த உடம்புக்குள்ளேதான் இறைவன் இருக்கிறான் என்பதைக் கண்டு கொண்டேன்.

உடலே கோயில்! உள்ளுறையும் சீவனே சிவன்! என்பதை உணர்ந்து கொண்டேன். அதனால் உடலை மிகவும் அக்கறையோடு பாதுகாக்கத் தொடங்கி விட்டேன் என்று உற்சாகத்தோடு கூறுகிறார்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

- திருமந்திரம் - 724

Koviloor Digital Library

இந்த உடம்பு அழிந்து விட்டால் உயிரும் அழிந்துபோகும். அதன் பிறகு ஞானத்தை உணர்வதெங்கே? அதனோடு சேர்வதெங்கே? அதனால் அரிதாகக் கிடைத்த இம் மானிடப் பிறவி வீணாகிப் போகுமன்றோ? அதனால் இந்த உடம்பை வளர்ப்பதற்காக உபாயங்களை அறிந்து பேணிப் பாதுகாக்கத் தொடங்கினேன். உடம்பைக் காப்பாற்றிக் கொண்டதன் மூலம்தான் உயிரையும் காப்பாற்றிக் கொண்டேன் என்கிறார் திருமூலர்.

அழியக்கூடியது உடல் மட்டுமே. உயிர் அல்ல. ஆன்மாவுக்கு அழிவில்லை என்று சமயங்கள் கூறுகின்றனவே. கண்ணபிரான் கீதையில் இதைத்தானே அர்ச்சுனனுக்கு உபதேசிக்கிறார். திருமூலர் உயிர் அழிந்துவிடும் என்று கூறியுள்ளது முரண்பாடல்லவா? என்று கேட்கலாம்.

உடல் இருந்தாலே உயிர் இயங்க முடியும். ஆன்ம விடுதலைக்காக உழைக்க முடியும். உடல் போய்விட்டால் அதன்பிறகு உயிருக்குச் செயல்பாட்டுத் திறன் ஏது? இந்த உண்மையையே ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறார் திருமூலர்.

பிற சமயத்தவர்கள் ஐம்புலன்களையும் அடக்க வேண்டும். அப்போதுதான் மெய்ஞ்ஞான நெறியில் செல்ல முடியும் என்று கூறுகின்றனர்.

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை.

அடக்கடக் கென்பர் என்ற சொல் நயம் ஐம்புலன்களையும் அடக்க வேண்டும் அடக்க வேண்டும் என்று மற்றவர்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறுந் தன்மையை அழுத்தமாக எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் அறிவில்லாதவர்கள் என்கிறார்.

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்.

அவர்களை ஏன் அறிவில்லாதவர்கள் என்று கூறுகிறேன் என்றால்

அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை.

ஐம்புலன்களை அடக்கியவர்கள் எங்கே இருக்கிறார்கள்? நீங்கள் கூறும் தேவலோகத்திலும் இல்லை. கடவுளின் மூன்று

Koviloor Digital Library

உலகங்களிலும் இல்லை. பின் எதற்காக அப்பாவி மனிதனை மட்டும் அஞ்சும் அடக்கு அடக்கு' என்று கூறுகிறீர்கள்?

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கி அசேதன மாமென்றிட்
டஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே!

அஞ்சும் அடக்கினால் ஓரறிவும் இல்லாத சடப் பொருளாகி விடுவாய். (அசேதனம் = அறிவின்மை) அதனால் அஞ்சும் அடக்கு வதால் பயனில்லை. அவற்றோடு கூடியிருந்தே வாழ்க்கைப் பயனை அடைய வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன் என்கிறார் திருமூலர் பிரான்.

வாழ்க்கைக்கு ஏற்ற தத்துவம்! மனிதன் நெறிப்படி நடந்து மற்ற அறங்களையும் கடைப்பிடித்து வந்தால் அவன் அடைய வேண்டிய நற்பயனை அடைந்து விடமுடியும் என்பதே சித்தர் நெறி.

உடலைப் பேண வேண்டும். பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் இந்த உடம்புக்குள்ளேதான் இறைவன் இருக்கிறான். அவனை அறிந்து கொள்ள முற்பட வேண்டும்.

தானென்ற வஸ்துவையும் தவிர வேறே
சாதகந்தான் இல்லை யென்று சஞ்சலித்து
பானென்ற சத்தியமாம் வாக்குக் காயம்
பத்தியுடன் சுத்தமதாய்ப் பதிவாய் நின்று
ஆனென்றே இருக்கிறதை ஆத்திக மென்பார்
அன்னாதார சரீரத்தைச் சுலப மாக்க
கோனென்று நிதானித்துப் பின்னை யொன்று
கூறாதே சூத்திரம் என்று சொல்லே.

-அகஸ்தியர் வாத சௌமியம் 260.

இந்த உடல் இருக்கிறதே இது அன்னத்தையே ஆதாரமாகக் கொண்டது. உணவு இல்லையென்றால் உடலும் இல்லை. அதனால் உண்டு உடலைக் காப்பாற்றிக் கொண்டு உள்ளத்தை ஒருமுகப் படுத்தி உடம்பாலும் உரையாலும் உண்மை நெறி தவறாமல் சுத்தமாய்ப் பதிவாய் நிற்பதே ஆத்திகம் என்று கூறுகிறார் அகத்திய மாமுனிவர்.

* * *

Koviloor Digital Library

பிணி

தானென்ற அன்னமதால் நித்திரை யுண்டாய்
சங்கையுடன் அனுபோக மூப் பிளமை யுண்டாய்
வானென்ற வேகமுடன் ஆசை யுண்டாய்
வஞ்சகமுப் பிறப் பிறப்புத் தானும் உண்டாய்

- அகஸ்தியர் வாத சௌமியம் 134.

உயிர்ப் பிராணிகளின் வளர்ச்சிக்கு உணவு தேவைப்படுகிறது. வளர்ச்சியே மூப்பில் கொண்டுபோய் விடுகிறது. உணவு சற்று அதிகம் உட்கொண்டுவிட்டால் உறக்கம் வருகிறது. உறக்கம் ஆசைகளை உணடாக்குகிறது. காமத்தை உண்டாக்குகிறது.

ஆசை வந்து விட்டால் போதுமே! வஞ்சகம், பொய், பொறாமை, சூது, களவு எல்லாம் வந்து விடாதா? பிறப்பும் இறப்பும் கூட உண்டாகிவிடுகிறது என்கிறார் அகத்தியர் பெருமான்.

* * *

ஆயுள் வேதத்தின் துணிவும் இதுதான்.

நோய்கள் எதனால் தோன்றுகின்றன என்பது குறித்து ரிஷிகள் தர்க்கம் செய்கிறார்கள்.

ஒருவர் வினைப்பயன் என்றார். மனிதன் தோன்றுவதற்கு முன்பே வினைப்பயன் எவ்வாறு தோன்றியிருக்க முடியும்? எனவே, மனிதனும் நோயும் இயற்கையாக - ஒன்றாகவே தோன்றின என்றார் பரத்துவாஜர்.

அப்படியிருக்க முடியாது. மனிதன் காலத்தால் தோன்றியவன். பிணியும் காலத்தாலேயே தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பிக்ஷு முனிவர் மறுத்தார்.

Koviloor Digital Library

வாதங்களை நிறுத்துங்கள். எந்தப் பொருட்களின் செழுமை மனிதனைத் தோற்றுவித்ததோ அதே பொருட்களின் அழிவே நோய்களை உண்டாக்கியிருக்க வேண்டும் என்றார் ஆத்ரேயர். மேலும் நன்மை பயக்கும் உணவு மனித உடலின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. தீய உணவு உடலை அழிக்கும் நோயை உண்டாக்கு கிறது என்றும் கூறினார்.

- சரகசம்ஹிதை - யஜ்ஜப்புருஷீயம்
சுலோ - 18 - 31

எனவே அகத்திய முனிவரின் கருத்தும் ஆயுள் வேதத்தின் கருத்தும் ஒன்றாக விருப்பதைக் காண்கிறோம்.

திருமூலர் என்ன கூறுகிறார் என்பதைக் காண்போம்.

உடல், உயிர், குணம் முதலியவற்றைப் போலவே பிணியும் தாய் தந்தையிடமிருந்து வருமியல்பைத் தமிழனே முதன் முதலாக அறிந்து கூறியவன் என்றாலும் பொருந்தும்.

கருவில் உருவாகி

கருத்தொருமித்த கணவனும் மனைவியும் காதலாகிக் கலந்து உறவாடும் வேளையில்.

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகுந்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே.

- திருமந்.478

ஆணின் சக்தி மிகுந்திருந்தால் ஆண் குழந்தை பிறக்கும். பெண்ணின் சக்தி மிகுந்திருந்தால் பெண் குழந்தை பிறக்கும். இரண்டும் சமமாக ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு ஒன்றையொன்று அழிக்க முற்படும் நிலையில் இருந்தால் பிறக்கும் குழந்தை அலியாகும். கலவியின்போது ஆணின் சக்தி நீடித்து நின்றால் பிறக்கும் குழந்தை உலகையே ஆளக்கூடிய ஆற்றல் உள்ளவனாக இருப்பான். தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு துவண்டு போவானானால் சுக்கிலம் வெளிப்படுவதும் நின்று விடலாம் எனக் கூறுகிறார் திருமூலர்.

Koviloor Digital Library

பாய்ந்தபின் அஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நாலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயும் பகுத்தறிந் திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்கும் பாய்ச்சலு மாமே.

- திருமந்.479.

மேலும் ஆணிடமிருந்து வெளிப்படும் விந்து ஐந்து விரற்கிடை பாய்ந்து விழுந்தால் பிறக்கும் குழந்தைக்கு ஆயுள் நூறு. நாலு விரற்கிடை ஓடி விழுந்தால் ஆயுள் எண்பது. இவ்வாறு சுக்கிலம் விழும் வேகத்திற்குத் தகுந்தவாறு ஆயுளை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார்.

பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே.

- திருமந்.480.

சுக்கிலத்தைச் செலுத்துவது வாயுவே ஆகையால் அவ்வாயுவின் ஆற்றல் குறைந்துவிட்டால் பிறக்கும் குழந்தை குள்ளமாக இருக்கும். அவ்வாயு மலினமுற்று நலிந்திருந்தால் குழந்தை முடமாகப் பிறக்கும். வாயு நடுவில் தடைப்பட்டுப் பின் பாய்ந்தால் கூனாகும். இந்த வேறுபாடெல்லாம் ஆண்களுக்கு மட்டும்தான். பெண்களுக்குக் கிடையாது.

ஆனால்,

மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண் இல்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே.

- திருமந்.481.

கருத்தரிக்கும் போது தாயின் குடலில் மலம் மிகுந்திருந்தால் குழந்தை மந்தனாகப் பிறக்கும். நீர் மிகுந்திருந்தால் குழந்தை

Koviloor Digital Library

ஊமையாகும். மலமும் நீரும் இரண்டும் மிகுந்திருந்தால் குழந்தை குருடாகும்.

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்ட கால் ஒக்கிலே.

- திருமந்.482.

கலவியின்போது ஆண்மகனின் வலது நாசித் துளை வழியாக மூச்சு இயங்கினால் ஆண் குழந்தை பிறக்கும். இடது நாசி வழியாக ஓடினால் பெண்குழந்தை பிறக்கும். தாயின் வயிற்றில் உள்ள அபான வாயு எதிர்த்தால் இரட்டைக் குழந்தையாகப் பிறக்கும். மூச்சு இரண்டு நாசித் துளைகளிலும் இணைந்து வெளிப்பட்டால் பிறக்கும் குழந்தை அலியாக இருக்கும்.

கொண்ட நல்வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியும் கோமள மாயிடும்
கொண்ட நல்வாயு இருவர்க்கும் குழறிடில்
கொண்டதும் இல்லையாம் கோல் வளையாட்கே.

- திருமந்.483.

கணவன் மனைவி இருவர்க்கும் ஒரே சீராக மூச்சு இயங்குமாகில் அழகான நல்ல குழந்தை பிறக்கும். அப்படியில்லாமல் தாறுமாறாக இயங்கினால் கருத்தரியாது.

கோல்வளை உந்தியில் கொண்ட குழவியும்
தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்
பால் வளர்ந்துள்ளே பகலவன் பொன்னுருப்
போல் வளர்ந்துள்ளே பொருந்துரு வாமே.

- திருமந்.484.

மனைவியின் வயிற்றில் தரித்த குழந்தை உண்ணாக்கின் மேல் உச்சிக் கமலத்தே விளங்கும் சோதி போன்றதாம். காலை இளம் சூரியனைப்போல் கர்ப்பத்தில் செம்பொன்னாகத் தோன்றி வளரும்.

Koviloor Digital Library

உருவம் வளர்ந்திடும் ஒண்திங்கள் பத்தினில்
பருவம தாகவே பாரினில் வந்திடும்
மருவி வளர்ந்திடும் மாயையி னாலே
அருவம தாவதிங் காரறிவாரே.

- திருமந்.485.

அவ்வாறு கருவாகத் தோன்றியதன் உருவம் பத்து மாதங்களில் வளர்ந்துவிடும். உலகில் பிறக்க வேண்டிய பருவம் வந்தவுடன் பிறக்கும். மாயையை மருவியே வளரும். அந்த மாயையின் தன்மையை யாரும் அறியார்.

இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மை அவ்வாறே.

- திருமந்.486.

மனைவியின் கர்ப்பத்தில் கருவை விதைத்தவனும் அறிவதில்லை. அதை ஏற்றுக் கொண்டவளும் அறிவதில்லை. அக் கருவின் தன்மைகளை உணர்ந்த இறைவனும் யாருக்கும் உரைப்பதில்லை. ஆயினும் அக்கர்ப்பத்தில் பரமேஸ்வரனும் உள்ளான். இதை உணராமல் செய்யும் மாயையின் இழிந்த தன்மையை எவ்வாறு உரைப்பேன்.

இன்புற நாடி இருவரும் சந்தித்துத்
துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்
முன்புற நாடி நிலத்தின் முன் தோன்றிய
தொன்புற நாடி நின்றோதலு மாமே.

- திருமந்.487.

இன்பம் அடைய விரும்பிய இரண்டு பேர் சந்தித்துத் துன்ப மயமாகிய பாசப் பிணைப்பில் சிக்குண்டதால் தோன்றிய சிசு வளர்ந்தபின் தான் மேன்மைபெற விரும்பி தொன்மையிலும் தொன்மையான இறைவனை வாழ்த்தி வணங்கும்.

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்

Koviloor Digital Library

இயக்கில்லை போக்கில்லை ஏனென்ப தில்லை
மயக்கத்தில் காக்கை வளர்க்கின்ற வாறே.

- திருமந்.488.

குயில் தன் முட்டையைக் காக்கைக் கூட்டில் இடுகிறது. அதிலிருந்து வெளிப்படும் குஞ்சை காக்கை சற்றும் ஐயப்பாடென்பதே இல்லாமல் வளர்க்கிறது. அதேபோல் தாயானவள் தன் கர்ப்பத்தில் உள்ள சிசுவை வளர்க்கின்றாள். அவள் சஞ்சல மடைவதில்லை. வெறுப்பதில்லை. ஏனென்று கேட்பதுமில்லை. ஏதோ ஒரு மயக்கத்தில் ஆழ்ந்தவளாயத் தன்னை அறியாமலேயே வளர்க்கின்றாள்.

கருவில் உருவானது

கருவில் குழந்தை வளரும் தன்மையைத் திருமூலர்பிரான் தமது கருக்கிடை வைத்தியம் இருநூறு என்ற நூலில் மேலும் சற்று விரிவாகக் கூறுகிறார்.

உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதிவி
வன்னியும் வாயுவும் ஆயுறும் சுக்கிலம்
மன்னிச் சமனாய் வளர்க்கும் உதகமே.

- திருமூலர் கருக்கிடை 14.

உதகம் உதிரம் உறுங்கனல் வாயுவால்
சிதகுறும் அங்கங்கள் செய்து முடித்திடும்
பிதகுறும் உரோமம் பகர்தசை அஸ்தியின்
நிதகுறும் ஒன்பது வாசலும் நீங்குமே.

-திருமூலர் கருக்கிடை 15

கர்ப்பக்குழியில் பெண்ணின் நாதத்துடன் கலந்த சுக்கிலம், நெருப்பு, காற்று ஆகிய பூதங்களுடன் சம அளவில் கலந்து நிற்கும். இந்த நாத விந்தை நீர் சூழ்ந்து கொண்டு வளர்க்கும்.

நீரும், நெருப்பும், காற்றும் இரத்தத்தோடு சேர்ந்து அங்கங்களை உண்டாக்கி முடிக்கும். தலைமுடி, தசை, எலும்பு என்றிவ்வாறாக ஒன்பது வாசல் கொண்ட உடலைக் கட்டி அமைக்கும்.

Koviloor Digital Library

நீங்கிட நீங்கிட நிமிர்ந்து வளர்ந்தோங்கும்
ஓங்கிட ஓங்கிட உறுதியாம் வாயுவும்
வாங்கிட வாங்கிட வன்னி தலைக்கொளும்
பாங்கிடப் பாங்கிடப் பத்தாகும் திங்களே.

- திருமூலர் கருக்கிடை 16

உருவாகும் கரு நாளாக நாளாக வாயுவில் உள்ள பிராண சக்தியை இழுத்துக்கொண்டு உறுதி பெற்று நிமிர்ந்து ஓங்கி வளரும். அப்பொழுது (தீயும்) வெப்பமும் அதற்கு உறுதுணை புரியும். இவ்வாறு பத்து மாதங்கள் கரு வளரும்.

முதற் கிழங்காய் முளையாய் அம்முளைப்பின்
அதற் புதலாய்ப் பலமாய் நின்றளிக்கும்
அதற் கதுவாய் இன்பமாவது போல
அதற் கதுவாய் நிற்கும் ஆதிப் பிரானே.

- திருமந்திரம் - 489

கிழங்காகி, முளையாகி, தழைத்த செடியாகிப் பின் பயனளிக்கும் செடியைப்போல் - ஒரு செடிக்கு இன்பமாவது என்ன? முளைத்துப் பயன் அளிப்பது எது? அதேபோல் எல்லாவற்றையும் படைத்துக் காத்துப் பயன் அளிக்கச் செய்வதே இறைவனுக்கு இன்பமாம்.

திங்கள் பத்தாகித் தேய்வொடு வாயு சேர்ந்து
அங்கி மலர்த்தி அமளியாக் கீழ்நோக்கி
பொங்கிப் பிறந்த நாள் புகழ்வார் வெறு(ம்) வீணர்
தங்கிச் செனிக்கையில் தான் நோயும் பிறந்ததே.

- திருமூலர் கருகிக்கிடை 17.

பத்துமாதம் ஆனவுடன் காற்றும் வெப்பமும் சேர்ந்து சிசுவை மெதுவாகக் கீழ்நோக்கித் திருப்பிப் பூமியில் பிறக்கச்செய்யும். அங்கி மலர்த்தி அமளியாய்க் கீழ்நோக்கி என்று வெகு அழகாகக் கூறுகிறார் திருமூலர். ஒரு மலரானது மொட்டிலிருந்து மெல்ல மெல்ல அவிழ்ந்து மலராவதுபோல் கருவிலுள்ள சிசுவும் மெதுவாக நகர்ந்து கீழ் நோக்கித் திரும்புகிறது.

Koviloor Digital Library

குழந்தை பிறந்துவிட்டது என்று எல்லோரும் புகழ்கிறார்கள். இவர்கள் வெறும் வீணர்களே! ஏனென்றால் கர்ப்பத்தில் தங்கியிருந்த சிசு பிறக்கும்போதே நோயும் பிறந்துவிடுகிறது. இதை அவர்கள் அறிவதில்லை.

கருத்தரிக்கும்போதே குழந்தையின் ஆயுளும் அமைப்பும் அதன் வாழ்நாளும் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது என்பதைத் தமிழனைத் தவிர வேறு யாருமே கூறியதில்லை. இவற்றைப் படிக்கும்போது எத்துணை வியப்பேற்படுகிறது?

சித்தர்களின் நூல்களில் என்ன இருக்கிறது என்பது தமிழ் மக்களில் கோடியில் ஒருவருக்காவது தெரிந்திருக்குமா என்பதே ஐயமாக உள்ளது. படித்த புலவர்கள், பேராசிரியர்கள் இன்னும் கல்வியின் உயர் மட்டத்திலுள்ளவர்களுக்கே சித்தர்களுடைய நூல்களில் என்ன இருக்கிறது என்பது தெரியாது.

உலகத்திலேயே தம் பெருமையைத் தாம் உணராத மூட மக்கள் எங்கிருக்கிறார்கள் என்று கேட்டால் இந்த தமிழகத்தில்தான் என்று துணிந்து சொல்லி விடலாம். அவ்வளவு பரிதாபகரமான நிலைமைக்குத் தமிழ்மக்கள் இருட்டடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக் கிறார்கள். இந்த நிலை மாறவேண்டுமானால் ஆரம்பப் பள்ளிகள் தொடங்கி, கல்லூரிகள், தொழிற்கல்வி மையங்களில் கூட சித்தர் பாடல்கள் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். இதைத்தான் நாம் ஆரம்பம் முதல் ஒவ்வொரு நூலின் பதிப்புரையிலும் கூறி வருகிறோம்.

Koviloor Digital Library

மனித உடல்

மனித உடல் வெறும் சதைப் பிண்டம் அல்ல. எலும்பு, தசை, நரம்பு, தோல் என்று இவற்றால் மட்டுமே அமைந்தது அல்ல இந்த உடல்.

இந்த உடலிலே கண்ணுக்குப் புலனாகின்றவை மட்டுமல்லாமல் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றையும் ஆராய வேண்டுமல்லவா? உடல் வெறும் இயந்திரமாக மட்டுமிருந்தால் எலும்பு பழுது பார்க்குமிடம் நரம்பு பழுது பார்க்குமிடம் என்று இன்று ஆடம்பரமாக விளம்பரப்படுத்தப்படும் மருத்துவத்துறைகளிலே போட்டு முடக்கி விடலாம்.

ஆனால் மனிதன் அவ்வளவு சாதாரணமான ஒரு பிராணி அல்ல. மனிதனைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் நிறையப் படிக்க வேண்டும். சித்தர்கள் அதைச் செய்து முடித்துள்ளனர். இனியேனும் கண்களைத் திறந்து அதைப் பார்க்க முயல்வது தமிழன் கடமை.

இந்த உடலை இயக்குபவை தொண்ணூற்றாறு தத்துவங்கள். அவை இந்த உடல் முழுவதும் ஊடாடி அதனைச் செயல்படுத்து கின்றன என்பது சித்தர் கொள்கை.

யூகிமுனிவர் அதைப்பற்றிக் கூறுவதைப் பார்ப்போம். இங்கு யூகி முனிவரின் பாடல்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதன் காரணம் அவர் சித்தர்களின் வரிசையில் கடைசியாக வருபவர்களில் ஒருவர். தேரையரின் மாணவர். அவருடைய பாடல்கள் மிகவும் எளிமையானவை. அகத்திய முனிவர் போக முனிவர் பாடல்களைப் போல் பலமுறை படியெடுப்பவர்களாலும் பிறராலும் சிதைக்கப் படாதவை. அதனால் அவர் பாடல்களை எடுத்துக்கொண்டு தத்துவங்களைப் பற்றி அடிப்படையான சில கருத்துக்களைத் தெரிந்து கொண்டு பிறகு ஆழப் புகுவோம்.

Koviloor Digital Library

தத்துவமாங் கருவிகள்தான் தொண்ணூற்றாறும்
சடத் தெங்கும் ஊடாடித் தகைமையாகும்
உத்துவமாம் உடல்தனின் உண்மை கேளாய்
உதர அங்க னெனப் புவியிலுற்பவித்து
அத்துவமாய் உள்ளிதழாய் மலர்ந்து தப்போ
அத்தி முகத்துக் கருவிட் டுருத் தரித்து
சத்துவமா யவ்வுருவா யவ் வவயத்தின்
தாக்கு அவ் வென்னு மட்சரந்தானே.

- யூகி - தத்.89

தொண்ணூற்றாறு தத்துவங்களும் உடல் முழுவதும் ஊடாடும் தன்மையுடையனவாகும். இரத்தத்தோடும் எலும்போடும் உற்பவித்த உடலின் தன்மையைப் பற்றிக் கேட்பாயாக. உள் இதழாக மலர்ந்த அண்டத்தில் கருவாகத் தரித்து, கருவென்னும் உண்மைப் பொருளாய், உருவமாய் உண்டாவது 'அ' என்ற அட்சரத்தின் தாக்குதலால் என்றறிக.

வித்திலிருந்து கிளம்பிய உயிரணு ஒரு சிறிய கொக்கி போல் இருக்கும். அதுவே பிள்ளையார் சுழி. அதனாலேயே எச்செயல் புரிவதானாலும் முதலில் பிள்ளையார் சுழிபோட்டு ஆரம்பிக் கின்றோம். ஏறக்குறைய உகர வடிவில் இருப்பதாகக் கொள்ளலாம்.

அகர உகர மகரங்கள் சேர்ந்ததே பிரணவம். 'ஓம்'! அதுவே ஆதி. அதுவே பகவன்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இந்த ஆதி பகவன் இல்லாவிட்டால் நீயும் இல்லை நானும் இல்லை. உலகில் வாழும் எந்தப் பிரர்ணியும் இல்லை. உலகமே இல்லை. குறளார் கூறிய இந்த மாபெரும் உண்மையை வேறு யார் கூறியுள்ளார்? எனக்குத் தெரியவில்லை. சித்தர் நெறி தவிர வேறு எந்நெறி எந்த மதம் இதைப் பற்றிக் கூறுகிறது? எந்தத்சிந்தனையாளர் இதைப்பற்றிக் கூறியிருக்கிறார். ஆய்வாளர்கள் கண்டுபிடிக்கட்டும்.

Koviloor Digital Library

அவ்வென்னும் அட்சரத்தில் நாடி தோன்றும்
அந்நாடி நின்று தத்துவந்தான் தோன்றும்
எவ்வென்னும் எலும்பு தசை புடை நரம்பு
ஈரெட்டுப் பழுவோடு கொங்கை ரெண்டாம்
முவ்வென்னும் முட்டுக்கால் வளை ஈரெட்டு
முட்டியமைத் தங்ஙனேயோர் உருவமாக்கி
அவ்வென்னும் இடையொடுபிங் கலையுஞ் சேர்த்துச்
சுழிமுனை என்றொரு துளையும் வழியதாமே.

- யூகி. தத்.90

வழியதுவாய் வாசல்வள மெனக் கொண்டங்கே
வளமாக உடலுண்ட அன்னம் எல்லாம்
கழியதுவாய்க் காளவாய்க் காந்தலாகிக்
ககனம் போ லெரிந்துமே படியப் பாய்ந்து
குழியதுவாய்த் தூராத குழிய தாகத்
துப்பாய நிணமாய்ப் பற் றீரலும் மாய்ப்
பொழியது வாய் காளிதமும் பித்துமாகிப்
பொருமலுமாய் வெறுமலுமாய்க் கிருமியாமே.

- யூகி. தத்.91

உடல் தத்துவத்தை ஞானத்துடன் கலந்து கூறுகிறது பாடல். 'அ' என்னும்அட்சரத்தால் நாடி நின்று உயிர் என்ற தத்துவம் தோன்றும். 'எ' என்ற எழுத்தால் தசைகள் நரம்புகள் விலா எலும்புகளுடன், மார்பும் தோன்றும் 'மு' என்ற அட்சரத்தால் கால்கள், மூட்டுக்கள் மற்ற எலும்புகளும் தோன்றி ஓர் உருவமாகிறது. 'சு' என்ற எழுத்தால் இடைகலை பிங்கலை என்ற மூச்சுக்களும் அவை ஒடுங்கும் சுழிமுனையும் உண்டாயின.

வாய் வழியாக உட்கொள்ளும் உணவு வெப்பத்தால் எரிந்து என்றும் நிரம்பாத குழியாக உள்ள வயிற்றில் குடல்களால் சீரணிக்கப்பட்டு தசையாகவும், ஈரலாகவும், காளிதமாகவும், பித்தாகவும் ஆவதோடு வயிற்றில் உள்ள கிருமிகளையும் உண்டாக்குகிறது. (காளிதம் = அழுக்கு, பித்து = பித்த நீர்)

Koviloor Digital Library

உணவை வயிறு சுண்ணாம்புக் காளவாய்போல் எரித்துக் கொண்டே இருக்கிறது என்பது அற்புதமான கருத்து. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உணவு வயிற்றில் எரிக்கப் படுகிறது என்பதைச் சித்தர்களே கூறியுள்ளனர்.

இந்த வயிறு என்ற குழி - காளவாய் - தூராத குழி. தூர்க்கவே முடியாத குழி. எத்தனை போட்டாலும் நிரம்பாத குழி. இந்தக் குழியில் உணவு எரிக்கப்படுகிறது. எரிக்கப்பட்டு எலும்பு, தோல், தசை, இரத்தம் மற்ற உள்ளுறுப்புகளான ஈரல் வகையாவும் உண்டாவதோடு அவற்றோ டியைந்த மலங்களும், பித்த நீர் முதலான எரி நீர்களும் உண்டாகக் காரணமாகிறது. உடலில் உள்ள கிருமிகள் கூட இந்த உணவிலிருந்தே உண்டாகின்றன.

கிருமிவகை வாயுவையும் தான் நிறுத்தி
கிரண முன்னூற்றறுபது போல் குடனிரங்கி
கருமியாய் அமர்ந்த குடலதுதான் விர்த்தி
அமர்நத முப்பத்திரண்டு முழுங் குடலுமாகும்
ஒருமி முழ மொன்பதுவாய் மடித்து மொப்ப
உற்ற சுக்கிலச் சலந்தான் மூன்று மாகி
வருமியாய் வச்சிரத் தோல் மேலே போர்த்து
வழிபலவாய் மொழிமொழியாயச் சந்துமாச்சே.

- யூகி. தத்.92.

குடலின் நீளம் முப்பத்திரண்டு முழம். அது ஒன்பது மடிப்பாக மடிந்து மடிந்து இருக்கிறது. இவை தவிர சுக்கிலத்தை உண்டு பண்ணும் மூன்று அமைப்புகளுடன் மேலே அநேகம் துளைகள் உள்ள தோலைப் போர்த்துக் கொண்டு மனித உடலாய்த் தோற்றமளிக்கிறது.

யூகிமுனிவர் விலா எலும்புகளின் எண்ணிக்கை, குடலின் நீளம் மடிப்புகள் எல்லாவற்றுக்கும் கணக்குச் சொல்கிறார்.

உடலை அறுத்துப் பார்த்து குடலை முழம் போட்டுப் பார்த்துக் கூறவில்லை. சித்தர்கள் உடலமைப்பு பற்றிப் பல அரிய

Koviloor Digital Library

உண்மைகளைக் கூறியிருக்கிறார்கள். அவற்றை இன்றளவும் மேல் நாட்டு விஞ்ஞானம் அறியவில்லை. கண்களால் பார்த்தோ கருவிகளாலோ அறியப்பட முடியாத பல அற்புதங்கள் மனித உடலில் உள்ளன. அவற்றை உரிய இடங்களில் கூறுவோம்.

சந்தது மூன்றரைக் கோடி மயிர்த்துவாரம்
தாக்கென நாலெட்டு உறுப்புமாகி
இந்து இருபது விரலைந் நான்கு கீரு
எட்டுச் சாண் நீளமுமா யேகமாகி
நந்து நாற் சாண் பெறு மெய் வாய் கண்மூக்கு
நலத்த செவியுடல் மண்ணுவின் கூறாகிப்
பந்து ரெண்டு காலுமா யிரண்டு கையாய்ப
பதினாறு கவருடைய வீணா தண்டே.

- யூகி. தத்து.93

மயிர்த்துவாரம் மூன்றரைக்கோடி, உறுப்புகள் முப்பத்திரண்டு, விரல்கள் இருபது, நீளம் எட்டுச் சாண்கள், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற மண்ணின் கூறான உறுப்புக்களோடு இரண்டு கால்கள் இரண்டு கைகள் பதினாறு கிளைகள் உள்ள முதுகுத் தண்டு.

தண்டோடே யாறு தெரு கடலேழாகும்
தாக்கான வெட்டுத்தூண் முப்பான் சந்து
எண்டோடே யெழுபதுபே ரெலும்பு தானாம்
ஏற்றமா மொழி முச்சாண் எலும்பு மாகும்
முண்டோடே எலும்பு முச்சாண் சதையுமாகும்
முக்கியமா மெண்பல மீரலு மாமென்ப
நண்டோடே நானாழி யுதிர மாகும்
நற்பத்து வாசலையு முடைத்த தாமே.

- யூகி. தத்து.94

உடைத்துதிர மாங்கிசமும் மேதை அத்தி
உயர்ந்த சுக்கிலம் மச்சை சத்த தாது

Koviloor Digital Library

படைத்த பலம் முப்பத்திரண்டு மாகும்
பண்பான பழுவெலும்பு பதினாறென்க
முடைத்த முதுகுத் தண்டீராறு கோர்வை
முதற் சூழ்ந்த தாளசைய தைந்துமாகும்
நடைத்த நரம் பெரும்பிலேழரையும் கூட்டி
நலம் பெறவே சதைமேவி நாடிற்றன்றே.

– யூகி. தத்து.95

நாட்டியே பிடரியினிற் கோர்த்த்நாடி
நரம்பு பின்ன லோரேழாயிரமா மென்க
ஆட்டியே யசைவுடலந் தான்றுலக்கில்
ஆருயிர் தானாற்பத்தி யாறதாகும்
தூட்டியே தொழுத்தை யிரண்டாயிரத்து
துடர்ந்து விண் வளரு மெய் யாயிர மாமென்க
சேட்டியே கோணல்கள் பதினா றாகும்
சேட்டுமமுங் குண்டலத்தி னனலதாமே.

– யூகி. தத்து.96.

இவ்வுடலில் உள்ள வீதிகள் ஆறு (எலும்பு, நரம்பு, தசை, இரத்த நாளங்கள், சர்ம நாளங்கள், மச்சை). நீர் நிலைகள் ஏழு (தண்ணீர், காதுநீர், மூக்கு நீர், உமிழ் நீர், குடல் நீர், மூத்திரம், சுக்கிலம்). பெரிய எலும்புகள் எழுபது. முழிகளையுடைய கை கால்கள் முச்சாண் எலும்புகளோடு முச்சாண் தசைகளால் கட்டப்பட்டுள்ளன. ஈரலின் நிறை எட்டுப்பலம். உடலில் உள்ள இரத்தத்தின் அளவு நான்கு நாழி. இப்படியமைக்கப்பட்ட உடலில் ஒன்பது வாசல்கள் உள்ளன. கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, மூக்குத் துளைகள் இரண்டு, வாய் ஒன்று, மூத்திரத் துளை ஒன்று, மலத்துளை ஒன்று. இவை நவத்துவாரங்கள், நற்பத்து வாசலுமாமே என்று இங்கு கூறப் பட்டிருப்பது சிந்திக்கத் தக்கது.

உதிரம், ஊன்நீர், இறைச்சி, கொழுப்பு, எலும்பு, சுக்கிலம், எலும்புகளுக் குள்ளிருக்கும் மச்சை, என்ற ஏழுவகைத் தாதுக்களும் சேர்ந்து நிறை முப்பத்திரண்டு பலமாகும். பழு எலும்புகள் பதினாறு. அதன்கீழ் பனிரெண்டு வளையங்களால் கோர்க்கப்பட்ட முதுகெலும்பு.

Koviloor Digital Library

எல்லா நரம்புகளையும் சேர்த்துப் பிடரியில் கோக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கோக்கப்பட்டுள்ள நாடிகளின் எண்ணிக்கை எழுபத்தீராயிரம்.

ஆமேநரம் பெழுபத் தீராயிரமாம் நாடி
அதிலுறும் நாடி விஷ்ணு நாடியாகும்
மேமேருத்ர நாடி இடை பிங்கலையும்
முது கெலும்பு பதினாறு பழுவுமாகும்
ஊமெனு முப்பத் தொருவார்க் குழியுமாகி
உதிர்ந்து நின்ற வையுழக்கா முதிரமாகும்
நால் நாழி வாத முந்நாழி பித்தம்
நானாழி சேட்டுமமும் நலத்ததாமே.

- யூகி. தத்து.102.

நலத்த மூன்றரைக் கோடி ரோமத்வாரம்
நல்லிருபத் தெண்கோடி மலத்துவாரம்
முலத்த முப்பத் தெண்கோடி சலத்துவாரம்
முயன்றிரத்த மைம்பல மாங்கிசமும் நூறு
கொலத்த கெந்த மெண்பலம் ரோமம் நூற்றெட்டு
கோடியாம் மேதைபல மிருநூறாகும்
பெலத்ததோல் முந்நூறு பலமதாகும்
பேரான தொண்ணூறு நிணந் தானாமே.

- யூகி. தத்து.103.

ஆமென்றகுடன் முந்நூற் றெழுபலந்தான்
அதிகமாம் வழுக்கை நாற்பலமதாகும்
தேமென்ற சீயுரித்தான் கண்கள் ரெண்டும்
சிறக்கவே நாலு கழஞ்சாகுங் கண்டாய்
நாமென்ற நாக்கு நாற் கழஞ்சதாகும்
நற்கந்த மூக்குத்தான் முக்கழஞ்சு
ஏமென்ற கன்னஞ்சேர் நாற்கழஞ்சு
எலும்பு நூற்றோர்பத் தெண்பலமென்னே.

- யூகி. தத்து.104

Koviloor Digital Library

என்னபல மிறைச்சிநூற் றறுபத்தைந்தாம்
ஏற்ற முப்பலந்தான் மூளையாகும்
பன்னு தாமரை மொட்டு மைங்கழஞ்சு
பார்க்கவே சலப்பையோர் முழுந்தான்நீளம்
ஒண்ணவே கருவிகள் தொண்ணூற்றாறாகும்
கணக்காக வுடற் குறிப்பு காயமாகும்
தன்னவே தத்துவங்க ளெல்லாஞ் சொன்னேன்
சார் நாடியின் றன்மை சாற்றினேனே.

- யூகி. தத்து.105.

உடலில் உள்ளவற்றை எடைபோட்டுக் கூறியிருக்கிறார் யூகிமுனி.

பலம், நாழி, கழஞ்சு, உழக்கு முதலிய அளவைகள் இன்று நடைமுறையில் இல்லை.

தவிர கால மாறுபாட்டால் மனிதனின் சூழ்நிலை, உணவுப் பழக்கங்கள், அன்றாட வாழ்க்கை முறைகள் முதலியவற்றில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன.

எலும்பு, தோல், தசை, கொழுப்பு என்று இவ்வாறாக ஒவ்வொன்றைப் பற்றியும் சித்தர்கள் கணக்கிட்டுப் பார்த்துள்ளனர். அவற்றைப் பற்றிப் பாடியும் உள்ளனர். இதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இங்கு இந்தப் பாடல்கள் எடுத்துக் காட்டப் படுகின்றன.

இவற்றையெல்லாம் கொண்ட இந்த உடம்பின் தத்துவங்கள் தொண்ணூற்றாறு என்று கூறி முடிக்கிறார் யூகிமுனி.

Koviloor Digital Library

யூகிமுனி எப்படி இந்தக் கணக்கைச் சொல்கிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

அகத்தியர் பெருமான் என்ன கூறுகிறார் என்பதைக் கவனிப்போம்.

தானான தேகமதில் கூடி நின்ற
சங்கைதனைச் சொல்லுகின்றேன் நன்றாய்க் கேளு
ஊனான ரோமமது மூன்றரையாங் கோடி
உத்தமனே நாடியது எழுபத் தீராயிரமாம்
கொனான தேகமடா பலமோ ஆயிரமாம்
கோள்கியதில் குடல் பலந்தான் நாற்பத்தைந்து
பூனான பல்லதுவும் பலந்தான் நாலு
பொருந்தி நின்ற சதைபலமும் இருநூறாச்சே.

- அகஸ். வாத சௌமியம் 51.

ஆச்சப்பா உப்பதுவும் பலந்தான் ஐந்து
அப்பனே மச்சையது பலந்தான் நாலு
நீச்சப்பா ஈரலது பலந்தான் எட்டு
நிசமான அஸ்தியதைச் சொல்லக்கேளு
காச்சப்பா பலமும் நூற் றிருபதாச்சே
கூட்டிநின்ற சேட்டுமந்தான் நாழியாகும்
பேச்சப்பா பித்தமது படிதான் காலாம்
பலமான சுக்கிலந்தான் அரைக்காலாகும்.

- அகஸ். வாத சௌமியம் 52.

ஆமப்பா சர்மமது என்ன வென்றால்
அப்பனே பலம் நூற்றுப் பதினாலாச்சே
தாமப்பா இப்படித்தான் கூடி நின்ற
சரீரமதில் வாசலது எட்டு மாச்சு
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க் கேளு
நாடி நின்ற கோபுரத்தின் வாசல் ஒன்று
ஓமப்பா அவ் வாசல் ஒன்பதுக்கு
உண்மையுள்ள ஆதாரக் கதவைப் பாரே.

- அகஸ். வாத சௌமியம் 53.

Koviloor Digital Library

பாரப்பா ஆதாரக் கதவைச் சாத்தி
பலபலவாய் நின்ற தொரு தாளைப்பூட்டி
நேரப்பா அப்பூட்டு தனக்கு மைந்தா
நிசமான சுழினையே கோல் தான் அப்பா.

....

- அகஸ். வாத சௌமியம் 54.

அகத்தியர் பெருமான் சற்று விபரமாகவே கூறுகிறார். யூகிமுனி தேரையரின் சீடர். தேரையர் அகத்தியரின் சீடர். அப்படிப் பார்த்தால் யூகிமுனிதான் மிகவும் விரிவாகக் கூறியிருக்க வேண்டும். ஆனால் அகத்தியர் கூறியவற்றில் சிலவற்றை விட்டுவிட்டார். சிலவற்றைச் சேர்த்துக் கொண்டார் யூகிமுனி.

சரீரத்தின் வாசல்கள் எட்டு. கோபுர வாசல் ஒன்று. அந்த ஒன்பது வாசல்களுக்கும் ஆதாரம் என்ற கதவைச் சாத்திப் பூட்டுப் போடப்பட்டுள்ளது. அந்தப் பூட்டுக்குச் சுழினை தான் சாவி. அதைப் பிறகு பார்ப்போம்.

Koviloor Digital Library

ஊர்வசி

கருவாக உருவாவதையும் பின் அதன் பிறப்பையும் அமைப்பையும் பற்றிச் சித்தர்கள் அனைவருமே பாடியுள்ளனர்.

ஊர்வசி தன் பஞ்சரத்னத்தில் பின்வருமாறு பாடுகிறார்.

சடல உற்பத்தி

அருளினால் சடலமான வாகுமிதை
யார் உரைப்பார் அனு போகமாய்
அமுர்த சுக்கில சுரோணிதத்திலவை
கூடியே உறவாடியும்
கருவியாலு மொரு பழம் போலும் நிறம்
காந்தி என்பதொரு பையினில்
கடலில் முத்துதித்தே பிறக்குங்
கருத்தே அருகு நுனி முனையினில்
உருவமா மெனிலுங் காருமேகம்பனி
யாய்ப்பொழிந்து பயிராகிடும்
பார்க்கும்போது கடுகான தாமதிலும்
பத்துக் கொன்று விதசுக்கிலம்
மருவிதானதுவுஞ் சுரோணிதந்தனிலும்
மகிழ்ந்து வாசமதின் சேர்க்கையால்
அதுவோதிரண்டு ஓர் உருவமாகித்தமர்
வாசல் மூடிவிடும் வாய்வுமே.

ஊ.ப. 130

இந்த உடல் உருவாகும் விதத்தை அனுபவத்திலிருந்து கூற யாரால் இயலும்? அமுர்தமயமான சுக்கிலமும் சுரோணிதமும் கூடி ஒரு கனிபோல் பிரகாசமான ஒரு பையில் - கடலில் முத்து உதித்ததைப் போலும்; அருகம்புல்லின்மேல் பனித்துளி நிற்பது போலும் தோன்றிப் பயிராகும். கடுகின் அளவில் பத்தில் ஒரு பங்கே அளவினதான சுக்கிலம் சுரோணிதத்தில் சேர்ந்தவுடன் திரண்டு ஒரு உருவமாகும். உடனே அதை வாயு மூடிக் கொள்ளும்.

Koviloor Digital Library

மூடியே மதிவு வேலிபோல் உயர்ந்
தே வளர்ந்துடல் காத்திடும்
ஊரு விந்ததில் பிராண வாய்வு வந்
தே உதித்து விளங்கிடும்
மேடியானது அபான வாயுவது
சேர்ந்துடனே மருவிப் புணர்ந்திடும்
நாடிடும் உதான வாய்வுமே பர
நாத விந்துவை வளர்த்திடும்
நற் கருவிலுமே உதித்து வேரான
தே வினை வந்து மூண்டிடும்
வீடினிலும் ஓர் ஐந்து நாள்தனிலே
கருவும் அரும்பாகி விடும்
ஈரைந்து நாள்தனிலே திரளும்
என்றே விதித்தனர் ஈசனே.

ஊ.ப.131

வாயு, அதை மூடிக்கொண்டு மதில்போலும், சுற்றிலும் அடைக்கப் பட்ட வேலி போலும் உயரமாக வளர்ந்து காப்பாற்றும். அந்த விந்துடன் பிராண வாயுவும் கூடிக் கொள்ளும். பிராணவாயு இல்லாமல் உயிர் ஏது? விந்து உயிர் உள்ளதாகையால் அது பிராண வாயுவை இழுத்துக் கொள்கிறது.

உதான வாயு என்ற உணவைத் தரும் வாயு நாதமும் விந்தும் கூடிய கருவை வளர்க்கும். அதனோடு வினைப்பயன்களும் வந்து சேர்ந்து கொள்ளும். ஐந்து நாட்களில் அது அரும்பாகும். பத்து நாட்களில் திரண்டு ஓர் உருவாகும். இது ஈசன் விதித்த படியாக நடப்பதுவாம்.

உற்பத்தியறிதல்

விதித்தவோர் பதினைந்து நாள்தனி
லே முளைத்திடும் முட்டையாய்
ஓர் திங்களில் வச்சிர கம்பமாயவை
யேயுருவதுபோ லத்தான்

Koviloor Digital Library

முதித்தவாறிரு திங்களில்
சிரமே முதுகுடன் நாவதும்
மூன்றுதிங்களிலும் அரைவிரல்களுடன்
கையுங்காலு மிவையாமென
மதித்தவாறு சதுர்திங்களில்
பாதமாமெனு நாசியாவது
மஞ்சுதிங்களில் வாயுநாவுடன்
ஆகுமே செவிகண்விழி
விதித்தவாரிரு மூன்றுதிங்களில்
வருநிகங் களோடுமாய்
வளருமா மேழுதிங்கள் தன்னிலே
மயிரெலும்புடன் நரம்பதே.

ஊ.ப. 132

பதினைந்து நாட்களில் முட்டையாக வளர்ந்துவிடும். ஒரு மாதத்தில் வச்சிர கம்பம்போல் உருப் பெற்று விளங்கும். இரண்டாவது மாத்தில் தலை, முதுகு என்ற உறுப்புகள் தோன்றும். மூன்றாவது மாதத்தில் இடுப்பு, கைகால்கள், விரல்கள் தோன்றும். நான்கு திங்களில் பாதங்கள் மூக்கு தோன்றும். ஐந்து திங்களில் வாய், நாக்கு, காது, கண், விழி முதலானவையும் தோன்றிவிடும்.

ஆறாவது மாதத்தில் நகங்கள் தோன்றும். ஏழாம் மாதம் மயிர், எலும்பு, நரம்புகளும் உண்டாகிவிடும்.

(வேறு)

தலையின் விபரமறிய

நரம்பதோடணை சரீரமெனு சடலநீர்
வரம்பாயு மலத்தசைய தாலுதித்திடும் சுவாசம்
பரமனுங்கலை இரவியீராருடன் பரவி
சரம்புகு மதுயீரெட்டும் பிறியுமூச்சதுவே.

ஊ.ப.133

நரம்பு முதலானவற்றுடன் கூடிய இப்பிண்டத்தை சடலநீர் சூழ்ந்து கொண்டிருக்கும். ஆயினும் சூரிய சந்திர கலைகளுடன் கூடிய மூச்சும் நடைபெறத் தொடங்கும்.

Koviloor Digital Library

தாழிசை

எட்டுத்திங்களில் உற்பத்தி

தானுதிப்பது யெட்டுதிங்களில்
தாய்பொசித்த ரசாயனம்
சாரமாயிதுவே கதிரிதின்
சாயல் போலருவியதும்
சோனைபோல் சொரிந்தே வழிந்தது
சுத்தநீர்சலம் பாய்ந்துமே
துடிப்பாய் துடர்ச்சி கபாலந்தின்வழி
தூரிடும் சிசுவாமதும்
தேனையுண்டதுமே வளர்ந்திடல்
திங்களொன்பதிலே் சடம்
தேரிடும்பஞ்ச அறிவினால் தந்தை
சிந்தையை யுணர்ந்தோதிடல்
வானுமே பிறப்பித்த ஈசன்
மலர்ப்பதமே நினைத்தேதவ
மற்சித்தேயருள் தா வெனுங்
கரங்கூப்பியே குருபாதமே.

ஊ.ப.134

எட்டாவது மாதத்தில் தாய் உண்ட உணவின் சத்து ஒளிக்கதிர் போலும், வீழும் அருவிபோலும் தொடர்ச்சியாகக் கபால வாசல் வழியாக (உச்சி) சிசுவின் உடலில் பாயும். சிசு தேனை உண்பதுபோல் அதை உண்டு வளர்ந்திடும். ஒன்பதாம் திங்களில் பூர்வ ஜென்ம வாசனையால் தன்னை உண்டாக்கிய ஈசன் மலரடிகளை நினைத்தபடி கரம்கூப்பி அருள்தா என்று வேண்டித் தவம் புரியும்.

தசதிங்கள் உற்பத்தி

சித்திமாதீரஞ்சு திங்களில்
கர்த்தனை நினைந்தே பணிந்(து)
தியானமாய் கெதிதரவென்னுங்குரு
பார்வை யாலபானவாயுமே
மத்திப·மடிமூலம் விட்டுக்கீழ்
மாறுகால் கொண்டு தைத்திடல்

Koviloor Digital Library

மைந்தனும் புவிபாரமே முடி
பாய்ந்து யோனியின் வாசல்கண்
டத்தன் சேர்வையைத்தான் மறந்
தஞ்சறிவது மாறி நாள்
அகிலமீது வந்தே யுதித்துமுன்
னறிவு மாறியு மசதியாய்
குத்தமாயமுதே கருவியின்
கூறுபாச மிதாகையால்
கோசார மாத்மாவிலு முத்த
மெய்க் குணமறந்து பொய்கூறுமே.

ஊ.பா.135

பத்தாம் மாதம் இறைவன் செயலால் (இங்கு குரு பார்வையில் என்கிறார் ஊர்வசி) தாயின் வயிற்றிலுள்ள அபான வாயு பிடித்துத் தள்ளக் காலால் உதைத்துக் கொண்டு தலை யோனியின் வாயிலை முட்டிக்கொண்டு வந்து பிறக்கும். அத்துடன் இறைவனுக்கும் தனக்கும் உள்ள உறவையும் மறந்துவிடும். பூர்வ ஜென்ம நினைவுகளையும் மறந்துவிடும். தன் ஆத்மாவின் குணங்களையும் மறந்து பொய்யான வாழ்க்கையைத் தொடங்கிவிடும்.

வேறு

பொய்யான காயமிதான வருணர
புவிதனில் உதித்தானபின்
புகழ்மாயா சத்தி கிரியாசத்தியிரு
போதனையின் வளர்மாய் கையால்
உய்யும் பஞ்சறிவுமே யிறந்துடலில்
ஓங்கு நல் வினையுந்தீவினை
உடலிலும் பிணிகளுறற்பவித்துக் கொடி
யோடியே படர்ந்தேசுரை
வையமீதினில் பூவும் பிஞ்சும்வடிவங்கள்
வாயுதித்து சுருண்டானதின்
மார்க்கம் போலுஞ்சனன வாழ்க்கைமய
மாய் செனித்த வகை யாவுமே

Koviloor Digital Library

செய்கையால் சரீர தேகமாவதுஞ்
செடலந் தொண்ணூத்தா றங்குலம்
செப்பினாரவர் தன்னவர்கள் கையதனில்
திறமதாய் மொழிநூல் மேவுமே. ஊ.ப.136

மாயா சத்தி கிரியாசத்திகளின் வசப்பட்டு மாய்கையால் பூர்வ ஜென்ம நினைவுகளையும் மறந்து, நல்வினை தீவினை என்ற இருவினைகளையும் ஏந்தி, அவ்வினைகளின் பயனாய் உண்டான பிணிகளுடனும் கொடியோடு கூடிய சுரையைப் போல் (சுரைக்காய் போல்) புவியின் மேல் வந்து விழுகிறது. உடலின் அளவு அவரவர் கையால் தொண்ணூற்றாறு அங்குலம் என்று அறிக.

வயது விபரமறிய

மேவி வாழ்சடல இரத்தமாங்கிஷமு
மேதையாகுந்தசை மச்சையு
மீருஞ்சுக்கில மீதாகுமேழதுவு
மிகவுமே யுருவதாகிடுந்
தாவியே சரீரமாகுஞ் சட்டைரசஞ்
சார்ந்து ஊழ்வினையுமாகிடும்
தாதுவாதவைம பித்தசேத்துமமுஞ்
சடலரூபமவை யாகிடும்
ஆவியாகு முடலான கூறுவள
மாகும் வண்மை யருளாதலால்
மூவிதத்தினிலும் பித்தமாவது
முப்பத்து மூன்று வளராண்டிலு
மோகதாது வளர்க்கின்ற காலமவை
முப்பத்தேழுஞ் சேத்மகாலமே.

ஊ.ப.137

இந்த உடலானது இரத்தம், மாமிசம், எலும்பு, நரம்பு. கொழுப்ப. மச்சை, சுக்கிலம் என்ற ஏழுதாதுக்ககளால் ஊழ்வினையால் வரும் வாதம், பித்தம், சேத்துமம் எனற நாகளை யுடையதாகவும் உள்ளது. இவற்றில் பித்தம் முப்பத்து மூன்று ஆண்டு களும் அதற்கு மேல் சேத்துமம் முப்பத்தேழு ஆண்டுகளிலும் ஆதிக்கம் புரிகின்றன.

Koviloor Digital Library

சேத்ம காலங்கழிந்தே குழந்தையவை
செடலநூறு வரையாண்டினில்
சித்தம் புத்தியாங்காரமானது
தேகசுத்தசுகம் மாறிடும்
விந்துநாத வினையேகியேயுடலு
மெய்மறந்துமே நிராசையாய்
விஸ்வரூப ஜெகதீசர் பாதமலர்
மீதிலும் பணியநேரிடும்
மெத்தநூறு வயதிளமையாகி
இருப்போர்களும் புவியில் காயமாய்
யெந்த நாளுமொரு நாளுமாகியினி
யீசராய் பதவியெய்திடும்
கைத்த உள்கரு பூதாதி ஐந்துவள
ரானநேர் புலனைந்ததும்
கர்ம இந்திரியமைந்ததும் ஞான
இந்திரியமைந்து மானதே.

ஊ.ப.138

சேத்ம காலம் கழிந்தபின் இந்த உடல் நூறு வயது வரைசித்தம், புத்தி, ஆங்காரம் என்பவற்றால் சுக துக்கங்களை அனுபவித்து, செயல் குறைந்து நினைவு மறைந்து, நிராசை வசப்பட்டு ஈஸ்வரா என்று இறைவனை வேண்டிக் கொண்டிருக்க நேர்வதும் உண்டு.

இந்த உடல் பூதங்கள் ஐந்தும், புலன்கள் ஐந்தும் கர்ம இந்திரியங்கள் ஐந்தும், ஞான இந்திரியங்கள் ஐந்தும், கரணங்கள் நான்கும் என்னும்படியாக.

ஊர்வசி தொடர்ந்து தொண்ணூற்றாறு தத்துவங்களைப் பற்றியும் முறைப்படியாகக் கூறுகிறார்.

சித்தர்களின் மொழியைப் பேசும் இந்த ஊர்வசி யார் என்பதை இங்கு சற்று ஆராய்வோம்.

Koviloor Digital Library

ஊர்வசி யார்?

ஊர்வசி தன்னைப் பற்றித்தான் கூறும் பகுதியில் தான் தேவலோக நடனமாது என்றே கூறுகிறாள். தான் ஒரு மானிடன் மேல் காதல் கொண்டதால் கோபங் கொண்ட இந்திரன் பூலோகத்தில் தள்ளி விட்டதாகவும், அவ்வாறு பூமியின்மேல் வந்து விழுந்த தன்னை சித்தர்கள் ஆதரித்துச் சித்தர் நெறியைக் கற்பித்ததாகவும் கூறுகிறாள்.

காலாங்கி, கமலநாதர், கலசமுனி (அகத்தியர்) பதஞ்சலி, வியாக்ரம பாதர், புலத்தியர், தேரையர், யூகிமாமுனி, திருமூலர், சட்டைமுனி, சுந்தரானந்தர், போகர், பிண்ணாக்கீசர், இராமதேவர், மச்சமுனி, உரோமரிஷி, இடைக்காடர் முதலிய சித்தர்களைப் பற்றியெல்லாம் தன் நூலில் (பஞ்சரத்னம்) குறிப்பிடுகிறாள். எல்லாவற்றிலும் பெரும் வியப்பிற்குரிய செய்தி, வேதவியாசரே தன் குரு என்று ஊர்வசி கூறுவதுதான்!

வேத வியாசரும் சித்தர்களில் ஒருவரா? நாம் வெளியிட்டுள்ள நாற்பத்தெட்டுச் சித்தர்கள் பெரிய ஞானக் கோவை என்ற நூலில் பதஞ்சலி, வியாக்கரமர், வசிஷ்டர், துர்வாசர், வரரிஷி, சனகர், சங்கரர், பராசரர், பரத்துவாசர், கௌசிகர், மிருகண்டு, செய்மினி அத்திரி, சுகப் பிரமம் போன்ற பல ரிஷிகள் தமிழில் பாடியதாக உள்ள நூல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறோம்.

இவை சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த குருசாமிக் கோன் என்ற பெரியார் ஊர் ஊராக அலைந்து பல பெரியோர்களைச் சந்தித்து அவர்களிடமிருந்த ஓலைச் சுவடிகளைப் பெற்று பத்து பாகங்களாகப் பதிபித்த வைத்திய வாத யோக ஞான சாஸ்திரத்திரட்டு என்ற பெரிய நூல்களிலிருந்து திரட்டியவை.

ரிஷிகள் தமிழில் பாடினார்களா என்று ஐயப்பட வேண்டிய தில்லை. யோக நெறியில் நிற்பவர்கள் எல்லா மொழிகளையும் அறியவும், மொழியவும் அவற்றில் நூல் புனையவும் திறம் பெற்றவர் களாகிறார்கள் என்று கூறப்படுகிறது.

வேறு யாராவது இந்நூல்களை இயற்றி வைத்துவிட்டார்கள் என்று எண்ணுவது ரிஷிகளை அவமதிப்பதாகும். இவ்வளவு

Koviloor Digital Library

ரிஷிகளின் பெயரால் இவ்வளவு நூல்களை இயற்றி ஓலைகளில் பதித்து வைக்க யாரால் இயலும். பலபேர் கூடிச் செய்த காரியம் என்றாலும் அவர்கள் எல்லோரும் ஆளுக்கொரு ரிஷியின் பெயரால்தான் பாட வேண்டுமா?

தவிர காலாங்கி நாதர் சதுரகிரியைப் பற்றிப்பாடும் பொழுது இங்கே வரரிஷியின் குகையைக் காணலாம். இன்ன இடத்தில் மிருகண்டு முனிவர் மகப்பேறு கோரி மகா தேவனைப் பூசித்த குகை உள்ளது என்றெல்லாம் இந்த ரிஷிகளைப் பற்றிக் கூறுகிறார்.

ஓலைச் சுவடிகளைச் சேகரித்த பேரறிஞர் உ.வே. சுவாமி நாதையர் நூலகத்திலும் பல சித்தர்களின் ஓலைச் சுவடிகள் உள்ளன என்றும் அவை ஆராயப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

மேலும் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் இன்னும் எத்தனையோ பேரிடம் ஓலைச் சுவடிகள் மூட்டை மூட்டையாகக் குவிந்து கிடக்கின்றன.

சித்தர் பாடல்களின் மொழி, நடை முதலியவற்றைக் கொண்டு இம்மாதிரி நடை பிற்காலத்தின் பாற்பட்டது என்றும், பதினான்கு பதினைந்தாவது நூற்றாண்டுகளைச் சேர்ந்தவர்களே சித்தர்கள் என்றும் வாதாடுவது சரியல்ல. மொழி, நடை என்பவற்றுக்கு அப்பால் சித்தர் பாடல்களில் வரும் அரிய கருத்துக்களையும் எண்ணற்ற வேதியல் உண்மைகளையும் கொண்டே சித்தர்களின் காலத்தைக் கணக்கிட முயல வேண்டும்.

இவை யாவற்றையும் கருத்துட்கொண்டு கணித்துப் பார்க்கும் பொழுது ஊர்வசி சித்தர் நெறி சார்ந்தவளே என்று ஐயமறத் துணியலாம்.

படிகமதில் தன்உருவம் தோன்றுகின்ற
படியே தான் சீவப்ர மாணமாகும்
கடினமனக் களங்கத்தால் சீவனாகும்
களங்கற்றால் பிரமமெனக் கருதலாகும்.

Koviloor Digital Library

என்று சீவனே சிவன் என்ற சித்தர் நெறியை அவ்வளவு தெளிவாகப் பாடும் ஊர்வசி சித்தர்களில் ஒரு இரத்தினமாகத் திகழ்கிறாள் என்று கூறலாம்.

ஊர்வசியின் சமாதி கோதாவரி நதிக்கரையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஊர்வசி உடலின் அமைப்பு பற்றிக் கூறும்பொழுது,

பருதலாலுமே முன்னூற்றறுபது
பலமெனும் மேலான கூறாகிடல்
முருதுறைந்திடுமே பலனாவது
முப்பத்திரண்டு முழங் குடலாகுமே.

ஊ.ப.201

என்று குடலின் எடையையும் நீளத்தையும் கூறுகிறார். குடலின் எடை முன்னூற்றறுபது பலம். நீளம் முப்பத்திரண்டு முழம்.

முழமெ னிலுருவாக வமைத்துடல்
ஒன்பதுடன் வாசவ் பிறிந்திட
வழியதாய் உதிரமெனில் சுக்கில
மலசல மிவைமூன்று வகையெனில்
அழியதேதுவச்சிர தோல் போர்த்துமே
வழியது பலவே மொழி சந்துமாய்
நமுவெனில் மூணரைகோடி ரோமமாய்
நாலெட்டுனிலுருப் பாடியர்வதே,

ஊ.ப.202

இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒரு உருவமாக அமைத்து, ஒன்பது வாசல்களையும் வைத்து, உதிரம், சுக்கிலம், மலசலங்கள் என்பவற்றையும் சேர்த்து உறுதியான ஒரு தோலைப் போர்த்தி இந்த உடல் செய்யப்பட்டுள்ளது.

ஒன்பது வாசல்கள் மட்டுமல்ல, மேலும் பல வழிகள் மூன்றரைக் கோடி ரோமங்களிலும் மூன்றரைக் கோடி துவாரங்கள்.

Koviloor Digital Library

உருப்படி இருபது விரலெனி
லொருனான்குமே யுதிரமுமாகிடல்
இருப்பெனிலெட்டு சாண்நீள தேகமா
யிருரெண்டு நிலிவைசாண் பெருமனாய்
வருந்திடிலெனில் வாய்விழி நாசியாம்
வாழ்த்திடுமுடல் பிரிதிவியின் கூறதாம்
இருநாடிலு மிரண்ட்து காலுமாய்
இரண்டு கைபதி னாருகயறதே.

ஊ.ப.203

இருபது விரல்கள் அவரவர்கையில் எட்டு சாண் நீளம் உடையது இந்த உடல். வாய், கண்கள், மூக்கு, இரண்டு கால்கள், இரண்டு கைகள் எல்லாம் கூடிய இந்த உடல் பதினாறு கயறுகளால் கட்டப் பட்டுள்ளது.

கயறதாகும் வீணாதண்டு மாகிடல்
கருதுமாரு தெருவுமே முகடல்
இவையெனில் யெட்டுத்தூர்ணது வேயெனில்
அலைசந்து முப்பத்திரெண்டாகையால்
இவையெ னில்போரெலும்பு யெழுபதாம்
இயன்ற முச்சாணெலும் பதுமாகிடல்
அலையு முச்சாணவைபெ்லும் பேசதை
யாருமெண் பலமீரலெனுமதே.

ஊ.ப. 204

இந்த உடலைத் தாங்கி நிறுத்துவது வீணாதண்டு எனப்படும் முதுகெலும்பு. நீண்ட எலும்புகள் எட்டு. இணைக்கப்பட்ட எலும்புகள் முப்பத்திரண்டு. பெரிய எலும்புகள் எழுபது. மூன்று சாண் நீளமுள்ள எலும்புகள் அதே. நீளமுள்ள சதையால் கட்டப்பட்டுள்ளது. உடலில் உள்ள ஈரலின் எடை எட்டுப் பலம்.

நண்பதாகும் நாழியுதிரமாம்
நாலுபத்து வாசலுடையதாய்
உண்டெனிலு முதிரமும்மாங்கிஷ
முயர்ந்த மேதையவையதில் சுக்கிலம்

Koviloor Digital Library

தண் பெருந்தசை மச்சையுமாமெனில்
சத்ததாது முப்பத்துரெண்டு பலம்
பண்பதாகும் பழுவெலும் பேதெனில்
பதினாறுடன் படைத்தவாறென்பதே.

ஊ.ப.205

உதிரம் நாழி, உதிரம் மாமிசம், கொழுப்பு, சுக்கிலம், மச்சை, நசைகள் ஆகிய ஏழும் சேர்ந்த எடை முப்பத்திரண்டு பலம். பழு வெலும்புகள் பதினாறு.

படைத்திரு முதுகு தண்டீராறுமாய்
பாருங் கோர்வை பகவன் செயலெனில்
உடைத்தாளசைவே தெனிலஞ்சுதாம்
உயர் நரம்பெலும் போன்றியேழாகிடல்
அடைத்தசை வதுங்கூடிச் சதையின்மே
லானவாறதுவே தெனிலுமொழி
பிடைத்ததும் பிடரியினால் நாடி தான்
பின்னல் கோர்வைப் பிறவியைப் பேசுவாம்.

ஊ.ப.206

முதுகுத் தண்டில் உள்ள எலும்புகள் பனிரெண்டு. இதன் கோர்வை பழுவெலும்புக் கோர்வைக்குக் கீழாக அசையும் படியாக அமைந்துள்ளது. முது கெலும்புத் தண்டின் வழியாகவே நரம்புகள் செல்கின்றன. பிடரியில் நரம்புகள் யாவும் பின்னல் கோர்வையாய் இணைக்கப்பட்டுள்ளன.

பிடரிதன்னில் பிரிந்திடுமே நரம்
பெழுபத் தீராயிரமெனு மாதலால்
அடரிடுமசை வானதுடலினி
லாருயிரவை நாற்பத்தியாறதாம்
துடரிடுந் தொகையுமிரண்டாயிரந்
துடர்ந்துமேவி வஉருமையாயிரம்
படரிடும் பதினாறு கோணமதாய்
பரிசித்திடல் சேத்துமத்தின் கூறதே.

ஊ ப.207

Koviloor Digital Library

பிடரியிலிருந்து பிரிந்து உடல் பூராவும் பரவியுள்ள நரம்புகளின் எண்ணிக்கை எழுபத்திரண்டாயிரம். இவற்றில் அசைகின்ற பகுதி நாற்பத்தாறு. அடுத்து வரும் எண்ணிக்கைகள் மிகுதி பற்றிக் குறிப்பிடு வனவாக இருக்கலாம்.

இடைகலைகதிரும் பின்கலைமதியும்
யிருகலை யெழுந்துடனோடி
இடரிலாது முதுகினில்யெலும் பதவு
மீவிட்டுப் பழுவதுமாகி
உடம்பதில் முப்பத்தாறுமே
துவாரமு முடலிவை
குழியென விளங்கும் உதிரமும் உழக்கு
வாதம் நானாழி உயர்ந்திடும்
பித்தம் முன்னாழி உடம்பிவை
சேத்துமமுந்திரு நாழி
மூணரைகோடி ரோமத்துவாரம்
மூலமேயுதிக்கு மிருபத்தெண்கோடி
..................டுங் கெந்தமவையு
நண்பலமாமயிரது நூத்தெட்டுக்கோடி.

ஊ.ப.216

இடைகலை என்ற சூரிய நாடியும் பின்கலை என்ற சந்திர நாடியும் இரண்டுக்கும் இடைப்பட்ட நடு நாடியும் -

பழுவெலும்புகளோடு கூடிய முதுகெலும்பும், எல்லாம் துளைகள் உள்ளவை. இந்த உடலில் வாதம் நான்கு நாழி, பித்தம் மூன்று நாழி, சேத்துமம் இரண்டு நாழி, ரோமத்துவாரம் மூன்றரைக் கோடி.

பலபல மொழியின் பைந்தமிழாய்ந்து
பாடினேன் ஊர்வசி வாக்கியம்
பன்னுந்தாமரையு மெட்டு மைங்களஞ்சு
பகர்ந்திடச லப்பையு முழந்தான்
கலனுருங்கருவி இவைதொண்ணூற் றாருங்
கணக்கறிந் தொவ்வொன்றாய்க் கருத

Koviloor Digital Library

காயமாஞ்சட முடல் குறிப்பதுங் கண்டு
யானருளினேன் கருத்தாய்
மலமதுவகற்றி யமுதமே புகட்டி
வாசியை வரவழைத்துளமில்
வளமறிந்துணரு வள்ளுவனாதர்
வசனமோ ராயிரத்தன்னூர்
நிலவது போல வமைத்திடலெனது
நிகழ்த்திடலா யிரத்தன்னூர்
நெறியதாய் விளங்குந் தத்துவப்படலம்
நீடுழி வாழ்ந்திருந்தனனே. ஊ.ப.218

சித்தர்கள் உடற்கூறு பற்றி நன்கு ஆய்ந்துள்ளனர். பாடல்களைப் பெயர்த் தெழுதியவர்களால் பிழைகள் நேரிட்டிருக்கலாம். ஆயினும் உடலை அறுத்துப் பார்க்காமலும், வேறு பரிசோதனைகளுக்கு உட் படுத்தாமலும் எந்த அளவு ஆய்ந்துள்ளனர் என்பதை இப்பாடல்கள் நன்கு விளங்கச் செய்யும்.

Koviloor Digital Library

திருமூலர்கூறும் உடல் தத்துவம்

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப்போல எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அது இதுவாமே.

- திருமந்.443.

இவ்வுலகம் இறைவனின் படைப்பு என்பதுதான் சித்தர் கொள்கை. சிவபெருமான்தான் முதலாவது சித்தர் என்றே சித்தர்கள் கூறுவர். சீவனே சிவன் என்பதற்கு அறிவியல் பூர்வமான விளக்கமும் கண்டனர்.

இங்கு குயவன் சக்கரத்தில் வைக்கப்பட்ட மண்ணைத் தான் விரும்பியதுபோல் பலவகைப் பாண்டங்களாக வனைவதைப்போல் எங்கள் இறைவனாகிய நந்தியும் உயிர்களைப் படைக்கிறார். உயிர்கள் தோன்றுவதற்கு முன் இந்த உலகின் மேற்பரப்பில் உயிர்ப் பிராணிகள் அசைவில்லாமல் இருந்தன. அப்படி அசையாமல் கிடந்த உலகத்தில் இறைவன் விருப்பப்படி அது இது என்று பல உயிர்களும் தோன்றின.

ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்
ஆதி படைத்தனன் ஆசில்பல் ஊழி
ஆதி படைத்தனன் எண்ணில்பல் தேவரை
ஆதி படைத்தவை தாங்கி நின்றானே.

- திருமந்.447.

ஆதியாகிய கடவுள் முதலில் பஞ்ச பூதங்களைத் தோற்று வித்தான். பல உலகங்களைப் படைத்தான். எண்ணற்ற தேவர்களைப் படைத்தான். எல்லாவற்றையும் அவனே தாங்கி நின்றான்.

கருவை ஒழித்தவர் கண்ட நால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்துமன் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்த
உருவம் இரண்டாக ஓடி. விழுந்ததே.

- திருமந்.454.

Koviloor Digital Library

கரு என்பது முதலில் ஆண்மகனின் உடலில் தோன்றி இரண்டு மாத காலம் வளர்ச்சியடைகிறது. இதை தத்துவங்கள் இருபத்தைந்தையும் கடந்தவர்களே அறிவார்கள். மற்றவர் அறிய மாட்டார்கள். பிறகு அது பெண்ணின் உடலில் கருக்குழியைத் தேடிப் புகும் காலத்தில் ஆண் பெண் என்று இரண்டாக ஓடி விழுந்தது.

இன்புறு காலத்து இருவர் முன்பூறிய
துன்புற பாசத் துயர்மனை வானுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத் தொழிந்தனனே.

- திருமந்.453.

கணவனும் மனைவியும் கலந்து இன்புறும் காலத்தில் (கருவாக உருவாகப் போகும்) அந்தச் சீவன் முன்பு விட்டுச் சென்ற வினையை அனுபவிப்பதற்கான காலமும் அது எடுக்கும் பிறவியில் பக்குவம் அடைவதற்கான காலத்தையும், அது பூமியில் தங்க வேண்டிய கால அளவையும் அப்பொழுதே அமைத்துவிடுகிறான்.

ஒரு மனிதனின் ஆயுட் காலம், அவன் அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்கள், அவன் அடைந்து சுமக்க வேண்டிய நோய் நொடிகள், இவை எல்லாவற்றையும் உள்ளிட்ட எப்படிப்பட்ட வாழ்க்கையை அவன் அடைய வேண்டும் என்பதையெல்லாம் அப்பொழுதே - கரு தாயின் உடலில் உருப்பெறும் அக்காலத்திலேயே இறைவன் அமைத்து விடுகிறான் என்று கூறுகிறார்.

மேல்நாட்டு வழிமுறையாகத் தோன்றிய பாடப் புத்தகங்களைத் தவிர வேறெதையும் அறியாதவர்களுக்கு இதை நம்புவது கடினமாகத்தான் இருக்கும்.

தாம் முன் செய்த வினையை நம்பாதவர்கள், விதியை நம்பாதவர்கள், பாவ புண்ணியங்களை நம்பாதவர்கள், அவ்வப்போது ஏற்படும் ஆசைகளால் தூண்டப்பட்டு அவற்றிற்குத் தகுந்தபடி வாழ்வதே வாழ்க்கை என்று நினைப்பவர்கள், இத்தகைய மாந்தரால் திருமூலர் கூறும் உண்மைகளை உணரவே முடியாது. ஆனால் இன்றைய அறிவியலுக்குப் பொருந்தும்படியானவற்றையும் அவர் கூறி யிருப்பதைக் காணும்போது - ஒருவகையான அச்சம் - புலனோடியைந்த வாழ்க்கைக்கு அப்பாலும் ஏதோ உளது என்பதை அறிவதால் உண்டாகும் பீதி - இதை அனுபவித்தே ஆகவேண்டும.

Koviloor Digital Library

போகின்ற எட்டும் புகுகின்ற பத் தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாயிலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடானெனிற் பன்றியு மாமே.

– திருமந்.457.

இந்த உடலின் தன்மையை உணரும் ஞானியர் அதைப் புரியட்டக சரீரம் என்று கூறுவர். அந்த சரீரத்தின் தன்மையாலேயே சீவன் உலகை உணரும் இயல்பை அடைகிறது. புரியட்டக சரீரம் என்பதற்கு எட்டுவகைக் கயிறுகளால் முறுக்கப்பட்ட சரீரம் என்று பொருள் கொள்ளலாம். அக்கயிறுகள் சுவை, ஒளி, ஊறு,. ஓசை, நாற்றம், மனம், புத்தி, அகங்காரம் என்பவையாகும். முதல் ஐந்தும் ஐம்புலன்களால் அறியத்தக்கவை. பின் மூன்றும் சீவனின் அந்தக் கரணத்திலிருந்து தோன்றுபவை.

இவையோடு தச வாயுக்களும் கருவிலேயே அமைந்து விடுகின்றன. அவை பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்பவை. பத்துவித வாயுக்களா? மேலை நாட்டு அறிவியலார் கற்றுக் கொள்ள வேண்டியவை இன்னும் எவ்வளவோ நம்மிடம் உள்ளன.

வாயுக்கள் பத்தோடு விகாரங்கள் எட்டும்கூட கருவிலேயே அமைந்துவிடுகின்றன. அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பை, அகங்காரம் என்பவை.

மேற்கூறியவற்றோடு கண் இரண்டு, காது இரண்டு, நாசித் துளைகள் இரண்டு, வாய் ஒன்று, நீர்த் துளை ஒன்று, மலத்துளை ஒன்று ஆக ஒன்பது வாயில்கள் அக்கருவிலேயே அமைகின்றன.

அவை தவிர மனித உடலில் அமையும் குண்டலியாகிய நாகமும், பனிரெண்டு விரற்கிடை செல்லும் பிராணன் என்ற குதிரையும் உள்ளன.

Koviloor Digital Library

உலகத்தவர்க்குக் கழுத்துக்குக் கீழே எட்டு விரற்கிடை பிராணன் என்ற வாயு பாயும். ஞானியர்க்கு மட்டும் கழுத்துக்கு மேலே நான்கு விரற்கிடை பாயும். அதையே பனிரெண்டு விரற்கிடை பாயும் குதிரை என்கிறார்.

இவை எல்லாவற்றையும் உயிர்களை இயக்குகின்ற பாகனாகிய பெருமான் விடாவிட்டால் அப்பிறவி பன்றியின் பிறவியையே ஒப்பதாகும்.

அணுப் பிரமாணமே உள்ள கருவிலேயே இவ்வளவும் அமைந்து விடுகின்றன என்பது எவ்வளவு வியப்பான செய்தி. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் இதைக் கூறியுள்ளான் என்பதை எண்ணும்போது எத்தகைய பேருவகை உண்டாகிறது? இம்மட்டோ?

கர்ப்பத்துக் கேவல மாயாள் கிளை கட்ட
நிற்கும் துரியமும் பேதித்து நினைவெழ
வற்புறு காமியம் எட்டாதல் மாயே யஞ்
சொற்புற தூய்மறை வாக்கினாஞ் சொல்லே.

– திருமந்.460.

கரு வளர்கிறது. அதற்கு மாயை நினைவை உண்டாக்குகிறது. அதனால் சுத்த ஞானமாக இருக்கிற துரியம் உடைக்கப்பட்டு தர்மம், ஞானம், வைராக்கியம் ஐசுவரியம் – அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்ற காமியங்கள் – குணங்கள் எட்டும் உண்டாகின்றன. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற வாக்குகள் நான்கும் உண்டாகின்றன.

என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நண்பால் ஒருவனை நாடுகின்றேனே.

– திருமந்.461.

Koviloor Digital Library

எலும்புகளால் ஒரு உருவத்தை அமைத்து அந்த உருவம் நிற்கும்படியாக நரம்புகளால் வரிந்து கட்டி மேலே தசையால் பூசித் திருத்தமாக இந்த உடல் என்ற வீட்டைக் கட்டி அதில் உயிர் இன்பத்தோடு தங்கியிருக்கும் படியாகச் செய்த இறைவனை நட்போடு நாடுகின்றேன்.

உடலின் அமைப்பை எவ்வளவு அழகாகத் திருமூலர் கூறியிருக்கிறார். படைப்பின் தத்துவம் முழுமையுமே பளிச்சென ஒளிவிடும்படியாகக் குணங்களும் செயல்களும் பேச்சும் திறமையும் கருவிலேயே அமைத்து அக்கருவிலிருந்தே எலும்பு நரம்பு தசை முதலியவற்றைத் தோற்றுவித்து உயிர் தங்கும் உடலாக இறைவன் படைத்து விடுகிறான்.

அற்ப அறிவுடையோர்களுக்கு என்புதோல் போர்த்த உடல் மட்டுமே கண்களுக்குப் புலப்படும். அந்த உடலுக்குள்ளே முக்குணங்களும், பஞ்சேந்திரியங்களும், காமியங்கள் எட்டும், வாயுக்கள் பத்தும் எவ்வாறு வந்து புகுந்தன என்பது அவர்களுக்கு விளங்கவே விளங்காது. பருப்பொருள்களைக் கொண்டு மட்டுமே உலகை அளவிடுவோர்க்கு உடலுக்குள்ளே ஊடாடும் இறைவனை எவ்வாறு உணர முடியப்போகிறது?

இன்புற்றிருவர் இசைவித்து வைத்த மண்
துன்பக் கலசம் அணைவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே.

– திருமந்.468.

இரண்டுபேர் இன்புற்று ஒருமனதாக வைத்த மண்பாண்டமாகிய உடலில் (கலசம்) – அதைத் துன்பக் கலசம் என்கிறார் திருமூலர். இந்த உடலே துன்ப மயமானது. துன்பங்களுக்குக் காரணமாவது. ஆன்மாவை ஆசாபாசங்களில் பிணைப்பது. உயர்ந்த நிலையிலிருந்து அதைக் கீழே தள்ளுவதும் அதுதான். எனவே உடல் துன்பக் கலசம் ஆயிற்று. அதில் ஆன்மா சேர்ந்ததும் ஒன்பது வாயில்கள் – நீர்ச்சால் என்கிறார் திருமூலர். கழிவுநீர் வெளியேறும் துளைகள் என்று மிகக் கேவலமாக கூறுகிறார். புரியட்டமாகிய எட்டும், கர்மேந்திரியங்கள்

Koviloor Digital Library

ஐந்தும், ஞானேந்திரியங்கள் ஐந்தும் ஆகப் பதினெட்டுக் கலசங்களும் கருப்பையாகிய சூளையில் வெந்து பக்குவமாயின.

உடல் வைத்தவாறும் உயிர் வைத்த வாறும்
மடை வைத்த ஒன்பது வாயிலும் வைத்துத்
திடம் வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்
கடை வைத்த ஈசனைக் கைகலந்தேனே.

- திருமந்.470.

உடலைத் தோற்றுவித்து, அதற்குள் உயிரையும் தோற்றுவித்து - அந்த உடலில் மடைவைத்த ஒன்பது வாயில்களையும் வைத்து - சிரசில் ஆயிரம் இதழ்த் தாமரை அமைத்து அங்கே சோதியையும் அமைத்த இறைவனைக் கலந்தேன்.

மடை என்பது கால்வாய்களில் நீர் விடவும் அடைக்கவும் உதவும் அமைப்பு. சகஸ்ராரம் என்பது ஏழாவது ஆதாரம். சிரத்தில் ஆயிரம் இதழ்த் தாமரையாக விளங்குவது. சுழிமுனை நாடி வழியாக அடையக் கூடியது.

உடல் தத்துவத்தோடு இறைத்தத்துவத்தையும் இணைத்தே சித்தர்கள் பாடியுள்ளனர். பருப்பொருளாகிற உடலை மட்டுமே நினைப்பவன், மனம் போனபடி சுகங்களை அனுபவிப்பதற்காக மானம் கெட்டு மதிகெட்டு அறநெறி விட்டு அல்லவை தொட்டு அழிந்து போவான் என்பதால் திருமந்திரம் ஒவ்வொரு படியிலும் இறைவனை நினைவூட்டிக் கொண்டே செல்வதைக் காணலாம்.

Koviloor Digital Library

ஆறு ஆதாரங்கள்! ஐந்து பூதங்கள்!

இந்த உலகம் நிலம், நீர், வளி, நெருப்பு, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களால் ஆனது. இவ்வுலகில் உள்ள எல்லாப் பொருட்களும் அப்பஞ்ச பூதங்களாலேயே ஆனவை. நின்று நிதானமாக ஆராய்வோர்க்கு இது புலப்படும். பொன்னும் மண்ணின் கூறே! வெள்ளியும் மண்ணின் கூறே! ஆகையால் பஞ்ச பூதங்களுக்கு அப்பால் எதுவுமே இல்லை.

பஞ்ச பூதங்களையும் அவற்றிற்குரிய தெய்வங்களையும் இந்த உடலிலேயே காணலாம் என்பதே சித்தர் நெறி. அதுவே சித்தர்களின் உடல் தத்துவம். மருத்துவம் பயில்பவர்களுக்கு இது ஒரு தேவையற்ற பொருளாகத் தோன்றலாம். சமயச் சார்புள்ளதாகவும் தோன்றலாம். ஆனால் சித்தர் நெறியில் மருத்துவம் ஆரம்பப் பாடம் மட்டும்தான். மருந்துகள் அனைத்தும் காய சித்திக்கே என்பதுதான் சித்தர் நெறி. உட்லை அழியாத நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையின் மேலேயே சித்தர் மருத்துவத்தையும் கூறினார்கள். அதனால் உடல் தத்துவத்தில் பஞ்ச பூதங்களின் பங்கு என்ன என்பதை மேலெழுந்தவாறாகவேனும் அறிந்து வைத்துக் கொள்ளுதல் அறிவுடைமையல்லவா?

உடம்பில் பஞ்ச பூத தத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் ஆறாதாரங்களை அறிந்து கொள்ளாமல் முடியாது. ஏனென்றால் இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிக் கிடக்கின்றன. இதை விட்டு அதை மட்டும் தெரிந்து கொள்ள முடியாது. அதைவிட்டு இதை மட்டும் தெரிந்து கொள்ளவும் முடியாது.

ஆறாதாரங்களைப் பற்றி அறிய முற்படும்போது முதலில் குண்டலினியைப் பற்றித் தெரிந்து கொண்டே ஆகவேண்டும்.

'எண் சாண் உடம்பில் சிரசே பிரதானம்' - ஏனென்றால் ஐம்புலன்களும் சிரசிலேயே அமைந்துள்ளன. எல்லாவற்றையும் உணரும் ஆற்றல் கொண்ட மூளையும் கபால ஓட்டிற்குள்ளேயே வைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

கைகால்கள் செயல் உறுப்புகள், மனிதன் செய்ய வேண்டிய எல்லாச் செயல்களையும் அவையே செய்கின்றன.

எஞ்சியுள்ள நடுப்பகுதி இடுப்பின் அடிப்பாகம் முதல் கழுத்துவரையுள்ள இப்பகுதியே உடல் உயிருடன் இருப்பதற்கு உறுதுணையாகிறது. உணவை உட்கொண்டு உடலை வளர்க்கிறது. காற்றை உட்கொண்டு உயிரை வளர்க்கிறது. உடம்பில் உயிரை உணர்வதற்கான ஞானத்தைப் பெருக்கும் யோக தண்டாகவும் விளங்குகிறது.

உறுப்புகளைப் பற்றி மட்டும் அறிவார்க்கு இங்கே நிறைய வேலை இருந்த போதிலும் அவர்கள் அறிவது கால் பங்கே! மூச்சுப்பைகள், இருதயம், உணவுக் குழல்கள், கணையம், வயிறு, சிறுகுடல், பெருங்குடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்கும் முதுகெலும்பு, விலா எலும்புகள், அடிப்பகுதியில் தொடை எலும்புகளோடு இணையும் எலும்புப் பகுதிகள், நரம்புகள் இரத்தக் குழாய்கள் இவற்றைத் தவிர இங்கு வேறு என்னதான் உளது என்றுதான் தோன்றும்.

எல்லா நரம்புகளும் முதுகுத் தண்டின் வழியாகவே மூளையை அடைகின்றன என்பதும் தெரியும். இவை தவிர இந்த முதுகுத் தண்டு ஆறாதாரங்களுக்கும் அடையாளம் காட்டும் யோக தண்டாகவும் விளங்குகிறது என்று சொன்னால் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் மிகச் சிலரே.

திருமூலர் கூறுகிறார்,

மாறா மலக்குதந் தன்மே லிருவிரற்
கூறா இலிங்கத்தின் கீழே குறிக் கொண்மின்
ஆறா உடம்பிடை அண்ணலும் அங்குளன்
கூறா உபதேசம் கொண்டது காணுமே.

மலத்துளைக்கு இரண்டு விரற்கிடை மேலேயும் நீர்த்துளைக்குக் கீழேயும் உள்ளான் இறைவன். அதாவது அங்கே இறைவன் குண்டலினி வடிவில் சுருண்டு படுத்துக் கிடக்கிறான். அவனைக் காண வேண்டுமென்றால் எல்லோராலும் முடியாது.

Koviloor Digital Library

அவனைக் காட்டிக் கொடுப்பதற்கும் எல்லோராலும் முடியாது. சிறந்த குருபிரானால் மட்டுமே முடியும். அப்படிப்பட்ட குருவை அடைந்தால் - அடைய முடிந்தால் அவர் உபதேசத்தால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும்.

இறைவன் இருக்குமிடத்தை அடையாளம் காட்டி விட்டார் திருமூலர். யோகத்தைப் பற்றிப் பேசும் நூல்கள் அனைத்துமே குண்டலினி சக்தியைப் பற்றிக் கூறுகின்றன. அது பாம்பு போல் சுருண்டு கிடக்கிறது என்றே கூறுகின்றன.

முதுகுத் தண்டின் அடிப்பாகம் அது. உடம்புக்கு ஆதாரமான அடிப்பாகம் அது. எதையும் ஆரம்பிப்பதென்றால் அடியிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். எல்லா நரம்புகளும் முதுகெலும்புத் தண்டின் வழியாகவே மூளையைச் சென்று எட்ட வேண்டும்.

இந்த முதுகெலும்பு என்பது ஒரே எலும்பல்ல. மோதிரங்களைப் போன்ற வளையங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட ஒரு கோவை. எலும்புகளை அடுக்கும்போது நடுவில் ஏற்படும் துளையின் வழியாகவே நரம்புகள் செல்கின்றன. எல்லா நரம்புகளும் கழுத்துக்குப் பின்புறம் உள்ள பிடரியில் இணைக்கப்பட்டு மூளைக்குச் செல்கின்றன.

இந்த நரம்புகள் அனைத்தும் மூளையின் கட்டளைப்படி இயங்குபவை. நரம்பு மண்டலத்தின் கட்டுப்பாட்டு அறை (Control Room) மூளை!

யோகப் பயிற்சியில் ஈடுபடுகிறவர்கள் உடம்பின் அடிப் பாகத்தில் உள்ள குண்டலினி சக்தியை எழுப்பி, படிப்படியாக சிரசில் உள்ள சஹஸ்ராரத்தில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு படியையும் ஒரு ஆதாரமாக யோகிகள் குறிப்பிடுகின்றனர்.

இன்ன ஆதாரம் இன்ன இடத்தில் உள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சுப்பிரமணியர் ஞானத்தில் 'ஆறாதாரங்களும் ஒன்றென்று அறி' என்று கூறப்பட்டுள்ளதே என்ற சந்தேகம் எழலாம்.

Koviloor Digital Library

ஆறாதாரங்களும் ஒன்றேதான். அதுயோக சாதனையில் பல படிகளைக் கடந்தவர்களுக்கு. ஆனால் ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் அதை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. திருமூலர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

உரைத்த பார் நவ்வும் உதகத்தில் மவ்வும்
வரைத்த தீ சியும் வாயு வகாரமும்
உரைத்தவான் யவ்வும் எழுதி ஓங்காரம்
நிரைத் தெழுந்தவ் வுடன் நின்றன நாடியே.

- திரு.ஞா.7.

நிலம்	=	ந
நீர்	=	ம
தீ	=	சி
காற்று	=	வ
வான்	=	ய

இதனுடன் ஓம் காரம் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஓம்காரமாகிய குண்டலினியை எழுப்பி பஞ்ச பூதங்களை ஆதார சக்கரங்களின் மூலம் சகஸ்ராரத்தை எட்டிப்பிடிக்க வேண்டும் என்பதே இதன் உட்பொருள்.

அஞ்சில் நகார மதிலிரு காலுமாய்
வஞ்சமான வயிறு ம காரமாய்
நெஞ்சிற் சி காரமாய் நேர் கழுத்தின் முகம்
வஞ்சொல் வ காரமாய் வலது நெற்றியே.

- திரு.ஞா.9

நெற்றி வெளி - செவி நின்றது சத்தமும் -
தெற்றிய வாயு உடம்பு பாசத்தில்
பற்றிய கண் உரு - அப்புரம் - என
உத்தம நாசி உயிர்க்குமக் கெந்தமே.

- திரு.ஞா.10.

கால்களில் நகாரமும் வயிற்றில் மகாரமும், நெஞ்சில் சிகாரமும் கழுத்துக்கு முன்புறம் வகாரமும் நெற்றியில் ஆகாயமுமாகப் பஞ்ச பூதங்கள் விளங்குகின்றன.

Koviloor Digital Library

இவற்றுள் செவியின் மூலம் ஒலியும் உடம்பின் மூலம் தொட்டுணர்வையும், கண்களின் மூலம் தோற்றங்களையும், நீரின் மூலம் சுவையையும், மூக்கின் மூலம் வாசனையையும் உணர்கிறோம்.

உணர்ந்த மூலத்து பத் தஞ்சுவாதிட்டம்
மணி பூரக முந்தி மார்பினி லனாகதம்
அணிகள் விசுத்தி யாக்கினை நெற்றி
குணமுடன் நந்தி கூர்வ னாதாரமே.

- திரு.ஞா.18.

ஆதார மூலத் தடியில் கணபதி
வேதாந்த பூமி விஷ்ணு நீரினில்
ஏதான ருத்திர னீசனார் காற்று விண்
மீதே சாதசிவ மெய்க்கு மப்பதமே.

- திரு.ஞா.19.

மூலாதாரம் அதற்குப் பத்து விரற்கிடை தூரத்தில் சுவாதிட் டானம், உந்தியில் மணிபூரகம், மார்பில் அநாகதம், அணிகள் பூண்கின்ற கழுத்தில் விசுத்தி, நெற்றியில் ஆக்கினை என்றிவ்வாறு ஐந்து ஆதாரங்களைக் கூறுகிறார் திருமூலர்.

அணிகள் விசுத்தி என்று கூறியதன் நயம் சிந்திக்கற்பாலது. அணிகள் என்று கூறியதன் மூலம் கழுத்தின் முன்பாகம் பளிச்சென்று நினைவில் தோன்றுவதாயிற்று.

மணிபூரகம் உந்தி மார்பி லனாகதம்
அணிகள் விசுத்தி யாக்கினை நெற்றி.

சொற்கள் ஒழுகிவரும் அழகு - தமிழின் இனிமை கலந்த மாட்சி - கற்றோர்க் கிதயம் களி கூறுவதாகும்.

அடுத்த பாடல் அந்தந்த ஆதாரங்களில் விளங்கும் கடவுள் களைக் குறிப்பிடுகிறது. மூலாதாரத்தில் கணபதி, வேதங்களைத் துணைக்கொண்ட பிரமன் பூமிதத்துவமாகிய சுவாதிட்டானத்தில், விஷ்ணு நீர்த்தத்துவம் கொண்ட உந்தியில், அக்னி தத்துவம் விளங்கும் மார்பினில் ருத்திரன், வாயுவில் ஈசன், அவற்றுக்கப்பால் ஆகாய தத்துவமாகிய வெட்ட வெளியினில் சதாசிவனும் விளங்குகின்றனர்.

Koviloor Digital Library

மண்ணுடன் நீரு மருவி யுடலதாய்
விண்ணொடு வாயு விரும்பி உயிரதாய்
திண்டழல் தன்னோடு சேர்ந்து கலந்துநின்
றண்டழலாக வமருஞ் சிகாரமே.

சிகார வகாரஞ் சிவனோடு சக்தி
யகார மதுவுள்ளே யாத்துமா வாகிடும்
நகார மதுவே நந்தி திரோபாவம்
மகார மதுவே மலமாகு மண்ணுமே.

- திரு.ஞா.27-28.

மண்ணும் நீரும் சேர்ந்தால் உடல், விண்ணும் வாயுவும் சேர்ந்தால் உயிர், இவற்றோடு நெருப்பும் சேர்ந்து கலந்து தண்மையான நெருப்பாக சிகாரம் அமர்கிறது. சிகாரம் வகாரம் யகாரம் சேரும்போதும் சிவனும் சக்தியும் கலந்து ஆத்மா வாகிறது.

நகாரம் மாயா சக்தி. மகாரம் மலமாகும். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற இத்தொழில்களைப் பற்றித்தான் வேதநூலார் கூறுவர். இந்து தர்மத்தின் கோட்பாடு அதுவே. ஆனால் சித்தர் நெறியோ, படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றோடு மாயையும் அனுக்ரகமும் சேர்த்துக் கொள்கிறது.

திருமூலர் பிரானுடைய தீந்தமிழில் சொக்குவார் தம்மையே மறந்து சிவானந்த லகிரியில் மூழ்கிவிடுவர். தமிழ் இங்கே போதை மருந்துகளைவிடக் கொடிய போதைப் பொருளாய் நம்மை ஆட்கொண்டு விடுகிறது. நாம் எடுத்துக் கொண்ட உதாரணம் இடக்கானதாகத் தோன்றலாம். போதை மருந்து ஆன்மாவை அழித்து விடுகிறது. திருமந்திரத் தமிழும் அதையேதான் செய்கிறது. ஆனால்,

போதை மருந்து கொண்டு போய்ச் சேர்க்குமிடம் நரகம். தெய்வத்தமிழ் கொண்டு போய்ச் சேர்க்குமிடம் அழியாத பேரின்ப வீடாகிய மோட்சம்.

Koviloor Digital Library

சித்தர் பாடல்களின் கவிநயம் பற்றி ஆங்காங்கு எடுத்துக் காட்டி வருகிறோம். தனி நூலாக எழுதும் எண்ணமும் உண்டு. தமிழை நெஞ்சார நேசிக்கத் தொடங்கி விட்டால் அதை விடப் பேரின்பம் வேறெதுவுமே இருக்க முடியாது. படிக்க வேண்டும், படித்தால் உணர வேண்டும், உணர்ந்தால் அனுபவிக்க வேண்டும். அப்படிப்பட்ட தமிழ், கன்னித் தமிழ், காவியத் தமிழ், கற்கண்டுத் தமிழ், கம்பன் பாடல்களிலே மட்டுமில்லை. சித்தர் பாடல்களிலும் உண்டு.

சிவ சிவா வென்றாற் றிரு நடமாகும்
சிவ சிவா வென்றாற் சீவனும் முத்தியாம்
சிவ சிவா வென்றாற் சீவனும் சித்தியாம்
சிவ சிவா வாசி சிவசிவந் தானே.

இந்த வரிகளை எழுதுவதற்கு என்ன தவம் செய்தேன்? இறைவா.

சித்தர் நெறியில் ஆறாதாரங்களுக்கும் ஐம்பூதங்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை ஏற்கெனவே கண்டோம். பின்வரும் யூகிமுனியின் பாடல்கள் ஆறாதாரங்களுக்கும் ஐந்து பூதங்களுக்கும் உள்ள தொடர்போடு அவற்றுக்கும் மனித உடலுக்கும் உள்ள உறவையும் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

நிகழ்ந்த சீர்ப் பிருதிவும் அப்புதானும்
நேரான தேயுவொடு வாய்வு மாகும்
அகழ்ந்த ஆகாயத்தோடு ஐந்து பூதம்
அரிதான பிருதீவு மண்ணு மாகும்
தகழ்ந்த அப்பு சலமாகும் நெருப்பு தேய்வு
தாக்கான வாயுவது காற்று மாகும்
இகழ்ந்த ஆகாயமது சத்தமாகும்
ஏற்ற பிருதீவு பொன்னிறம தாமே.

- யூகி. தத்துவஞானம் 14

Koviloor Digital Library

ஐந்து பூதங்களாவன:

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்

பிருதிவி என்பது மண்.
அப்பு என்பது நீர்.
தேயு என்பது தீ.
வாயு என்பது காற்று.
ஆகாயம் என்பது ஓசை.

ஏற்ற பிருதீவு பொன்னிறமதாமே - 2

ஆமேதான் அப்பு நிறம் படிகமாகும்
அக்கினியின் நிறம் தானே சிவப்புமாகும்
காமேதான் வாய்வு நிறம் கருப்பதாகும்
கார்மேகப் புகை நிறமாம் ஆகாயந்தான்
தேமே தான் வர்ணமுமிப்படியே யாகும்
சேர்ந்து நின்ற தெய்வத்தின் தவமே கேளாய்
போமேதான் பிருதிவிக்குத் தேவன் பிர்மா
பெரிய சுவாதிஷ்டான மிருப்பர் தாமே.

- யூகி. தத்துவஞானம் 15.

மண் பொன்னிறமாக விளங்கும். நீர் படிக நிறம். தீயோ சிவப்பு, வாயு கருப்பு, ஆகாயம் கார்மேகப் புகை போன்ற நிறம் கொண்டது. பஞ்ச பூதங்களின் நிறம் இவ்வாறு.

இப்பூதங்களில் பிருதிவி என்ற பூதத்திற்குத் தேவன் பிரம்மா, இவர் சுவாதிட்டானம் என்ற ஆதாரத்தில் தமது சக்தியாகிய சரஸ்வதி தேவியோடு வீற்றிருப்பார்.

இருப்பான வீடதுவும் மூலாதாரம்
இதழாறு பிருதிவியின் பீசம் நவ்வாம்
மருப்பான மயிர் நரம்பு தசை தோல் என்பு

Koviloor Digital Library

இந்த ஆதாரம் மூலாதாரத்திற்கு அருகில் உள்ளது. இதற்கு ஆறு இதழ்கள், இதன் பீசம் (பீசாட்சரம்) ந. இதன் கூறாக மனித உடலில் விளங்குபவை எலும்பு தோல், தசை, நரம்பு, மயிர் என்பனவாம்.

இருப்பான வீடதுவும் மூலாதாரம்
இதழாறு பிருதிவியின் பீசம் நவ்வாம்
மருப்பான மயிர் நரம்பு தசை தோல் என்பு
மாசற்ற அப்புவுக்கு விஷ்ணு தெய்வம்
சிறப்பான மணி பூர வீடுமாகும்
சிறு பிறைபோற் பத்திதழ்கள் தானே சுற்றி
கருப்பான அப்பினுக்குப் பீசம் மவ்வாம்
அதின் கூறைத் தான் கேட்பாய் உதிரம் சீயே.

- யூகி. தத்.16.

நீருக்குத் தெய்வம் விஷ்ணு (விஷ்ணு பாற்கடலில் பள்ளி கொண்டவர் ஆயிற்றே?). அவருக்குரிய ஆதாரம் உந்தி ஸ்தானத்திருக்கும் மணி பூரகம்!

இங்கு விஷ்ணு பகவானின் உந்திக் கமலத்திலிருந்து பிரம்மா தோன்றியதாகப் புராணங்கள் கூறுவதை நினைவுபடுத்திக் கொள்ளலாம். இந்த மணி பூரகம் சிறிய பிறைகளைப் போன்ற பத்து இதழ்களால் சூழப்பட்டது. இதன் பீசம் ம.

அதின் கூறைத்தான் கேட்பாய் உதிரம்சீயே
சீயான நீரோடு மூளை மச்சை

நீரின் கூறாக மனித உடலில் உள்ளவை இரத்தம், சீழ், மூளை, மச்சை என்பவையாம்.

எவ்வளவு பொருத்தமாக உளது என்பதை யோசித்துப் பாருங்கள்.

சீயான நீரோடு மூளை மச்சை
தேய்வுக்கு ருத்திரன்றான் தெய்வமாகும்
மூயான முக்கோண மகத்தாம் வீடு
முயற்சியாய் ஈராறாம் இதழ்தான் சுற்றித்

Koviloor Digital Library

தேயான சிவ்வதுவும் தேய்வு பீசம்
சிதையாம லிதழுக்குட் சேர்ந்து நிற்கும்
ஆயான ஆகாரம் துஞ்சல் போகம்
அவருடைய கூற்றதுதான் பயமும் சோம்பே.

- யூகி. தத்து.17.

தீ என்ற பூதத்துக்குத் தெய்வம் ருத்திரன். அவருடைய ஆதாரம் அநாகதம். இங்கு அவர் த்மது பத்தினியான ருத்திரியோடு வீற்றிருப்பார். இவருடைய வீடு முக்கோண வடிவம். சுற்றிலும் பனிரெண்டு இதழ்கள் காணப்படும். பீசம் சி.

பீசாட்சரமான சி என்பது இதழ்களுக்குள் சேர்ந்து நிற்கும். ஆகாரம், தூக்கம், போகம், பயம், சோம்பல் என்பவை இதன் கூறாம்.

உணவு! உண்டால் தூக்கம்!
உண்டாவது ஆசை. விளைவு போகம்!
பின் விளைவுகள் பயமும் சோம்பலும்.

எவ்வளவு பொருத்தமாக அமைக்கப்பட்டுள்ளது என்பதை உன்னித்துக் கவனிப்போர்க்கு உவகை உள்ளத்தில் கரை காணாப் பெருக்காகும்.

சோம்பான வாயுவுக்கு மகேசன் தெய்வம்
சோடசமா மிதழோடே விசுத்தி வீடு
ஆம்பான வாயுவுக்கு வவ்வு பீசம்
அவருடையதன் கூறு உளத்தல் நிற்றல்
வாம்பான ஆடலோடு இருத்தல் ஓடல்
வகையான அறுகோணங் குடியிருப்பு
தேம்பான வானமாக்கினையின் உள்ளே
சிதையாம லிரண்டிதழோ டிருக்கும் பாரே.

- யூகி. தத்.18.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதத்திற்கு அடுத்தபடியாக விசுத்தி என்ற ஆதாரம் வருகிறது. கழுத்தின் முன்பக்கம் இருப்பிடமாகக் கொண்ட இது பதினாறு இதழ்களும் நடுவில் அறுகோண சக்கரமும் உடையது. வாயுவின் இருப்பிடம்.

Koviloor Digital Library

இதன் பீசம் வ. இதன் கூறு கிடத்தல், நிற்றல், ஓடல், ஆடல், இருத்தல் என்பனவாம்.

வாயு ஓரிடத்தில் இருக்குமா? அது ஓடிக்கொண்டும் ஆடிக்கொண்டும்தானே இருக்கும்? எவ்வளவு இயல்பாக ஐம்பூதங்களின் தன்மையும் செயலும் ஆதாரங்களோடு பொருத்தப் பட்டிருக்கின்றன என்பதை நினைக்கும்போது ஞானிகள் தங்கள் தீர்க்க தரிசனத்தாலேயே இவற்றைக் கூறியிருக்க வேண்டும் என்ற உண்மை விளங்குகிறது.

தேம்பான வான மாக்கினையின் உள்ளே
சிதையாம் விரண்டிதழோ டிருக்கும் பாரே

இருக்கின்ற ஆக்கினையின் கூறு கேளாய்
ஏற்ற காமக் குரோத லோப மோகம்
மருக்கின்ற மதமு மாச்சரியத் தோடு
வானுக்குச் சதாசிவமே தெய்வமாகும்
பிறக்கின்ற ஆகாசபீசம் யவ்வாம்
பேரான ஐம்பூதம் பிரிவுமாகும்
தெருக்கின்ற தச நாடிச் செயலையெல்லாம்
செப்புகிறேன் தெளிவாகச் சிறந்து கேளே.

- யூகி. தத்.19.

ஆக்ஞா சக்கரம் இரண்டிதழ்களோடு கூடிய வளையம், இதனுள் சதாசிவமும் மனோன்மணியும் வீற்றிருப்பார்கள். இதன் பீசம் ய. இது ஆகாய ஸ்தானமாகும். இதன் கூறாக காமக் குரோத லோப மோக மத மாச்சாரியம் என்னும் இயல்புகளைக் கூறுவர்.

இவ்வியல்புகளுக்கு ஒரு நிலைக்களன் கிடையாது. இன்ன இடத்திலிருந்து தான் தோன்றுகிறது என்று சுட்டிக் காட்டவும் முடியாது. சில சமயங்களில் இன்ன காரணத்தால் தோன்றியது என்றும் கூறமுடியாது. வெட்ட வெளியான விண்ணைப் போலே இவ்வியல்பு களும் உருவமிலாமல் அமையும் சக்திகள் என்று கொள்ளலாம்.

Koviloor Digital Library

தச நாடிகள்

சித்தர்கள் பத்து நாடிகளைப் பற்றிக் கூறுகிறார்கள். மருத்துவர்கள் பிணி அறிய நாடி பிடித்துப் பார்ப்பதை நாம் அறிவோம். அவர்கள் கூறுவது மூன்று நாடிகளே. வாத நாடி, பித்த நாடி, சிலேத்தும நாடி.

வாதம் வாயுவாலும், பித்தம் வெப்பத்தாலும், சிலேத்துமம் நீரின் கூறாய்ச் சலத்தினாலும் உண்டாகின்றன. உடம்பில் வாத பித்த சிலேத்துமங்கள் குறையாமலும் மிகாமலும் இருக்கும் காலம் வரை உடல் நலமாக ஆரோக்கியமாக இருக்கிறது. இவற்றில் ஒன்று மிகினும் நோய். குறையினும் நோயே. வாத பித்த சிலேத்துமங்களில் எது - அல்லது எது எதன் கூட்டு - பிணியை உண்டாக்கிற்று என்பதை அறிவதற்காகவே நாடி பார்க்கப்படுகிறது.

வாதத்தில் வாதம், வாதத்தில் பித்தம், வாதத்தில் சிலேத்துமம் என்றும் வாதத்தில் வாத பித்தம், வாதத்தத்தில் பித்த பித்தம், வாதத்தில் சிலேத்தும பித்தம் என்றும் மேலும் இவ்வாறே பகுத்துக் கொண்டே போய் நுட்பமாகப் பார்க்கும்பொழுது நோயின் தன்மையை அறிய முடியும்.

மிகப் பொறுமையாகவும் நீண்ட காலப்பயிற்சியினாலும் அறிய வேண்டிய ஒன்று இது.

சித்தர்கள் தங்கள் உடலையே ஒரு உலர்ந்த குடுவை போலாக்கி அதனுள் நடக்கும் செயல்களை ஒளிக் கண்களால் நோக்கி தச நாடிகளின் இயக்கம், தச வாய்வுகளின் செயல் முதலானவற்றை உணர்ந்து உலகுக்கு உணர்த்தினார்கள். அறுத்துப் பார்க்கும் மருத்து வத்தால் இது முடியாத காரியம். அறுத்துப் பார்ப்பவர்களுக்கு ஒரு பிணம் வேண்டும். எப்போது அது பிணமாகி விட்டதோ அதில் உயிரின் இயக்கத்தைக் காணமுடியாது. மனித உடல் என்பது ஒரு

Koviloor Digital Library

இயந்திரம் அல்ல. இயந்திரத்தில் ஓடும் கருவிகளுக்கு உயிர் கிடையாது. மனித உடலில் உள்ள ஒவ்வொரு அணுவுக்கும் உயிர் இருக்கிறது.

இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் மேல் நாட்டு மருத்துவம் பயின்றவர்கள் சித்தர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்பதை உணர்வார்கள்.

சித்தர்கள் தம் உடலைத் தாமே ஆராய்ந்துதான் பல உண்மைகளைக் கூறியிருக்கிறார்கள். இது முடியுமா?

சிறிது காலம் சித்தர் நெறியில் நின்று பயின்று பார்த்தால் முடியுமா, முடியாதா என்பது உங்களுக்கே தெரியும்.

தச நாடிகளில் வாதத்தின் கூறாக உள்ளவை மூன்றும் வாயுக்கள் வழி நடக்கும் பாதைகளாம். பித்தத்தின் கூறாக உள்ளவை நான்கு. அவை வெப்பத்தைத் (அக்னி - தீ) துணையாகக் கொண்டு வழி நடப்பவை. சிலேத்துமத்தின் கூறாக உள்ளவை மூன்று. இவை நீரின் துணையால் இயங்குபவை.

இதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். தச நாடிகளுக்கும் தச வாயுக்களுக்கும் உள்ள வேறுபாடு அப்போதுதான் விளங்கும்.

சிறந்த இடை பிங்கலையும் சுழினையோடு
சிறப்பான காந்தாரி யத்திச் சிங்குவையாம்
பிறந்த அலம் புருடனொடு குகுதன்றானும்
பேரான சங்கினியும் வயிரவன்றான்
திறந்தவிவை பத்துந்தான் நாடியாகும்
திரிமூன்று நாளையினி லொடுங்கும்பாரு
மறந்த இடை பிங்கலையும் சுழினை மூன்றும்
வாதத்திலொடுக்கமென வகுக்கலாம்.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 20.

Koviloor Digital Library

இடகலை, பிங்கலை, சுழினை என்பவற்றோடு காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புருடன், குகுதன், சங்கினி, வயிரவன் என்பன பத்து நாடிகளின் பெயர்களாம்.

இவற்றில் இடகலை, பிங்கலை, சுழினை மூன்றும் வாதத்தில் ஒடுங்கும் இயல்புடையவனவாகும்.

இடகலை என்பது இடது நாசி வழியாக ஓடும் மூச்சு. பிங்கலை என்பது வலது நாசி வழியாக ஓடும் மூச்சு. மூச்சு எந்த மூக்குத் துளை வழியாகப் போனால் என்ன? இதற்குத் தனிப் பெயர் வேண்டுமா எனலாம். ஆனால் இருதயத்தின் இடப்பக்கம் கெட்ட இரத்தம் வந்து சேர்கிறது. வலப்பக்கத்திலிருந்து பிராண வாயுவால் தூய்மைப் படுத்தப்பட்ட இரத்தம் உடலுறுப்புகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்கும் போது இடது நாசியின் வழியாகச் செல்லும் மூச்சுக்கும் வலது நாசியின் வழியாகச் செல்லும் மூச்சுக்கும் வேறுபாடு ஏதோ உள்ளது. அதன் காரணமாகவே தனிப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பது விளங்கும்.

யோகப் பயிற்சியில் இடகலையும், பிங்கலையும் சுழினையில் ஒருங்கிணைக்கப்படுகிறது. இந்த மூன்றும வாதத்தில் அடங்கும்.

வகுக்கவிதின் குணங்கன்ம மொடுகுளுத்தி
மலக்கட்டு வாதத்தின் கூறுமாகும்
அகுக்ககாந் தாரியத்தி சிங்குவையாம்
அலம்புருட னிதுநாலும் பித்தக்கூறு
உகுக்கவே யிதின்குணங்கள் உஷ்ணந்தாகம்
உயர்மோக முழலைவாய் வும்மே நோக்கும்
நகுக்கவே நாடிபட படத்துடிக்கும்
நாசமாம் பயமோடு கோபமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 21.

வாதத்தின் இயல்பு கன்மம். அதாவது தொழில். கைகளை அசைப்பதும் கண்களை இமைப்பதும் கூட வாயுவாலேயே நடைபெறுகின்றன என்பதை உணரவேண்டும். வாயுவே சக்தி. ஓடுவது ஆடுவது எல்லாம் அச்சக்தியின் உதவியால்தான்.

Koviloor Digital Library

அடுத்தபடியாக உடலில் சூடேறாமல் குளிர்ச்சியாக வைத்திருப்பதும் வாயுதான். மின் விசிறியின் கீழே அமர்ந்து வெப்பத்தைத் தணித்துக் கொள்கிறோமல்லவா?

அடுத்து மலக்கட்டு. உடலில் வாதம் மிகுந்தால் சரியாக மலம் வெளியேறாது. உடலைப் பற்றிச் சித்தர்கள் எவ்வளவு நன்றாக. எவ்வளவு நுணுக்கமாக அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறியும்போது வியப்பாக இருக்கிறதல்லவா?

காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புருடன் என்ற இந்த நான்கு வாயுக்களும் பித்தக் கூறாம். இவற்றின் குணம் உடலை வெதுப்பி வைத்தல் அல்லது உடலின் வெப்பத்தைக் காப்பாற்றுதல், தாகத்தை உண்டாக்குதல், உடலில் சூடை ஏற்றி மோகத்தை உண்டாக்குதல், உடல் அதிகமாக உழைத்துத் துன்புறும்போது வாயுவை மேலே ஏற்றி வைத்தல். நாடிகளைப் படபட வெனத் துடிக்க வைத்தல், பயம் கோபம் என்பவையாம்.

ஆம்குகுதன் சங்கினியும் வயிரவன்றாம்
அரிதான சிலேட்டுமத்தி லடங்கும்பாரு
மாமேவா யழற்பரியு மிதன்றன்கூறு
மலர்விழியுங் குழிந்துமுகம் வேர்த்திருக்கும்
தேமேதான் நெஞ்சடைக்குந் திசை கலங்கும்
சிறுகாலுந் தண்ணீர்தா னுழற்றிவிக்கும்
பாமேதான் பத்தினிடப் பண்புமாகும்
பரிகாரஞ் செயுமவர்க்குப் பரிசிதாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 22

குகுதன், சங்கினி, வயிரவன் என்ற வாயுக்கள் மூன்றும் சிலேத்துமம் - அதாவது கபத்தின் கூறாம். கண்கள் குழிவிழுந்து முகம் வேர்த்தல், நெஞ்சடைத்தல், பொறி கலங்க வைத்தல் இதன் செயல்களாம்.

கபம் வந்து தொண்டையில் அடைத்துக் கொள்ளும்பொழுது மூச்சுத் திணறுகிறது. கண்கள் சுழல்கின்றன. மயக்கமே வந்துவிடுகிறது. கபம் கட்டிக் கொள்ளும்போது உடலில் அனல்

Koviloor Digital Library

பறக்கும், காய்ச்சல் உண்டாகிறது. சிறு குழந்தைகளுக்கு கை கால்கள் இழுத்துக் கொள்ளும். இசிவு நோய் கூட வந்து விடுகிறது.

இவை சிலேத்தும செயல்களாம்.

பரிசான விடையின்பிங் கலையு மொக்கப்
பயின்றதோர் குதத்தினடி மூலம்பற்றிக்
கரிசான பாகங்கள் மாறிமாறிச்
சுழிமுனையின் றன்னோடு நெட்டிட்டேறும்
திரிசான திருவணைக்கால் போலேமாறிச்
சிரசளவு தான்முட்டித் திரும்பமீண்டு
விரிசான மூக்குநடுப் புருவம் நெற்றி
மீண்டுமே திரும்பியந்த மூலம்புக்கும்.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 23

இடைகலை, பிங்கலை என்கின்ற நாடிகள் உடம்பின் அடிப்பாகமாகிய மூலத்திலிருந்து கிளம்பி, சுழி முனையோடும் கூடி நெட்டிட்டேறி சிரசு வரை சென்று முட்டி உகார வளைவில் திரும்பி நாசி, நடுப்புருவம், நெற்றி ஆகிய இடங்களைத் தொட்டுக்கொண்டு மீண்டும் திரும்பிவந்து மூலத்தில் சேரும்.

புக்குகின்ற காந்தாரி நாபிபற்றிப்
பொருநரம்போ ரேழினுக்கும் ரூபமாகிச்
சிக்குகின்ற தெசதாய மேலேயோடிச்
சிரசளவு நீங்கியே கண்டம்புக்கி
நக்குகின்ற நாவடியிற் சிறந்திருக்கும்
நலமான வத்திசிங் குவையிரண்டும்
விக்குகின்ற மூலத்தின் மேலே பற்றி
மேலேறி யிரண்டுசெவி தனைத்தொட்டாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 24.

காந்தாரி என்ற நாடி உந்திக் கமலத்திலிருந்து கிளம்பி நரம்புகள் ஏழுக்கும் உருவமாகி மேலே சென்று சிரசில் முட்டித் திரும்பிக் கழுத்துக்கு வந்து நாவின் அடியில் அமரும்.

Koviloor Digital Library

அத்தி, சிங்குவை இரண்டும் மூலத்தின் மேலே பற்றிக் கிளம்பி மேலே ஏறி இரண்டு செவிகளையும் தொட்டு மேலும் ஏறி நரம்புகளில் எல்லாம் துடிப்பினை உண்டாக்கி இரண்டு கண்களையும் சென்று அடைந்து நிற்கும்.

தொட்டேறி நரம்பெல்லம் கதந்துவீசித்
துறையான நயனமிரண் டினிலேநிற்கும்
மட்டேறி யலம்புருடன் வயிரவன்றான்
மாசற்ற வடிமூலந் தன்னைப்பற்றிக்
கட்டேறி யிரண்டுகன்னந் தனிலேநிற்கும்
கனிவான சங்கினியுங் குகுதன்றானும்
நட்டேறி நாபித்தா னத்திற்றோன்றி
நலமான குதமளவும் நடிப்பர்பாரே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 25.

அலம்புருடன் வயிரவன் என்ற நாடிகள் இரண்டும் அடிமூலம் தன்னைப் பற்றி மேலே ஏறி இரண்டு கன்னங்களிலும் வந்து நிற்கும்.

சங்கினியும் குகுதனும் நாபித்தானம் - உந்தியில் தோன்றி எருவாய் வரையிலும் நடமாடும். குகுதன் என்று பாடல் ஒழுங்குக்காகக் கூறப்பட்டுள்ளது. குகூ என்பதே சரியான பெயர்.

யூகி முாமுனிவர் நாடிகளைப் பற்றிக் கூறும் செய்தி விந்தையாய் உள்ளது. ஆனால் இப்படியும் இருக்குமா என்று ஐயப்பாடு வேண்டியதில்லை. நாம் இதை உணரவில்லை தெரிந்து கொள்ள வழியிருந்தும் தெரிந்து கொள்ளவில்லை. கொள்ளை கொள்ளை யாய்ச் சித்தர்களின் நூல்கள் இருந்தும் படிக்கவில்லை. மேல் நாட்டு மருத்துவம் படிப்பவர்களுக்கு இது அவசியமற்றது. மற்றவர் களும்தான். அன்றாட வாழ்க்கையே ஒரு சுமையாகிப் போய் விட்டதனால் பெரும்பாலானவர்கள் படித்து உணர வேண்டிய இந்த அருமையான நூல்களை விட்டு, துணுக்குகளையும், குட்டிக் கதைகளையும் படித்துப் பொழுது போக்குவதில் ஈடுபட்டுவிட்டனர்.

நாடிகள் பத்தில் காந்தாரி என்ற நாடி உந்தியைப் பற்றிக் கொண்டும், சங்கினி, குகுதன் என்ற நாடிகள் உந்தியையே இருப்பிடமாகக் கொண்டும் தோன்றுகின்றன. மற்றவையெல்லாம்

Koviloor Digital Library

மூலத்தானமாகிய குதத்திலிருந்தோ, அதற்கு மேல் அல்லது கீழ்ப்புறமிருந்தோ தோன்றுகின்றன.

இடகலை, பிங்கலை, சுழினை என்ற நாடிகள் சிரம் முட்டி, நெற்றி, புருவமத்தி, நாசி ஆகிய இடங்களைத் தொட்டுக் கொண்டு திரும்பவும் மூலத்திற்கே வந்து சேர்கின்றன.

காந்தாரி சிரம் வரைச் சென்று மீண்டு கண்டத்திற் புகுந்து நாவின் அடியில் அமர்ந்து விடுகிறது.

அத்தி சிங்குவை இரண்டும் மூலத்தின் மேற்பகுதியிலிருந்து கிளம்பி இரண்டு காதுகளைத் தொட்டுக் கொண்டு நரம்புகளில் எல்லாம் துடிப்புண்டாக்கிக் கண்களில் வந்து நிற்கின்றன.

அலம்புருடனும் வயிரவனும் அடிமூலம் பற்றிக் கிளம்பி இரண்டு கன்னங்களிலும் வந்து நிற்கின்றன.

சங்கினி குகுதன் என்ற நாடிகள் நாபித் தனத்தில் தோன்றிக் குதம் வரையிலும் ஓடிக் கொண்டிருக்கும்.

வர்மக் கலை பயில்பவர் நாடியின் நுட்பங்களை அறிவர். யூகி மாமுனிவர் கூறும் கருத்துக்களை கருத்தில் இருத்திக் கொண்டு மேலே தொடர்வோம்.

Koviloor Digital Library

கருவின் வளர்ச்சி

இன்புற்று இருவர் இடைவித்து வைத்தமண் என்பால் மிடைந்து நரம்பால் வரிகட்டிச் செம்பால் இறைச்சி திருந்த மனை செய்து இன்பால் உயிர்நிலை செய்யப்பட்டு - உடலும் உயிரும் இணைந்த மனித உருவாய் இயங்குவதாயிற்று எனத் திருமூலர் கூறிவிட்டார்.

இன்புற்று இருவர் இடைவித்து வைத்த மண் என்னவாயிற்று? என்பதை யூகிமுனிவர் எப்படிக் கூறுகிறார் என்பதைக் கவனிப்போம்.

பார்க்கவே சடந்தான்சென் மிக்கும்வாறு
பகர்சுக்லஞ் சுரோணிதத்தி னோடேகூடி
மூர்க்கமேசிப் பையின்முத் துதிர்ந்தாற்போல்
முனையறுகு நுனிப்பனிபோற் சுரோணிதத்திற்
றாக்கசுரோ ணிதந்திரண்டு சொருபமாகித்
தமர்வாசற் றனைமூடும் வாயுதானும்
வேர்க்கவே வேலையைப்போல் வளைந்துகாக்கும்
வித்துடன் பிராணவாயு விளக்குமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 26.

யூகிமுனிவர் கருத்தரித்த நாள் முதலாக அது எவ்வாறு வளர்கிறது. பிறகு எவ்வாறு பிறக்கிறது என்பதை வெகு அழகாகக் கூறுகிறார்.

சுக்கிலம் சுரோணிதத்துடன் கலந்தவுடனே கருப்பையில் முத்து உதிர்ந்தாற்போல் - அருகம் புல்லின் முனையிலே நிற்கும் பனித்துளி போல் - திரண்டு ஒரு உருவமாகிறது. உடனே வாயுவானது கடலைப்போல் சூழ்ந்து கொண்டு அதைப் பாதுகாக்கிறது.

கண்ணால் பார்த்ததுபோல் முனிவர் கூறுகிறாரே? கருப்பை யினுள் நுழைந்து பார்த்தது யார்? முத்து உதிர்ந்ததுபோல் - அருகம் புல்லின் நுனியில் இருக்கும் பனித்துளியைப் போல் - எவ்வளவு அருமையான எடுத்துக்காட்டுகள். கவிதை நயம் - முனிவர் சொல்லும் அழகு மெய்சிலிர்க்க வைக்கிறது. தொடர்ந்து அந்த முத்தை வாயுவானது கடலைப் போல் சூழ்ந்து கொண்டு

Koviloor Digital Library

காப்பாற்றுகிறது என்றும் கூறுகிறார் - இன்றுவரை அறிவியலார் கூறாத ஒன்று.

விளக்குகின்ற வபானவாயு வெளியில்நிற்கும்
விந்துவுடன் பிராணவாயு வுடல்கலக்கும்
களக்குகின்ற வுதானனது கருவளர்க்கும்
கருவுக்குள் வியானன்மூன் றுங்கலக்கும்
இளக்குகின்ற வைந்தாநாள் கருப்போலாகும்
ஈரைந்தா நாள்தனிலே திரளும்பாரு
முளைக்குமூ வைந்தாநாள் முட்டைபோலாம்
முதற்றிங்கள் கம்பமாய் முனைபோலாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் 27.

விந்துவுடன் பிராணவாயு உடல் கலக்கும். எவ்வளவு அற்புதமான உண்மை! கருப்பையில் இருக்கும் சுக்கிலமும் சுரோணிதமும் கலந்து அந்த முத்துக்கு - அருகம் புல் நுனிப் பனித்துளிக்கு உயிர் இருக்கிறதா? இல்லையா?

உயிர் உள்ள ஒன்றுதான் வளர முடியும். உயிரில்லாதது வளர முடியாது. அப்படியென்றால் இந்த முத்து உயிருடன் இருக்கிறது. பிராணவாயு இல்லையென்றால் உயிர் இல்லை. எனவே அந்த விந்துடன் பிராணவாயுவும் கலந்துள்ளது.

உதான வாயுவானது (அதாவது வயிற்றுப் பகுதியில் உள்ள வாயு) கருவை வளர்க்கும். வியானன் என்ற வாயு அதனுடன் கலக்கும். ஐந்தாம் நாள் கருப்பையில் உள்ள அந்த முத்து ஒரு உருண்டையாகக் கருவைப்போல் ஆகும். பத்தாம் நாள் நன்றாகத் திரட்சி உடையதாக ஆகும். பதினைந்தாம் நாள் முட்டை போலாகும். முப்பதாம் நாள் கம்பம்போல் நீண்டு முளை போன்ற உருவத்தை அடையும்.

ஆமிரண்டாந் திங்கள்தலை முதுகு தோன்றும்
அடுமூன்றாந் திங்களரை விரல்கைகாலாம்
நாமேநா லாந்திங்கள் பதமூக்காகும்
நலவைந்தாந் திங்கள் செவி நாவுகண்ணாம்

Koviloor Digital Library

வாமேயா றாந்திங்கள் நகங்களாகும்
மருவேழாந் திங்கள்மயிர் நரம்பெலும்பாம்
தாமேதான் சடமோடு சலமலங்கள்
தயங்கியவோர் தாதுவொடு மூச்சுண்டாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 28.

இரண்டாவது மாதத்தில் தலையும் முதுகும் தோன்றும். மூன்றாவது மாத்தில் இடுப்பு, கை, கால்கள், விரல்கள் தோன்றும். நான்காம் மாதத்தில் மூக்கு தோன்றும். ஐந்தாவது மாதத்தில் காது, கண்கள், நாக்கு உண்டாகும். ஆறாவது மாதத்தில் நகங்கள் உண்டாகும். ஏழாவது மாதத்தில் நரம்புகள் மயிர் தோன்றும். இவ்வாறு உண்டாகும் உடம்பினோடு மலசலங்கள், தாதுக்கள் மூச்சும் உண்டாகும்.

நேரில் பார்த்தாற்போல் அவ்வளவு நுட்பமாக முனிவர் கூறுவது வியப்படையச் செய்கிறது. அறிவியலார் கருவின் வளர்ச்சியைப் படம் எடுததிருக்கிறார்கள். ஆயினும் அணு அணுவாக உடலின் வளர்ச்சியைப் பற்றி அவ்வளவு தெளிவாகக் கூற இயலாது.

ஏழாவது மாதத்திலேயே குழந்தையின் உடலில் மலசலங்கள் உண்டாகிவிடுகின்றன. மூச்சும் உண்டாகி விடுகிறது என்று முனிவர் கூறுகிறார். குறைப்பிரசவங்களை ஆராய்வோர்க்கு இந்த உண்மை எளிதில் விளங்கும்.

மூச்சுண்டா மெட்டினிற்றா யுண்டசாரம்
முனியான கதிர்போல அருவிபாய்ந்து
தோச்சுண்ட கபாலத்தின் வழியேசென்று
சுத்தசலம் பிள்ளைக்குத் தொடர்ச்சியாகும்
பேச்சுண்டா மொன்பதிலே யறிவுதோன்றிப்
பிறப்பித்தோன் றனைநினைத்துத் தவமேசெய்து
கூச்சுண்டாங் கும்பிட்டே யருள்வாயெனும்
கொடியபத்தாந் திங்கட்குப் பார்வையாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 29

எட்டாவது மாதமுதல் தாய் உண்ட உணவின் சாரம் 'முளையான கதிர்போல்' அருவியாகப் பாய்ந்து கபாலத்தின் வழியாகச் சென்று

Koviloor Digital Library

வளர்க்கும். ஒன்பதாம் மாதத்தில் கண்டத்தில் ஒலி எழுப்பக்கூடிய சக்தி உண்டாகும். இதைத்தான் பேச்சுண்டாகும் என்று முனிவர் கூறுகிறார். அறிவும் தோன்றி - அதாவது நினைக்கும் ஆற்றல் தன்னைத் தோற்றுவித்த இறைவனை நினைத்துத் தவம் செயது கும்பிட்டு 'இறைவா அருள்வாய்' என்று வேண்டிக் கொண்டிருக்கும்.

பத்தாவது மாதத்தில் பார்வையும் உண்டாகும்.

தாயின் கர்ப்பத்தில் இருக்கும் சிசு ஒன்பதாவது மாதத்தில் இறைவனை நினைத்துத் தவம் செய்யும் என்று கூறியதைச் சிலர் நம்ப மாட்டார்கள். இங்கே ஒவ்வொரு சிசுவும் அதன் தாய் தந்தையரின் வீரியத்திலிருந்து தோன்றுகிறது என்பதை நினைவு கொள்ள வேண்டும்.

வீரனின் பிள்ளை வீரனாகப் பிறக்கிறது. அறிஞனின் பிள்ளை அறிஞனாகப் பிறக்கிறது. இது பொது நியதி. அர்ச்சுனன் சுபத்திரையின் பிள்ளையாகிய அபிமன்யு கர்ப்பத்திலிருக்கும் போதே சக்கரப் பிரயோகம் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்ததாகப் புராணம் கூறும். தெரியாதவர்களுக்கு அந்தக் கதையைச் சில வரிகளில் இங்கே கூறுவோம்.

சக்கராயுதப் பிரயோகம் ஒன்றில் மட்டுமே கிருஷ்ணன் தன்னைவிட வல்லவராக இருக்கிறார் என்று நினைத்த அர்ச்சுனன் தன் மனைவி சுபத்திரையிடம் எப்படியாவது அந்த வித்தையைக் கண்ணனிடமிருந்து கற்றுக் கொண்டு வந்து தனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தினான்.

கணவனுக்காகச் சுபத்திரை தன் தமயனிடம் மன்றாடினாள். நிறை கர்ப்பமாக இருக்கும் தன் அன்புத் தங்கையின் வேண்டுகோளை மறுக்க முடியாத கண்ணன் உபதேசிக்கத் தொடங்கினார். ஆனால் சொல்லத் தொடங்கியபின் சற்று நேரத்திற்குள் மாயையைப் பிரயோகித்து சுபத்திரையைத் தூங்க வைத்து விட்டார்.

கிருஷ்ணன் சொல்லிக் கொண்டிருக்கிறார். சுபத்திரை தூங்கி விட்டாள். ஆனால் யாரோ உம் உம் உம் - என்று உம் கொட்டிக்

Koviloor Digital Library

கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு கண்ணன் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தார். கர்ப்பத்திலுள்ள குழந்தைதான் கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து அத்தோடு நிறுத்தி விட்டார். பாரதப் போரில் வேறு ஆயுதங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்ட அபிமன்யு சக்கரங்களைப் பிரயோகித்து சிறிது நேரம் போராடினான் என்று வியாசர் கூறுவார்.

இதை வெறும் புராணக் கதை என்று தள்ளிவிடக் கூடாது. தாய் தந்தையரின் அறிவும் திறமையும் பரம்பரைச் சொத்தாகப் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்றன என்பது இன்று உலகம் ஒப்புக் கொண்ட உண்மை.

கர்ப்பத்தில் இருக்கும் சிசுவுக்கு பத்தாவது மாதத்தில் பார்வை ஏற்படுவதாக யூகி முனிவர் கூறுகிறார். குறைப் பிரசவமாக எட்டாவது ஒன்பதாவது மாதத்தில் பிறக்கும் குழந்தைகள் குருடாகவா பிறக்கின்றன என்று கேட்கலாம்.

ஐந்தாவது மாதத்திலேயே காது, கண், நாக்கு தோன்றி விட்டதாக முன்பே கூறியிருக்கிறார். அதனால் பத்தாவது மாதத்தில் கண்கள் முழு வளர்ச்சி யடைகின்றன என்று எடுத்துக் கொள்ளலாம். குறைப்பிரசவமாகப் பிறக்கும் குழந்தைகள் அந்த வளர்ச்சியைப் பிறந்தபின் பெறுவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஒளியும் வெப்பமும் கொண்ட வெளி உலகச் சூழ்நிலை குழந்தையின் பார்வை வேகமாக வளர்ச்சியடையத் தூண்டுவதாக அமையும்.

பார்வையா மபானன்கீழ் நோக்கிவைக்கும்
பாலகனும் பார்தனிலே பயின்றபின்பு
ஆர்வையாய் முன்னறிவு மசதியாகி
அழுதுகொண்டு வாதமத்திற் கருவிபாசம்
மார்வைமா யாசத்தி கிரியாசத்தி
மயக்கத்தி லறிவழிந்து வினையினாலே
கோர்வையாய் விதியும்வந் துற்பவித்துக்
கொடிபடர்ந்த சுரைபோலச் சென்மமாச்சே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 30

Koviloor Digital Library

பத்தாவது மாதத்திற் பார்வை உண்டானதும் தாயின் வயிற்றிலுள்ள அபானவாயு சிசுவைக் கீழ் நோக்கி வெளியே செல்வதற்குத் தயாரான நிலையில் திருப்பி வைக்கும்.

குழந்தையின் பூர்வ நினைவுகள் மறந்துபோய் அழுது கொண்டே பூமியில் வந்து பிறக்கிறது. மாயாசக்தி கிரியாசக்தி என்பவை அதன் பழைய நினைவுகளை மறக்கடித்து விடுகின்றன. அதன் முன் வினைப் படியான விதியும் வந்து சேர்ந்துகொள்ள கொடியுடன் கூடிய சுரைக்காய் போல பூமியில் வந்து பிறக்கிறது.

சென்மசரீ ரந்தொண்ணூற் றாறதென்னச்
செப்புமங் குலமவர்கள் கையாலேதான்
தன்னரச மிரத்தமாங் கிசமுமேதை
தசை மச்சை யோடுசுக்லந் தாதேழாகி
உன்னமா முருவென்னுஞ் சரீரமாகி
உயர்சட்டை ரசஞ்சேர்ந்து ரோகமாகி
வண்ணமாம் வாதபித்த சேத்மமாகி
வருகின்ற சடத்தினுட வண்மைகேளே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 31.

ஜென்ம சரீரம் அவரவர் கையால் தொண்ணூற்றாறு அங்குலம். குழந்தையின் உடல் அதன் கையால் தொண்ணூற்றாறு அங்குல நீளம் அல்லது உயரம் கொண்டதாக இருக்கும்.

அன்னரசம் - அதாவது உண்ணும் உணவிலிருந்து கிடைக்கும் சத்திலிருந்து இரத்தம், மாமிசம், கொழுப்பு, தசை, எலும்பு, மச்சை (எலும்புகளின் உட்பகுதியில் இருப்பது), சுக்கிலம் என்ற ஏழு தாதுக்களைக் கொண்ட உருவமாகி, பின் அதனுடன் சேரும் சட்டைகளாலும் ரசங்களாலும் (அழுக்குகளாலும் திரவங்களாலும்) நோய்களை உண்டாக்கும் வாதம், பித்தம், சேத்துமம் என்பவையும் தோன்ற மனித உடலாக அமைகின்றது.

வண்மையாம் வாதமது முப்பதாண்டு
மட்டுமே வளருகின்ற காலமாகும்
பெண்மையாம் பித்துமது முப்பான்மூன்று
பேணியே வளருகின்ற காலமாகும்

Koviloor Digital Library

திண்மையாஞ் சேத்மமது முப்பத்தேழு
செயலோடு வளருகின்ற காலமாகும்
உண்மையர்ய்ச் சடமதனுக் கொருநூறாண்டு
உகாந்தமாங் கருவிகளி னுறுதிகேளே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 32.

வாதம் வளர்கின்ற காலம் முப்பது ஆண்டுகள். பித்தம் அடுத்த முப்பத்து மூன்று ஆண்டுகள் வளர்கின்றது. சேத்துமம் அடுத்த முப்பத்தேழு ஆண்டுகள் வளர்கின்றது. அதனால் மனித உடலுக்கு நூறாண்டுகள் ஆயுள் என்று கொள்ளலாம்.

இனி மற்ற கருவிகளைப் பற்றிப் பேசுவோம்,

உறுதியாம் பூதாதி யோரைந்தாகும்
உயர்கின்ற பொறியைந்து புலனைந்தாகும்
கறுதியாங் கன்மவிந் திரியமைந்தும்
சுடிதான ஞானவிந் திரியமைந்தும்
திறுதியாந் தீதாய கரணம்நான்கும்
திறமறிவு ஒன்றுதச நாடிபத்தும்
மறுதியாம் வாயுவது பத்துமாகும்
மகத்தான விஷயமஞ்சு கோசமஞ்சே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 33.

பூதங்கள் ஐந்து. பொறிகள் ஐந்து. புலன்கள் ஐந்து. கன்ம விந்திரியங்கள் ஐந்து. ஞான விந்திரியங்கள் ஐந்து. கரணம் நான்கு. அறிவு ஒன்று. நாடிகள் பத்து. வாயுக்கள் பத்து. விசையம் ஐந்து. கோசங்கள் ஐந்து.

அஞ்சவே யாதார மாறுமாகும்
அரிய மண்டலமூன்று மலமூன்றாகும்
தொஞ்சவே தோஷமுமூன் றீஷணைதான்மூன்று
தோதகமாங் குணமூன்று வினையிரண்டாம்
தஞ்சவே ராகமெட்டு வவத்தையைந்து
தயங்கியதோர் கருவிகடான் றொண்ணூற்றாறு
ஒஞ்சவே யொவ்வொன்றாய் விரித்துச் சொல்வேன்
உறுதியாம் பூதாதி யுரைக்கக்கேளே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 34

Koviloor Digital Library

ஆதாரங்கள் ஆறு. மண்டலம் மூன்று. மலங்கள் மூன்று. தோஷங்கள் மூன்று, ஏடணைகள் மூன்று, குணங்கள் மூன்று. வினை இரண்டு. ராகம் எட்டு. அவத்தை ஐந்து. ஆக கருவிகள் தொண்ணூற்றாறாகும். இனி இவற்றை ஒவ்வொன்றாக விரித்துச் சொல்வேன்.

உரைக்கவே பிருதீவு மப்பு தேய்வும்
உரிமையாம் வாய்வோடோ காசமாகும்
புரைக்கவே பூதந்தா னஞ்சதாச்சு
பொறியைந்தின் விபரமதைப் புகலக்கேளாய்
திரைக்கவே சுரோத்திரமுந் தொக்குசட்சு
சிங்குவையாக் கிராணமிவை யாகவைந்தும்
துரைக்கவே சுரோந்திரந்தான் செவியுமாகும்
தொக்காவ துடம்பென்றே சொல்லலாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 35.

பிருதிவு - நிலம். அப்பு - நீர். தேய்வு - தீ. வாய்வு - காற்று. ஆகாசம் - வெளி, இவை ஐந்து பூதங்கள்.

சுரோத்திரம் - கேட்டல். தொக்கு - தொட்டுணர்தல். சட்சு - பார்த்தல். சிங்குவை - சுவைத்தல். ஆக்கிராணம் - முகர்தல், இவை ஐம்பொறிகளாம்.

சுரோத்திரம் என்பது காதுகள். தொக்கு - உடம்பு.

சொல்லவே சட்சதுதான் கண்ணுமாகும்
தூயசிங் குவை நாக்காக் ராணமூக்காம்
புல்லவே புலனைந்தும் புகலக்கேளு
புகழான சத்தமொடு பரிசம்ரூபம்
நல்லவே ரசகெந்த மாகவைந்தாம்
நலமான சத்தமது கேள்வியாகும்
செல்லவே செவியினிடக் கூறதாகும்
செய்பரிசஞ் சுகதுக்க மறிதல் காணே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 36.

சட்சு - கண்கள். சிங்குவை - நாக்கு. ஆக்கிராணம் - மூக்கு என்பவையாம்.

Koviloor Digital Library

ஐம்புலன்கள் சப்தஸ்பரிசரூப ரசகந்தம் - ஒலி, தொட்டுணர்வு, பார்த்தல், சுவைத்தல், முகர்தல் என்பனவையாம்.

ஒலி கேட்கப்படுவது. கேட்கும் உறுப்பு காது.

தொட்டுணர்தல் மூலம் சுக துக்கங்களை அறிகிறோம். அது உடலின் (தோலின்) செயல்.

காணவே தேகத்தின் கூறதாகும்
கண்ரூப மாவதுதான் காண்பதாகும்
நாணவே கண்ணினிடக் கூறதாகும்
ரசமான தறுசுவையை யறிதலாகும்
பூணவே நாக்கினிடக் கூறதாகும்
புகலும்நற் கந்தந்துர்க் கந்தங்காணல்
தோணவே மூக்கினிடக் கூறதாகும்
சுகமான பொறியைந்தின் சூக்ஷந்தானே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 37.

உருவமாவது தோற்றம். அதைக் கண்கள் என்ற பொறியால் உணர்கிறோம். ரசம் என்பது அறுசுவைகளை அறிதல். இது நாக்கின் செயல். நறுமணம், கெடுமணம் என்பவற்றை அறிதல் மூக்கின் வேலை.

தானான கன்மவிந் திரியமைந்தின்
சார்பதனைச் சாற்றிடவே வாக்குபாதம்
பானான பாணிபா யுருமுபஸ்தம்
பகரைந்தின் பிரிவதுதான் வாக்குவாயாம்
கானான பாதமது காலேயாகும்
கனமான பாணியது கையுமாகும்
ஊனான பாயுருதா னபானமாகும்
உபஸ்தமது லிங்கமென வுரைக்கலாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 38

கன்ம விந்திரியங்கள் ஐந்து: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்.

Koviloor Digital Library

வாக்கு	-	வாய்
பாதம்	-	கால்கள்
பாணி	-	கைகள்
பாயுரு	-	அபானம் - மலவாய்
உபஸ்தம்	-	குறி (ஆண்குறி, பெண்குறி)

ஆமென்ற கன்மவிந் திரியமைந்தின்
அடைவெல்லாஞ் சொன்னதன்பி னப்பாற்கேளாய்
நாமெனுங் கன்மேந்திரிய விஷயமைந்தை
நவின்றிடவே வசனமொடு கமனமாகுந்
தாமென்ற தானமொடு விசர்க்கானந்தம்
தாக்காக வீதைந்துஞ் சாற்றினோம் நாம்
பாமென்ற விதனுடைய விபரமெல்லாம்
பரிவாக வொவ்வொன்றா யுரைக்கின்றேனே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 39.

கன்மேந்திரியங்கள் ஐந்து. வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்.

உரைக்கவே வாக்கதுதான் வசனிப்பாகும்
உறுதியாம் பாதமது நடத்திவைக்கும்
பரைக்கவே பாணிகையால் வழங்குவிக்கும்
பாயுருதான் மலந்தனையே பிரித்துவைக்கும்
துரைக்கவே யுபஸ்தமது சுக்லமுத்ரம்
துரிசாக விடுவிக்குஞ் சுப்ரமாகும்
நரைக்கவே கன்மேந்திரிய விஷயமைந்தின்
நலமதனை நவின்றிடவே நண்பாமென்னே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 40.

வாய் பேசுவதற்கு உதவுகின்றது.
பாதங்கள் நடக்க உதவுகின்றன.

பாணி - கைகள் கொடுக்கல் வாங்கல் என்ற செயல்களைப் புரிகின்றன.

பாயுரு - மலத்தை பிரித்து வெளியேற்றுகிறது.

Koviloor Digital Library

உபஸ்தம் - சுக்கிலம், மூத்திரம் என்பவற்றை விலவிக்க உதவுகிறது.

என்னவே கரணமது நாலதாகும்
ஏற்றமனம் புத்தியாங் காரஞ்சித்தம்
நன்னவே நாலினுட பிரிவைக்கேளாய்
நலத்த மனமாவ தொன்றைத்தானினைக்கும்
பொன்னவேபுத்தி விசாரிக்கு மத்தைப்
போரா மாங்காரங் கொண்டெழுப்புவைக்கும்
தென்னவே சித்தமதை முடிப்புவிக்கும்
சிறந்தவந்தக் கரணந்தான் நான்குமாச்சே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 41

கரணங்கள் நான்கு. மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்பவை.

மனம் ஒன்றை நினைக்க வைக்கும். புத்தி அதைச் செய்யலாமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும்

ஆங்காரம் புத்தியால் தீர்மானித்த செயலை நிறைவேற்றத் தூண்டும்படியான எழுச்சியை உண்டாக்கும்.

சித்தம் அச்செயலை முடித்து வைக்கும்.

ஆச்சுதறி வொன்றின் விசாரணை யைக்கேளாய்
அனைத்தையுமே பார்த்திருந்தங் ககண்டந் தானாய்க்
கோச்சுதே குருவாய்த் தத்துவங்களாகிக்
கொடியதீ வினையாய் நல்வினையுமாகிப்
போச்சுதே பெண்ணாய்ப் பிரபஞ்ச மாகிப்
புகலறிய நிர்க்குண நின்மலமு மாகித்
தாச்சுதே சிவமாகிச் சீவனாகிச்
செழுஞ்சுடரில் கதிரொளியாய்ச் சிறந்தவாறே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 42.

எல்லாவற்றையும் பார்த்தும், அறிந்தும் தானே குருவாகவும் தத்துவங்களாகவும், நல்வினை தீவினைகளாகவும் - பெண்ணாகி, பிரபஞ்சமாகி, நிர்க்குணமாய், நின்மலமாய், சிவனாய், சீவனாய்ச், செழுஞ்சுடரின் கதிரொளியாய்ச் சிறந்து விளங்குவதும் அறிவேயாகும் என்று அறிவைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுகிறார் முனிவர்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44965

Koviloor Digital Library

இதைப்பற்றி விளக்கம் எழுதுவதென்றால் பக்கம் பக்கமாக எழுத வேண்டும். சுருக்கமாகக் கூறினால்,

சீவனும் சிவனும் ஒன்றே என்பதை அறிவதே அறிவு.

அது குணங்குறிகளற்றது. அழுக்கற்றது. எவ்விதமான குற்றமும் தீண்ட முடியாது.

அதுவே ஆண் பெண்ணாகவும் அகன்ற உலகமாகவும் ஆயிற்று.

அதுவே நல்வினைகள் தீவினைகளுமாயிற்று.

அதுவே தத்துவங்கள் ஆயிற்று.

எல்லாவற்றையும் அறியச் செய்வதால் - வேறொருவர் உபதேசித்த போதிலும் அறியச் செய்வது அறிவே என்பதால் குருவும் ஆயிற்று. அதுவே பார்த்தல், கேட்டல் முதலான செயல்களுக்கும் முடிவாயிற்று.

வாறான தத்துவமுப் பத்துந்தானே
மண்ணியதோ ராத்துமதத் துவமேயாகும்
நாறான நாடிபத்தின் விபரங்கேளாய்
நயந்தசுழி முனையிடைபிங் கலைகாந்தாரி
ஆறான அத்தியுஞ் சிங்குவை யினோடு
அலம்புருடன் குகுதன் சங்கினி யீரைந்து
மூறான விதன்பிரிவை முன்னேசொன்னேன்
மூர்க்கமாம் வாயுபத்தின் முறைமைபாரே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 43.

மேலே கூறப்பட்ட தத்துவங்கள் முப்பதும் ஆத்தும தத்துவங் களாகும்.

இனி நாடிகள் பத்துக்கு விபரம் கூறுவோம். இடைகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புருடன், குகுதன், சங்கினி என்று ஒன்பதே கூறப்பட்டுள்ளன. இடகலை பிங்கலை என்பதோடு நடுநாடி என்ற ஒன்றும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதையே குருநாடி என்றும் கூறுவர்.

Koviloor Digital Library

பத்து வாயுக்கள்

மனிதரின் உடலில் பத்துவிதமான வாயுக்கள் இயங்குவதாக சித்தர்கள் கூறுகின்றனர். அறுத்துப் பார்க்கும் அறிவியலார் இதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

உடலுக்குள் காற்று எங்கே இருக்கிறது? அது நடமாடும் பாதை எங்கே? அப்படி ஒன்றும் தனியாக இல்லையே என்பார்கள். மூச்சுக் காற்றை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள். ஏனென்றால் அதை மறுக்க முடியாது. அதற்கான கருவிகளை உடலில் காண முடிகிறது. அதன் செயல்பாட்டையும் உணர முடிகிறது. ஆனால் மற்ற வாயுக்கள்?

ஏப்பம் அபானவாயு - இவை எல்லாம் எப்படி உண்டாகின்றன என்று கேட்டால் - நாம் சாப்பிடும்போதும் பிறசமயங்களிலும் கொஞ்சம் காற்றை விழுங்கி விடுகிறோம். அதுதான் ஏப்பமாகவும் அபான வாயுவாகவும் வெளிப்படுகிறது. அவற்றால் உடலில் வேறு செயல் ஏதும் நிகழாததால் அவற்றைப் பொருட்படுத்த வேண்டியு தில்லை என்பார்கள்.

மருத்துவம் இந்த வாயுக்களைப் பற்றி அறிய வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் அப்படிப் பத்து வாயுக்கள் என்று எதுவும் கிடையாது என்றே சாதிப்பார்கள்.

ஆனால் இந்தப் பத்து வாயுக்களையும் பகுத்து உணர்வதும், அவற்றின் செயலை அறிவதும் மருத்துவத்திற்கு மட்டுமன்றி யோக ஞான நெறிகளுக்கும் மிகவும் இன்றியமையாததாகும்.

இன்று கொஞ்சம் கொஞ்சமாக மேல்நாட்டு அறிவியலாரும் இதை உணர்ந்து வருகிறார்கள் என்பது உண்மை. பத்து நாடிகளையும் பத்து வாயுக்களையும் பகுத்துணர்ந்து இனம் காட்டிய சித்தர் செயல் மிகவும் அற்புதமானது.

Koviloor Digital Library

உடலில் வாத பித்த கபங்களால் ஏற்பட்ட மலங்களையும், அதிகமான கொழுப்பு அதிகமான மாவுப் பொருள்கள் முதலியவற்றால் தேங்கிய மலங்களையும் போக்கி உடலை ஓடுபோல் ஆக்கி அதனுள் தானே தன் ஆத்மாவைச் செலுத்தி குவிவிளக்கால் பகுதி பகுதியாக ஆய்வு நடத்துவதுபோல் நடத்தி ஒவ்வொரு நாடியின் செயலையும் கண்டறிந்தவர்கள் சித்தர்கள். இதைச் சாதாரணமானவர்களுக்குச் சொன்னால் புரியாது. சொல்லி விளங்க வைக்கவும் முடியாது. அவர்களாகவே தங்களுடைய உடல்களில் தங்களுடைய உணர்வு களையும் கட்டுப் பாடுகளையும் மீறி நடைபெறும் செயல்களை உணர்ந்து ஆராயத் தொடங்கினால் மட்டுமே உணரமுடியும். அதற்கு நீண்ட காலம் பொறுமையும் உண்மையை ஒப்புக் கொள்ளத் துணிவும் வேண்டும்.

உண்மைகளை ஏற்றுக் கொண்டதாலேயே அறிவியல் வளர்ந்தது. சித்தர்கள் கூறும் உடல் தத்துவங்களை முழுமையாக அறிந்து கொண்டு அவற்றை ஏற்றுக் கொள்வது மருத்துவ அறிவியல் துறைக்கு மேலும் பெருமை சேர்க்கும்.

முறமையாம் பிராணனபானன் வியானன்
மூர்க்கமா முதானனொடு சமானன்நாகன்
திறமையாங் கூர்மனொடு கிருகரன்றான்
தேவதத்த னொடுதனஞ் சயனுமாகும்
பிறமையா மிதின்பிரிவு பிராணவாயு
பெருமூலா தாரத்திற் றோன்றித்தானே
உறமையா மகவையெனும் மந்திரத்தால்
ஓங்கார முதலெழுத்தை யுன்னித்தானே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 44.

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்பவை உடலுள் இயங்கும் பத்து வாயுக்களின் பெயர்களாம்.

இவற்றில் பிராணவாயு மூலாதாரத்தில் தோன்றி, அகவை யெனும் மந்திரத்தால் ஓம்காரப் பிரணவத்தின் முதலெழுத்தாகிய அகாரத்தைப் பிடித்துக் கொள்ளும்.

Koviloor Digital Library

உன்னிமே லெழுமீரா றங்குலந்தான்
உயர்வாமெட் டங்குலந்தான் பின்வாங்கி
நன்னிநா லங்குலந்தான் பாழிற்பாயும்
நலமான குணமெல்லாம் பிராணவாய்வு
பன்னீல வர்ணந்தே வதைதானிந்து
பலபலவாம் பொசிப்புஞ்சீ ரணமதாக்கும்
சொன்னமுந்நூற் றறுபான்நா ழிகைக்குமூச்சு
சொல நாளொவ் வொன்றுக்குச் சுவாசங்கேளே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 45

பனிரெண்டு அங்குலம் மேலே எழும்பி எட்டு அங்குலம் பின்வாங்கி மீதியுள்ள நான்கு. அங்குலங்களை வெளியில் செலுத்தும் இதன் குணம் மிகவும் நலமானது. நீலவர்ணம் உடையது இதன் தேவதை சந்திரன். நாம் உண்கின்ற பற்பல பண்டங்களையும் சீரணிக்கும் தன்மை உடையது.

சொன்ன முந்நூற் றறுபான்நா ழிகைக்கு மூச்சு
சொல நாள் ஒவ்வொன்றுக்கும் -

என்று வருவதில் ஏதோ பிழை ஏற்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு அறுபது நாழிகைதான். பகல் முப்பது நாழிகை இரவு முப்பது நாழிகை என்பது கணக்கு.

நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத்து
நவிலறுநூ றெழுந்திருக்குஞ் சுவாசந்தானே
கோளொன்றிப் பதினாலா யிரநானூறு
குவிமூலா தாரத்துள் ளொடுங்கும்பாரு
பாளொன்றே ழாயிரத்தீர் நூறுமூச்சு
பாழாகப் பாய்ந்திடுமென் றறிகப்பின்னை
ஏளொன்றி யிதனையே யுட்சாதித்தால்
எப்போதும் பாலரா யிருக்கலாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 46

ஒருநாளைக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சுக்கள் நடைபெறுகின்றன. ஒரு மூச்சு என்பது ஒரு தடவை மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடுவதாகும்.

Koviloor Digital Library

நாம் ஒரு நாளைக்கு விடும் மூச்சுக் காற்றைக் கணக்கிட முடியுமா? அதைக் கணக்கிட்டுள்ளார்கள். அப்படிக் கணக்கிட்டதன் மூலம்தான் ஆயுள் காலத்தை நீட்டிக்க முடியும் என்றும் கண்டறிந்தார்கள்.

இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சில் பதினாலாயிரத்து நானூறு மூலாதாரத்து ஒடுங்கும். மீதியுள்ள ஏழாயிரத்து இருநூறு மூச்சு வெளியில் பாய்ந்து விடும். (வெளி என்பதைப் பாழ் என்ற சொல்லால் குறிப்பது சித்தர் வழக்கு).

இருக்கவே அபானத்தி னியக்கங்கேளாய்
ஏசுவாதிஷ் டானத்துற் பத்தியாகும்
மருக்கக்கீழ் நோக்கிமல சலத்தைத்தள்ளும்
வாகாக நிறந்தானும் பச்சையாகும்
அருக்கவே யாசனத்தைச் சுருக்கிவைக்கும்
அன்னசா ரத்தையெலாஞ் சேரவைக்கும்
திருக்கவே தேவதையும் வரதராஜன்
திறமான வியானனுட சிறப்பைக்கேளே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 47.

அபானன் என்ற வாயு மூலாதாரத்திற்கு மேலேயுள்ள சுவாதிட்டானம் என்ற பிரமனின் வீடாகிய ஆதாரத்தில் உற்பத்தியாகிக் கீழ்நோக்கிச் செல்லும். மலசலத்தை வெளியே தள்ளுவது இதன் வேலை. இதன் நிறம் பச்சை. ஆசனத்தைச் சுருக்கி வைப்பதும், அன்னசாரத்தை ஒன்று திரட்டி வைப்பதும் இதன் வேலைகளே. இதன் தேவதை வரதராஜன்.

சிறப்பான வியானனது தோளில்நின்று
திகழெழுபத் தீர்சகஸ்த்ர நாடிசென்று
தறுப்பான சரவசரந் தனிலேநின்று
தானீட்டல் முடக்கல்பரி சங்களாயும்
அறப்பான அனசாரந் தன்னைத்தானே
அங்கங்கே நிறைப்பித்தாக் கையைரக்ஷிக்கும்
பறப்பான ததுபாவ வர்ணமாகும்
பாரினிலத் தெய்வந்தா னேமனாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 48

Koviloor Digital Library

வியானன் என்ற வாயு தோளிலிருந்து உடம்பில் உள்ள எழுபத்தீராயிரம் நாடிகளிலும் வியாபித்து தசைகளை நீட்டுவது மடக்குவதாகிய செயல்களையும் பரிச உணர்ச்சியையும் உண்டாக்கு வதோடு, நாம் உட்கொண்ட உணவின் சாரத்தை அங்கங்கே நிரவச் செய்து உடலை வளர்க்கும், காப்பாற்றும். அதன் நிறம் கருப்பு. தெய்வம் எமன்.

நீட்டுவது மடக்குவது போன்ற செயல்கள் தசைகளால் நடைபெறுகின்றன என்று கூறுவர். ஆனால் அத்தசைகள் இயங்குவதற்கான ஆற்றலை வழங்குவது எது? அதைக்கண்டு பிடிக்க வேண்டாமா? உணவின் சாரத்தை உறிஞ்சிக் கொண்டு உடல் வளர்கிறது. அந்தச் செயல் எதன் துணையால் நடைபெறுகிறது?

உச்சிமுதல் உள்ளங்கால்வரை வியாபித்துள்ள வியானன் என்ற வாயுவே இச்செயலை நடத்தி வைக்கிறது.

நாம் மூச்சு வாங்கும்பொழுது காற்றை உள்ளே இழுக்கிறோம். காற்றிலுள்ள பிராணவாயுவை இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் எடுத்துக் கொள்வதால் இரத்தம் தூய்மையடைந்து நல்ல சிவப்பு நிறமாகிறது. இரத்தத்தை மாசுபடுத்திய கரியமில வாயுவை சிவப்பு அணுக்கள் எடுத்துக் கொண்டு பிராண வாயுவைத் தருகின்றன. இது நமது உடலுக்குள் இடைவிடாமல் நடைபெற்றுக் கொண்டே இருக்கும் நிகழ்ச்சி.

மார்புக் கூட்டில் நல்ல காற்றை எடுத்துக் கொண்டு தூய்மை யடைந்த இரத்தம் குடல்களிலிருந்து எரித்து பக்குவப்படுத்தப்பட்ட உணவின் சாரத்தையும் எடுத்துக்கொள்கிறது. இரண்டையும் தசைகளில் ஆங்காங்கு தேவைப்படும் இடத்தில் கொடுக்கிறது. உணவின் சாரம் உடலை வளர்க்கிறது. பிராண வாயு உயிரை வளர்க்கிறது. தசைகளிலுள்ள கரியமில வாயு வெளியேறி இரத்தத்திலிருந்து கிடைக்கும் பிராண வாயு தசைகளுக்குக் கிடைப்பதால் அவை புதிய வலுப் பெறுகின்றன. உழைப்பால் இழந்த சக்தியை மீண்டும் பெறுகின்றன.

இதனாலேயே உடலில் நடைபெறும் எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன. உடலில் உள்ள எல்லாக் கருவிகளும் இயங்கு

Koviloor Digital Library

கின்றன. உயிர் என்பது காற்றே. அதனாலேயே அதற்குப் பிராண வாயு - உயிர் வளி என்ற பெயர் ஏற்படுகிறது. உயிர் வளி தசைகளில் பரவி இயங்கத் தொடங்கும்கால் வியானன் என்ற பெயர் பெறுகிறது. இதைச் செயல் காற்று என்றும் கூறலாம்.

ஏமனா முதானனுட வேற்றங்கேளாய்
எழிலான வுதரவக் கினியெழுப்பிப்
பூமனா மன்னசா ரந்தனைத்தான்
பொருந்தவே சமீபித்து நிறுத்திவைத்து
காமனா யெடுப்பித்துங் கலக்கிவைத்து
கலக்கியே வருந்திவைக்கும் வளப்பமாகும்
வீமனா மின்னினுட வர்ணமாகும்
விளங்கியதோ ரக்கினிதான் தெய்வமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 49.

அடுத்தபடியாக உதானனுடைய செயலைப் பார்ப்போம். வயிற்றிலுள்ள ஜடரரக்கினியைக் கிளப்பிவிடுவது இதன் வேலை. நாம் உண்ணும் உணவு வேகமாக ஓடிப்போய்விடாமல் தடுத்து நிறுத்தி அதை நன்றாகக் கலக்கிக் குழம்புபோல் செய்து வைக்கும். இது மின்னல் போன்ற நிறமுடையது. இதன் தெய்வம் அக்னி.

இரைப்பை குடல்களின் இயக்கம் உதானன் என்ற காற்றால் நடைபெறுகிறது. இவை ஓயாமல் சுருங்கி விரிந்துகொண்டே இருக்கின்றன. அதனால் உணவு வேகமாக ஓடிவிடாமல் தடுத்து நிறுத்தப்படுகிறது. அப்படித் தடுக்கப்படும்பொழுது நன்றாகப் புரட்டவும் கலக்கவும் படுகிறது. மாவு அரைக்கும் இயந்திரம் போல் உணவை நன்றாக அரைத்துக் குழம்பாக்கி விடுகிறது.

ஆமென்ற சமானனுட வண்மைகேளாய்
அடிநாபி பாதங்கள் சமன்கொண்டேகி
வாமென்ற வாய்வுகளை மிஞ்சொட்டாமல்
மடக்கியே சமன்செய்து மருவப்பண்ணும்
தாமென்ற வறுசுவையைத் தண்ணீரன்னம்
சமன்செய்து சரீரமெல்லாஞ் சாரப்பண்ணும்
வாமென்ற வர்ணமது புட்பராகம்
மகத்தான தெய்வமா தித்தனாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 50

Koviloor Digital Library

சமானன் என்ற வாயுவின் வேலை என்னவென்றால் அடிவயிறு, உந்தி, பாதங்கள் வரை உலவும் வாய்வுகள் மிகுதியாகாமல் சமன்செய்து ஒரே சீராக வைக்கும். நாம் உண்ணும் அறுசுவை அன்னம், குடிக்கும் தண்ணீர் இவற்றையெல்லாம் உடல் முழுவதற்கும் எடுத்துச் சென்று பரவச் செய்யும். இது புட்பராகம் போன்ற நிறமுடியது. இதன் தெய்வம் சூரியன்.

தெய்வமாம் நாகனுட சிறப்பைக்கேளாய்
செயலான சகலகலை யாக்கிவைத்து
பைவமாய்ப் பாடிவைக்கும் விழிப்பிக்குங்கண்ணை
பாங்காகச் சிமிட்டுமுரோமம் அசைக்கும்
பெய்வமாம் பொன்னினுட வர்ணமாகும்
பெரிதான தெய்வந்தா னனந்தனாகும்
கொய்வமாங் கூர்மனுட குணத்தைக்கேளாய்
கொடியமனந் தனில் நின்று நிமைக்கொட்டாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 51

நாகன் என்ற வாயு கண்களைச் சிமிட்ட வைக்கும். விழிப்பிக்கும் மூடும். சகல கலைகளையும் உணர வைக்கும். பிறர்க்கு எடுத்துச் சொல்ல வைக்கும். உரோமங்களை அசைக்கும். பொன் நிறம் இதன் நிறம். அனந்தன் என்ற பாம்பு பரமனுக்குப் பள்ளியாகிப் பாம்பணை கொண்ட பரமன் என்ற பெயருக்குக் காரணமாகிய ஆதிசேடனே இதற்குத் தெய்வமாகும்.

நிமைக்கொட்டுங் கொட்டாவி தானுங்கொள்ளும்
நேராக வாய்மூடும் பெலனுண்டாக்கும்
கமைக்கொட்டுங் கண்விழிக்கும் மூடப்பண்ணும்
காக்ஷியெல்லாங் காண்பிக்கும் விழிநீரோட்டும்
விமைக்கொட்டும் வர்ணமது வெளுப்பதாகும்
மேலான தெய்வந்தான் விஷ்ணுவாகும்
சுமைக்கொட்டுங் கிருகரன் றன்குணத்தைக்கேளாய்
கசிநாவு நாசிதனிற் கசிவுண்டாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 52

கூர்மன் என்ற வாயு கண் இமைகளைப் படபடவென்று கொட்டிக் கொள்ளச் செய்யும். கொட்டாவி விட வைக்கும் வாயைத்

Koviloor Digital Library

திறக்கும், மூடும். காட்சிகளையெல்லாம் காண வைக்கும். கண்களை இமைக்கச் செய்வதும் கண்ணீரைப் பெருக்குவதும் கூட இதன் வேலைதான். இதன் நிறம் வெளுப்பு. தெய்வம் விஷ்ணு.

கசிவுண்டாங் கடும்பசியின் கன்மஞ்சொல்லும்
கண்ணிலே யிருத்தலொடு போதலாகும்
துசிவுண்டாம் தும்மலோ டிருமலுண்டாம்
சுயமான வர்ணமது சிவப்பதாகும்
தெசிவுண்டாந் தெய்வமது சிவன்றானாகும்
திரோதயையின் கூறான திறமுமாகும்
குசிவுண்டாந் தேவதத்தன் குணத்தைக் கேளாய்
குடிலமாய்ச் சோம்புமுறித் திடுதலாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 53.

கிருதரன் என்ற வாயு நாவில் நீர் ஊற வைக்கும். நாசியில் நீரொழுக்கை உண்டாக்கும். தும்மலையும் இருமலையும் உண்டாக்கும். கடும் பசி உண்டாகும் வேளைகளில் இருக்க மாட்டாமல் தவிப்பையும் பரபரப்பையும் உண்டாக்கும். இதன் நிறம் சிவப்பு. தெய்வம் சிவன்.

அடுத்தபடியாக மாயையின் குணத்தை உண்டாக்குகின்ற தேவதத்தன் என்ற வாயுவின் குணத்தைச் சொல்வோம்.

முறித்திடுதல் முயற்சியாய் விழிக்கும்போது
முகுளிதமாய்க் கண்ணினையே யுலாவவைத்தல்
தரித்திடும் சண்டைகொளற்றாக்கல் பேசல்
சண்டாளக் கோபத்தை யுண்டுபண்ணல்
குறித்திடுதல் குதங்குய்யத் தானத்தன்றிக்
கூர்ந்ததெய்வந் தேவேந்திரன் படிகவர்ணம்
தறித்திடுதற் றனஞ்சயனைச் சாற்றக்கேளாய்
சாங்கமாய் மூக்கில்நின்று தடிக்குந்தானே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 54.

சோம்பல் முறித்தல், கஷ்டப்பட்டுக் கண்களை விழிக்கும்போது கண்களை உலாவ வைத்தல், சண்டாளத்தனமான கோபத்தை உண்டாக்குதல், சண்டை போட வைத்தல், பிறரைத் தாக்குதல்.

Koviloor Digital Library

ஆவேசமாகப் பேசவைத்தல். இதன் இருப்பிடம் குதம்குய்யம் ஆம் இதன் தெய்வம் தேவேந்திரன். வர்ணம் படிக நிறம்.

தடித்துமே உடம்பெல்லாம் வீங்கப்பண்ணும்
தந்திரமாய்க் கன்னத்திற் சமுத்ரம்போலத்
திடித்துமே சுந்தரமாய்க் கோஷமாகித்
திரண்டுமே துஞ்சியகா லந்தனிற்றான்
வடித்துமே வாயுவெல்லாம் போனபின்பு
வளமான தலைவெடிக்கு மூன்றாநாளில்
அடித்துமே தலைவெடித்தா லப்பாற்போகும்
அதின்வர்ணம் நீலவர்ண மறிந்துகொள்ளே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 55

தனஞ்செயன் என்ற வாயு மூக்கில் நின்று தடிக்கும். கன்னத்தில் இருந்து கடலைப்போல் பேரிரைச்சலை உண்டாக்கும் இறந்து போனபின் உடம்பில் உள்ள வாயுக்களெல்லாம் வெளியேறிய பிறகு மூன்றாம் நாளில் சிரசைப் பிளந்து கொண்டு கபாலம் வழியாக வெளியே போகும். அதன் நிறம் நீலம்.

அறிந்ததெய்வந் தான்தன்வந் திரியேயாகும்
ஆகவிந்த வீரைந்து மாதிவாய்வு
வெறிந்ததோர் வசையமைந்தின் விபரங்கேளாய்
மீறியதோ ரமவசையப் பருவசையமாகும்
தறித்தசல வசையமல வசையத்தோடு
தாக்கான சுக்கிலமாகும் வசையமைந்தும்
எறிந்ததோ ரமவசைய மன்னம்தண்ணீர்
இருக்குமிட மென்றுதா னியம்பிடீரே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 56

தனஞ்செயன் என்ற இந்த வாயுவுக்குத் தெய்வம் தன்வந்திரி பகவான். இந்தப் பத்து வாயுக்களின் பண்புகளைத் தெரிந்து கொண்டபின் வசையங்களைப் பற்றி அறிவோமாக.

அமவசையம், பருவசையம், மலவசையம், சலவசையம், சுக்ல வசையம் என்று ஐந்து வகை நிணநீர்கள் உடலில் உள்ளன. அமவசையம் என்பது அன்னமும் தண்ணீரும் இருக்குமிடத்தில் உள்ளது.

Koviloor Digital Library

இயம்பிடவே பருவசையந் தான்விளம்பில்
இயன்றவன்னந் தண்ணீர்தா னேகமாய்ந்து
புயம்பிடவே பிரியுமிடம் மலவசையம்
புசித்ததெலா மலமாகிப் போக்குவைக்கும்
தயம்பிடவே சலவசைய மருந்தும்நீர்தான்
தங்கியே யிருக்குமிடஞ் சலப்பையாகும்
சுயம்பிடவே சுக்கிலமா மசயஞ்சொல்லே
சுகமான சுக்கிலப்பை யென்றுசொல்லே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 57.

பருவசையம் என்பது ஒன்றாகக் கலந்திருக்கும் அன்னமும் நீரும் தனித்தனியாகப் பிரியும் இடமாகும். உடலுக்குத் தேவையற்றவற்றை நீக்கும் இடம் மலவசையம். தேவையற்ற நீர் வெளியேறித் தேங்குமிடம் சலவசையம். சுக்கிலவசையம் என்பது சுக்கிலப் பையே ஆகும்.

சொல்லான வசயமைந்தின் றொகுப்புச் சொன்னேன்
சூட்சமாங் கோசமைந்தின் கணக்குக்கேளாய்
அல்லான வன்னமய கோசத்தோடும்
அரிதான பிராணமய கோசமாகும்
மல்லான மனோம்யவிக் கியானமயமாகும்
மகத்தான வானந்த மயமுமைந்து
மெல்லான விதின்பிரிவு விளம்பக் கேளாய்
மெய்வாய்கண் மூக்கோடு செவியுமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 58.

அடுத்தபடியாக கோசங்கள் ஐந்தினைக் கூறுவோம். அன்ன மயகோசம், பிராண மயகோசம், மனோமய கோசம், ஞான மயகோசம், ஆனந்த மயகோசம் என்பவை.

அன்ன மயகோசம் இத்தூல தேகத்தோடு சம்பந்தம் உடையது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற அங்கங்களை உடையது.

ஆமென்ற வைம்பொறியில் மண்ணின்கூறாம்
அன்னமய கோசத்தி லப்பணைந்தால்
ஊமென்ற வூணுண்டாம் பிராணமயகோசம்
உந்தியதிற் றேயுவந்தால் புத்தியுண்டாம்

Koviloor Digital Library

மாமென்ற மனோமயமாங் கோச்மாகும்
வாயுவிதில் வந்தடைந்தால் விகாரமுண்டாம்
நாமென்ற ஞானமய கோசப்பேராம்
நலத்தவா தம்வந்தால் சுகமுண்டாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 59

இது மண்ணின் கூறாம். இதனோடு நீர் கலந்தால் பிராணமய கோசமாகும். உந்தியிலிருந்து வெப்பம் வந்து கலந்தால் மனோமய கோசமாகும். அதனோடு வாயு வந்து கலந்தால் குண பேதங்கள் ஏற்பட்டு ஞானமய கோசமாகும்.

பிருதிவி - மண். வெறும் மண்ணாக இருக்கும்பொழுது இது எதையும் ஏற்றுக் கொள்வதில்லை. மண்ணோடு நீர் கலக்கும்பொழுது அதில் ஈரப்பசை உண்டாகிறது. அது பிற பொருளை ஏற்றுக் கொள்ளவும் அதன் பயனை வெளிப்படுத்தவும் தயாராகி விடுகிறது. அதற்கு உயிர்ப்பு உண்டாகி விடுகிறது. உண்ணவும் உணவை உண்டாக்கவும் திறன் பெற்றதாய்ப் பிராணமய கோசமாகிறது.

அதனோடு உந்தியிலிருந்து கிளம்பும் நெருப்பு - தீ வந்து சேர்ந்தவுடன் புத்தி உண்டாகிறது. மனோமய கோசமாகிறது. அதில் வாயுவும் வந்து சேரும் பொழுது அசைவுகள் உண்டாகின்றன விகாரங்கள், உணர்ச்சி வேறுபாடுகள் ஏற்படுகின்றன. அப்போது ஞானமய கோசம் என்ற பெயரை அடைகிறது. வாயு சலனமற்று நிற்கும்போது சுகம் உண்டாகிறது.

வந்தாலா னந்தமய கோசப்பேராம்
மகத்தான கோசமைந்தி லெடுத்ததேகம்
குந்தான கோசமைந்தின் குணத்தைச் சொன்னேன்
குறிப்பான வாதார மாறுங்கேளாய்
முந்தாமூ லாதாரஞ் சுவாதிஷ்டானம்
முதிர்மணிபூ ரகமனா கதம்விசுத்தி
அந்தால்ாக் கினையுமா தாரமாகும்
அடுக்கான வாதாரத் தாண்மைகேளே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 60

Koviloor Digital Library

நிலம், நீர், நெருப்பு, காற்று இந் நான்கு தத்துவங்களோடும் ஆகாய தத்துவமும் கலந்தால் ஆனந்த மய கோசமாகும். இந்த ஐந்து கோசங்களும் உடலோடு இயைபு கொண்டவை.

இனி ஆதாரங்கள் ஆறினையும் கூறுவோம். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்பவை அவற்றின் பெயர்கள். அவற்றின் தன்மை யாதென்றால்.

கேளேமூ லாதாரங் குதங்குய்யத்தும்
கெடியாக நடுவிருக்கு மபானத்தின்மேல்
வேளேவீ ணாதண்டின் கீழிருக்கும்
மிக்கநடு வேரங்கு லப்ரமாணம்
மூளேமுக் கோணம் நாளிதழ்தானாகி
முனிந்தநா லிதழ்நாலட் சரமுடைத்தாய்
வாளேமுக் கோணநடு மந்த்ரறீங்காரம்
வல்லபையாஞ் சத்திவலப் பக்கமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 61.

மூலாதாரம் மலவாய் நீர்வாய்களுக்கு நடுவேயும், அபானனுக்கு மேலாக முதுகுத் தண்டுக்குக் கீழே நடுவிலும் அங்குலப் பிரமாணம் உள்ளதாகும். முக்கோண வடிவமாக நான்கு இதழ்களால் சூழப்பட்டு இதழ்களில் நான்கு அட்சரங்களும் முக்கோணத்தின் நடுவில் ஓங்காரமும் உடையதாய் வலப்பக்கத்தில் வல்லபை என்ற சக்தியோடு,

பக்கமா மந்திரமும் ஓங்காரமாகும்
பகரான தெய்வம்விக்கி னேசுரன்றான்
வக்கமா மூலம்வங் கெனநிறுத்தி
வாசியைநீ மறவாமல் மாட்டியூதி
ஒக்கமா மூலங்கீ ழடியிற்றானும்
ஓங்காரக் கம்பமதி லடியிற்கட்டி
இக்கமா மிருவரையுந் தெரிசித்தாக்கால்
இகபரமும் வெளியாகி யேறலாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 62.

வினாயகன் வீற்றிருப்பார். மூலத்தில் வங்கென்று வாசியை ஊதி நிறுத்தி ஓங்காரக் கம்பத்தின்டியில் கட்டி நிறுத்தினால் கணபதியையும் வல்லபையையும் தரிசிக்கலாம்.

Koviloor Digital Library

ஏறவே பளிச்சென்று மூலத்தீதான்
இதற்குமே லிரண்டாமங் குலத்தின்மேலே
கூறவே நால்வட்ட மாறிதழ்தான்
குறிசுவாதிஷ் டானமுமின் னொளியேயாகும்
ஆறவே யாறுவட்சர முடைத்தாய்
அதற்குள்ளே பிருதிவிதான் குடியிருப்பாம்
வேறவே வேதந்தா னிருக்கோடெல்லாம்
விளங்கியதோ ரக்ஷரமும் நகாரமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 63.

பளிச்சென்று மூலத்தீ பிரகாசிக்கும். இதற்குமேல் இரண்டங் குலத்திற்கு மேலாக நான்கு வட்டம் ஆறு இதழ்களால் சூழப்பட்ட சுவாதிட்டானம் மின்னலைப் போன்ற ஒளியுடன் பிரகாசிக்கும். ஆறு இதழ்களில் ஆறு அட்சரங்கள். அதற்குள் பிருதிவி குடியிருக்கும். இங்கு பிரம்ம தேவன் இருக்கு வேதத்தோடு வீற்றிருப்பார். இதன் பீஜாக்ஷரம் "ந".

பாடல்களில் அங்குலம் என்று குறிப்பிடப்படுவது காற்றுச் செல்லும் தூரத்தை. காற்றை அளந்து சுவாசிக்கும் வழியை குரு முகமாக அறிய வேண்டும்.

நகாரமா மெழுத்ததுவும் பிரமனாகும்
நவ்வான பீசமது மண்ணுக்காகும்
உகாரமா மந்திரத்தை யுன்னிக்கொண்டு
உயர்வாய்வைக் கும்பிக்கி லறிவுவொன்றும்
சிகாரமா முப்புரிநூற் சிரசுநாலு
சிறந்தசரஸ் வதியுமங்கே தெளிவாய்க்காணும்
பகாரமாய்த் தெரிசித்துப் பழக்கம்பண்ணப்
பாருலக மயக்கமெல்லாம் பண்பதாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 64.

உகாரமாம் மந்திரத்தை உச்சரித்து வாயுவை உள்ளடக்கிக் கும்பித்தால் நான்கு கரங்களோடு முப்புரி நூல் அணிந்த பிரம்மதேவர் சரஸ்வதியோடு காட்சியளிப்பார். இவரை அடிக்கடி தரிசித்துப் பழக்கம் பண்ணிக் கொண்டால் பாருலகைப் பற்றிய மயக்கங்கள் எல்லாம் நீங்கி விடும்.

Koviloor Digital Library

பன்மையா மாறாமங் குலத்தின்மேலே
பதிந்தபிறை போலமணி பூரகந்தான்
தொன்மையாஞ் சுற்றிலும்பத் திதழதாகிச்
சுயம்பான வக்ஷரமும் பத்துந்தானாய்
அன்மையா மப்புதனுக் கிடமதாகி
அதற்குள்ளே தெய்வந்தான் விஷ்ணுவாகித்
தன்மையாஞ் சத்திலட் சுமியதாகும்
தயங்காத வக்ஷரம காரமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 65.

சுவாதிட்டானத்திற்கு மேலே பிறைபோல் விளங்கும் மணிபூரகம் பத்து இதழ்களும் அவற்றில் பத்து அட்சரங்களுமாக நீரின் தத்துவமாக விஷ்ணுவும் லட்சுமியும் வீற்றிருக்க விளங்கும். இதன் பீஜாட்சரம் "ம".

மகாரமா மக்ஷரந்தான் விஷ்ணுவாகும்
மகத்தான மவ்வதுவு மப்புபீசம்
விகாரமாம் வேதமது யசுருவாகும்
மெய்நிறைந்த கவுத்துவபஞ் சாயுதங்கள்
நிகாரமாம் லட்சுமிதான் பாசமாகி
நேர்மையாய் வாசியைமங் கெனநிறுத்தி
உகாரமா யூதினா லுலகவாழ்க்கை
ஒருநொடியில் வெளியாகு மூணிப்பாரே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 66.

மகாரம், விஷ்ணு, நீர் தத்துவங்களோடு விளங்கும் மணி பூரகத் திற்குரிய வேதம் யசுர். இங்கே விஷ்ணு பகவான் கவுத்துவ மாலைகள் சூழ்ந்த மார்போடு சங்கு சக்கரம், வில், வாள், கதை என்ற ஐந்து வகை ஆயுதங்களையும் ஏந்தியவராய் அருகில் லட்சுமி தேவியுடன் வீற்றிருப்பார். வாசியை மங் என்று நிறுத்தி உகாரமாக ஊதினால் ஒரு நொடியில் உலக வாழ்க்கை வெளியாகும் என்கிறார் முனிவர்.

ஊணியிதன் மேலிருநா லங்குலந்தான்
உத்தமமா மனாகதத்தின் வீடுமாகும்
தோணிதிரி கோணமுமீ ராறிதழ்தான்
சுற்றிலுமே பனிரெண்டட் சரமுடைத்தாய்

Koviloor Digital Library

சேணியே தேயுவுக்கங் கிருப்புமாகிச்
சிகாரமா மெழுத்தாகிச் சிறப்புமாகிப்
பூணியே பூதபீசம் ரவ்வுமாகிப்
புகழான ருத்திரனும் புரிந்தார்பாரே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 67.

மணிபூரகத்திலிருந்து எட்டு அங்குலங்களுக்கு மேலே அனாகதத்தின் வீடு உள்ளது. திரிகோணமும் அதைச் சூழ்ந்து பனிரெண்டு இதழ்களும், அப்பனிரெண்டு இதழ்களில் பனிரெண்டு அட்சரங்களும் உடையதாய் - நெருப்பு - அக்கினியின் இருப்பிடமாய் சிகாரம் எழுத்தாகவும், பூதபீசம் ரவ்வாகவும் கொண்ட இந்த ஆதாரத்தில் ருத்திர பகவான்,

புரிந்திருந்தார் சிகாரத்தில் ருத்ரன்ருத்ரி
புகழான வாசிவைத்துச் சிங்கென்றூனு
கரிந்திருந்த காயமுமோ வாலையாகும்
கனிசாம வேதத்தின் கருத்துந்தோன்றும்
பரிந்திதற்கு மேற்பனிரண்டங் குலந்தான்
பார்வையாய் மேலே விசுத்திவீடு
அறிந்தாறு கோணசோ டசமிதழ்தான்
அதிலேதா னீரெட்டட் சரமுமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 68.

ருத்ரியோடும் வீற்றிருப்பார். வாசியை நிறுத்திச் சிங் கென்று ஊன்றினால் காயம் இளமையாகும். சாம வேதத்தின் கருத்துத் தோன்றும்.

இதற்குமேல் பனிரெண்டங்குலத்தில் விசுத்தி வீடு உள்ளது. அறுகோணச் சக்கரம். அதைச் சுற்றிலும் பதினாறு இதழ்கள். அவ்விதழ்களில் பதினாறு அட்சரங்கள்.

ஆமெனவே வகாரமறு கோணமத்தி
அமருமகே சுரன்மகேஸ் பரியுமாக
வேமெனவே யதர்வணவே தத்தோடொக்க
மிக்கான வாயுவது மிதழுக்குள்ளே

Koviloor Digital Library

போமெனவே பீசந்தான் யவ்வுமாகும்
புகழாகக் கும்பகஞ்செய் தூதியூதி
வாமெனவே வங்கெனவு மிறுத்திப்பார்க்க
வயசெல்லா மொருநாளாய் மனதிற்காணே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 69.

அறுகோணமத்தியில் 'வ'காரம் என்ற அட்சரம் விளங்க அங்கே மகேசுவரனும் மகேசுவரியும் வாயு தத்துவமாகக் காட்சியளிப்பர். அதர்வண வேதம் ஒலிக்கும். இதழ்களில் உள்ள பீசம் யகாரமாகும் மூச்சை நிறுத்திக் கும்பகம் செய்து வங்கென்று நிறுத்திப் பார்க்க வயோதிகம் போய் இளமை உண்டாகி விட்டாற் போன்ற உணர்ச்சி உண்டாகும். உன் மனதில் இளமை பொங்குவதைக் காண்பாய்.

காணவிதன் மேலீரெட் டங்குலந்தான்
கண்டமா ருதம்புருவ மளவாயாகி
ஊணவே யிரண்டிதழா யோங்கிநிற்கும்
உற்றுநின்ற வட்சரமு மிரண்டுமாகும்
ஆணவே நடுவுக்குள் யகாரம்நிற்கும்
ஆக்கினையின் வீடாகும் விசும்பிருப்பு
பூணவே பூதபீசம் யவ்வுமாகும்
புகழான மாணிக்கப் பிரபையவ்வே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 70.

இதற்குமேல் பதினாறங்குலத்திற் கப்பால் புருவமளாவியதாய் இரண்டு இதழ்களாய் ஓங்கி நிற்கும் ஆக்கினை வீடு உள்ளது. இதன் அட்சரம் 'ய'காரம். இருப்பிடம் ஆகாயம். பூதபீசம் 'ய'காரம். மாணிக்கப் பிரபையுள்ள சிங்காசனத்தில்,

யவ்வுக்குட் சதாசிவமுஞ் சத்திநிற்கும்
யங்கென்று கும்பித்தா லநேகஞ்சித்தி
மவ்வுபர மானந்த மருவிநின்று
மகிழ்ச்சியாங் கருவி தனிடமதாகி
அவ்வுடனைம் புலன்றனையு மறியப்பண்ணி
அறிவோடு நினைவுதனின் மயக்கத்தோட்டி
உவ்வுமுள்ள படிநடத்திக் காண்பன கேட்பனவாய்
உகந்தகுரு வெழுந்தருளி வியர்த்திப்பாரே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 71.

Koviloor Digital Library

சதாசிவமும் மனோன்மணித் தாயும் வீற்றிருப்பார்கள். யங்கென்று கும்பித்து மூச்சை நிறுத்தினால் அநேகம் சித்திகள் உண்டாகும். இது பரமானந்தம் மருவி நிற்கும் மகிழ்ச்சியின் இருப்பிடம். ஐம்புலன் களையும் அறியச் செய்வதும் அறிவு நினைவு என்பனவற்றின் மயக்கங்களைப் போக்கிக் காண்பனவும் கேட்பனவுமான உயிர்களுக் கெல்லாம் குருபரனாக விளங்கும் சதாசிவன் எழுந்தருளும் இடமாகும்.

பார்க்கவே யாதார மாறுமாச்சு
பரிந்திட்ட தத்துவங்கள் முப்பத்தாறும்
சேர்க்கவே சிவதத்வ மாகுங்கண்டீர்
சிறந்திருந்த மண்டலங்கள் மூன்றுங்கேளாய்
ஆர்க்கவே அக்கினி மண்டலத்தினொடு
அலரிமண் டலமிந்து மண்டலந்தான்
தோர்க்கவே யிதன்சூக்ஷி சொல்லக்கேளாய்
சுருதியா மூலமென்ற தொடர்ச்சிதானே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 72.

ஆதாரங்கள் ஆறும் கூறினோம். இவற்றோடு தத்துவங்களின் எண்ணிக்கை முப்பத்தாறாயிற்று. இவை சிவ தத்துவங்களாகும்.

இனி அறிய வேண்டியவை மண்டலங்கள் மூன்று. அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், அம்புலி மண்டலம் என்பவையாம்.

அக்கினி மண்டலம் மூலாதாரத்திலிருந்து தொடங்குவதாம்.

மூலாதாரத்தில் அக்கினி எங்கே இருக்கிறது என்று கேட்க வேண்டாம். வெப்பம் என்பதே மூலத்திலிருந்தான் கிளம்புகிறது. உடல் உஷ்ணமாகிவிட்டது என்பதை மூலச்சூட்டிலிருந்துதான் அறிகிறோம். மூலச்சூடு நீர்க்கடுப்பை உண்டாக்குகிறது. (சிறுநீர் பிரியும்போது எரிச்சல் உண்டாவது). அதிசாரக் கழிச்சலையும் உண்டாக்கும். இங்கே கூறப்படும் பொருள்களில் மருத்துவப் பயன் இல்லையென்று தோன்றினாலும் நுட்பமாக ஆராயும்போது ஒவ்வொரு பொருளுக்கும் மருத்துவப் பயன் இருப்பது விளங்கும். இதை ஏட்டறிவால் மட்டும் உணர முடியாது. நீண்டகால அனுபவத்தால் மட்டுமே உணர முடியும்.

Koviloor Digital Library

தொடர்சியாஞ் சுவாதிஷ்டா னத்தின்கீழ்
சுகமாக மையமணி மண்டலந்தான்
படர்ச்சியாம் முச்சுடராய் மூலமட்டும்
பரவி சுவாதிஷ்டான மட்டுநிற்கும்
மடர்ச்சி மணிபூர மனாகதத்தின் மையம்
வளையம்போற் சூரியமண் டலந்தான்நிற்கும்
அடர்ச்சி மணிபூர மனாகதத்திற் றானே
அடர்ந்தேறுஞ் சூரியமண் டலந்தான்பாரே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 73.

அக்கினி மண்டலம் சுவாதிட்டானத்திற்குக் கீழாக மையம் கொண்டு மூன்று சுடர்களாக மூலாதாரம் முதல் சுவாதிஷ்டானம் வரைப் பரவி நிற்கும்.

அநாகதத்தை மையமாகக் கொண்டு வளையம்போல் வியாபித்து மணிபூரகத்தைத் தழுவி நிற்பது சூரிய மண்டலம். இது மணிபூரகத்திலிருந்து அடர்ந்தேறும் என்று முனிவர் கூறுவது அதன் செயலின் தன்மையை என்று எடுத்துக் கொள்ளலாம்.

பாரென்றாற் சும்மாதான் பார்க்கப்போமோ
பறந்தோடும் வாசியைநீ மாட்டிப்பாரு
வேரென்றால் விசுத்திமேலாக் கினையின்கீழ்
விளங்கியெழுஞ் சந்திரமண்டலந்தான் பாரு
தூரென்றாற் றுவாதசாந் தத்தின்மட்டும்
சுடரொளியாய்ப் பிரகாச மாகிநிற்கும்
மூரென்றால் மண்டலங்கள் மூன்றுமாச்சு
மூர்க்கமா மலமூன்றின் முடிவுகேளே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 74.

இவற்றைப் பார்ப்பதென்றால் - அறிந்து கொள்வதென்றால் சும்மா அறிந்து கொள்ள முடியுமா? சும்மா இருந்து கொண்டு எனக்கொன்றும் தெரியவில்லையே? நான் எதையும் பார்க்க வில்லையே என்று பேசுவது மடமை. அப்படியெல்லாம் வெகு எளிதாகப் பார்த்துவிடவும் முடியாது. அறிந்து கொள்ளவும் முடியாது. பறந்தோடுகின்ற வாசியை மாட்டிப் பாரு (பிராணாயாமம் செய்து பாரு) எல்லாம் விளங்கும்.

Koviloor Digital Library

அடுத்ததாகச் சந்திர மண்டலம் விசுத்தி (கழுத்து)யிலிருந்து ஆக்ஞா (உச்சி) சக்கரம் வரை சுடரொளியாய்ப் பிரகாசமாக நிற்கும். துவாத சாந்தம் வரைப் பிரகாசமாய் நிற்கும் என்கிறார் முனிவர்.

முடியான வாணவமு மாயைகாம்யம்
முயற்சியா யிதின் பிரிவான் முடியுமாறு
திடியான செம்பினிற்றான் களிம்புபோலும்
சிறுநெல்லி னுமிபோலு மாத்துமாவை
முடிவான மேலெழவொட் டாமறகாத்து
முடிவித்துத்தன்னுதென்றே காத்திருக்கும்
மடிவான மாய்கையதா ணவத்தைக் கொண்டே
வருகிறது தெரியாமல் மடிக்குந்தானே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 75.

இனி மும்மலங்களைப் பற்றிக் கூறுவோம். இங்கே .மலம் என்ற சொல் குற்றம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆணவம், மாயை, காமியம் என்பவை மும்மலங்களாகும். இவை செம்பில் களிம்பு போலவும், நெல்லில் உமி போலவும் ஆன்மாவை மூடிக்கொண்டு அது மேலே எழும்பித் தான் அடைய வேண்டிய பயனை அடைய வொட்டாமல், ஆத்மா தன்னுடையது என்றே தடுத்துப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும். அழிவைத் தருவதான மாயையானது ஆணவத்தைக் கொண்டு பின்விளைவு என்ன வென்பதை அறிய வொட்டாமல் தடுத்து மரணத்தையும் கொடுக்கும் வன்மையையுடையது.

மடிக்கின்ற காமியங் கண்டத்துக்கெல்லாம்
மகிழ்ந்திடுதன் மாயைமுற்று விந்துநிற்றல்
துடிக்கின்ற மலமூன்றின் செயலுமாச்சு
தோஷமூன் றாவனவாஞ் சுளுவுகேளாய்
நடிக்கின்ற வாதபித்த சேட்பமூன்று
நலமான விதின்பிரிவு நாட்டக்கேளாய்
வடிக்கின்ற வாயுவது நிலைகலங்கி
வாதமா மக்கினியு மார்க்கமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 76.

Koviloor Digital Library

காமியம் என்பது கண்டதன் மேல் எல்லாம் ஆசைப்பட வைத்து அதன் மூலம் மாயையை மேலும் மேலும் பெருக்கி மயக்கத்தில் ஆழ்த்தி விடும் தன்மையுடையதாம்.

உடலின் முத்தோஷங்கள் வாதம், பித்தம், சேத்துமம் என்பவையாம். உடலில் இயங்குகின்ற வாயுவானது தன் நிலையிலிருந்து தவறி வெப்பத்தை அதிகமாகத் தாங்கி வருத்துகின்ற பண்பினை அடையும்போது வாதமாகிறது.

மார்க்கந்தான் பித்தமங்கி யாகாரத்தை
மசக்கிவைத்து மாயையுடன் வருத்திவைக்கும்
தூக்கந்தான் சேட்டுமநீர் மிகுதியாக்கித்
துவாரங்க டோறுமிடை விடாமல்நிற்கும்
மூர்க்கந்தான் றோஷமிது மூன்றுமாச்சு
மூண்டதோ ரீஷணைகள் மூன்றைக்கேளு
வேக்கந்தா னர்த்தவீ ஷணையும்லோக
வீஷணையும் காமவீ ஷணைமூன்றாச்சே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 77

பித்தம் ஆகாரத்தில் அதிகமாகக் கலந்து விடுகிறபோது அதை நஞ்சாக்கி மயக்கத்தையும் வருத்தத்தையும் உண்டாக்குவதாம்.

சேத்துமநீரானது மிகுதிப்படுகிற போது உடம்பின் உட்புறம் உள்ள இடைவெளிகளில் எல்லாம் நிரம்பி எல்லா விடத்தையும் அடைத்துக் கொண்டு துன்பத்தை உண்டாக்கும்.

ஏடணைகள் மூன்று:

அர்த்த ஏடணை	-	பொருளாசை
லோக ஏடணை	-	உலக ஆசை
காம ஏடணை	-	பெண் ஆசை

ஆச்சென்ற மூன்றையுந்தா னறையக்கேளு
அதிகமாம் அர்த்தவீ ஷணைகுணந்தான்
வேச்சென்ற வர்த்தமுமே லாசைகொள்ளல்
விளங்கியதோர் லோகவீ ஷணையைக்கேளாய்

Koviloor Digital Library

காச்சென்ற காணியுட னுறவுந்தேடிக்
காரியங்க ளதின்மேலே யாசையாகும்
ஆச்சுகாம வீஷணைகா மியத்தைத்தேடி
யாசையது படுதனீ ஷணைமூன்றாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 78.

முதலில் தோன்றும் பொருளாசை மண்ணைத் தேட வைக்கிறது. மண்ணாசை முற்றியவுடன் பெண்ணாசையில் திரும்புகிறது.

மனிதன் முதலில் தேடிக்கொள்ள விரும்புவது பொருள். பிறகு வீடு, நிலம், காணி. அடுத்தது பெண்.

அகத்திய முனிவர் அர்த்த ஏடணை, புத்திர ஏடணை, உலக ஏடணை என்று கூறுவார். அகத்தியர் தத்துவம் 300ல் 120வது பாடலில் காண்க.

குணங்கள் மூன்று

மூன்றான பின்புதான் குணந்தான்மூன்று
மொழியவே ராசதத்தா மதசாத்வீகம்
வேன்றானவிதின் பிரிவு விளம்பக்கேளாய்
வெகுளிபேசா திருத்தல்வேண் டிக்கொடுத்தல்
தான்றான தன்னைச்சார்ந் தாரைக்காத்தல்
தகமையுடனுயிர்களைத்தம் முயிர்போ லெண்ணல்
பான்றான பகைவரைவென்றிடுதல் நீங்கல்
பலகலைக ளறிதல்பயில் பண்புண்டாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 79.

ராஜசம், தாமசம், சாத்வீகம் என்பவை முக்குணங்கள்.

ராஜச குணத்தின் தன்மை: கோபம். ஒருவரைப் பார்த்தும் பாராததுபோல் பேசாமலிருத்தல், பிறர் கேட்கும் பொருள்களை (அவர் கேட்டால் மட்டும்) கொடுத்தல். தன்னைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றுதல். அவர்களின் உயிர்களைத் தம் உயிர்போல் எண்ணுதல், பகைவர்களை வெல்லுதல். அவர்களை அணுகாது நீங்குதல், பலகலைகளையும் அறிதல். அக்கலைகளைப் பயிலுதல். பண்போடு நடந்து கொள்ளுதல்.

Koviloor Digital Library

உண்டுலகுக் கோருறுதி யென்னவாழ்தல்
உண்மையாய் நலந்தெரிதல் புகழேபூண்டல்
தண்டுதா டாண்மையொடு மேம்பாடான
சாற்றியதோர் குணம்ராச தத்துக்காகும்
மிண்டுதா மதகுணமு மேதோவென்னில்
மிகுதியாய் வஞ்சனையே செய்தலாகும்
வண்டுபா டொழிதல்போ ராடல்வாது
வணக்கமில்லா வெகுளியென விளம்பலாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 80.

மேற்கூறிய தன்மைகளால் உலகத்திற்கு ஓர் உறுதி என்று சொல்லும்படியாக வாழ்வது. நன்மை தீமைகளைப் பகுத்தாராய்ந்து அறிந்து கொள்ளுதல். புகழ் தரும்படியான செயல்களையே மேற்கொள்ளுதல். எக்காலத்தும் முயற்சியுடையவனாக இருந்து பொருளீட்டி வந்தவர்க்கு வாரிவழங்குதல் - போன்ற குணங்கள் எல்லாம் ராஜச குணத்தின் தன்மைகளாம்.

தாமச குணத்தின் பண்பேதென்றால் - எப்போதும் கபட குணமுடையவராய் அதிகமாக வஞ்சனையே புரிந்து வாழ்தல், தான் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யாதிருத்தல், போராடுதல், எடுத்ததற்கெல்லாம் வாது செய்தல், வணக்கமில்லாமை, கோபம் என்று கூறலாம். மேலும்,

விளம்பலே செய்நன்றி மறத்தல்விந்தை
மிகப்பேசல் நிந்தையுரைத் திடுக்கம்பேசல்
முளம்பலே முன்னுரைத்தல் பழியைக்கூறல்
மூகமாய்ப் பேசல்பகை யுடனேவாழ்தல்
புளம்பலே பொய்கொலைகள் களவுகாமம்
பொல்லாங்கு யாவையுமே புகன்றுபேசல்
களம்பலே காமத்தின் குரோதமிக்கக்
கடியதா மதகுணத்தின் காட்சியாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 81.

ஒருவர் செய்த உதவியை மறந்து விடுதல். அதிகமாக விந்தை பேசுதல், அதாவது மற்றவர்கள் அதிசயம் என்று நினைக்கும்படியான

Koviloor Digital Library

வற்றைத் தற்புகழ்ச்சியாகவும், தாமே இட்டுக் கட்டியும் பேசுதல் - பிறரை நிந்தனை செய்தும் இழிவாகவும் பேசுதல் - தானே மேல் போட்டுக் கொண்டு முன்னதாகப் பேசி மற்றவர்களை அவர்கள் செய்ய விரும்பாத காரியங்களைச் செய்ய வைக்கும்படியாகப் பேசுதல் - பழி கூறல் - மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் ஒன்று பேசுதல் - இரு பொருள்படப் பேசுதல் - பகை கொண்ட நெஞ்சுடனே வாழ்தல், பொய், கொலை, கள், களவு, காமம் முதலிய பஞ்சமா பாதகங்களையும் புகழ்ந்து பேசுதல், காமக் குரோத முதலான தீய குணங்கள் உடையவனாக இருத்தல் , இவை தாமச குணத்தின் இலக்கணங்களாம்.

காட்சியாஞ் சாத்விகந்தா னேதோவென்னிற்
கமழ்சாந்த மும்வாய்மை தயையொடுக்கம்
தாட்சியாந் தண்ணமுத முதவிடுநற்சீலந்
தயவான குணமன்பு பெருமை சீர்த்தி
மாட்சியா மறையினிறை மண்மயக்கம்
வறிஞோரை வாழ்வித்தல் நல்லோர்க்கீதல்
நாட்சியா யிறைவனடி யிணைப்பணிதல்
நல்லோருக் கீதலறந் தேடல்தானே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 82.

சாத்வீக குணத்தின் தன்மை ஏதென்றால் சாந்தம், வாய்மை, தயை, ஒடுக்கம்.

சாத்வீக குணத்தின் தன்மைகளைப் பற்றிப் பேச ஆரம்பிக்கும் போதே - பாடலின் பண்பும் அமைதியாகத் தவழ ஆரம்பித்து விடுகிறது.

கமழ் சாந்தம் தயை ஒடுக்கம்.

எங்கும் நறுமணத்தைப் பரவச் செய்யும் நறு மலர்களைப்போல் அந்த இனிய பண்பானது - பொறுமை என்ற குணம் சுற்றிலும் ஓர் இனிய சுகந்தத்தை - சுகம்தரும் அமைதியான சூழ்நிலையை உண்டாக்குகிறது. எல்லா உயிர்களிடத்தும் இறக்கம் உடையவனாக - பிறர் துன்புறக் காணச் சகிக்காதவனாக - பிறர்க்கு எது வேண்டுமோ அதைக் கேளாமலே கொடுக்கும் பண்பாளனாகச்

Koviloor Digital Library

செய்கிறது. ஆரவார மற்றவனாக - டாம்பீகம் பேசுபவனாக, அதைச் செய்வேன் இதைச் செய்வேன் என்று தம்பட்டம் அடித்துக் கொள்பவனாக இல்லாமல் தன்னில்தான் ஒடுங்கியவனாக , காட்சிக்கு எளியனாக, இனியனாக - எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டவனாக இருத்தல். எல்லோர்க்கும் அன்னமிடும் நற்சீல முடையவனாக - தயவுடையவனாக - அன்புடையவனாக - பெருமையும் சிறப்பும் உடையவனாக - மறைகளை ஓதியவனாக - வறியவர்களை வாழ்விப்பவனாக - நல்லோர்க்கு வாரிவழங்கும் வள்ளலாக - இறைவனடி பணிபுரியும் இயல்பினனாக - தர்மத்தைத் தேடு பவனாகவும் இருத்தல்.

அறந்தேடல் உறவின்முறை சுற்றத்தாரை
அகதிபர தேசியருக் கன்னமீதல்
திறந்தேடல் தெய்வமறை யோரைக்காணல்
தேவதைகட் குபசாரச் சிந்தைசெய்தல்
புறந்தேடல் புண்ணியங்கள் தேடலின்பம்
பூசரருக் காகுதிகள் பலிகொடுத்தல்
தறந்தேடல் சாத்விகத்தின் குணமீதென்று
சாற்றினோங் குணமூன்றின் றன்மைதானே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 83.

தன்னுடைய உறவினர் சுற்றத்தார், அகதிகளாக ஆதரவு தேடிவந்தவர்கள், பரதேசிகளுக்கும் அன்னமிட்டு ஆதரிப்ப வனாகவும் - தெய்வம் - அறிவார்ந்த மேன்மக்கள் - தேவதைகள் முதலானவர்களுக்கும் உபசாரம் செய்யும் எண்ணமுடையவனாகவும், புண்ணியங்களைத் தேடுபவனாகவும், மேன்மக்களை ஆதரிப்ப வனாகவும். தெய்வங்களுக்கு ஆகுதிகள் பலிகள் (பலி என்பது தெய்வத்திற்காகப் படைக்கப்படும் உணவு - ஆகுதி என்பது தெய்வங்களுக்காக நெருப்பிலிடப்படுவது) அளிப்பவனாகவும் இருத்தல் - இவை சாத்வீக குணத்தின் தன்மைகளாம்.

வினை இரண்டு.

தன்மையாய் வினையதனைச் சாற்றக்கேளாய்
சார்ந்ததோர் நல்வினைதீ வினையிரண்டாம்
பன்மையாம் வினையிரண்டின் பயனே தென்னில்
பரவிய்நல் வினையதுதான் புண்யமாகும்

Koviloor Digital Library

தன்மையாந் தீவினைதான் பாவமாகும்
தேர்ந்தவினை யிரண்டாலே நரகஞ்சொர்க்கம்
புண்ணியஞ்செய் தவர்க்குநல்ல சுவர்க்கமாகும்
பொல்லாத பாவிகட்கு நரகமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 84.

நல்வினை தீவினை என்பவை இரண்டு (வினை - செயல்) நல்வினை புண்ணியத்தைத் தரும். தீவினை பாவத்தை உண்டாக்கும். புண்ணியம் சொர்க்கத்திற்கு வழி திறக்கும். பாவம் நரகத்தில் தள்ளும். நல்லவர்கள் நல்வினை புரிவர். பொல்லாத பாவிகளே தீவினைகளில் ஈடுபடுவர்.

விகாரம் எட்டு

ஆமேதான் விகாரமெட்டை யறையப்போமோ
அதிகாமக் குரோதமத லோபமோகம்
வாமேதான் மாச்சரிய மிடும்பைவேகம்
வகையாக விதன்குணத்தை வழுத்தக்கேளாய்
காமேதான் காமமென லாசையாகும்
கடிதான குரோதமெனல் பிணக்கதாகும்
போமேதான் லோபமெனல் பிடிப்பாடாகும்
பேர்பெரிய மோகமெனல் பிரியமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 85.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, வேகம் என்பவை எட்டு விகாரங்களாகும். விகாரம் என்பது மனதைப் பற்றியது.

காமம் என்பது ஆசை
குரோதம் என்பது பிணக்கு
லோபம் என்பது எதையும் தனக்கென்று பிடித்துவைத்துக் கொள்ளச் செய்வது.

மோகம் என்பது கண்மூடித்தனமான ஆசை.

Koviloor Digital Library

பிரியமா மதமதுதான் கெருவமாகும்
பெரிதான மாச்சரிய மிடும்பாங்காரம்
உரியமா மிடும்பையுதா சனைகளாகும்
உறவேக மாவதுவே கடூரமாகும்
நரியும்மாம் விகாரத்தின் தன்மைசொன்னேன்
நாசமா மவத்தையைந்தின் நாட்டங்கேளாய்
அரியதொரு அவத்தையா மிதனின்போக்கு
ஆக்கிரசாக் கிரமுஞ்சொற் பனமுமாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 86.

மதம் என்பது கர்வம். தான் எனும் அகங்காரம். மாச்சரியம் என்பது பிறர்க்குக் கெடுதல் செய்யத் தூண்டும் மனக் குமுறல்.

இடும்பை என்பது பிறரை அலட்சியம் செய்யும் குணம்.

வேகம் என்பது கடூரம்.

அவத்தைகள் ஐந்து

சொற்பனமாஞ் சுழுத்திதுரி துரியாதீதம்
சொல்லுமிவை அவத்தையைந் தாகச்சொல்வர்
நிற்பனமாஞ் சாக்கிரந்தான் நெற்றிநேரே
நிறைந்திருக்கும் கருவியுட நியமமாகக்
கற்பனமாஞ் சொற்பனமுங் கண்டத்தானங்
கடந்திருக்குங் கருவியுடன் காயத்தோடே
இற்பனமாஞ் சுழுத்திதா னிதயத்துள்ளே
இயங்கிநிற்குங் கருவியுட னியம்பிடாயே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 87.

சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவை அவத்தைகள்.

சாக்கிரம் என்பது விழித்திருக்கும் நிலை. நெற்றிக்கு நேராகப் பொருள்களைப் பார்த்து அறிந்து கொள்ளும் நிலை.

Koviloor Digital Library

சொற்பனம் கண்டத்தை இருப்பிடமாகக் கொண்டது.

சுழுத்தி இதயத்துள் நின்று இயங்குவது.

இயங்குதுரி யம்நாபிக் கமலந்தன்னில்
ஏற்றமாங் கருவியுட னிணங்கிநிற்கும்
முயங்குதுரி யாதீத மூலாதாரம்
மூர்க்கமாங் கருவியுட னமர்ந்திருக்கும்
கயங்கிடவே கருவிகடான் றொண்ணூற்றாறும்
காரியமாய்த் தேகத்தைக் காத்துநிற்கும்
வியங்கியிந்த முப்பதுதத் துவமாந்தானே
வேதமாம் வித்தியாதத் துவமாமென்னே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 88

துரியம் நாபிக் கமலத்தை இருப்பிடமாகக் கொண்டு கருவியுடன் இணங்கி நிற்கும்.

துரியாதீதம் மூலாதாரத்தை இருப்பிடமாகக் கொண்டு கருவியுடன் அமர்ந்திருக்கும்.

இத்துடன் தத்துவங்கள் தொண்ணூற்றாறும் கூறப்பட்டன. இவற்றில் வித்தியா தத்துவம் முப்பது.

தத்துவமாங் கருவிகடான் தொண்ணூற்றாறும்
சடத்தெங்கு மூடாடித் தகமையாகும்
உத்துவமா முடலதனி னுண்மைகேளாய்
உதிரவங்க னெனும்புவியி லுற்பவித்து
அத்துவமா யுள்ளிதழாய் மலர்ந்துதப்போ
அத்திமுகத் துக்கருவிட் டுருத்தரித்து
சத்துவமா வுருவாயவ் வவயவத்தின்
தாக்கு அவ்வென்னுமட் சரந்தானாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 89

தொண்ணூற்றாறு தத்துவங்களும் அவற்றுக்குரிய கருவிகளோடு உடல் முழுவதும் ஊடாடிக் கொண்டிருக்கும். இந்த

Koviloor Digital Library

உடலின் உண்மைத் தன்மை இதுவே.

இரத்தமும் எலும்பும் கொண்டதாய் உலகில் பிறக்கும் சீவன் அத்துவமாய் உள் இதழாய் மலர்ந்து கருவில் உருத்தரித்து, இந்த உருவத்தின் தாக்குதல் 'அ' என்னும் அட்சரம் என்று சொல்லும் படியாகத் தோன்றிப் பிறப்பதாகும்.

(கருவில் இருக்கும் குழந்தை அகரம் போலவே உள்ளது என்பத சிந்திப்பதற்குரியது)

அவ்வென்னு மட்சரத்தில் நாடி தோன்றும்
அந்நாடி நின்றதத் துவந்தான் தோன்றும்
எவ்வென்னு மெலும்புதசை புடைநரம்பு
ஈரெட்டுப் பழுவோடு கொங்கைரெண்டாம்
முவ்வென்னு முட்டுக்கால் வளையீரெட்டு
மூட்டியமைத் தங்ஙனேயோ ருருவமாகி
சுவ்வென்னு மிடையொடுபிங் கலையுஞ்சேர்ந்து
சுழிமுனையென் றொருதுளையும் வழியதாமே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 90.

'அ' என்ற அட்சரத்தில் நாடி தோன்றும். அந்த நாடியின் வழியாகத் தத்துவம் தோன்றும். எலும்பு, தசை, நரம்புகள், பதினாறு பழுவெலும்புகள், மார்பு இரண்டு, முட்டுக்கால், கைகள் என்று ஓர் உருவமாகும். இதில் இடைகலை, பிங்கலை, சுழிமுனையென்ற மூச்சுக் காற்றுக்கள் உலாவ ஒரு துளையும் இருக்கும்.

வழியதுவாய் வாசல்வள மெனக்கொண்டங்கே
வளமாக வுடலுண்ட வண்மையெல்லாம்
கழியதுவாய்க் காளவாய்க் காந்தலாகிக்
ககனம்பேர் லெரிந்துமே மடியப்பாய்ந்து
சுழியதுவாய்த் தூராத குழியதாகத்
துர்ப்பாவை நிணமாய்ப்பற் றீரலும்மாய்ப
பொழியதுவாய்க் காளிதம் பித்துமாகிப்
பொருமலுமாய்ச் செறுமலுமாய்க் கிருமியாமே.

யூகிமுனி - தத்துவ ஞானம் - 91

Koviloor Digital Library

இந்த உடல் வாய் என்ற வாசல் வழியாக உண்ட உணவைக் காளவாயில் வைத்து எரிப்பதுபோல் எரித்துச் சாம்பலாக்கும் தன்மையுடையது. இந்தக் காளவாய் எத்தனை போட்டாலும் நிரப்ப முடியாத குழியாக உள்ளது. இதில் போட்டு எரிக்கப்படுகின்ற உணவு தசையாய், ஈரலாய், பொழியாய், காளிதமாய், பித்துமாகி - பொருமலுமாகிச் செறுமலுமாகிக் கிருமிகளும் ஆகும்.

உண்ணும் உணவிலிருந்துதான் கிருமிகளும் உண்டாகின்றன என்பது பெறப்பட்டது.

கிருமிவகை வாயுவையுந் தானிறுத்திக்
கிரணமுந்நூற் றறுபதுமோங் குடனிரங்கி
அருமியா யமர்ந்தகுட லதுதான்விர்த்தி
அமர்ந்த முப்பத்திரண்டு முழங்குடலுமாகும்
ஒருமிமுள மொன்பதுவாய் மடித்துமொப்ப
உற்றசுக் கிலச்சலந்தான் மூன்றுமாகி
வருமியாய் வச்சிரத்தோல் மேலேபோர்த்து
வழிபலவாய் மொழிமொழியாய் சந்துமாச்சே.

- யூகிமுனி - தத்துவ ஞானம் - 92.

இந்த உடல் வாயுவைத் தன்னுள் நிறுத்தி முன்னூற்றறுபது கிரணங்களாகப் பிரியச் செய்கிறது.

வாயுவின் தாக்கத்தால் இயங்கும்குடல் முப்பத்திரண்டு முழம் நீளமுடையது. இது ஒன்பது மடிப்பாக மடித்து மடித்து வைக்கப் பட்டுள்ளது. இதன் கடைசிப் பகுதியில் உள்ள சுக்கிலப் பை மூன்று முழ நீளம் உடையது.

இந்த உடல் உள்ளுறுப்புக்கள் அனைத்துக்கும் மேலே ஒரு தோலைப் போர்த்துக் கொண்டுள்ளது. ஆயினும் அத்தோலில் துளை துளையாய்ப் பல வழிகளும் உள்ளன.

Koviloor Digital Library

தத்துவங்கள் 96 பற்றி அகத்தியர்

தத்துவங்கள் தொண்ணூற்றாறைப் பற்றி அகத்தியர் என்ன கூறுகிறார் என்பதைக் கவனிப்போம்.

பாரப்பா ஆதாரம் ஆறாதாரம்
பரிவான ஆதாரமடத்துக்குள்ளே
நேரப்பா அக்கினிதான் ஜீவாத்மாவாய்
நிறைந்துநின்ற வாய்வதுதான் பரமாத்மாவாய்
பேரப்பா பெருகிநின்ற கடத்தினுள்ளே
பிலமாக நின்றுதிரு விளையாட்டாடி
காரப்பா ஆகாசஞ் சாக்ஷியாக்
கருணையுடன் நின்றுதடா கருவாய்க்காணே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 24.

அகத்தியர் சௌமிய சாகரம் 24-வது பாடலில் ஆறு ஆதாரங்கள் அடங்கிய ஒரு மடம் போன்ற இந்த உடலில் அக்கினி ஜீவாத்மாகவும், வாய்வு பரமாத்மாவாகவும் இருந்து ஒரு திருவிளை யாடலை நடத்துகின்றன. இந்தத் திருவிளையாடலுக்கு ஆகாசமே சாட்சியாக உள்ளது என்று கூறுகிறார்.

அக்கினியும் வாயுவும் இல்லாவிட்டால் ஜீவன் என்பதே இல்லை. உடல் இல்லாவிட்டால் உயிரை அடையாளம் காட்ட முடியாது. உடலின் திருவிளையாடல் எல்லாம் உயிரின் திருவிளையாடலே என்பதை உய்த்துணர வல்லார்க்கு உண்மை புரியும்.

காணப்பா தத்துவத்தின் விபரஞ்சொல்வேன்
கருணையுடன் சொல்லுகிறேன் கனிவாய்க்கேளு
பேணப்பா பூதமைந்து சொல்லக்கேளு
பிரிதீவு அப்புவுடன் தேய்வுமாக
பூணப்பா வாய்வுடனே ஆகாசந்தான்
பொருந்திநின்ற பூதமடா ஐந்துமாச்சு
தோணப்பா மனக்கண்ணால் நன்றாய்ப் பார்த்துத்
துலங்கிநின்ற பூதத்தை நன்றாய்க்காரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 25.

Koviloor Digital Library

உடலின் திருவிளையாடலுக்குக் களமாக விளங்குபவை தத்துவங்கள் தொண்ணூற்றாறுமேயாகும், தத்துவங்களில் முதலாவதாக வருபவை பஞ்ச பூதங்கள். பிருதிவி, அப்பு, தேய்வு, வாய்வு, ஆகாசம் என்பவை பஞ்ச பூதங்கள். பஞ்ச பூதங்களால்' ஆனதே இந்த உலகம். இதை நன்றாக ஊன்றிப் பார்த்துச் சிந்தித்து மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

காரப்பா அஞ்சுபஞ்ச பூதந்தன்னை
கண்குவித்து மனக்கண்ணால் கருவாய்ப் பார்த்தால்
மேரப்பா மேருகிரி காணலாகும்
மேரான சதுகிரி விலாசந்தோணும்
ஆரப்பா உனக்கீடு சொல்லப்போறேன்
அரகரா பூதவகை அறிந்து கொண்டால்
நேரப்பா நின்றகை லாசந்தோன்றும்
நிஜமான ஞானஇந் திரியங்கேளே.

– அகத்தியர் சௌமிய சாகரம் 26.

பஞ்ச பூதங்களை அறிந்து மனதில் நிறுத்தி தியான ரூபமாகப் பார்த்தால் ஞானம் தோன்றும். ஞானம் உதயமாவதயே மேருகிரி தோன்றும் என்றும் சதுரகிரி விலாசம் தோன்றும் என்றும் கைலாசமே கண்களுக்குக் காட்சியளிக்கும் என்றும் கூறுகிறார்.

கேளப்பா ஞானஇந் திரியந்தன்னை
கிருபையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
சூளப்பா சுரோத்திரந்தான் காதுகாது
.தொக்கென்று சொன்னதுதான் தேகந்தேகம்
வாளப்பா சக்ஷுவென்றால் நேத்ரமாகும்
மகத்தான சிங்குவென்றால் வாய்தானாகுங்
காளப்பா ஆக்கிராணம் மூக்குமூக்கு
கருணையுள்ள ஞானஇந் திரியமைந்தாம்.

– அகத்தியர் சௌமிய சாகரம் 27.

பஞ்ச பூதங்கள ஐந்து. அடுத்தபடியாக ஞான இந்திரியங்கள் ஐந்து உள்ளன. பஞ்ச பூதங்களாலான இந்த உடலின் இயக்கம் அவற்றாலேயே ஏற்படுகின்றன. அவை இன்றேல் இவ்வுடலே

Koviloor Digital Library

பயனற்றதாகும். அதனால் முதலாவதாக அவற்றை அறிந்து கொள்வோம்.

அவை சுரோத்திரம் என்பது காது. தொக்கு என்பது தோல் (உடல்). சக்ஷு என்பது கண். சிங்குவை என்பது நாக்கு. ஆக்கிராணம் என்பது மூக்கு. இவை வெளிப்படையாகச் செயல் புரிவதில்லை. தாம் உணர்பவற்றை சுவையாகவும், மணமாகவும், ஒளியாகவும், ஒலியாகவும், தொட்டுணர்வாகவும் அறிகின்றன. அதனாலேயே இவற்றுக்கு ஞான இந்திரியங்கள் என்று பெயர். ஞானம் என்றால் அறிவு. ஞான இயந்திரியம் என்பது அறியும் புலன் என்பதைக் குறிப்பிடுகிறது.

அஞ்சான பஞ்சஇந் திரியத்தன்னை
அருளான மனக்கண்ணால் நன்றாய்ப் பார்த்து
நெஞ்சார அஞ்சுநிலை பார்த்துமைந்தா
நிலையான குருபதியில் நின்றாயானால்
மிஞ்சாமல் வாசியது தானேதானாய்
மெய்ஞ்ஞான தீபமது விளங்கும்பாரு
தஞ்சமுடன் ஐந்துநிலை நன்றாய்ப் பார்த்துச்
சங்கையுடன் கர்மஇந் திரியங்கேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 28.

பஞ்ச இந்திரியங்களைப் பற்றியும் மனதால் நன்கு சிந்தித்து வாசியைப் பயிற்சி செய்யத் தொடங்கினால் தன்னுடைய நிலை என்ன என்பது விளங்கும். ஆனால் வாசியைப் பயிற்சி செய்வது என்பது குரு முகமாக அறிந்து செய்ய வேண்டும். தானே செய்யத் தொடங்கி விடக்கூடாது.

குருமுகமாக அறிந்து வாசியைப் பயிற்சி செய்யும்போது மெய்ஞான தீபம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

கேளப்பா வாக்குடனே பாதம்பாணி
கிருபையுடன் பாயுரு உபஸ்தம் ஐந்துஞ்
சூளப்பா கர்மஇந் திரியமாகுஞ்
சுகமாகத் தானறிந்து சுத்தமானால்

Koviloor Digital Library

பாளப்பா போகாது ஞானமார்க்கம்
பத்தியுடன் ஐந்தையும்நீ கண்டுதேர்ந்தால்
கேளப்பா ஒன்றுமில்லை வாசியேகுங்
குறியாக ஐம்புலனைக் கூர்ந்துபாரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 29.

வாய், கால்கள், கைகள், குறி, குதம் என்பவை செயல்புரியும் இந்திரியங்கள். கன்ம இந்திரியங்கள்.

பார்க்கையிலே ஐம்புலனை நன்றாய்ப்பாரு
பதிவான சத்தமொடு பரிசம்ரூபம்
ஏர்க்கவே ரசமுடனே கெந்தம் ஐந்து
இன்பமுள்ள ஐம்புலனை அறிவதற்கு
சேர்க்கையுடன் ஐம்புலனைக் கண்டு மைந்தா
தேர்ந்துமன தறிவாலே தேர்ந்துகொண்டால்
மார்க்கமுள்ள சித்தரென்று யார்க்குந்தோணும்
மைந்தனே ஐம்புலனை வகுத்துக்காணே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 30.

ஞான இந்திரியங்களான கண், காது, மூக்கு, நா, தோல் ஆகிய வற்றால் ஒலி, ஒளி (உருவம்), சுவை, மணம், தொடுவதால் உண்டாகும் பரிச உணர்வு இவற்றை உணர்கிறோம்.

காணவே ஐம்புலனை வகுத்துப்பார்த்துக்
கருவான ஆதார மூலத்தேகி
தோணவே வாசியுட நிலையைக் கண்டு
சுத்தமுடன் அவ்வாசி தன்னிலேற்றி
பூணவே அண்டவரைத் தன்னிற்சென்று
புத்தியுடன் சித்தமதாய் நின்றாயானால்
ஊணவே கரணம் அந்தக் கரணம் நாலும்
உண்மையுடன் சொல்லுகிறேன் உகந்துகேளே.

கேளப்பா புலத்தியமா ரிஷியேயையா
கிருபையுள்ள கரணமந்தக் கரணந்தன்னை
கோளடா இல்லாத ம்னந்தானொன்று
கூர்மையுடன் நின்றிலங்கும் புத்தியொன்று

Koviloor Digital Library

தேளடா ஆங்காரம் ஆனதொன்று
சிவசிவா சுத்தமென்ற சித்தமொன்று
ஆளடா கரணமென்ற கரணம்நான்கும்
அப்பனே அறிந்து கொண்டு வாத்துமம்பாரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 31 -32.

மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்பவை நான்கு கரணங்கள். அவற்றை அறிந்து கொள்வாயாக. மேலே கூறிய இருபத்து நான்கும் ஆத்தும தத்துவங்களாகும்.

பூதம்	-	ஐந்து
பொறி	-	ஐந்து
இந்திரியம்	-	பத்து (ஞான இந்திரியம் 5, கன்ம இந்திரியம் 5)
கரணம்	-	நான்கு

பாரப்பா ஆத்துமதத் துவம்தானப்பா
பதிவாக இருபத்து நாலும் சொன்னேன்
நேரப்பா தானிருந்து ஆத்துமாவாம்
நிலையறிந்து பெற்றதினால் வாசியாகும்
காரப்பா வாசிநிலை கருவைக்கண்டு
கருவாக ஆத்துமதத் துவத்தைப் பார்த்தால்
ஆரப்பா உனக்குநிகர் உண்டோபிள்ளாய்
அப்பனே வித்தியாதத் துவம்கேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 33.

ஆத்தும தத்துவம் இருபத்து நான்கினையும் பற்றி நன்கு உணர்ந்து கொண்டவர்க்கு வாசி சித்தியாகும். வாசியின் உண்மையைப் புரிந்து கொண்டவர்க்கு இணையானவர் யாருமே இல்லை.

இதையே அகத்திய மாமுனிவர் தமது தத்துவம் முன்னூறு என்ற நூலில் ஒரே பாடலில் கூறுவதைக் காண்போம்.

Koviloor Digital Library

காணப்பா சித்தருக்குத் தத்துவந்தான் கேளு
கைகண்ட வேதாந்தஞ் சித்தாந்த மாகும்
தோணப்பா சமரசத்தின் தத்து வந்தான்
சொல்லக்கேள் பூதமைந்து வசனாதி யைந்து
வீணப்பா தோத்ராதி யஞ்சே யாகும்
வேறான சத்தாதி யஞ்ச தாகும்
ஊணப்பா கரணமது நான்குங் கூடி
உத்தமனே சிவ தத்துவ மூவெட் டாமே. 112

வேதாந்த சித்தாந்த தத்துவங்களே சித்தர்களின் தத்துவங் களுமாகும். அவற்றைப் பற்றிக் கூறவதென்றால் முதலாவதாக,

பூதங்கள் ஐந்து
வசனத்தை முதலாவதாகக் கொண்ட செயல்கள் ஐந்து
சுரோத்திரத்தை முதலாவதாகக் கொண்ட பொறிகள் ஐந்து
ஒலியை முதலாவதாகக் கொண்டு அறியப்படும் பொருள்கள் ஐந்து
கரணம் நான்கு.
ஆக இருபத்து நான்கும் சிவ தத்துவங்களாகும்.

கேளப்பா வித்தியாதத் துவத்தைச்சொல்வேன்
கேள்யென்ன காலம் என்றும் நியதி என்றும்
சூளப்பா கலையென்றும் வித்தை என்றுஞ்
சுகமான ராகம் என்றும் புருடன் என்றும்
நாளப்பா மாய்கை என்றும் ஏழுமாச்சு
நன்மையுடன் வித்தியாதத் துவத்தைப் பார்த்து
ஆளப்பா ஆதார தேகந்தன்னை
அறிந்து கொண்டு சிவதத்துவத்தைக் கேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 34

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன ஏழும் வித்தியா தத்துவங்களாம்.

1) காலம் - என்பது சென்ற காலத்தின் எல்லை, நிகழ் காலத்தின் பலம், எதிர் காலத்தின் புதுமை இவற்றைப் பொருந்தச் செய்வதாகும்.

Koviloor Digital Library

2) நியதி - கன்மத்தின் அளவை நிச்சயம் பண்ணி நிறுத்துவது.

3) கலை - ஆணவத்தைக் குறைத்து ஆன்மாவைச் செயல்படத் தூண்டுவது.

4) வித்தை - ஆன்மாவுக்கு அறிவை உண்டாக்குவது.

5) அராகம் - தான் அடைந்தவற்றைக் குறைவாகத் தோன்றச் செய்து, மேலும் அடைய வேண்டும் என்ற அவாவினைத் தூண்டுவது.

6) மாயை - சிந்திக்க வொட்டாமல் மயக்கத்தை உண்டாக்குவது.

7) புருடன் - எல்லாவற்றையும் நுகரும் அவசரம்.

கேளடா சிவதத்துவந் தன்னைமைந்தா
கிருபையுள்ள புலத்தியனே நன்றாய்க்கேளு
ஆளடா சுத்தவித்தை ஈசுவரமும்மைந்தா
அப்பனே சதாக்கியமும் சத்திசிவம் ஐந்துஞ்
சூளடா சிவதத்துவம் என்றுபேரு
சுகமான தத்துவங்கள் முப்பத்தாறும்
வாளடா உடற்கருவி என்றும்பேரு
மைந்தனே தானறிந்து தன்னைப்பாரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 35

இனி சிவதத்துவத்தைப் பற்றிக் கூறுகிறேன் கேட்பாயாக. சுத்த வித்தை, ஈசுவரம், சதாக்கியம், சத்தி, சிவம் என்பவை ஐந்தும் சிவதத் துவங்களாகும்.

1. சிவம் - எல்லா உயிர்க்கும் அறிவைத் தோற்று விக்கும் ஞான வடிவாகிற தத்துவம் - விந்து

Koviloor Digital Library

2. சக்தி - எல்லா உயிர்க்கும் ஏற்பட்ட தொழிலை உண்டாக்கும் தத்துவம் - நாதம்.

3. சதாக்கியம்- நாத விந்துக்கள் இரண்டும் கூடி அறிவும் தொழிலும் சமனாக நிற்கும் - அவசரம்.

4. ஈஸ்வரம்- கிரியை அதிகப்பட்டு ஞானம் குறைந்து நிற்கும் - அவசரம்.

5. சுத்தவித்தை- ஞானம் அதிகப்பட்டுக் கிரியை குறைந்து நிற்கும் - அவசரம்.

முன்கூறிய ஆத்மதத்துவங்கள் இருபத்து நான்கும், வித்தியா தத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்தும் ஆக முப்பத்தாறு தத்துவங்களும் உள் நிலைக் கருவிகளாம்.

அகத்தியர் பெருமான் தத்துவம் முன்னூறில் பின்வருமாறு கூறுகிறார்.

ஆமப்பா காரியதத் துவமிருப தாகும்
அடர்காலங் கரைநியதி யராகம்வித்தை மாயை
ஓமப்பா புருடனுடன் தத்துவமே யேழு
ஒடுங்காத வித்தியா தத்துவமு மாகும்
காமப்பா காரணகா ரியம தாகும்
கட்டந்தச் சுத்தவித்தை யீசுரஞ் சதாக்கியம்
தாமப்பா சத்திசிவ தத்துவ மஞ்சும்
சாங்கமாய்க் காரணதத் துவமென் றாரே. 113.

இப்பாடலில் முதல் வரி தவறாக உள்ளது.

காலம், கலை, நியதி, ராகம், வித்தை, மாயை, புருடன் என்பவை எழும் வித்தியா தத்துவங்கள்.

சுத்த வித்தை, ஈசுரம், சதாக்கியம், சத்தி, சிவம் ஐந்தும் காரண தத்துவங்கள்.

Koviloor Digital Library

என்றதொரு ஆத்துமதத்துவ மிருபத்தி னாலும்
என்மக்காள் தூலதத்துவ மென்பார் சித்தர்
பொன்றாத வித்தியா தத்துவங்க ளேழும்
போகாத சூட்சுமதேகந்தா னென்பார்
நன்றான சுத்ததத்துவ மஞ்சு தன்னை
நலமான காரணதே கந்தா னென்பார்
குன்றாத தத்துவந்தான் முப்பத் தாறும்
கூரறிய உட்கருவி யென்பார் தானே. 114

முன் கூறிய ஆத்ம தத்துவங்கள் இருபத்து நான்கினையும் தூல தத்துவம் என்பர்.

வித்தியா தத்துவங்கள் ஏழும் மரணத்தால் அழியாத சூட்சும தேகத்தைச் சார்ந்தவை என்பர்.

சுத்த தத்துவம் ஐந்தும் காரண தேகம் என்பர்.

இந்த முப்பத்தாறு தத்துவங்களும் உட்கருவி என்றும் கூறுவர்.

இவையன்றிப் புறக் கருவி அறுபதும் பற்றி அகத்திய மாமுனிவர் தத்துவம் முன்னூறிலும் கூறியுள்ளார். அப்பாடல்களில் யோக சாதனைக்குரிய விஷயங்களே அதிகமாகக் கூறப்பட்டுள்ளன.

பாரப்பா தன்னைமிகத் தானேகண்டு
பக்தியுடன் உள்கருவி மூலம்பார்த்து
நேரப்பா நின்றதினால் தத்துவத்தின் பெருமை
நீதியுடன் தோணுமடா நினைவாய்ப்பாரு
சாரப்பா மனசாரச் சார்ந்துபார்த்தால்
சார்வான தத்துவங்கள் தோணும்பாரு
ஆரப்பா அறிவார்கள் பூதமைந்தில்
அதிற்பிறந்த தத்துவந்தான் தொண்ணூற்றாரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 36.

Koviloor Digital Library

மேற்கூறிய உட்கருவிகளின் மூலம் பார்த்து தன்னைத் தானே அறிந்து உணரும்போது தத்துவத்தின் பெருமை விளங்கும். முழுமனதோடு அணுகிப் பார்த்தால் தத்துவங்கள் தொண்ணூற்றாறும் ஐம்பூதங்களிலிருந்தே தோன்றின என்ற உண்மையும் விளங்கும்.

மண்ணின் கூறு

ஆறானபூதம் ஐந்தின் விரிவைக்கேளு
அப்பனே பிரிதிவியின் கூர்தான்மைந்தா
நேரான மயிருடனே எலும்புசர்மம்
நிலையான நரம்புசதை ஐந்துமாச்சு
பேரான பிரிதிவியின் கூறைச் சொன்னேன்
பொறுமையுடன் தான்அறிந்துப் பிலமாய்நின்று
கூறான அப்புடைய கூறுபாரு
குணமான புலத்தியனே குவித்துப்பாரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 37.

ஐம்பூதங்களிலே பிருதிவியாகிய மண்ணின் கூறு - எலும்பு, மயிர், நரம்பு, தசை ஐந்தும் ஆகும்.

நீரின் கூறு

பாரப்பா அப்புடைய கூறுசொல்வேன்
பதிவான நீருடனே உதிரம் அப்பா
காரப்பா சுக்கிலமும் மூளைமச்சை
கருவான ஐந்துமடா அப்பின்கூறு
தேரப்பா அப்பினுட கூறறிந்து
தெளிந்துமன தொன்றாகத் தன்னைப்பாரு
சாரப்பா தன்உணர்வாய்ப் பார்த்தால்மைந்தா
தயவான தேய்வினுட கூறுகேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 38

அப்பு என்ற நீரின் கூறு இரத்தம், மூளை, மச்சை, சுக்கிலம், நீரும் ஆகும்.

தேய்வு என்ற அக்கினியின் கூறாக உள்ளவை பசி, தூக்கம் புணர்ச்சி, பயம், சோம்பல் என்ற ஐந்துமாகும்.

Koviloor Digital Library

காற்றின் கூறு

தானான வாய்வினுட கூறுகேளு
தன்மையுள்ள புலத்தியனே நடத்தல்ஓடல்
ஊனான இருத்தலொடு கிடத்தல்மைந்தா
உத்தமனே எழுதலொடும் ஐந்துமாச்சு
வாறான வாய்வினுட கூறறிந்து
மார்க்கமுடன் தன்னகத்தை மகிழ்ந்துபாரு
கோனான குருவருளால் பார்த்தாயானால்
குணமான ஆகாசக் கூறைக்கேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 40.

வாயுவின் கூறு நடத்தல், ஓடல், இருத்தல், கிடத்தல், எழுதல் என்ற ஐந்துமாகும்.

கூறான ஆகாசக் கூறுதன்னை
குறியுடனே சொல்லுகிறேன் குணமாய்கேளு
நேரான குரோதமொடு லோபம்மோகம்
நிசமான மாச்சரிய மதமுமைந்து
ஊரான ஆதாரந் தன்னைப்பார்த்து
உத்தமனே தானவனாய் நின்றாயானால்
தேரான வாசியது தேரும்தேரும்
சிவபூதம் ஐந்துதொழில் இருபத்தைந்தே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 41.

ஆகாயத்தின் கூறுகள் குரோதம், லோபம், மோகம், மாச்சரியம், மதம் என்ற ஐந்துமாம். ஆக ஐம்பூதங்களின் கூறுகளாக உள்ளவை ஒவ்வொன்றுக்கும் ஐந்தாக இருபத்தைந்துமாகும்.

அஞ்சான ஐந்து பத்து நாடிதன்னை
அப்பனே சொல்லுகிறேன் அறிவாய்க்கேளு
துஞ்சாத இடையானபின் சுழினையாகி
துலங்குகின்ற காந்தாரி யத்தியோடு
பிஞ்சான சிங்குவையும் அலம்புருடன்
வேகமுள்ள குகுதனுடன் சங்கினி பத்தும்
நெஞ்சார நின்றதோர் நாடிபத்தும்
நேர்மையுள்ள பிரிதிவியின் கதிதான்பாரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 42

Koviloor Digital Library

நாடிகள் இடகலை, பிங்கலை, சுழினை, காந்தாரி, அத்தி, சங்கினி அலம்புடை, புருடன், குகுதன், சிங்குவை என்பவை பத்தும் பிருதிவி சம்பந்தப்பட்டவையாம்.

1. இடைகலை -வலுதுகாற் பெருவிரல் முதலாக இடது நாசிவரை பெருக்கல்குறி போல் குறுக்கிட்டு ஓடுவது.
2. பிங்கலை -இடதுகாற் பெருவிரல் முதலாக வலது நாசித் துளை வரை ஓடுவது.
3. நடுநாசி -மூலாதாரத்தில் தொடங்குவதும் எல்லா நரம்புகளுக்கும் ஆதாரமாக இருப்பதுமானது.
4. சுழினை -உச்சித் துவாரம் வரை எட்டி நிற்பது.
5. காந்தாரி -கண் அளவில் நிற்பது.
6. அத்தி -உடலெங்கும் வியாபித்திருப்பது.
7. சிங்குவை -உண்ணாக்கில் நின்று அன்னம், தண்ணீரை விழுங்கச் செய்வது.
8. அலம்புடை -செவி வரைச் செல்வது.
9. புருடன் -பரத்தில் நிற்பது.
10. சங்கினி -மார்பில் நிற்பது.

மேலே கூறப்பட்ட நாடியின் செயல்கள் சாம்பசிவம் பிள்ளை அகராதியிலுள்ளபடி கூறப்பட்டதாகும். பாடலில் உள்ள பெயர்களோடு ஒன்றிரண்டு மாறுபடுகின்றன. முன் கூறப்பட்ட யூகிமுனிவர் கூறும் நாடிகளின் செயல்களிலிருந்தும் மாறுபடுகின்றன.

வளியான வாய்வின்ட வழிதான்மைந்தா
மார்க்கமுடன் சொல்லுகிறேன் மனதாய்க்கேளு
நெளியாத பிராணனுடன் அபானன்தானும்
நிசமான உதானனுடன் சமானன்மைந்தா
அளியாத வியானனுடன் ஐந்துமப்பா
அரகரா தேய்வுடனே வாய்வுமாச்சு

Koviloor Digital Library

சுளியாத தேயுவாயுவைத்தான் கண்டால்
சுகமாக பூதவா யுவைத்தான் கேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 43.

இனி தச வாயுக்களைப் பற்றிச் சொல்கிறேன் கேட்பாயாக. பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்ற ஐந்து வாயுக்களும் அக்கினி சம்பந்தம் உடையவை.

பிராண வாயு உணவை எரிப்பது என்பது தெரியும். அதுபோலவே மற்ற வாயுக்களும் அக்கினி சம்பந்தம் உடையவை என்பதை உய்த்துணர வேண்டும்.

வாயுக்களின் செயல்

கேளப்பா நாகனொடு கூர்மன்மைந்தா
கிரிகரனும் தேவத்தன் தனஞ்செயனாம் ஐந்தும்
ஆரப்பா ஐம்பூத வாயுவென்பார்
ஆச்சரியந் தசவாயுவென்பார்
காரப்பா தசவாய்வை அறிந்து கொண்டு
கருணையுடன் சிவயோகக் கருத்தில் நின்றால்
கோளப்பா ஒன்றுமில்லை எல்லாஞ்சித்தி
குறிப்புடனே ஆகாச வழிதான் கேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 44.

நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்ற ஐந்து வாயுக்களும் ஐம்பூத வாயுக்களாகும்.

கேளடா ஆகாச வழிதான்மைந்தா
கிருபையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
வாளடா அர்த்தயே டணைதான் ஒன்று
வகையான புத்திரயே டணைதான் ஒன்று
சூளடா உலக ஏடணைதான் ஒன்று
சுத்தமுடன் ஆகாய வழியைக் கண்டு
ஆளடா அந்தரங்கச் சுழியில் நின்று
அப்பனே வாக்காதி அறிந்து பாரே.

ஏடணை மூன்றும் ஆகாய பூதத்தின் பாற்பட்டவை.

1. அர்த்த ஏடணை (பொருளாசை)
2. புத்திர ஏடணை (புத்திர பாசம்)
3. உலக ஏடணை (உலகப் பற்று).

Koviloor Digital Library

ஏடனை என்பது உலகம் சம்பந்தப்பட்ட ஆசா பாசங்களையே குறிப்பிடுகிறது. இவை இல்லாவிட்டால் உலக வாழ்வே இல்லையென்று சாதாரண மனிதன் நினைக்கிறான். இவற்றுக்கு மனத் தொடர்பு மட்டுமே உண்டு. மனதுக்கு ஆகாய பூதம் சுட்டிக் காட்டப் படுகிறது. மனம் - நீர், நிலம், நெருப்பு போல் பொருள் சம்பந்தப்பட்டது அல்ல. வாயுவைப் போல் புலனால் உணரப்படக் கூடியதும் அல்ல

பாரப்பா வாக்காதி என்னவென்றாற்
பதிவான வசனமொடு கெமனந்தானம்
நேரப்பா விசர்க்கமொடு ஆனந்தம் ஐந்தும்
நிரமான வசனாதி என்றும்பேரு
காரப்பா வசனாதி ஐந்தும்கண்டு
கருவான ஆதார மூலம்பார்த்து
சாரப்பா பிரகிருதி வழியைப்பார்க்க
தன்மையுடன் சொல்லுகிறேன் சங்கைகேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 46

வசனாதி ஐந்து

வசனம் : வாயின் செயலாகிய பேச்சு.
கமனம் : கால்களின் செயலாகிய நடத்தல்
தானம் : கைகளின் செயலாகிய கொடுக்கல் வாங்கல்
விசர்க்கம் : குதத்தின் செயலாகிய வெளியேற்றல்
ஆனந்தம் : குறியின் செயலாகிய இன்பந்துய்த்தல்

இவை ஐந்துமே வசனாதி ஐந்தாகும் (வசனத்தை முதலாவதாகக் கொண்ட ஐந்து செயல்கள்).

கேளப்பா ராசதமுந் தாமதமும்மைந்தா
கிருபையுள்ள சாத்துமிகம் குணங்கள்மூன்றும்
வாளப்பா முக்குணங்கள் அறிந்துகொண்டு
வரிசையுடன் விந்தினுட வழியைக்கேளு
சூளப்பா பைசந்தி மத்திமைவைகரியுஞ்
சூக்குமையும் நாலுமிது வாக்கேயாகும்
ஆளப்பா வாக்காதி நாலும்பார்த்து
அரகரா ஆதாரந் தன்னைக்காணே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 47

Koviloor Digital Library

ராசதம், தாமதம், சாத்விகம் என்பவை முக்குணங்கள்.

பைசந்தி, மத்திமை, வைகரி, சூக்குமை என்பவை நான்கும் வாக்காகும். இவை விந்தின் வழிப்பட்டவையாம்.

வைகரி - செவியால் கேட்கப்படுவது. பொருளோடு கூடியது. பிராண வாயுவைப் பொருந்தி வெளிப்படுவது.

மத்திமை - செவிக்குப் புலப்படாதது. பிராண வாயுவைப் பொருந்தாதது. கண்டத்தினுள் அடங்கி எழுவது.

பைசந்தி - நினைவு மாத்திரமாக நிற்பது.

சூக்குமை- வெளியிலிருந்து வருவதும் தனக்கு மட்டுமே கேட்கக்கூடியதும் ஞானத்திற்கு ஏதுவானதுமானது.

காணப்பா ஆதாரந் தன்னிலேதான்
கருவான உட்கருவி முப்பத்தாறும்
பூணப்பா புறக்கருவி அறுபதாச்சு
புத்தியுடன் உள்வெளியும் நன்றாய்ப்பார்த்தால்
தோணப்பா தத்துவங்கள் தொண்ணூற்றாறுந்
தோணுமடா இருதயத்தில் சூழ்ந்துபார்க்கில்
வீணப்பா வொன்றுமில்லை தத்துவமாங்குப்பை
விளங்கு பசுபதிபாசம் விளையாட்டாச்சே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 48

தத்துவங்கள் தொண்ணூற்றாறில் உட்கருவி முப்பத்தாறு. புறக்கருவி அறுபது. இவற்றை நன்குணர்ந்து கொண்டால் பிறகு அறிவதற்கு ஒன்றுமில்லை. இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பும் விளங்குவதாகும்.

பசு	-	ஆன்மா (ஜீவான்மா)
பதி	-	இறைவன் (பரமான்மா)
பாசம்	-	அன்பு, பக்தி.

ஆச்சப்பா வுட்கருவி முப்பத்தாறும்
அப்பனே சிவத்தினுட கூறேயாச்சு
நீச்சப்பா புறக்கருவி யறுபதுதான்
நிசமான சத்தியுட கூறேயாச்சு
பேச்சப்பா வுள்வெளியும் நன்றாய்ப்பார்த்து
பெருமையுட னாதார நிலையுங்கண்டு
காச்சப்பா கருவிகர ணாதியென்று
காடான தத்துவத்தைக் கண்டுதேரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 49.

உட்கருவி முப்பத்தாறும் சிவத்தின் கூறு. புறக்கருவி அறுபதும் சத்தியின் கூறு. உள்ளும் வெளியும் (கருவிகளை) உணர்வதோடு ஆறு ஆதார நிலைகளையும் கண்டு தெளிந்தால் குவிந்து கிடக்கும் தத்துவக் காட்டைக் கடந்துவிட முடியும்.

உடலின் உள்ளுறைகின்ற தத்துவங்கள் தொண்ணூற்றாறையும் கண்களால் பார்க்க முடியாது. அறுத்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள நினைப்பவர்களால் அறியவே முடியாது. அப்படி எதுவும் கிடையாது என்றே சாதித்துக் கொண்டிருந்தார்கள். அக்குபஞ்சர், வர்மக் கலை இரண்டும் கிளம்பியவுடன் அவர்களுடைய வாதம் தவிடு பொடியாகி விட்டது.

ஆயினும் அதனால் இதனால் என்று நொண்டிச் சாக்குச் சொல்லித் தங்கள் அறிவியல் கோட்பாடே சரியானது என்று வாதாட முயல்வார்கள்.

ஆனால் சித்தர் நெறி ஆரம்பத்திலிருந்தே உடலின் தன்மையை உணர வேண்டுமென்றால் படிப்படியாக இறைமையின் தன்மையையும் உணர வேண்டிய அவசியத்தை உண்டாக்குகிறது.

மனம் என்ற ஒன்றைப் பார்க்க முடியாது. ஆனால் மனம் இல்லை என்று மறுக்க முடியாது. அதுபோல் தத்துவங்கள் தொண்ணூற்றாறும் ஆழ்ந்து சிந்திப்போர்க்குத் தெற்றென விளங்கும்.

Koviloor Digital Library

மூலாதாரம்

கேளப்பா விபரமென்ன மூலாதாரங்
கிருபையுடன் கண்டுகொள்ள வகையைக்கேளு
காலப்பா தோன்றிநின்ற மூலாதாரம்
கருணையுடன் சொல்லுகிறேன் அண்டம்போலாம்
மேலப்பா அண்டமதிற் சூழ்ந்துநின்ற
விசையான இதழதுதான் நாலுமாச்சு
சூளப்பா நிறமதுதான் மாணிக்கம்போல்
சுகமாக நின்றுதடா மூலம்பாரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 55.

இனி ஆதாரங்களைப் பற்றி அறிந்து கொள்வோம். மூலாதாரம் முதலாவது. முட்டை போன்ற வடிவம் உடையது. அதைச் சூழ்ந்து நான்கு இதழ்கள். அதன் நிறம் மாணிக்கம் என்று சொல்ல வேண்டும்.

பாரப்பா மூலமென்ற முட்டைக்குள்ளே
பதியான அக்ஷரந்தான் ஓங்காரமாச்சே
நேரப்பா நின்றுஓங் காரத்தோடே
நிசமான ரீங்காரம் உகாரங்கூட்டி
சாரப்பா தன்மனமே சாக்ஷியாக
தன்மையுடன் தானிருந்து செபிப்பாயாகில்
காரப்பா கணபதியும் வல்லபையுமைந்தா
கனிவான உந்தனிடம் கனிவாற்காணே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 56.

அந்த முட்டைக்குள் விளங்கும் அட்சரம் ஓங்காரம். ஓங்காரத் துடன் ரீங்காரம் உகாரம் கூட்டிச் செபிப்பாயானால் கணபதியும் வல்லுபையும் கனிவோடு தோன்றுவார்கள்.

காணடா கனிவாகக் கண்டாயானால்
கருணையுள்ள சிவலோகம் உறுதியாச்சு
பூணடா சிவலோகம் உறுதியானால்
பொற்கமலம் உச்சியிலே தீபங்காணும்
பேணடா தீபமதை தினமும் நோக்கிப்
பிசகாமல் வாசியிலே பிலமாய்நில்லு

Koviloor Digital Library

தோணடா அவ்வாசிப் பிலமாய் நின்றால்
சுகசீவ பிராணகலை சுத்தமாச்சே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 57

இதைக் கண்டுபிடித்து விட்டாயானால் சிவலோகம் உறுதியாச்சு. சிவலோகம் உறுதியாகிவிட்டால் உச்சியாகிய பொற்கமலத்தில் ஒளி தோன்றும். அந்த ஒளியை தினமும் பார்த்துத் தவறாமல் வாசியில் நிற்பாயானால் பிராண கலை சுத்தமாச்சு.

சுவாதிஷ்டானம்

சுத்தமுடன் ஆதார மூலஞ்சொன்னேன்
சுவாதிஷ் டானத்தினுட சுகத்தைக்கேளு
பத்தமுடன் நாற்கோணம் இதழ்தான் ஆறு
பதிவான பொன்னிறம்போல் இருக்கும் மைந்தா
சுத்தமுள்ள நாற்கோணம் நடுவிலேதான்
தெளிவான நகாரமென்ற தீபமேத்தி
நித்தமுமே நகாரமுடன் சிவறீங்கிட்டு
நிலையறிந்து உருச்செபிக்க நிசத்தைக்கேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 58

அடுத்த ஆதாரம் சுவாதிட்டானம். நாற்கோண வடிவம் உடையது. சூழ்ந்துள்ள இதழ்கள் ஆறு. பொன்னிறமுடையதாக இருக்கும். நாற்கோணத்தின் நடுவிலே நகாரம் என்ற அட்சரத்தைத் தீபமாக ஏற்றி சிவறீங் என்று உருச் செபிப்பாயாக.

கேளடா நிலையறிந்து வாசிகொண்டு
கீழ்மேலும் நன்றாக நின்றுபாரு
சூளடா நின்றநிலை பார்க்கும்போது
சோதியொன்று தோணுமடா பிரமசொரூபம்
ஆளடா பிரம்மநிலை ரூபங்கண்டால்
அடக்காத வாசியது அடங்கும் வீட்டில்
காளடா வாசியது அடங்கி நின்றால்
கண்ணடங்கா பூராணத்தைக் காணலாமே

- அகத்தியர் சௌமிய சாகரம் 59.

Koviloor Digital Library

வாசியினால் நிலையறிந்து கீழும் மேலும் போகாமல் நின்று பார்த்தால் பிரம்ம சொரூபம் தோன்றும். பிரம்மரூபம் கண்டால் வாசி அடங்கும். வாசி அடங்கினால் பூரணத்தைக் காணலாம்.

மணிபூரகம்

காணவே பிரம்மாவின் பதியைச் சொன்னேன்
கருவான மணிபூரகங் கருத்தைக் கேளு
தோணவே பிறை மூன்றாம் பிறைபோற்கீறித்
துலங்க அதில் ஈரைந்து பத்தும் போட்டு
பேணவே நிறமதுதான் பளிங்குபோலாம்
பிறைமூன்றாம் பிறை நடுவே மகாரமிட்டு
பூணவே சங்கிலி மங்கென்றேதான்
பூரணமாய்த் தினம் நூறு செபித்துக்காரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 60.

பிறைபோல், பிளவுபட்ட இரத்தினம்போல் விளங்குவது மணிபூரகம். அதைச் சுற்றிலும் பத்து இதழ்கள். பளிங்குபோன்ற நிறம் உடையது. பிறைபோன்ற அதன் நடுவே மகாரம் இட்டு சங் கிலி மங் என்று நாள்தோறும் நூறுமுறை செபம் செய்வாயாக.

கார்க்கவுரு செபித்து நடுப்புருவமதில்
கண்ணுமனக் கண்ணாலே நன்றாய்ப் பார்த்தால்
மார்க்கமுடன் லட்சுமியும் விஷ்ணுதேவர்
மகத்தான பூரணச்சந் திரன்போல் மைந்தா
யேர்க்கையுடன் இருதயத்தில் காணும்பாரு
இன்பமுள்ள தெரிசனத்தைக் கண்டாயானால்
தீர்க்கமுள்ள சிவயோக வாழ்வு பெற்று
செல்வபதி யாயிருப்பாய் தினமும் நோக்கே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 61.

செபித்தபடி புருவ மையத்தில் பார்வையை நிறுத்தி மனக் கண்ணால் பார்த்தால் மகா லட்சுமியும் விஷ்ணுவும் பிரகாசிப்பார்கள். இன்பநிலையில் விளங்கும் அவர்களுடைய தரிசனத்தைப் பெற்றால் சிவயோக வாழ்வு பெற்றுச் செல்வபதியாக விளங்குவாய். அதனால் அவர்களைத் தினம்தோறும் தரிசனம் செய்.

Koviloor Digital Library

நோக்குவது பூரணச்சந் திரனைநோக்கு
நுண்மையுடன் பூரணமாய் நின்றாயானால்
மூக்குநுனி யந்தமதில் வாசிநின்று
நலங்காமல் தீபமதில் நாடும்பாரு
வாக்குமன தொன்றாகி நின்றுபாரு
மக்களே கண்பசுவு வாழ்வுண்டாகும்
தூக்குமென்ற கொடுமைதனை அகற்றிமைந்தா
சுகமான இடமறிந்து சுகத்தில் நில்லே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 62.

தினந்தோறும் அவர்களைத் தரிசித்துப் பூரணமாய் நின்றா யானால் மூக்கு நுனியில் வாசி நிற்கும். நடுங்காத தீபம்போம் ஒளி காணும். மனம் வாக்கு காயம் ஒன்றுபட்டு ஒருமனதாக அவர்களைத் தரிசிப்பது சுக வாழ்வை உண்டாக்கும்.

அனாகதம்

நில்லடா நிலை அறிந்து சுகத்தைக்காண
நிசமான ருத்திரனார் பதியைக்கேளு
சொல்லடா சொல்லறிந்து சுகத்தைப் பார்க்க
சுகமான முக்கோணம் நன்றாய்க்கீறி
அல்லடா முக்கோணத் ததிலேநீதான்
அப்பனே பன்னிரண்டி தழ்தான்போடு
விள்ளடா செம்புனிற மான கோட்டை
விசையான கோட்டைநடு விந்துபோடே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 63.

அடுத்தது ருத்திரனார் பதியாகிய அனாகதம். முக்கோணச் சக்கரம். சுற்றிலும் பனிரெண்டு இதழ்கள். செம்பின் நிறம்போன்ற சிவந்த கோட்டை. அதன் நடுவில் விந்தினைப் போடுவாயாக (விந்து என்பது பீஜாட்சரம்).

போடப்பா விந்துநடு ஓங்காரந்தான்
பூரணமாய் சிங் கிலி யென்று நாட்டி
நாட்டப்பா விந்துநடு முனைமையத்தில்
நாடினின்று சிங்கிலியென்று சொல்லி

Koviloor Digital Library

வீடப்பா பிலப்பதற்கு தினம் நூற்றெட்டு
விரும்பிமன தறிவதினா லுருவே செய்தால்
சூடப்பா தானேறி முனைமையத்தில்
சூரியன்போல் காந்திவெகு சோதியாமே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 64.

விந்தின் நடுவில் ஓங்காரமிட்டு இதன் அட்சரம் சிகாரமாகையால் சிங் கிலி என்று நாட்டுவாயாக. தினம் நூற்றெட்டு முறை சிங் கிலி என்று உருச் செய்தால் உடம்பில் சூடேறும். மூக்கின் முனை மையத்தில் சூரியனைப் போன்ற ஒளி தோன்றும்.

சோதியென்ற காந்தியடா சூரியகாந்தி
துலங்குநடுச் சுழினையைநீ கண்டாயானால்
ஆதியென்ற ஆதாரம் ஆறாதாரம்
அரூபமய மானதொரு மேலாதாரம்
நீதியடன் தோணும்டா வாசியாலே
நின்றிலங்கும் வாசிதன்னைத் தன்னுள்பார்த்து
சாதியென்ற சராசரத்தைத்தானாயெண்ணி
சதாயோக பூரணமாய் நின்றுபாரே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 65.

சுழிமுனையில் சூரிய ஒளி போன்ற பேரொளியைக் கண்டாயானால் ஆறாதாரங்களும் தோன்றும். வாசியைத் தன்னுள் கட்டுப்படுத்தி சராசரம் யாவுமே தானாக நினைத்து தானே பூரணமாய்க் கண்டு உணர்வாயாக.

பார்க்கையிலே ருத்திரனார் கடாக்ஷத்தாலே
பாதாதி கேசமுதல் நன்றாய்ப் பாரு
சேர்க்கையுடன் பார்க்கையிலே மைந்தாமைந்தா
என்ன சொல்வேன் அக்கினிபோல் ஆகுந்தேகந்
தீர்க்கமுடன் அக்கினிபோல் தன்னுள் கண்டாற்
சிவயோக வாழ்வுவெகு திறமாய் நிற்கும்
மார்க்கமுடன் உருத்திரனார் பதியைப் பார்த்து
மனங்குவிந்து பூரணத்தில் மருவியேறே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 66.

Koviloor Digital Library

அவ்வாறு பார்க்கும்போது ருத்திரனார் அருளால் அடிமுதல் நுனிவரை - பாதம் முதல் உச்சிவரை உன் உடல் அக்கினிபோல் தகதகக்கும். சிவயோக வாழ்வு உறுதியாகும். ருத்திரனார் பதியாகிய அனாகதத்தைப் பார்த்துப் பின் மேலே செல்வாயாக.

விசுத்தி

மருவி நின்ற தலமதுதான் விசுத்திவீடு
மகத்தான அறுகோணம் நன்றாய்ப்போட்டு
திருவிந்த அறுகோணஞ் சுத்திநல்ல
தீர்க்கமுடன் பதினாறு இதழ்தான் போட்டு
குருவிருந்த கோட்டை வெகு கருப்பாய் நிற்குங்
குணமான அக்கோட்டை நடுவிலேதான்
உருவறிந்து விந்திட்டு ஓங்காரஞ் சுத்தி
உத்தமனே வங் கிலி யங்கென்று போடே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 67

அனாகதத்திற்கு மேலே உள்ளது விசுத்தி என்ற தலம். அறுங்கோணமிட்டுச் சுற்றிலும் பதினாறு இதழ்கள் போடுவாயாக. நடுவிலே விந்து போட்டு அதன் அட்சரம் வகாரமாகையால் வங் கிலி யங் என்று போடுவாயாக.

போட்ட பின்பு மனதுகந்து மனக்கண்சாத்தி
பூரணமாய் வங் கிலி யங்கென்றிட்டு
நாட்டமுடன் தானிருந்து ஒரு நூறு மைந்தா
நன்மையுடன் தான் செபித்து நயனமேவி
தேட்டமுடன் குருபதியில் சென்று பாரு
சிவசிவா வாயுவேக லகிரியுண்டாம்
வாட்டமில்லா லகிரியடா வாயுவேகமாகு
மகத்தான யோகசிவ போதமாமே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 68

மலர்கள் சாத்தி வங் கிலி யங் என்று நூறு முறை செபித்தாயாகில் உன் உடலில் வாயு வேகமாகச் செல்வது போன்ற மயக்கம் உண்டாகும் அதுவே சிவ போதமாகும்.

Koviloor Digital Library

ஆமப்பா யோகமென்ற சிவயோகந்தான்
அருளான முச்சுடரின் அந்தத்தாலே
ஓமப்பா முச்சுடரின் அந்தம்பார்த்தால்
ஒளிவிளக்காய் நின்றதொரு மூலத்தீதான்
வாமப்பா நிறைந்ததொரு மூலத்தீதான்
வளர்ந்துதடா அறுகோண வரையின் மேலே
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்ப்பாரு
நாதாந்த மயேஸ்வரத்தைக் காணலாமே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 69.

சிவயோகத்தால் முச்சுடராக மூன்று முனைகள் உள்ள தீக்கொழுந்தைக் காண்பாய். அப்படி ஒளிவிளக்காய் நிற்பது மூலத்தீயேயாகும். அறுகோணச் சக்கரத்தின்மேல் வளரும் அந்த மூலத்தீ உனக்கு மஹேஸ்வரனைக் காண்பிக்கும்.

ஆக்கினை

காணவே மயேஸ்வரத்தின் கடாக்ஷத்தாலே
கண்ணான சதாசிவத்தின் கருவைக்கேளு
தோணவே ஆக்கினையாம் விந்துவட்டம்
சொல்நிறைந்த வட்டமதில் இதழ்தான் ரெண்டு
பூணவே வட்டமதின் நிறந்தான் சொல்வேன்
புதுமைவெகு புதுமையடா ஆகாசந்தான்
பேணவே ஆகாச வட்டத்துள்ளே
பேர்பெரிய பிரணவத்தை நன்றாய் நாட்டே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 70.

மஹேஸ்வரனின் கடாட்சத்தைப் பெற்றபிறகு ஆக்ஞா சக்கரத்தின் நடுவே வீற்றிருக்கும் சதாசிவத்தைக் காண்பாயாக. ஆகஞா சக்கரம் என்பது வட்ட வடிவமானது. அதன் இரு புறங்களிலும் இரு இதழ்கள் காட்சியளிக்கும். அதன் நிறம் ஆகாச நிறம். அந்த ஆகாச வட்டத்துள்ளே பிரணவத்தை நாட்டுவாயாக.

நாட்டமுடன் ஓங்கார நடுவிலேதான்
நன்மையுடன் அகாரமுடன் உகாரஞ்சாற்றி
தேட்டமுடன் ரீங்காரம் னுகாரஞ்சாற்றி
திறமாகத் தானிருந்து புருவமேகி

Koviloor Digital Library

கூட்டமன்றி தானாகத் தானேநின்று
குணமாக அங்றீங் உம்மென்றேதான்
வாட்டமில்லா மனதாக தினம்நூறு மைந்தா
மார்க்கமுடன் தான் செபிக்க வரிசைகேளே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 71.

பிரணவமாகிய ஓங்காரத்தின் நடுவில் அகாரம் உகாரம் ரீங்காரம் னுகாரம் சாற்றி ஒருமனதாக அங் றீங் உங் என்று தினம் நூறுமுறை செபிப்பாயாக.

வரிசையுடன் ஆதாரஞ் செபித்து மைந்தா
மார்க்கமுடன் சதாசிவத்தை மகிழ்ந்துகண்டால்
தெரிசனமாய் நின்றதொரு ஆறாதாரஞ்
சிவசிவா அரூபமய மாகத் தோணும்
கரிசினமாய் நின்றதொரு ஆறாதாரங்
கண்ணடங்காத் தெரிசனங்கள் காணலாகும்
புரிசமுடன் சதாசிவத்தில் மனதை வைத்து
புத்தியுடன் அனுதினமும் பூசைபண்ணே.

- அகத்தியர் சௌமிய சாகரம் 72

அவ்வாறு செபித்தால் சதாசிவத்தைக் காணலாம். ஆறாதாரங்களும் அரூபமயமாகத் தோன்றும். கண்கொள்ளாக் காட்சிகளைக் காணலாகும். சதாசிவத்தின்மேல் மனதை வைத்து அனுதினமும் பூசை செய்வாயாக.

அகத்திய முனிவர் ஏராளமான நூல்களைப் பாடியிருப்பதனால் தானோ என்னவோ ஒரே பொருளைப் பற்றிப் பல இடங்களிலும் கூறியிருப்பதைக் காணலாம். ஒன்றுக்கொன்று நுணுக்கமாகவும் மேலும் பல கருத்துக்களை விரிவாகக் கூறுவனவாகவும் இருப்பினும் அவை அனைத்தும் இந்நூலில் இடம் பெறச் செய்வது இயலாத காரியம்.

மேலும் விளக்கம் காண விளைபவர் தத்துவம் முன்னூறையும் படித்துப் பார்த்துக் கொள்வது நல்லது.

அடுத்தபடியாக போக முனிவர் ஆறாதாரங்களைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.

Koviloor Digital Library

ஆறாதாரம் பற்றி போக முனிவர்

(போகர் 7000 முதல் காண்டத்திலிருந்து)

காணவே மூலம் அஃது அண்டம் போலக்
காரணமாய்த் திரிகோண மாக நிற்கும்
பூணவே மூன்றின்மேல் வளைய மாகும்
புறம்பாக இதழ் அதுவும் நாலுமாகும்
நாணவே நாற்கமலத்து அட்சரங்கள்
நலமான வ-ச-ஷ-ஸவ்வு மாகும்
மூணவே முக்கோணத்து உள்ஒளி ஓங்கார
முயற்சியாய் அதற்குள்ளே அகாரம் ஆமே.

- போகர் 7000/11

ஆதாரங்களை அறிவது என்பது எளிதல்ல. நீண்ட காலம் பிராணாயாமப் பயிற்சி செய்பவர்களாலேயே முடியும்.

பூரகம் என்பது மூச்சை உள்ளே இழுப்பது ரேசகம் என்பது மூச்சை விடுவது. கும்பகம் மூச்சை உள்ளே நிறுத்துவது. ஒரு குறிப்பிட்ட நேரம் வரை மூச்சை வலது மூக்குத்துளை வழியாக உள்ளே இழுத்து, அதில் பாதி நேரம் உள்ளே நிறுத்திப்பின் குறிப்பிட்ட நேரம் மூச்சை இடது மூக்குத்துளை வழியாக வெளியே விடுவது பிராணாயாமம். சிறிது நேரம் வரை வலது நாசி வழியாகப் பிராணாயாமம் செய்தால் அதே அளவு நேரம் இடது நாசி வழியாகவும் செய்ய வேண்டும். வலது நாசி வழியாக மூச்சை உட்கொண்டால் இடது நாசி வழியாக வெளியேற்ற வேண்டும். இடது நாசி வழியாக உட்கொண்டால் வலது நாசி வழியாக வெளியேற்ற வேண்டும். முறையாகப் பிராணாயாமப் பயிற்சி செய்ய விரும்புபவர்கள் தக்க குருவின் ஆசியோடு பயிற்சி செய்வதே நன்மை பயக்கும்.

முதலாவது ஆதாரமான மூலாதாரம்.

ஒரு வட்டம் அதன் நடுவில் முக்கோணம். அதன் நடுவில் அகாரம். வட்டத்திற்கு வெளியே நான்கு இதழ்கள். அவ்விதழ்களில் வ-ச-ஷ-ஸ என்ற அட்சரங்கள்.

Koviloor Digital Library

அகாரத்தின் மேலாகக் கணேசர் நிற்பர்
அதிலே ஓர் கோணத்தில் உகாரம் நிற்கும்
உகாரத்தில் வல்லபையாம் சத்தி நிற்பாள்
ஒடுங்கியதோர் முனை ஒன்றில் கதவிப் பூவாய்ப்
புகாரமாய் முகங்கீழ்க்குண் டலியாம் சத்தி
பெண்பாம்பு போல் சுருட்டிச் சீறிக் கொண்டு
சுகாரமாய்ச் சுழிமுனை ஊடுருவி நிற்பாள்
துரியாதீதம் என்ற அவத்தை தானே.

- போகர் 7000/12

அகாரத்தின் மேல் கணேசன் நிற்பார். முக்கோணங்களில் ஒரு கோணத்தில் உகாரம் நிற்கும். உகாரத்தின்மேல் வல்லபை என்ற சத்தி நிற்பாள். கீழே உள்ள முனை வாழைப்பூவைப் போல் கீழ் நோக்கி விரிந்திருக்கும். அங்கே குண்டலியானது சுருட்டிக் கொண்டு பெண் பாம்பு போல் சீறிக் கொண்டிருக்கும். இதனை ஊடுருவிக் கொண்டு சுழினை நிற்பாள்.

துரியாதீதம் என்ற அவத்தை,

அவத்தைதனக் கிருப்பிடமும் மூலமாகும்
அழகான கதலிப்பூ எட்டி தழாய் நிற்கும்
நவத்தைக்கு நந்தி அதன் வாயில் நிற்பார்
நற்சிவமாம் சிகார மல்லோ கோடி பானு
அவத்தைக்கு வாய் திறவாள் மலரால் மூடும்
மைந்தனே எட்டு இதழில் எட்டுச் சத்தி
பவத்தைக்குச் சத்தி எட்டின் பேர் ஏது என்றால்
பாங்கான அணிமாவும் லகிமாத் தானே.

- போகர் 7000/13

இந்த அவத்தையின் இருப்பிடம் மூலம். முக்கோணத்தின் கீழ் முனையில் உள்ள வாழைப்பூ எட்டு இதழ்களைக் கொண்டது. அந்த எட்டு இதழ்களிலும் அணிமா, மகிமா, லகிமா, கலிமாவோடு ஈசத்துவம் வசித்துவம், பிராப்தி, பிராகாமியம் என்ற அட்டமா சத்திகளும் நிற்பர். அவர்களுக்கு நடுவே நந்தி நிற்பார். கோடி சூரியப் பிரகாசத்துடன் சிவபெருமான் காட்சியளிப்பார்.

Koviloor Digital Library

தானான மகிமாவும் கரிமா வோடு
தங்கும்ஈ சத்துவமும் வசித்து வமாகும்
பூனான பிராத்திபிரா காம்யத் தோடு
புகழ்எட்டுத் தேவதையும் தளத்தில் நின்றே
ஏனான இதழாலே மூடிக் கொள்வார்
ஏற்றமாம் நந்தியைத் தான் காணொட்டாமல்
வானான வஸ்துவைநீ பானம் பண்ணி
வங்ஙென்று வாங்கியுமே கும்பித்தூதே.

- போகர் 7000/14

எட்டு சத்திகளும் தங்களை வாழைப்பூவின் இதழ்களால் மூடிக் கொள்வார்கள். நந்தியைக் காண விடாமல் தடுப்பார்கள். வஸ்துவை பானம் பண்ணி வங்கென்று கும்பித்து மூச்சை மேலும் செலுத்து வாயாக.

ஊதினால்என் வாசத்து இலகி ரியாலே
உலாவுவார் இதழ் எல்லாம் திறந்து விட்டுப்
போதினால் ஆயிசொன்ன ஏவல் கேட்பார்
புகுந்து பார் நந்தி கண்டால் யோகமாகும்
வாதினால் பத்தான வருடத் துக்கும்
வாசலையே திறவாமல் மூடிக் கொள்வார்
ஏதினால் இதற்குள்ளே வாசி மாட்டே
இடத்தோடில் வங்ஙென்ன உள்ளே வாங்கே.

- போகர் 7000/15

அப்படி ஊதினால் எட்டுச் சத்திகளும் இதழ்களைத் திறந்து கொண்டு வெளியே வந்து உலாவுவார்கள். தாய் சொன்னபடி ஏவல் செய்வார்கள். நந்தியைக் கண்டால் யோகம். அதற்கு இடைவிடாமல் சாதனை செய்ய வேண்டும். பத்து வருடங்கள் சாதனை செய்ய வேண்டிய அவசியமும் நேரிடலாம். பின் இடது நாசியால் வங் என்று மூச்சை உள்ளே வாங்கு வாயாக.

வாங்கியே நந்தி தனில் யங்ஙென்று கும்பி
வலத்தோடில் சிங்ஙென்று உள்ளாக வாங்கித்
தாங்கியே யங்ஙென்று இருத்திக் கும்பி
தளமான தெருவாறும் வெளியாய்க் காணும்

Koviloor Digital Library

ஓங்கியே மாணிக்க ஒளிபோல் தோன்றும்
உத்தமனே மூலத்தின் உண்மை காணும்
தேங்கியே வல்லபையாம் சத்தி தானும்
சிறந்திருப்பாள் பச்சைநிற மாகத் தானே.

- போகர் 7000/16

உள் வாங்கி நந்தியை நினைத்து யங் என்று கும்பித்துப்பார். வலது நாசியில் ஓடினால் சிங் என்று மூச்சை. உள்ளே வாங்கி யங் என்று கும்பிப்பாயாக. அப்படிச் செய்தால் ஆறு ஆதாரங்களுக்கும் வழி தோன்றும். மாணிக்க ஒளிபோல் மூலத்தின் உண்மை காணும். பச்சை நிற மாது வல்லபையாம் சத்தி காட்சியளிப்பாள். மூலத்தின் உண்மையும் விளங்கும்.

இவற்றையெல்லாம் உண்மையான அனுபவசாலிகளே எழுத வேண்டும். என்னால் இயன்றவரை இங்கே சொல்லி வைக்கிறேன். வெறும் தரையில் நிற்பவர்க்கு ஏணிப்படியை மட்டுமாவது காண்பிப்போமே என்ற எண்ணத்தால் திறமை உள்ளவர் பிடித்து ஏறிக் கொள்ளட்டும்.

பச்சைநிற வல்லபையைப் பணிந்து போற்று
பாங்கான ஆறுக்கும் பருவம் சொல்வாள்
மொச்சையாம் மூலமது சித்தி ஆனால்
மூவுலகும் சஞ்சரித்துத் திரிய வாகும்
கச்சைநிறக் காயமுமே கனிந்து மின்னும்
கசடு அகன்றே ஆறுதலங்கண்ணில் தோன்றும்
துச்சைநிற வாதம்சொன் னபடி கேட்கும்
துரியத்தின் சூட்சம் எல்லாம் தோன்றும் பாரே.

- போகர் 7000/17

பச்சை நீற வல்லபையைப் பணிந்து போற்று. ஆறு ஆதாரங்களையும் கடப்பதற்கு உரிய காலத்தை உனக்கு உணர்த்துவாள். மூலம் என்ற முதல்படி சித்தியாகி விட்டாலேயே மூவுலகங்களிலும் சஞ்சரிக்கலாம். உடல் கனிந்து மின்னும். உன்னைப் பிடித்துக் கொண்டுள்ள கசடுகள் அகன்று ஆறு ஆதாரங்களும் கண்களில் தெரியும். வாதம் சொன்னபடி கேட்கும். துரியத்தின் சூட்சமெல்லாம் விளங்கும்.

Koviloor Digital Library

துரியம்

நாட்டமாய் லகுவாக மூலம் பாரு
நலமான வாசியைக்கொண்டு ஊதிஊதி
ஊட்டமாய்ச் சக்கரத்தில் நின்று நின்றே
உத்தமனே நந்தி கண்டால் வாதம் காணும்
தூட்டமாய் வெறும் பேச்சாம் வார்த்தை சொன்னால்
சுடுகாட்டுப் பிணமான சொல்லுக் கொக்கும்
பூட்டமாய் மூலத்தின் ஒளிகாணு மட்டும்
பொற்கொடி போல்சுழி முனையும் திறந்துபோமே.

- போகர் 7000/21

முதலில் மூலத்தைக் கண்டு பின் வாசி (மூச்சு)யினால் ஊதிஊதிச் சக்கரத்தில் நின்று நந்தியைத் தரிசித்தால் வாதம் தோன்றும். சும்மாவெறும் வார்த்தை பேசினால் (நந்தியைக் காணாமல் கண்டேன் என்று பொய் சொன்னால் - அது சுடுகாட்டுப் பிணத்தின் சொல்லைப் போன்றதாகும். மூலத்தின் ஒளியைக் கண்டால் மட்டுமே சுழிமுனை திறக்கும்.

சுழிமுனையே திறந்தக்கால் மனம் ஒடுங்கும்
சுழியிலே அகப்பட்ட துரும்பு போலாம்
வழிமுனையே ஆதாரம் ஏற லாகும்
மகத்தான சித்தி அஃது எட்டும் ஆகும்
சுழிமுனையாம் சுழித்தியுள்ளே அழித்தி டாது
கணக்கோடே வாசியென்ற குதிரை ஏறாய்
இழிமுனையில் இறந்தக்கால் அங்கொன் றில்லை
ஏறுவது கடினம் மெத்த இகத்தோடேறே.

- போகர் 7000/22

சுழிமுனை திறந்தால்தான் மனம் ஒடுங்கும். சுழியிலே அகப்பட்ட துரும்பு அச்சுழியின் வேகமான சுழற்றலால் ஒரே இடத்தில் இருப்பதுபோல் காணப்படுவது போல் மனம் ஒரே இடத்தில் தங்கும். அதாவது வேகமான சுழல்களுக்கு இடையிலும் மனம் ஒருமைப்பட்டு நிற்கும். பின் அவ்வழியாக மற்ற ஆதாரங்களுக்கும் ஏறலாம். அட்டமா சித்திகளும் பெறலாம். ஆனால் எல்லாவற்றுக்கும் முதலாக வாசி என்ற குதிரையின் மேல் ஏறவேண்டும். ஏறுவது கடினம்தான். ஆயினும் அதைவிட்டால் வேறு வழியில்லை.

Koviloor Digital Library

ஏறவே ஐம்புலனும் உலக்கை யாக
இடும்பான ஆங்காரம் உரலுமாக
ஆறவே ஆசை அஃது உருவமாக
அழும்பான மனதை உள்ளே மாட்டிக் கொண்டு
மூறவே அசையாதே இடித்துச் சண்ணி
முழுமோச மாக்கியல்லோ மிரளப் பண்ணும்
தேறவே யோகமொடு ஞானம் ரெண்டும்
தெரியாதே இறந்தவர்கள் கோடிதானே.

- போகர் 7000/23

அப்படி ஏற வேண்டுமென்றால் உனது ஆங்காரம் என்ற ஆணவத்தை உரலாகப் போட்டு ஐம்புலன்களையும் உலக்கைகளாகக் கொண்டு ஆசை என்ற உருவம் உள்ள அழும்பான மனதை உள்ளே போட்டு நன்றாக இடிக்க வேண்டும். அழும்பான மனம். (அழும்பு என்றால் அக்கிரமம், கேடு) அதன் உருவமோ ஆசை. பாடலின் நயம் உய்த்துணரற் பாலது.

அப்படிச் செய்ய முயலும்போது மனம் மிரளும். அடித்துக் புரண்டு கொண்டு உன்னைக் கீழே தள்ளும். அதன் பிடியில் சிக்கி யோகத்தையும் ஞானத்தையும் அறிந்து கொள்ளாமலே இறந்து போனவர்கள் எத்தனையோ கோடிப்பேர்.

இருப்பான மூலத்தில் கணேசன் பாதம்
இருத்தியே வாசியை நீ அதற்குள் மூட்டு
தருப்பான பிராணாயம் தவறிற் றானால்
தம்பித்து வரவழைத்துத் தளத்தில் ரேசி
குருப்பான மாத்திரைதான் ஏற ஏறக்
குறிகள் எல்லாம் குறிப்பாக அறிவில் தோற்றும்
மறுப்பான வாசியது நழுவிற் றானால்
மனிதனல்ல மாடென்ற வார்த்தை யாமே.

- போகர் 7000/26

மூலத்திலுள்ள கணேசன் திருவடிகளில் மனதை இருத்தி வாசியை அதற்குள் மூட்டு. ஒரு வேளை பிராணாயாமம் தவறிற்று என்றால் தம்பித்து மூச்சை மேலும் உள்ளே இழு. நேரம் ஏற ஏற ஆதாரக் குறிகள் எல்லாம் குறிப்பாகத் தோன்றும்.

Koviloor Digital Library

அப்படி உன்னால் வாசியை ஏற்ற முடியாமல் நழுவிப் போயிற் றென்றால் நீ மனிதன் அல்ல. உன்னை மாடு என்றுதான் சொல்ல வேண்டும். (கோபித்துக் கொள்ளாதீர்கள். முனிவர் உங்களுக்கு ரோஷம் வரவேண்டும் என்பதற்காகவே சொல்கிறார்).

ஆச்சிந்த மனம்வேறாய் நின்றாய் ஆனால்
அறிவுமகா மந்திரியின் விவேக மாகும்
ஓச்சிந்த மனத்தைநித்தம் பிராணா யாமம்
உயர்ந்தேறி வாசியைநீ இடத்தே பூரி
மூச்சிந்த மூலத்தில் முதிர்ந்து கும்பி
முனையான வலம்ரேசி தவறி டாமல்
காச்சிந்த மூலத்தில் நின்று நின்று
கரைகண்டு தேறியே மேன்மேலேறே.

- போகர் 7000/38

மனம் தடுமாறாமல் ஒரே நிலையாய் நிறுத்தி மூலத்தில் நின்று மேன்மேலும் ஏறிச் செல்வாயாக.

ஏறியே பாரென்று பாட்டர் சொன்னார்
எனைஈன்ற காலாங்கி நாதர் தாமும்
பாரிதுவே வழிஎன்னு பக்குவத்தில் சொன்னார்
பதஞ்சலி வியாக்கிரமர் சிவயோக முனியும்
மீறியே ஏறுதற்கு விளக்கம் சொன்னார்
மிக்கபரா பரத்தாயும் இதுவே சொன்னாள்
ஆறியே நான் பார்த்த அனுபோ கத்தை
அனுபவித்து ஏழாயிரத்தில் அமைத்திட்டேனே.

- போகர் 7000/39

அவ்வாறு ஏறிப் பார் என்று பாட்டர் திருமூலர் சொன்னார். எனது குருநாதரான காலாங்கிநாதர் இதை உணர்ந்துகொள். இதுதான் வழி என்று பக்குவமாகச் சொல்லிக் கொடுத்தார். பதஞ்சலி, வியாக் கிரமர், சிவயோக முனிவரும் மேலே ஏறுவதற்கு வழியை விளக்க மாகக் கூறினார்கள். அவர்கள் மூலமாகக் கற்று உணர்ந்து நான் கண்ட அனுபவங்களை இந்த ஏழாயிரத்தில் கூறுகிறேன்.

திருமூலர், காலாங்கி நாதருக்கு அடுத்தபடியாகவே பதஞ்சலி யையும் வியாக்கிரமரையும் போக முனிவர் கூறுகிறார். பதஞ்சலி யாரின் யோக சூத்திரங்கள் முதலானவற்றையே தமக்குக் கூறப்பட்ட விளக்கமாகவும் கூறுகிறார்.

Koviloor Digital Library

சுவாதிட்டானம்

துதிசெய்த மூலத்தைத் தாண்டி அப்பால்
துடியான நான்கெனும்அங் குலமே தாண்டப்
பதிசெய்த பிரமனது வீடுமாகும்
பகர்ந்தசுவா திட்டானம் என்று பேராம்
அதிசெய்த நால்வட்டம் வளையம் சுற்றில்
ஆறிதழாம் அவ்விதழின் அட்ச ரங்கள்
பதிசெய்த ப3-ப4-ம-ய-ர-ல வாகும்
பாங்கான நடுப்பீசம் நங்-லங் ஆமே.

- போகர் 7000/43

மூலத்தைத் தாண்டி நான்கு அங்குலம் அப்பால் சென்று பிரமனுடைய வீடாகிய சுவாதிட்டானத்தை அடையலாம். நான்கு வட்ட வளையங்கள் அவற்றைச் சுற்றிலும் ஆறு இதழ்கள் அவ் விதழ்களில் ப3-ப4-ம-ய-ர-ல என்ற அட்சரங்களும் நடுவில் நங்-லங் என்ற பீசங்களும் தோற்றமளிக்கும்.

நகாரமென்னும் எழுத்து அதுவும் பிரம்மர்க்கு ஆகும்
வவ்வென்னும் எழுத்து அதுவும் பிருதிவி பீசம்
புகாரமென்னுந் துரியாதிக் கிருப்பி டம்தான்
புகழ்கின்ற இருக்கான வேத மாகும்
அகாரமென்னும் அன்னமாம் வாக னந்தான்
அதினுடைய நிறம் பொன்னின் நிறம தாகும்
மகாருகின்ற இவருடைய தொழிலின் கூறு
மயிர் எலும்பு இறைச்சி தோல் நரம்போடு அஞ்சே.

- போகர் 7000/44

ந-என்ற எழுத்து பிரம்மருக்கு உரியது. (ஓம் நம சிவய என்பதில் ஓம் மூலாதாரத்திலும் ந காரம் சுவாதிட்டானத்திலும் விளங்குகின்றன. வ என்ற எழுத்து பிருதிவிக்கு (மண் ஐம்பூதங்களில் முதலாவது) உரியது. துரியாதிக்கு இருப்பிடம். இதன் வேதம் இருக்கு. பொன் நிறமான அன்ன வாகனம். அகாரமென்ற அட்சரமாகும். இவருடைய தொழில் எலும்பு, தோல், இறைச்சி, நரம்பு, மயிர் என்பவை பற்றியதாம்.

Koviloor Digital Library

உடம்பில் மண்ணின் கூறாக உள்ளவை இவையே.

அஞ்சான பொன்னிறம் பிரமன் பக்கல்
அடங்காத வாணிநிற்பாள் அறிந்து கொள்ளு
தஞ்சாத சதுமுகமும் அபயவர தத்தம்
தண்டுகமண் டலமும் அட்ச மாலை யோடு
பஞ்சான பத்மதளம் பத்மமணி மாலை
பகர்ந்தநவ ரத்தினமாம் கிரீடத் தோடு
தஞ்சான தியானித்துத் தேசியைத்தான் நிறுத்திச்
சிறந்தஅசபா மந்திரத்தைச் செபித்தங் குன்னே.

- போகர் 7000/45

பிரமன் பொன் நிறமாக விளங்குவார். அவர் அருகில் வாணி நிற்பாள். பிரமனுக்கு நான்கு முகம், அபய, வரத முத்திரைகளோடு இருகரங்கள். பத்மதளத்தோடு ஒன்று. பத்ம மணி மாலையோடு இன்னொன்று ஆக நான்கு கரங்கள். நவரத்தின கிரீடம். இவ்வாறு விளங்கும் பிரமதேவரை தியானித்து வாசியை நிறுத்திப் பிறகு அசபா மந்திரத்தை செபித்துக் கொள்வாயாக.

உன்னியே சரசுவதி யைத்தியானித் துஊதி
உறுதியாய் ஏறுவதற் குஉண்மை கேளு
தன்னியே சகலவித்தை தரும்தாய் நீயே
தயா நிதியே சிங்குவையில் தரிக்கும் தாயே
முன்னியே நீபிரிந்தால் மூடனாவான்
முனைந்துநீ முன்னின்றால் முத்தன் ஆவான்
கன்னியே யோகசித்தி வாத சித்தி
காயசித்தி ஞான சித்தி கடாட்சிப் பாயே.

- போகர் 7000/46.

பிறகு சரசுவதியைத் தியானித்து வாசியை ஊதி மேலே ஏறுவதற்கு வழி கேட்பாயாக. சகல வித்தைகளையும் அளிக்கும் தாயே, தயாநிதி போன்றவளே, நாவில் இடம் கொண்டவளே, நீ பிரிந்தால் மனிதன் மூடனாவான். அவ்வாறின்றி நீ கருணை கொண்டு துணை புரிந்தால் முத்தனாவான். எனக்கு நீ யோகசித்தி, வாதசித்தி, காயசித்தி, ஞானசித்திகளைத் தருவாயாக, என்று வேண்டிக்கொள்.

Koviloor Digital Library

காயம் சித்தி யடைந்த பிறகே ஞான சித்தி பெற முடியும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

மணிபூரகம்

மாலினுட வீடு அததான் அறுவிரலின் மேலே
மாசற்ற பிறைபோல கோட்டை யாகும்
பாலினுட வளையம்போல் பத்து இதழாம் சுற்றில்
பகர்ந்த அப் பத்து இதழின் அட்சரங்கள்
தாலினுட-ட3-ட4-ண-த-த2-த3-த4-ந
தயங்காதநவ்வுடனே -ப-ப2-வ்வாகும்
ஆலினுட மங்நடுவிற் பூதம் அப்பாம்
அதன்பீசம் வங்கென்றே அறியலாமே.

– போகர் 7000/48

சுவாதிட்டானத்திலிருந்து ஆறு விரற்கிடை மேலே திருமாலின் வீடு. குற்ற மற்ற பிறை போன்ற கோட்டை. பால்போன்ற பத்து வளையங்கள். அவற்றுக்கு மேலாக பத்து இதழ்கள். அவ் விதழ்களிலே ட3-ட4-ண-த-த2-த3-த4-ந-ப-ப2- நடுவில் வங் என்ற பீசம்.

இது பஞ்ச பூதங்களிலே நீர். நீரின் பீசம் வங்.

அறிந்தமணி பூரகத்தின் வீடும் ஆகும்
அப்பனே துரியமதற்கு இருப்பிடந்தான்
பிறிந்தொரு வேதமுமாம் படிக வண்ணம்
பிரியாமல் இருக்கும் அதன் வாம பாகம்
கறிந்த அறு சுவையும் அங்கே காண லாகும்
கதித்தநீர் மச்சையோடு உதிரம் மூளை
வெறித்ததோர் விந்துவோடும் ஐந்து மாகும்
மிக்கசங்கு சக்கரமுங் கருட வாகனமே.

– போகர் 7000/4[illegible]

இதுதான் மணிபூரகம். அதன் நிலை துரியம்.

Koviloor Digital Library

இது படிகவண்ணம். அதன் வாம பாகத்தில் அறு சுவையும் காணலாம். இதன் கூறாக உள்ளவை எலும்புகளின் நடுவில் உள்ள மச்சை, இரத்தம், மூளை, விந்து, நீர் என்ற ஐந்து மாகும்.

சங்கு சக்கரங்களுடன் கூடியவரும், கருடனை வாகனமாக உடையவரும் -

வானமாய் லட்சுமியின் சமேதர் பக்கல்
வாசியோடு மங்என்றே இருத்திக் கும்பி
ஆகனமாய் ஓம்நமோ நாராயணாய என்று
அனுசரித்துச் செபஞ்செய்து அஞ்சலிதான் பண்ணு
தேகனமாய்ச் செகமெல்லாம் இரட்சிக்குந் தாய்
திரோதைதன் மயக்கத்தில் சுழற்றுந் தாய்தான்
மோகனமாய் மோகமெல்லாம் ஆன வீடு
மூக்கிறச்சி குடியிருக்கும் முதிர்ந்த வீடே.

- போகர் 7000/50

லட்சுமி சமேதராகவும் விளங்கும் பகவானை நினைத்து 'மங்' என்றே நிறுத்திக் கும்பிப்பாயாக. ஓம் நமோ நாராயணாய என்று செபித்து வணங்குவாயாக. இந்த உலகத்தை யெல்லாம் காப்பாற்றும் தாயான திரோதை (மாயை) தன் மயக்கத்தில் எல்லாவற்றையும் சுழற்றக் கூடியவன். விரும்பி அமர்ந்த வீடு இதுவே யாகும்.

வீடாகத் திரோதைதான் இருந்த வீடு
வெகுபோகம் காமியத்தை விடுத்த வீடு
மாடாக மனங்கலங்கி நின்ற வீடு
மாயமெல்லாம் குடி கொண்ட மகத்தாம் வீடு
பேடாகக் கருத் தழிந்து பெண்ணைத் தேடிப்
பேய்க்கூத்தாய் நின்று அலைந்த பெரிய வீடு
சாடாகச் சார்பழித்த சாதிவீடு
தன்மயமாய் வாசிகொண்டு தாக்கி டாயே.

- போகர் 7000/51

Koviloor Digital Library

அநேகவிதமான அனுபவிக்கக் கூடிய பொருள்களையும் ஆசைகளையும் வளர்க்கும் வீடு. மனதைக் கலக்கமடையச் செய்யும் வீடு. எல்லாவிதமான மாயங்களும் குடிகொண்டிருக்கும் மகத்தான வீடு. புத்தி கெட்டுப் பெண்ணைத்தேடிப் பேய்க் கூத்து ஆடவைக்கும் வீடு. எல்லைக் கோடுகளைத் தாண்ட வைக்கும் வீடு. வாசி கொண்டு இதனைத் தாக்குவாய்.

தாக்கியே சந்திரமண் டலத்திற் பூவைச்
சகத்திரமாய் இதழாலே தரிக்கப் பண்ணிப்
பாக்கியே பலதூப தீபந் தம்மைப்
பண்பாக மனதால்பா வகமே பண்ணி
ஆக்கியே மேலேற அருள்தா என்று
அட்டமா சித்திகள் தந்து அனுப்ப என்று
போக்கியே ஐம்புலனைப் பொறியின் பக்கல்
போக்காமல் நிறுத்தென்று போற்றி செய்யே.

- போகர் 7000/52

மணி பூரகத்தைத் தாக்கி மலர்களால் அர்ச்சித்து தூப தீபம் காட்டுவதாக மனதால் பாவனை பண்ணி, மேலே செல்ல எனக்கு அனுமதிதா, அட்டமா சித்திகளும் கொடுத்து அனுப்புவாயாக, என்னுடைய ஐம்புலன்களும் பொறிகளின் பக்கம் போகாமல் நிறுத்துவாய் என்று வேண்டிக் கொள்வாயாக.

செய்யவே மாலோடு லக்குமி தாமும்
சித்தமகிழ்ந்து அப்போது சித்தி ஈவார்
பையவே ஏறு தற்குப் பயனும் சொல்வார்
பற்பலவாம் தொழிலின் பக்குவமே சொல்வார்
உய்யவே இறக்காமல் சடந்தான் நிற்க
உறுதியாம் யோகத்துக்கு உண்மை சொல்வார்
ஐயவே அட்டாங்கம் அளைந்து பார்க்க
அதற்கு அதற்கும் அங்கமெல்லாம் அறிவிப்பாரே.

- போகர் 7000/53

Koviloor Digital Library

அவ்வாறு வேண்டிக் கொண்டால் திருமாலும் திருமகளும் மகிழ்ச்சி கொண்டு உனக்கு சித்தி தருவார்கள். மேலே ஏறிச் செல்வதால் அடையும் பயனையும் சொல்வார்கள். அதற்குப் பக்குவமான வழிகளையும் சொல்வார்கள். இந்த உடல் அழியாமல் இருக்கவும், உறுதியான யோகத்துக்கு உண்மைப் பொருளையும் அதன் எட்டு அங்கங்களையும் அளந்து அறிந்து கொள்வதற்கான முறைகளையும் சொல்வார்கள்.

அநாகதம்

அறிவுக்கு மேலே எட்டாம் அங்குலத்துக்கு
அப்பாலே அநாகதத்தின் வீட்டைக் கேளு
முறிவுக்கு முக்கோண மாக நிற்கும்
முதிர்வளையம் பன்னிரண்டு இதழு மாகும்
பரிவுக்கு க-க2-க3-க4-ங-ச-ச2
பேரான ஜ-ஜ2-ஞ-ட-ட2 வாகும்
இறிவுக்கங்கு இதழில் நிற்கும் அட்சரங்கள்
ஏற்றமாம் சுழுத்தி அதற்கு இருப்பு மாமே.

- போகர் 7000/54

மணி பூரகத்திற்கு மேலாக எட்டு விரற்கிடை தூரத்தில் அநாகதம் என்ற வீடு உள்ளது. முக்கோணமும் அதற்கு மேல் வளையம் சுற்றிலும் பனிரெண்டு இதழ்கள் அவ்விதழ்களில் க-க2-க3-க4-ங-ச-ச2-ச3-ச4-ஞ-ட-ட2 என்ற அட்சரங்கள். அதற்கு இருப்பு சுழுத்தியும் ஆம்.

ஆமென்ற சிகாரத்தின் எழுத்து நடுவாகும்
ஆண்மையாம் பூதமது தேயு தானாம்
தேமென்ற செம்புநிறச் சிவப்பு மாகும்
தேயுவின் தன் பீசமது ரவ்வு மாகும்
ஓமென்ற ஒளிகோடி பானுவாகும்
உருத்திரனு முருத்திரியும் நடுவே நிற்பார்
கோமென்ற அவருடைய குணம் ஏது என்னில்
கொடும் புசிப்புச் சோம்பல் பயந் தூக்க மாமே.

- போகர் 7000/55

Koviloor Digital Library

நடு எழுத்து சி. இது பஞ்ச பூதங்களிலே அக்னிக்கு உரியது. செம்பு போன்ற சிவந்த நிறமுடையது. அக்னியின் பீசம் ர. இதன் ஒளி கோடி சூரியர்களின் ஒளிக்குச் சமானம். இதன் நடுவில் ருத்திரனும் ருத்திரியும் நிற்பார்கள். அவர்களுடைய குணம் ஏதென்றால் உண்ணல், உறங்கல், பயம், தூக்கம், சுகம் என்பவையாம்.

தூங்கவே எழுப்பிமெள்ளப் பெண்ணைச் சேர்க்கும்
சுகம் ஐந்தும் சிவன் உமைக்குந் தொழில்தா னப்பா
ஓங்கவே இரத்தனசிம் மாசனமும் ஆகும்
உமாசகிதர் சடாமகுடர் அத்தி மாலை
மாங்கவே மான்மழுவும் வரிப்புலித் தோல்
மகா கோடி சூரியப் ரகாச மாகும்
தாங்கவே விபூதிதா ரணர்தேவ தேவர்
சர்ப்பஆப ரணந்தரித்த தயாளர் தாமே.

- போகர் 7000/56

தூக்கத்திலிருந்து எழுப்பி பெண்ணோடு சேர்ந்து சுகத்தை அனுபவிக்கச் செய்யும். சிவன் உமைக்குத் தொழில் இது.

இரத்தின சிம்மாசனத்தில் உமா சகிதராக, ஜடா மகுடத்துடன் எலும்புகளாலான மாலை அணிந்து, மான்மழுவும் தரித்து புலித்தோல் ஆடையணிந்து சர்ப்ப ஆபரணங்களும் விபூதியும் தரித்துக் கோடி சூரியப் பிரகாசத்துடன் விளங்குவார்.

சிவபெருமானைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் அவருடைய தயாள குணமே சிறப்பித்துக் கூறப்படுகிறது. திருமூலர் பிராண், பிறப்பிலி பிஞ்ஞகன் தஃ பேரருளாளன் என்று குறிப்பிடுவதையும் காண்க.

தாமென்றே தியானித்து வாசியைநீ வைத்துத்
தம்பித்து ஓம்ஆம் ஔம் சிவயநம என்றே
ஓமென்றங்கு உன்னியே உருத்திரித்தாய் பதத்தை
உறுதியாய் மனம் தன்னில் ஒவ்வப் பண்ணி

Koviloor Digital Library

ஆமென்ற ஐம்புலனை அறிவால் தள்ளி
ஆதியந்தம் இல்லாத தாயே என்று
காமென்ற கடாட்சம் வைத்தே அருள்தா என்று
கருத்தாக மனம் தன்னை ஒளியில் வையே.

- போகர் 7000/57

அவரைத் தியானித்து மூச்சை அடக்கி ஓம் ஆம் ஔம் சிவாயநம என்று செபித்து உருத்திரித்தாய் பொன்னடிகளில் மனதை உறுதியாக ஒன்ற வைத்து, ஐம்புலன்களின் மேல் செல்லும் ஆசைகளை அறிவால் அகலத் தள்ளி ஆதியும் அந்தமும் இல்லாத தாயே அருள் தா என்று வேண்டிக் கொண்டு மனதை ஒளியில் நிறுத்துவாயாக.

ஒளியான நந்திவா கன்மும் ஆகும்
ஒருசாம வேதத்தின் உறுப்பு மாகும்
களியான காமப்பால் பாய்ச்சல் செய்து
கடுநரையும் திரையொடுகண் புகைச் சலாகி
வெளியான சடமழித்து விந்தை ஊற்றி
வெறுங்கூத்தாய் ஞானமெல்லாம் விழலாய்ப் பண்ணும்
கொளியான இவருடைய கூத்தைக் கண்டு
கும்பித்துக் குறியோடே கூர்ந்தி டாயே.

- போகர் 7000/58

நந்தி வாகனம், சாமவேதம் இவருக்குரியவை. இவருடைய அருளில்லாவிட்டால் காமவசப்பட்டு விந்தை ஊற்றி நரை திரை மூப்பால் உடலை அழித்துக் கொண்டு ஞானத்தை வீணடிக்கும் கூத்துக்கு இரையாவாய். அது அவருடைய கூத்து. அதனால் அந்தக் கூத்துக்கு இரையாகாமல் வாசியை நிறுத்தி உன்னுடைய குறிக்கோளில் கண்ணாக இருப்பாயாக.

கூர்ந்திட்டு நடுவணையில் காந்தி காணும்
கூகைக்கு இராக்காலம் குறிகண்டாற்போல்
ஆர்ந்திட்டே அவர் பதத்தில் மனவிலங்கு மாட்டி
அறிவோடே அசையாமல் அதற்குள் நின்றே

Koviloor Digital Library

ஏர்ந்திட்டங் கேறுதற்கு வழியைக் கேட்டே
எட்டெட்டுச் சிந்திக்கும் இயல்பு வாங்கி
வார்ந்திட்டு வாதத்தின் கருவெல்லாங் கேட்டு
வகையான காயசித்தி மார்க்கம் கேளே.

- போகர் 7000/59

அவ்வாறிருந்தால் இருதய ஸ்தானத்தில் ஒளி தோன்றும். கூகை (ஆந்தை)க்கு இரவுக் காலமே குறியாக இருப்பதுபோல் அவர் பதத்தில் மனம் என்ற விலங்கை மாட்டிக் கொண்டு, அறிவு தவறாமல் அத்திருவடிகளுக்குள் நின்று மேலும் ஆதாரங்களில் ஏறிச் செல்ல வழியைக் கேள். அணிமாதி சித்திகள் எட்டுக்கும் பொருள் தெரிந்துகொள். வாதத்தின் கருப் பொருளைத் தெரிந்து கொள். காய சித்தி பெறுவதற்கும் வழியைக் கேட்பாயாக.

கேளாமே சந்திரமண் டலத்தில் புக்குஅங்கு
கெடியான மலர்வாங்கிப் பதத்தில் வைத்துத்
தேளாமே சிவனோடு சத்திக் குத்தான்
சிதையாமல் மனந்தன்னைத் திருவடிக்கீழ்ச் சேர்த்து
வாளாமே மந்திரத்தை உன்னி உன்னி
வாசியை நீ மறவாமல் மருவிப் பூட்டித்
தூளாமே நீ அகற்றித் தூபந் தீபம்
தோத்தரித்து விடை தரவே சுளுக்காய் ஏறே.

- போகர் 7000/60

சந்திரமண்டலத்திலிருந்து மலர்களைக் கொண்டு வந்து அவர்களுடைய திருவடிகளில் வைத்து மனதை அங்கே நிலை நிறுத்தி இடைவிடாமல் மந்திரத்தைச் செபித்து வாசியை வசத்தில் நிற்கச் செய்து தூபதீபம் காட்டித் தோத்தரித்து விடை பெற்றுக் கொண்டு மேலே ஏறுவாயாக.

* * *

Koviloor Digital Library

விசுத்தி

ஏறியே பன்னிரண்டு அங்குலமே தாண்ட
ஏற்றமாம் விசுத்தியென்ற தலமும் ஆகும்
மாறவே அறுகோணம் வளையம் ஒன்று
மகத்தான ஓர் பதினாறு இதழ் உளதாகும்
ஆறவே இதழுக்குள் அட்சரங்கள்
அ-ஆவும் இ-ஈவும் உ-ஊவோடு
தூறவே ரு-ரூவும் லு-லூ வோடு
துணையாம், ஏ-ஐ-ஓ-ஔ அம்-அஹவே.

- போகர் 7000/61

மேலே பனிரெண்டு விரற் கடை தாண்ட விசுத்தி என்ற உயர்ந்த தலத்தை அடையலாம். அறுகோணங்கள். சுற்றிலும் வளையம். அதன்மேல் பதினாறு இதழ்கள். அவ்விதழ்களுக்குள் அ-ஆ-இ-ஈ-உ-ஊ-ரு-ரூ-லு-லூ-ஏ-ஐ-ஓ-ஔ-அம்-அஹ என்ற எழுத்துக்கள் விளங்கும்.

அம்முதலாம் ஓர் பதினாறு எழுத்தும் இட்டே
அறுகோண நடுவே அகாரம் நிற்கும்
வம்முதலாய் மகேசுவர மகேசுவரியும் நிற்பார்
மகத்தான சொர்ப்பனத் துக்கு இருப்புமாகும்
பும்முதலாய்ப் பூதமது வாயு வாகும்
புகழான பீசமது வவ்வு மாகும்
நம்முதலா அதர்வண வேதம்தா னாகும்
நல்லமனோ வாகனமாய் நாட்டலாமே.

- போகர் 7000/62

அறு கோணத்தின் நடுவில் அகாரம் விளங்கும். அங்கு மகேசுவரனும் மகேசுவரியும் நிற்பார்கள். இது சொப்பன நிலையை உடையது. இதன் பூதம் வாயு. பீசம் ய-அதர்வண வேதம் இதற்குரியது.

நாட்டவே இவருடைய தொழிலின் நட்பு
நடத்தலோடு ஓடலும் மயங்கிக் கிடத்தல்
நீட்டமாம் நிறுத்தல் கலங்கா திருத்தல்
நிலை ஐந்தின் விபரதமதை நிலைக்கக்கேளு

Koviloor Digital Library

பூட்டமாம் புசிந்தலோடும் இராகங் கேட்டல்
பொங்கிய கோபம் சண்டை சுமையைத் தாங்கல்
ஓட்டமாம் ஓங்காரம் ஊணைக் கண்டால்
உயர்வாயைத் திறந்திடுதல் உறுதி காணே.

- போகர் 7000/63

இவர்களுடைய தொழில் நடத்தல், ஓடல், மயங்கிக் கிடத்தல், நிறுத்தல், கலங்காதிருத்தல் என்பனவாம். மேலும் புசித்தல், இராகம் கேட்டல், கோபம், சண்டை, சுமையைத் தாங்கல், உணவைக் கண்டால் 'ஆ' என்று வாயைப் பிளந்தலுமாம்.

அழைத்திட்டு நாலுக்குள் வங்கென்று ஊணாய்
ஆதியாம் ஓம்நமசி வாய என்றே
தழைத்திட்ட வாசியைநீ வாயு வீட்டில்
சுருக்கிட்டுக் கட்டிடவே ஓடா தப்பா
பழைத்திட்ட பதினாறு தளத்தில் தானும்
பாங்கான சீவகளை இருப்பு மாகும்
திழைத்திட்ட சீவகளை இருந்த தாலே
சிறப்பாகப் பாடிவைக்குந் திறமை யாமே.

- போகர் 7000/65

வாசியை வங்கென்று ஊதி ஆதியாம் ஓம் நம சிவய என்று வாயுவின் வீடான இந்த ஆதாரத்தில் வாசிக்குச் சுருக்குப் போட்டுக் கட்டிவிடு. வாசி ஓடாது. இதன் பதினாறு இதழ்களும் சீவகளை உடையவை. அதனால் சிறப்பாகத் தோத்தரிக்க முடியும்.

தானான வாயு அதின் வீட்டில் நின்று
தம்பித்து ஆத்தாளைத்தான் விலங்கு பூட்டி
போனான சந்திரமண் டலத்தில் பூவால்
போற்றியே அடிவணங்கி வாசிபூட்டி
தோனான மேலேற வழிதா என்று
சுத்தசை தன்னியத்தைச் தோத்தரித்து
வானான வாதசித்தி யோக சித்தி
மகத்தான காயசித்தி மார்க்கங் கேளே.

- போகர் 7000/67

வாயுவின் வீட்டில் வாயுவை உள்ளடக்கி ஆத்தாளின் கால்களிலே (மனம் என்ற) விலங்கைப்பூட்டி சந்திர மண்டல மலர்

Koviloor Digital Library

களால் அர்ச்சித்து வணங்கி, எனக்கு மேலே ஏற வழி அருள்வாயாக என்று சுத்த சைதன்னியமாகிய மூல முதற் பொருளை வேண்டிக் கொள். வாத சித்தி, யோக சித்தி, காய சித்திகளைப் பெறுவதற்கு வழியைக் கேள்.

மார்க்கமாம் மந்திரத்தை உன்னி உன்னி
வா்சியை நீ மறவாமல் மருவிப் பூட்டி
ஆர்க்கமா யங்ஙென்று கும்பித்து நிற்கில்
ஆத்தாளும் அப்பனுமே அகமகிழ்ந்து
மார்க்கமாய் வாதத்தின் வழியும் சொல்லி
வரிசையொடு ஏறுதற்கு வழியும் சொல்வார்
ஊக்கமாம் மகேசுவரத்தின் பதியை விட்டே
உயர்ந்தேறிப் பதினோறங் குலம் மேலேறே.

- போகா் 7000/68

வாசியை நிறுத்தி மறவாமல் மந்திரத்தை செபித்துக் கொண்டே யங் என்று கும்பித்து நின்றால் ஆத்தாளும் அப்பனும் அகமகிழ்ந்து வாதத்தின் வழியைச் சொல்வார்கள். அதன்பின் மகேசுவரன் மகேசுவரியின் பதியை விட்டுப் பதினொரு விரற் கிடை மேலே ஏறுவாயாக.

ஆக்கினை

மேலேறி இருபுருவ நடுமை யத்தில்
மிகையான அண்டம்போல் நிற்கு மப்பா
வாலேறி வட்டமாம் வீடுபோல
வளையம் ஒன்று இரண்டு இதழ் தான் ஹ ள வாகும்
ஆலேறி யங்ஙென்ற அட்சரந்தான் நடுவே
ஆகாச பூதமாம் யவ் வுமாகும்
ஆலேறி மனோன்மணியும் சதாசிவனும் நிற்பார்
அவத்தைதான் சாக்கிரத்தின் வீடுமாமே.

- போகா் 7000/69

மேலே இரு புருவருங்களுக்கும் நடுவில் வட்டமாக முட்டை போல் நிற்கும். வளையம் ஒன்று. இதழ்கள் இரண்டு இதழ்களிலே

Koviloor Digital Library

ஹ-ள என்ற எழுத்துக்கள். ய காரம் நடுவில். இதன் பூதம் ஆகாயம். ஆகாயத்தின் பீசம் ய. இதன் அவத்தை சாக்கிரம் இங்கு சதாசிவமும் மனோன்மணித் தாயும் நிற்பார்கள்.

வீடுமாம் வண்ணமது மேக வண்ணம்
விளைகின்ற தொழிலுதான் காமக் குரோதம்
வாடுமாம் லோபமொடு மோக மாகும்
மகத்தான மாச்சரியத்தோடு ஐந்தாகும்
நாடு நான்முகன் மாலும் சிவன் மகேசன்
நலமாகக் காப்பார்கள் திக்கைத் தானும்
தாடுசதா சிவந்தானுந் தளவாய் ஆகும்
தளவாயைக் கண்டாக்கால் சகல மாமே.

- போகர் 7000/70

இதன் நிறம் மேகநிறம். தொழில்கள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம் மாச்சரியம் என்ற ஐந்தாகும். நான்முகன், நாராயணன், சிவன், மகேசன் நால்வரும் நான்கு திசைகளுக்குக் காவலாக நிற்பார்கள். இவர்களுக்குச் சேனைத் தலைவர் சதாசிவனே ஆவார். அவரைத் தரிசித்தால் யாவும் கைகூடும்.

உரைத்துமே ஆக்கினையாம் சக்கரத்தில்
உகந்துமே மனோன்மணியை உச்சரித்து
மரைத்துமே மந்திரத்தைச் சொல்லக் கேளு
மருவுங்-க-ஏ-ஈ-ல-ஹ்ரீமு மாகும்
அரைத்துமே ஹ-ஸ-க-லவ்வு மாகும்
அதன் பின்பு ஹரீம்-ஸ-க-ல-ஹரீமு மாகும்
முரைத்துமே முக்கண்டம் பஞ்சதசாட் சரியை
முனிந்துமே உச்சரித்து மூட்டு நீயே.

- போகர் 7000/72.

ஆக் ஞா சக்கரத்தில் மனோன் மணித்தாயை மனத்துள் வைத்து க-ஸ-லு-ஹரீம், ஹ,ஸ,க,ல, ஹரீம்-ஸ-க-ல-ஹரீம் என்ற மந்திரத்தை உச்சரிப்பாயாக.

Koviloor Digital Library

மூட்டியே தாயினது பதத்தைக் கண்டால்
முஷ்க்ரமா மாயை எல்லாம் ஒழிந்து போகும்
நாட்டியே எட்டோடே நாலைக் கூட்டும்
நாதாந்த சித்தியெல்லாம் கணத்தி லாகும்
மாட்டியே தமருக்குள் புகுத லாகும்
மயிர்ப்பாலம் நெருப்பாறு கடக்க லாகும்
நீட்டியே நிரா தாரம் அறியலாகும்
நிச்சயமாய்க் குறிகள் எல்லாம் நினைக்கி லாமே.

- போகர் 7000/73

அவ்வாறு உச்சரித்துத் தாயின் திருவடிகளைக் கண்டால், உன்னை இந்த மண் உலகத்தோடு பிணைத்து வைக்கும் மாயை என்பது ஒழிந்து போகும் எட்டும் நாலும் இணங்கிவரும். நாதாந்த சித்திகள் யாவும் வசமாகும். ஆன்மா ஒடுங்கி நிற்கும். மயிர்ப்பாலம் நெருப்பாறுகளைத் தாண்டவும், நிராதாரத்தை அறியவும் முடியும்.

நினைக்கவே ஐம்புலனும் ஒடுங்கிப் போகும்
நோய்மூப்பு சாக்காடு நரை திரையும் போகும்
கனைக்கவே காயசித்தி வாதசித்தி காணும்
கண் இமைக்குள் போய் உயிரைக் கடுக மீட்கும்
அனைக்கவே சாக்கிரத்தில் இருந்து கொண்டே
ஆயியோடு அப்பனிவர் கூத்துப் பார்த்துத்
தனைக்கவே சரியையொடு கிரியை யோகம்
சார்ந்தோர்கள் ஞானமெல்லாம் தான் ஆனாரே.

- போகர் 7000/74

புலன்கள் ஐந்தும் ஒடுங்கிவிடும். பிணி, முப்பு, சாக்காடு, நரை, திரை யாவும் அகன்று விடும். காயசித்தி வாத சித்திகள் கைவசமாகும். கண் இமைக்கும் நேரத்திற்குள் போன உயிரைத் திருப்பிக் கொண்டுவந்து விடும். சாக்கிரத்தில் இருந்து கொண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற மேலான வழிசார்ந்தவர்களின் நிலையைப் பெறுவாய்.

Koviloor Digital Library

குருபதம்

தானான மனோன்மணியைத் தாண்டி அப்பால்
தனித்ததோர் எட்டுவிரல் மேலே கேளு
கோனான குருபதந்தான் கூடிப் பாரு
குறிப்பான இதழ்தான் ஓர் ஆயிரத்தெட்டு
ஆனான நடுமையம் ஐங் கோணமாகும்
அகாரமாம் உகாரமொடு மகார மாகும்
நானான நாதமொடு விந்து ஐந்தும்
நலத்தஐங் கோணத்தில் நிற்கும் பாரே.

- போகர் 7000/75

ஆக்ஞா சக்கரத்துக்கு மேலே எட்டு விரற்கிடைக்கப்பால் குருபதம் உள்ளது. ஓர் ஆயிரத்தெட்டு இதழ்களை உடைய தாமரை மலரின் மேல் ஐங் கோணச் சக்கரத்தில் அகார உகார மகாரங்கள் மூன்றும் நாதம், விந்து இரண்டும் ஆக ஐந்தும் அந்த ஐங்கோணத்தில் நிற்கும். அதுவே சஹஸ்ராரம் என்ற ஆதாரமாகும். அதன் நடுவே மனோன்மணித்தாய் வீற்றிருப்பாள்.

ஆக்ஞா சக்கரத்தின் நடுவில் ஒளிமயமாய் ஓங்காரம் உதிக்கும். நிர்மலமான குணம் குறிகளற்றதும் அழுக்கற்றுதுமான சக்தி ஆதாரமில்லாத நிலையில் தானே தனக்கு ஆதாரமாய் நிற்கின்ற தாயைக் காண்பாய் வாசியை அதற்குள் வைத்து ஓடாமல் நிறுத்திப் பார்க்கப் பிறவி என்ற துன்பம் நீங்கும். உன் ஆன்மாவை எங்கும் நிறைந்த பரமான்மாவாகிய பூரணம் உட்கொண்டுவிடும். வேதாந்தம் கூறுகின்ற ஆதி என்ற இப்பொருளை மற்றவர்களால் அறிய முடியாது.

ஆதாரங்கள் உடலில் உள்ள உறுப்புகள் அல்ல என்று முன்பே கூறினோம். இவற்றுக்கு இடம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த இடங்களில் தேடுவதால் பயனில்லை. இவை மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சத்தியை எழுப்பும்போது படிப்படியாக அடையக் கூடிய நிலைகளே.

Koviloor Digital Library

அக்கு பஞ்சரில் எந்தப் புள்ளியை அழுத்தினால் எந்த உறுப்பு பாதிக்கப்படும் என்று உள்ளதுபோலும் - வர்மக்கலை பயில்வோர் எந்தப் புள்ளியில் தொட்டால் எந்த இடம் எப்பயன் பெறும் என்று அறிந்து வைத்திருப்பதுபோலும் - யோக சாதனை புரிவோர் செய்யும் பயிற்சியில் மூச்சை உயர்த்தி நிறுத்தும் நிலைகளை - ஆதாரங்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மூச்சை அடக்கித் தியானத்தில் அமரும்போது நமது பயிற்சியால் எந்த ஆதாரம் வரை செல்லத் தகுதி பெற்றுள்ளோமோ அந்த ஆதாரம் வரை ஆதார சக்கரத்தையும் அதில் வீற்றிருக்கும் தெய்வங்களையும் அறிய முடியும். இது முற்றிலும் உள்ளார்ந்த அனுபவ நிலையே தவிர வெளிப்படுத்தக் கூடியதோ பிறருக்குச் சுட்டிக் காட்டக்கூடியதோ அல்ல.

இதன் பயன் என்ன? யோக சாதனையினால் ஆன்ம விடுதலை. இறைவனோடு இரண்டறக் கலத்தல்.

அதன் அவசியம் என்ன?

உலக வாழ்க்கையில் உழன்று அதைத் தவிர வேறு ஏதும் இல்லை என்று நினைப்பவர்களால் உணர முடியாது. பிறப்பு இறப்பு என்ற சுழற்சியில்பட்டு மாயும் மனிதன், தான் இறந்த பிறகு என்ன இருக்கிறது என்று உணராத மனிதனால் அதன் அவசியத்தை உணரவும் முடியாது.

மரணத்திற்குப் பிறகு மனிதன் அடையும் நிலை என்ன? மறுபடியும் ஒரு பிறவியை அடையும்வரை அந்த ஜீவன் என்ன துன்பங்களை அனுபவிக்கிறது? பிறவி அடைந்த பின் மறுபடியும் எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்துகிறது? ஜீவன் உடலோடு கூடிய வாழ்க்கைக்கு அப்பால் நின்று சிந்திக்க முடிந்தால் - மீண்டும் மீண்டும் பிறந்து பிறந்து இறக்கும். வாழ்க்கையின் அவலம் புரியும். ஐயோ இனிப்பிறவி வேண்டாம் என்று அலறவும் தோன்றும்.

அந்த நிலையை உணரும்போதுதான் ஆன்ம விடுதலை - பிறப்பறுத்தல், இறைவனோடு இரண்டறக் கலத்தல் - என்ற சொற்களின் பொருள் புரியும்.

Koviloor Digital Library

வெளியான வாசியைத்தான் வரவழைத்து
வீட்டுக்குள் அங்கங்கே வைத்திட்டுத்தான்
தனியாக வைத்திட்டுச் சாதித்தாக்கால்
சந்தித்து வாசியும் ஈசனும் ஒன்றாகும்
வளியாக வாசியைப்போல் சித்தொன்றில்லை
மாசித்துச் சிவனவனாம் வாசியொன்றில்
ஒளியாக வாசியது உயிரை மீட்கும்
உறுதியாம் சிவயோகத் துண்மை தானே.

- போகர் 7000/102

இப்பாடலால் வாசியோகத்தின் பெருமையைத் தெள்ளத் தெளியக் காட்டுகிறார் போக முனிவர். வாசியை மூலாதாரம்முதல் ஒவ்வொரு வீடாக ஏற்று நிறுத்திச் சாதிக்க முடிந்தால் ஈசனும் வாசியும் ஒன்றாவதை உணர்வாய். வாசியை வசப்படுத்துவதைவிடப் பெரிய சித்து வேறொன்றுமில்லை. அவ்வாறு வசப்படுத்தியவன் சிவனே ஆவான். வாசி உயிரையே மீட்கும் என்பது சிவயோகத்தின் உண்மையாகும்.

ஞானத்தைப் பற்றிப் பாடும்பொழுது சித்தர்கள் மெய் மறந்து அருவிபோல் கொட்டத் தொடங்கி விடுகிறார்கள். அவற்றைப் புரிந்து கொள்ள அனுபவம் வேண்டும். அனுபவமில்லாதவர்கள் விளக்க முயல்வது உணவை உண்டு பாராதவன் சுவை சொல்ல வந்த கதையாகத் தான் இருக்கும்.

Koviloor Digital Library

கொங்கணவர்

உணர்ச்சி மயமான பாடல்களால் உள்ளத்தை நெகிழவைக்கும் தன்மைகொண்ட பாடல்களைப் பொழிந்து தள்ளியவர் கொங்கு நாட்டைச் சேர்ந்த கொங்கணவர்.

போகரின் மாணாக்கர். இவருடைய கடைக் காண்டம் 500 என்ற நூல் ஞான நூல்களின் மகுடம் போன்றது. அகத்தியர் முதலாக அனைவராலும் பாராட்டப் பெற்றது. ஆறாதாரங்களைப் பற்றியும், தத்துவங்கள் தொண்ணூற்றாறு பற்றியும் நவரத்தினங்கள்போல் ஒளிவிடும் பாடல்களால் கொங்கணவர் சுருக்கமாகப் பாடியுள்ளார். அவற்றின் கவிதை நயத்திற்காகவேனும் கற்றுணர்தல் பயனுடைத்தாகும்.

மூலாதாரம்

கேளுநீ மூலாதாரங் கெடியண்டம் போலே நிற்கும்
வேளுநீ யதன்மேல் நாலு விளங்கிய இதழுமுண்டு
வாளுநீ யவ்வைத்தொட்டு வழங்கிய காரமட்டுந்
தோளுநீ நடுவே மூன்று துலங்கிய கோணம்பாரே. 686

பாரந்த முன்றுக்குள்ளே பருவத்தைச் சொல்வேன்யானு
மாரந்த வகாரமொன்றி லதன்மேலே கணேசர் நிற்பார்
வாரந்த வுகாரமொன்றில் வல்லபை யதன்மேனிற்பாள்
கூரந்த வொன்றிற்கேளு குண்டலி கதவிப்பூவே. 687

மூலாதாரமானது அஃகைப்போல் முக்கோணமாக இருக்கும். அதன்மேல் ஒரு வளையமும் அதைச் சுற்றிலும் நான்கு இதழ்களும் இருக்கும். இதழ்களில் வ-ச-ஷ-ஸ என்ற நான்கு எழுத்துக்கள் நிற்கும். நடுவிலுள்ள முக்கோணத்தின் மையத்தில் ஓம்காரம் நிற்கும். அதன் ஒரு புறத்தில் 'அ'காரமும் மறுபுறத்தில் 'உ'காரமும் நிற்கும். அகாரத்தின் கணேசர் வீற்றிருப்பார். உகாரத்தின் மேல் வல்லபைச் சக்தி வீற்றிருப்பாள். மற்றொரு கோணத்தில் கதலிப்பூப்போல் குண்டலிச் சக்தி நிற்பாள்.

*பூப்போலே முகங்கீழாகப் பெண்பாம்பு போலே சீறித்
தூப்போலே சுருட்டிக்கொண்டு சுழிமுனை முட்டிநிற்பாள்
காப்போலே யவள்வாய்க்குள்ளே காணப்பா நந்தி நிற்பார்
கோப்போலே கோடிபானு கொள்கிடுஞ் சுகாரத்தீயே. 688*

கவிழ்ந்த வாழைப்பூவைப்போல், முகத்தைக் கீழ்நோக்கி வைத்துக் கொண்டு பெண் பாம்புபோல் சுருட்டிப் படுத்தபடி சீறிக் கொண்டு சுழுமுனை வாசலை மூடிக்கொண்டு நிற்பாள். அவளுடைய வாய்க்குள் நந்தி தேவர்கோடி சூரியப் பிரகாசத்துடன் நிற்பார்.

*தீயையே மூடிக்கொள்வாள் சிறந்தபூ விதழாய்ச் சேர்த்தி
வாயையே தூர்க்காள் பாவி வழங்கிய சத்தியெட்டு
மோயையே சத்தியெட்டு மோங்கிற்று விதழெட்டாகத்
தாயையே பூசைபண்ணு தனிச்சத்தி திறப்பாள்பாரே. 689*

இந்த நந்தியை எட்டு விதமான சக்திகள் இதழ் ரூபத்தில் நின்று மூடிக்கொள்வார்கள். இதிலிருக்கும் எட்டு சக்திகளையும் எட்டு இதழில் நிறுத்தி தியானம் மற்றும் பூசை செய்து போற்ற வேண்டும்.

*திறப்பது மேதோயென்னில் திறமான லகிரியாலே
விறப்பது வருஷம்பத்து விருந்தாலும் சும்மா காட்டாள்
மறப்பது பாணமற்றால் வாசலைத் திறந்துபோட்டு
வுறுப்பது வெட்டுப்பேரு முலாவுவா ருற்றுப்பாரே. 690*

*உற்றுப்பார் நிமிரத்தொட்டு வோகோகோ வெட்டுநாம
மெற்றுப்பார் நந்திகண்டா லெவருமெ யேவல்கேட்பா
ரொற்றுப்பா ரிதுவேமூல முயர்ந்திட்ட துரியாதீதங்
கொற்றுப்பா ரிதற்குள் வாசி குமட்டிநீ மாட்டு மாட்டே. 691*

எட்டு விதமான சக்திகள் கண்ணை மூடிக்கொண்டு நிற்பார்கள். பத்துவருடம் நீ பூசைசெய்தாலும் இதழ்களைத் திறக்க மாட்டார்கள். ஆகவே, அவ்விடத்தில் லாகிரியூட்டினால் இதழ்களைத் திறந்துவிட்டு வெளியே உலாவுவார்கள். எட்டு விதமான சக்திகளுக்கும் எட்டுப் பெயர்கள் உண்டு. இவர்கள் அனைவரும் நீ நந்தி கண்டவுடன் உனக்கு ஏவல் புரிந்து நிற்பார்கள். இவ்விடமே துரியாதீதம் என்ற அவஸ்தைக்கு மூல இடமாகும். இங்கு நீ வாசி வைத்து மூச்சை நிறுத்த வேண்டும்.

Koviloor Digital Library

மாட்டுற வரிசைகேளு வளமாகச் சொல்வேன்யானும்
வாட்டுற விடத்தேயோடில் வங்கென்று வுள்ளே வாங்கு
தீட்டுற நந்திக்குள்ளே சிங்கென்று கும்பித்தோங்கு
வாத்திற கோடியானு மங்கென்றா லகண்டமாமே. 692

அங்கென்று மூலசத்தியவள் வாயிலோங்காரந்தான்
பங்கென்ற சுழியோமாலும் பரிந்தேறி மணிக்குள் நிற்கும்
சிங்கென்று வுற்றுப் பார்க்கத் தெருவாறும் வெளியாய்க் காணும்
வங்கென்று வங்கிக் கும்பி மாணிக்க வெளி போலாமே. 693.

ஒளியாலே யுற்றுப்பாரு வோகோகோ நந்தி காண்பார்
தனியாலே கண்டாயானாற் றனிவாதஞ் சித்தியாகும்
வெளியிலே பூசைபண்ணி வேதாந்தி மதுவையுண்டு
களியிலே பாருபாரு கண்கொள்ளச் சோதிதானே. 694.

"வங்" கென்று மனதாற் செபித்து காற்றை இடப்புறம் வழியாக உள்ளே இழுத்து "சிங்" கென்று மூலத்திலுள்ள நந்தியிடம் நிறுத்தி "மங்" என்று செபித்தபடியே வலப்புறம் வழியாக வெளிவிட வேண்டும். மூலாதாரத்திலுள்ள தாயின் வாயில் ஓங்காரமிருக்கும். அதில் மனதை வைத்து வாசி கொண்டு ஊதினால் ஆறாதாரமும் வெளியாகத் தோன்றிப் பிரகாசிக்கும். அங்குள்ள நந்தியின் தரிசனத்தைக் கண்டால் யோகமும் ஞானமும் சித்தியாகும். ஆகவே அவ்விடத்தில் பூசை செய்து மதுவை உட்கொண்டு நின்றால் அங்குள்ள சோதியானது வெளித்தோன்றிப் பிரகாசிக்கும்.

தானென்ற பூமியெல்லாந் த்னியொரு தகழியாச்சு
வானொன்று வேலையெல்லாம் வார்த்திட நெய்யுமாச்சு
கானொன்று வொளியேபானு கலந்தெங்குத் தொத்தினாற்போல்
வேனொன்று மூலநந்தி விடுபட்டாற் கண்கொள்ளாதே. 695

கண்கொள்ளாச் சோதி காணக் கசடா வெளிதோ சொல்லும்
வண்கொள்ளாப் பரமேமூல மதன்மேலே நிர்த்தக்கர்த்தர்
விண்கொள்ளாப் பதமுங் கொள்ளா வேதாந்த
முடிவுங்கொள்ளாத்
தண்கொள்ளாப் பதத்தை நீயுஞ் சதநித்தஞ் சாதித்தேறே. 696

Koviloor Digital Library

பூமியே அகலாகும் மற்ற வஸ்துகள் அனைத்தும் நெய் போன்றது. இவை இரண்டையும் சேர்த்து விளக்கேற்றினால் எவ்வளவு ஒளியுண்டாகுமோ அவ்வளவு ஒளி மூலத்தில் தோன்றும். இதைக் காண்பது எளிதா என்ன? பரமே மூலம் அதன் மேல் நிர்த்தம் செய்பவரே கர்த்தராவார். (சிவபெருமானாவார்) இதன் பெரு மையைக் கூறுதற்கு ஆகாயம், பூமி போன்ற எதுவும் கொள்ளாது. ஆகவே அனு தினமும் இங்கு மனதை நிறுத்தி வாசி வைத்து ஏற வேண்டும்.

ஏறினா லெட்டுஞ்சித்தி யெடுத்திடுங் கவனமார்க்கம்
தேறினால் வாதிசித்தன் தேறாட்டால் மனுஷமாடு
வேறினாற் பார்த்தேனென்பார் வெளிச்சத்தைக்
கண்டேனென்பார்
கூறினால் மதுவைக் கொள்ளாக் குலாமர்கள்
சொல்லும் போச்சே. 697.

இவ்வாறு அனுதினம் அப்பியாசம் செய்யுங்கால் எட்டுவிதமான சித்திகளும் உண்டாகும். ஆகாயத்தில் சஞ்சரிக்கும் சக்தியும் உண்டாகும். அப்பியாசம் செய் யாமல் விட்டவர்கள் மாட்டிற்கு சமமாவார். வேறு சில பேர்கள் மூலத்தில் நான் சோதியைப் பார்த்தேன் என்று கூறுவார்கள். அப்படிப் பட்டவர்கள் எதையும் கண்டிருக்க மாட்டார்கள். அனைத்தும் வெறும் வார்த்தை தான்.

சொல்லிய பூசைபண்ணித் துட்டரே பெண்ணைச் சேர்வார்
வல்லியாள் தேவிபார்த்து மயக்கத்தா லழிவாயென்பார்
எல்லிய தினிற் செல்வா ரெழுந்திருந் தாடல்செய்வா
றல்லிய விதனைவிட்டே யப்பனே மூலம்பாரே. 698.

மூலமே பழக்கமாக மூட்டிநீ மதுவையுண்ணு
கோலமே வெளியாய்ப் போகுங் குமட்டிடு பிராணாயாமங்
காலேமே வங்கென்றூது கடுமூலஞ் சிங்கென்றூது
ஆலமே யுண்டானாட்டை யம்மம்மா காணலாமே. 699.

காணலா மென்றதாலே கண்டுசந் தோஷிக்காதே
பூணலா யதிலே நின்றே யுரைத்தாக்கால் மெத்தநன்று
தோணலாம் பொருளுந்தோணுஞ் சுருதிய னந்தந்தாண்டு
மாணலாய்ப் பூணுபூணு வகண்டந்தான் மூலம்பாரே. 700.

Koviloor Digital Library

வேறு சிலர் மூலத்தில் மனதை வைத்துப் பூசை செய்து பிறகு பெண்ணுடன் சேர்வார். கேட்டால் தேவியைப் பார்த்து மயக்கம் கொண்டு அழிந்து போவாய் என்பார். வேறு சிலர் பாட்டுப் பாடி நடனமாடிக் கொண்டு திரிவார்கள். இது போன்ற செயல்களை நீ செய்யாமல் மூலத்தில் மனதை நிறுத்து. மதுவை ஊட்டி வங்-சிங் என்று செபித்தபடியே மூச்சை உள்ளே இழுத்து நிறுத்தி பிராணாயாமம் செய்தால் மனதானது ஆனந்தக் களிப்பில் நிற்கும். அவ்வானந்தக் களிப்பில் அகப்பட்டு நிற்காமல் மேன்மேலும் மேலே சென்றால் கருதிய அந்தப் பொருளின் தரிசனம் கிட்டும். ஆகவே மனதை மூலத்தில் நிறுத்தி சித்தி செய்துகொள்.

மூலத்தின் மேலேநாலு மேற்றியங் குலமேதாண்டக்
கோலத்தின் காரவீடு கொள்கிய நிறந்தான் பொன்மை
சேலொத்த விதழ் தானாறு சேரலாம் பங்காறிட்டு
வேலொத்த சடத்தைப் பண்ணும் வேளர்தா மிருந்தவாறே. 701

இருக்கிற வேழார்கெந்த மெடுக்கிற தெல்லாங்காண்பார்
தருக்கிற குசவன்சாறு சாற்றுறே நன்றாய்க் கேளு
மருக்கிற மயிரெலும்பு வழங்கிய விறைச்சிதோலுஞ்
செருக்கிற் நரம்போடஞ்சு சேர்ந்திவர் கூறுதானே. 702

கூறான பிரமன்பக்கங் கூட்டியோ வாணிநிற்பாள்
வேறான தொன்றுமில்லை விரைந்துநீ வாசியூட்டு
தேறான சுவாதிஷ்டானந் துலங்கிய படியேபாரு
வாறான விரலின்மேலே யப்பனே மாலைபாரே. 703

மூலாதாரத்திற்கு மேல் நான்கு அங்குலம் தாண்டிச் சென்றால் பொன்னிறமான ஒரு இடத்தைக் காணலாம். இங்கு சதுர வடிவில் ஆறு இதழ்கள் நிற்கும். இதழ்களில் ப3-ப4-ம-ய-ர-ல என்ற எழுத்துக்கள் நிற்கும். இது பிருதிவியின் குணமான கெந்தம் என்ற வாசனையின் வீடாகும். இதில் நான்முக பிரம்மாவும் அவர் அருகில் வாணியான சரஸ்வதியும் நிற்பார்கள். இவரின் செய்கையாவது சிருஷ்டியாகும். மயிர் எலும்பு, இறைச்சி, தோல், நரம்பு போன்றவை இவரின் கூறாகும். இவ்விடத்தில் வாசியை வைத்து ஊதினால் சுவாதிட்டானம் என்ற மாலின் பதியைக் காணலாம்.

Koviloor Digital Library

மாலுக்குப் பிறையாங்கோட்டை மகாரங்கா ணதற்குட்பாரு
மேலுக்கு ளிதழ்தான்பத்து விரித்திட்ட யெழுத்தைக்கேளு
சேலுக்குள் பங்கைத்தொட்டுச் சிறந்திட்ட டவ்வாம்பத்து
வாலுக்குள் நிற்கும்பாரா யதனிறம் படிகந்தானே. 704

படிகமாம் வீட்டுக்குள்ளே பார்மேக வர்ணமால்தா
னடிகமாம் வாமபாக மலைந்தங்கே லட்சுமியும் நிற்பாள்
மடிகமா சத்தோடாறு மகத்துவங் காண்பார்காண்பா
ரெடியமாம் வாதங்கூறு மேத்துறேன் காணு காணே. 705

காணுநீர் மச்சைமூளை கருகிய வுதிரம்விந்து
தோணுநீ ரஞ்சுமாவார் துலங்கிய பொருள்தான் காணும்
வேணுநீ யிதற்குள்ளப்பா விரைந்துநீ வாசியூட்டு
வாணுநீ யலுவைக் கொண்டேயம்மம்மா வெளியாய்ப்
போமே. 706

இது பிறை போன்ற வடிவம் கொண்டதாய் இருக்கும். இப்பிறையைச் சுற்றிப்பத்து இதழ்கள் நிற்கும். இவ்விதழ்களில் ட3-ட4-ண-த1-த2-த3-த4-ந-ப1-ப2 என்ற எழுத்துக்கள் நிற்கும். நடுவில் 'ம'காரம் நிற்கும். இவ்வீட்டினுள் கார்மேக வண்ணனான விஷ்ணு நிற்பார் அவருக்கு இடது பக்கத்தில் என்றென்றும் பிரியாத லட்சுமி தேவி நிற்பாள். இவ்வீட்டின் நிறம் படிக வண்ணமாகும். இங்கே மனதை வைத்தால் அறுசுவையையும் அறிந்து கொள்ளலாம். நீர், மச்சை, உதிரம், முளை, விந்து - ஐந்தும் இவரின் கூறாகும். இவ்விடத்தில் மனதை வைத்து வாசி பூட்டி ஊதினால் அறுசுவையின் மேலுள்ள ஆசைகள் அகன்றுபோகும். இந்த இடத்திற்கு மணி பூரகம் என்று பெயர்.

போமிந்த விடத்தின் பேரும் பூரக வீடென்பார்க
ளாமிந்த விதன்மெலெட்டு வங்குலங் கடந்தாயானாற்
சேமிந்த திரிகோணந்தான் சிறந்திதழ் பன்னிரண்டாம்
வாமிந்த டவ்வைத் தொட்டு வழங்கிய சவ்வுமட்டே. 707

இதைக் கடந்து எட்டு அங்குலம் தாண்டினால் திரிகோண வீட்டை காணலாம். இதைச் சுற்றிலும் பன்னிரண்டு இதழ்கள் நிற்கும். க1-க2-க3-க4-ங-ச1-ச2-ஜ3-ஜ4-ஞ-ட1-ட2 என்பவை அப்பன்னிரெண்டு இதழ்களில் நிற்கும் எழுத்துக்களாகும்.

Koviloor Digital Library

மட்டான நடுவேகேளு வழங்கிய சிகார நிற்கு
மொட்டான நிறந்தான் செம்மை யொளிகோடி பானுவாகும்
திட்டான ரூபங்காட்டுஞ் சிவனோடு சத்தி நிற்பா
ளட்டான பொசிப்பு னடவான பயமுந்தூங்கே. 708

தூங்கவே யெழுப்பி மெள்ளச் சுகமாக பெண்ணைச் சேர்க்கு
மாங்கவே யஞ்சுமீசன் மத்தின தொழில் தானப்பா
வாங்கவே சிகாவீடு வாசிகொண்டு வூதுவூது
வோங்கவே பன்னிரண்டோ வுற்பனங் கேளுகேளே. 709

இதன் நடுவே "சி" காரம் நிற்கும். நிறம் சிகப்பாகும். இச்சக்கரத்தில் கோடி சூர்ய பிரகாசத்துடன் சிவனும் சக்தியும் கூடி நிற்பார்கள். புசிப்பு, சோம்பல், பயம், தூக்கம், பெண்சேர்க்கை போன்றவை இவர்களின் செயலாகும். இச்சிகாரவீட்டில் வாசிவைத்து ஊதினால் சிவபெருமான் வெளிப்போந்து பிரகாசிப்பார். இதை விடுத்து பன்னிரண்டு அங்குலம் தாண்டிச் செல்.

கேளுநீ விசுத்தியான கெடியான தலத்திலப்பா
வாளுநீ கோணமாறு வகாரங்கள் நடுவேநிற்கும்
வேளுநீ யிதழ்தானப்பா விளங்கிற்றே யீரெட்டாக
வாளுநீ யகாரந்தொட்டே யாகாகா வரைக்குவையே. 710

வைத்திட்டு நிறந்தான்கேளு வழங்கிற்று கறுப்பேயாகக்
கைத்திட்ட மகேசனோடு கன்னியு மங்கேநிற்பா
ளொய்த்திட்ட பரிசஞ்சொல்லா ருதகமாந் தொழிலைகேளு
மைத்திட்ட நடத்தலோடல் மயங்கிய திடத்திற்காணே. 711

காணது நிறத்தலோடு கலங்காமலிருத் தலஞ்சுந்
தோணது தொழிலாய்ச் செய்வார் சூட்சத்தை யின்னுங்கேளு
பூணது பொசிக்காலாகா பொங்கிய கோபஞ்சண்டை
யூணது சுமையைத்தாங்க வோங்கார வொகாரங்கேளே. 712

அங்கே விசுத்தி என்ற தலத்தைக் காணலாம். இது அறுகோண வடிவமாய் நிற்கும். அறு கோணத்தைச் சுற்றிப் பதினாறு இதழ்கள் நிற்கும். அ-ஆ-இ-ஈ-உ-ஊ-ரு-ரூ-லு-லூ-ஏ-ஐ-ஓ-ஔ-அம்-அஹ

Koviloor Digital Library

என்ற எழுத்துக்கள் அவ்விதழ்களில் காணப்படும். இத்தலத்தின் நிறம் கறுமையாகும். இங்கே மகேசனும்-மகேஸ்வரியும் நிற்பார்கள். நடை, ஓட்டம், மயக்கம், நீட்டுதல், நிறுத்தல் கலங்காது இருத்தல் போன்றவை இவர்களின் செயல்களாகும். மேலுங்கேள் புசித்தல், ராகம் கேட்டல், கோபமாக சண்டையிடுதல், தாக்குதல் போன்றவைகள் யாவும் இவர்களின் சூக்ஷும தொழிலாகும்.

கேளுநீ பொசிப்பைக்கண்டாற் கெடியாகத் திறக்கும்வாயை
வாளுநீ ருசிகளாறும் வாசலுக்கப் பாலில்லை
தாளுநீ பரந்தானின்ற தனித்ததோர் பீடமென்பார்
வேளுநீ யடிதானென்று விளம்புவார் பெரியோர்கேளே. 713

பெரியோர்கள் சொல்லைக்கேட்டேன் பேரேட்டின்
களையைவாங்கி
யரியோர் கணாலிற்றள்ளி யழைக்கிறார் பாரு பாரு
தெரியோர்க ணாலாலங்கே சிக்கென வங்கென்றூணும்
பரியோர்கள் தள்ளிச்சென்ற பளிச்சென்று தோணும்பாரே. 714

உணவைக் கண்டவுடன் வாயைத்திறந்து கொண்டு நிற்கும். இதைத் தாண்டினால் ருசிகள் இல்லாமற்போகும். இது பரம் பொருளான ஆத்மாவின் ஸ்தானம் என்று பெரியோர்கள் கூறுவர். ஆகையால் எட்டு இரண்டு கலைகளைக் கொண்ட வாயுவை இங்கே நிறுத்தினால் ஆதாரமானது பளிச்சென்று வெளியே தோன்றும்.

தோணிய தலத்தின் மேலே சூழ்விரல் பதினொன்றேற
வாணிய வண்டம் போலா யகாரங்கா ணடுவேநிற்கும்
வேணிய வட்டவீடு விளங்கிய விதழ்தான் ரெண்டு
பேணிய உறளவென்ற பொருள்ரெண்டு மிருந்தவாறே. 715

வாறிதினிறத்தைக்கேளு மகத்தான படிகவர்ணங்
கூறிதில் சதாசிவன்தான் கொள்கிய மணித்தாயோடு
தேறிதிற் சத்தங்காணச் செய்கிற தொழிலைக்கேளு
வேறிதிற் காமக்குரோதம் விளங்கிய லோபமாமே. 716

ஆமினி மோகத்தோடு மணங்கிய மதத்தோடஞ்சு
வோமினி யஞ்சுஞ் செய்வாருத்தமர் திக்கிற்கேளு

Koviloor Digital Library

காமினி பிரமன்மாலுங் கடுஞ்சிவன் மயேசனோடு
தாமினிக் காப்பார்திக்கைச் சதாசிவன் றளவாய் காணே.717

தளவாயைக் கண்டாயானாற் சச்சிதா னந்தங்காண்பாய்
தளவாயைக் கண்டாயானாற் றாயோடு சேர்ப்பார்பாரு
தளவாயைக் கண்டாற்கேளு சமுசயந் தீருந்தீருந்
தளவாயாட் டெடுத்தகன்னன் சாங்கமா யுரைத்துப்பாரே. 718

இதைத்தாண்டிப் பதினொறு அங்குலம் கடந்து செல். அங்கே அண்டம்போல் ஒரு தானமிருக்கும். அதன் நடுவே 'ய'காரம் என்ற எழுத்து நிற்கும். அதைச் சுற்றி அரைவட்ட வடிவில் ஒரு வீடிருக்கும். அதன் மேல் இரண்டு இதழ்கள் நிற்கும். ஹ-ள என்பது அவ்விதழ் களில் உள்ள எழுத்ததுக்களாகும். அங்கே படிக வர்ணமாய் சதாசிவனும் மனோன்மணித்தாயும் நிற்பார்கள். காமம், குரோதம், லோபம், மோகம், மதம் என்ற ஐந்து விதமான தொழில்கள் அவரைச் சார்ந்ததே. நான்முகன், மால், ருத்திரன், மகேசன் போன்றவர்கள் நான்கு திசைகளையும் காத்து நிற்பார்கள். சதாசிவன் தளவாயாவார் அவரைக் கண்டால் சங்கற்பம் விகற்பம் என்ற சட்டைகள் நீங்கிச் சந்தேகங்கள் விலகும். மேலும் உன்னைத் தாயாரோடு கூட்டி வைக்கும். இவ்விடத்தில் மனோன்மணியின் பீஜத்தை உச்சரிப்பாயாக.

உரைத்துநீ வாசிவைத்து ஆதிட்டு விந்தைபாரு
நிரைத்துநீ வர்னமஞ்சு நிலையாகத் தோன்றுந்தோன்று
மிரைத்துநீ போகாவாசி யிழுத்தங்கே நாலைக்கூட்டு
மரைத்துநீ வைத்தாயானால் மறையாது மணித்தாய்காணே. 719

தாய்காணு மட்டுமப்பா சமுசய மாயையெல்லா
மேய்காணுந் தொனிகளஞ்சு மும்மென்றாற் செணத்திலாகும்
காய்காணும் பிஞ்சுமாகுங் கவனமும் விண்ணைத்தாண்டும்
தோய்காணுத் தமரிற்புக்குஞ் சூட்சத்தை யுரைக்கக்கேளே. 720

உச்சரித்த பின்னர் வாசி வைத்தூதினால் ஐந்து விதமான வர்ணங்கள் தோன்றும். மேன்மேலும் வாசியை அவ்விடத்தில் வைத்து நின்றால் மனோன்மணித் தாயானாவள் ஒளியாகத் தோன்றுவாள். அவளைக் கண்டால் சகல விதமான சந்தேகங்களும்

Koviloor Digital Library

விலகும். மாயை எல்லாம் விலகிப் போகும். கவுன மார்க்கமும் பிரம்ம வித்தையும் கைகூடும். மேலும் சகஸ்ராரத்தில் புகுவதற்கும் அதுவே வழியாகும். அது மட்டுமின்றி ஐந்து புலன்களும் ஒடுங்கிப் போகும்.

கேளுநீ மணித்தாய் தாண்டிக் கெடிவிர லெட்டுமேலே
யாளுநீ குருபதந்தா னம்மம்மா வெளியாய்த்தோன்றும்
வேளுநீ யதற்குணின்று வீசிடு வாசிகொண்டு
வாளுநீ கீழே நின்று வரிசையுந் தோன்றும் பாரே. 721

அதைத் தாண்டி எட்டுவிரற்கடை தூரம் மேலே சென்றால் குருபதம் வெளியாய்க் காணும். இங்கே வாசி வைத்து நின்றால், கீழிலிருந்து வரிசையாக ஆதாரங்கள் ஆறும் தோன்றும்.

தோன்றிடு மேலேயப்பா சுகமான பதினொன்றேதா
னான்றிடுங் கேளுகேளு வாழியுன் மனையோடெட்டும்
வேன்றிடும் பரையதொன்று விளங்கிய பரமதொன்று
கான்றிடும் சினமேநின்ற காரணங் கண்டிலேனே. 722

கண்டிலா மார்க்கமெல்லாங் கண்டிரு நாசிநேரே
பொண்டிலாப் பிடரிக்குள்ளே யுற்றுப்பார் காணுங்காணும்
மண்டிலா வனாகதத்தில் வைத்துப்பார் காணுங்காணும்
தண்டிலா மூலம்பாரு தனிற்பதி னொன்றுங்காணே. 723

அதற்கு மேல் பதினொறு அங்குலம் தாண்டி நின்றால் துவாதசாந்தம் என்ற பதியை அடையலாம். அங்கே நின்று பார்த்தால் எட்டுவிதமான ஆதாரங்கள் மேல் நிற்கும் சக்திகள் யார் என்று புரியவரும். பரையான தேவியும் பரமானசிவனும் பல வடிவங்களில் பிரிந்து நிற்பதின் காரணத்தை நான் அறிந்ததில்லை. அனைத்து மார்க்கத்தையும் நீ காண வேண்டுமென்றால் துவாதசத்தில் நின்று உன் பிடரியை உற்றுப்பார். உனக்கு அனைத்தும் தெரிய வரும். அனாகதத்தை நோக்கினால் ருத்திரனும் ருத்திரியும் வெளியே தோன்றுவார்கள். மூலத்தில் மனதை வைத்து நின்றால் பதினொன்றாய் நிற்கும் ருத்திரர்கள் காட்சி அளிப்பார்கள்.

Koviloor Digital Library

கா்ணவே மதிக்குமேலே கலந்துபார னாகதத்தைப்
பூணவே நெஞ்சிற்பாரு புகழாவி பனிரண்டப்பா
தோ்ணவே மூலம்பாரு சுடர்க்கோடி தீயுங்காணு
மாணவே மூன்றும்பார்த்து வந்தந்த விடத்தைக்கேளே. 724

அனாகதத்தின் மேல் நிற்கும் இருதயத்தை உற்று நோக்கினால் ஆவிமயமாய் நிற்கும் பன்னிரண்டின் பொருள் விளங்கும். மூலத்தில் மனதை வைத்தால் நந்தியானவர் சோதிமயமாய்த் தோன்றி நிற்பார். இவ்வாறு மாறிமாறி நோக்கிப்பார்.

கேளுநீ மூலம் கீழே கெடியான நிராதாரந்தான்
வாளுநீ மூலமப்பா வழங்கிய துரியாதீதம்
வேளுநீ சுவாதிஷ்டானம் விளங்கிய துரியமாகுந்
சூளுநீ பூரகத்தைச் சுழியென வறிந்து கொள்ளே. 725

அறிந்துகொள் அநாகதத்தை யம்மமம்மா சுழுத்திவீடு
கறிந்துகொள் விசுத்திவீடு கனவெல்லாங் காணுங்காணுந்
தறிந்துகொள் மணித்தாய்வீட்டிற் சாக்கிரமெத்தவாகும்
பிறிந்துகொள் துரியாதீதப் பேர்குரு பதந்தான்பாரே. 726

மூலத்தின் கீழே இருப்பது நிராகாரப் பொருளாகும். மூலத்தில் துரியாதீதத்தின் ஸ்தானமாகும். சுவாதிஷ்டானம் துரியத்திற்கு இருப்பிடமாகும் மணி பூரகம் சுழுனையின் இருப்பிடமாகும். அநாகதத்தில் சுழுத்தி என்ற அவஸ்தை நிற்கும். விசுத்தியில் ஸ்வப்னம் என்ற அவஸ்தை நிற்கும். ஆக்கினையில் சாக்கிரம் என்ற அவஸ்தை நிற்கும். குருபதத்தில் துரியாதீதம் என்ற அவஸ்தை நிற்கும்.

பதத்தின்மே னிராகாரந்தான் பார்க்கிற வல்லோர்க்கப்பா
விதத்தின்மே லமுக்குப்பின்பு விருதய மிதுவேபேரு
மதத்தின்மேற் பார்த்தாயானால் வழியெல்லாந் தெரிந்து போகும்
குதத்தின்மேற் குய்யங்கண்டு குழையாதே சுணங்கா கேளே. 727

Koviloor Digital Library

அதற்கு அப்பால் சென்று பார்த்தால் நிராகாரப் பொருள் தோன்றும். நிராகாரப் பொருளின் ஸ்தானம் இருதயமாகும். இவ்விருதயத்தில் மனதை நாட்டிப் பார்த்தால் அனைத்து விதமான மார்க்கமும் உனக்கு விளங்கும். ஆகவே பெண்ணின் மர்ம ஸ்தானத்தைக் கண்டு நாய்போல் அலையாமல் நான் சொல்வதை கவனமாகக் கேள்.

சுணிங்கரே வாசிபோனாற் சூட்டயவேதை பொய்பொய்
சுணங்கரே பூசைபோனாற் சூட்டின துரைதான் பொய்பொய்
சுணங்கரே ஞானம்போனாற் றூக்காது குளிகைபொய்பொய்
சுணங்கரே மயிர்தோல் விட்டுச் சூட்சமாய் மூலம்பாரே. 728

வாசி என்ற பொருள் போனால் வேதை மார்க்கமனைத்தும் பொய்யாகும். பூசை மார்க்கங்கள் மறந்து போனால் சகல தொழில்களும் பொய்யாய்ப் போகும். ஞானம் உன்னை விட்ட கன்றால் குளிகையால் ஏற்படும் கவுனம் என்ற வார்த்தையே பொய்யாகும். ஆகவே தோலும் மயிரும் சேர்ந்த தேகத்தின் மேல் உள்ள பற்றை நீக்கி மூல யோகத்தைப் பழகு.

தத்துவங்கள் தொண்ணூற்றாறு

நின்றதோர் தத்துவத்தி னிலையெல்லாஞ் சொல்லக்கேளு
கன்றதோர் பூதமஞ்சு கூடியதோர் பொறிகளஞ்சு
வொன்றதோர் கன்மமஞ்சு வோகோகோ பிராணனஞ்சு
வன்றதோர் நின்றேயாடு மந்தமாங் கரணம் நாலே. 738

கரணத்தி லறிவுவொன்று காணப்பா விருபத்தஞ்சு
நிரனொத்த விருபத்தாறு நின்மல மானதப்பா
பொரனொத்த போதாந்தத்திற் புகழான தத்வமப்பா
வரனொத்த சித்தாந்தங்கேளு வர்மமா ருப்பைக்கேளே. 739

இனி தத்துவத்தைப் பற்றி கூறுகிறேன் கேள். ஐந்து பூதங்கள் ஐந்து பொறிகள், ஐந்து கன்மங்கள், பிராணன்கள் ஐந்து. அந்தக் கரணங்கள் நான்கு. அறிவு ஒன்று இவை எல்லாம் கூடி இருபத் தைந்து தத்துவமாக நிற்கிறது. இருபத்தாறாவது தத்துவம் நிர்மல மாகும். இவையாவும் போதாந்தத்தின் தத்துவமாகும். இனி சித்தாந் தத்தின் தத்துவத்தைக் கேள்.

Koviloor Digital Library

போதானந்த தத்துவத்தின் விளக்கம்

பஞ்சபூதங்கள் - ஜலம், அக்னி, வாயு, ஆகாயம், பிருதிவி
பஞ்ச பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி
ஐந்து கன்மங்கள் - வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம்
பிராணன் ஐந்து - பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன்
அந்தக்கரணம் நான்கு - மனம், புத்தி, அகங்காரம், சித்தம்
அறிவு மயமாக நிற்பது - ஜீவன்

இவை அனைத்தும் கூடினால் 25 தத்துவங்களாகும். 26வது தத்துவம் - பரப்பிரம்மம் பரமாத்மா.

கேளுநீ யிதனோடேதான் கெடிசிவ தத்வமஞ்சு
வாளுநீ வித்யாதத்துவம் வகையேழு மொன்றாய்க்கூட்டு
வேளுநீ முப்பத்தாறு விளங்குசித் தாந்தமாச்சு
வாளுமுன் கருவியப்பா வாகான பிறப்பைக்கேளே. 740

முன்கூறிய இருபத்து நான்கு தத்துவங்களுடன் சிவதத்துவம் ஐந்தும் வித்யா தத்துவம் ஏழும் கூடினால் முப்பத்தாறு தத்துவங்களாகும். இவை சித்தாந்த தத்துவங்கள் எனப்படும். இனி கருவிகளின் பிறப்பைக் கூறுகிறேன் கேள்.

கேளுநீ யாதாரந்தான் கெடியாறுராகமெட்டு
வேளுநீ வாயுவஞ்சு விளங்கு மண்டலமே மூன்று
தோளுநீ குணங்கள் மூன்று சொல்லஞ்சு கருவியஞ்சு
வாளுநீ வசனமஞ்சு வம்மம்மா வினைரெ ண்டாச்சே. 741

வேறு

ரெண்டோடே நாடிபத்துத் தாதோரேழு
நிலையான மலமூன்று வியாதிமூன்று
வொண்டோடே வருவதப்பா கேளுகேளு
வோகோகோ முன்சொன்னேன் முப்பத்தாறு
பண்டோடே தத்துவங்கள் குப்பைகுப்பை
பாரிலெல்லாம் பார்த்துமனம் பரிந்துதேறு
வண்டோடே பாஷாண வர்க்கமெல்லா
மறிந்தணைந்து பார்த்தவன் காண் வாதிதானே. 742

Koviloor Digital Library

ஆறாதாரம், மூன்று மண்டலம், குணங்கள் மூன்று, சொல் ஐந்து, கருவி ஐந்து, வசனம் ஐந்து, வினை இரண்டு, நாடி பத்து, தாது ஏழு, மலம் மூன்று, வியாதி மூன்று போன்ற கருவிகள் முன்சொன்ன முப்பத்தாறு தத்துவங்களிலிருந்து உண்டாயின. மொத்தத்தில் இவையெல்லாம் குப்பைக்கு சமானம். மனம் பிரம்மத்துடன் லயப்பட்டால் அனைத்தும் ஒழிந்து போகும். பாஷாண வர்க்கங்களை பகுத்தறிந்து பார்த்தவனே வாதியாவாள்.

தானென்ற தத்துவத்தை யறிந்தானாகில்
தவசியவ னறியாட்டால் சங்கமாண்டி
வானென்ற வத்துவித மறிந்தானாசான்
வகையறியான் குருவல்ல மாடுமேய்க்கி
கானென்ற சரக்குமுறை யறிந்தோன்வாதி
காணாட்டால் வாதியல்ல கழுதையோகி
யூனென்ற பெண்ணாசை விட்டோன்யோகி
வோகோகோ விடாவிட்டா லுலுத்தநாயே. 743

தத்துவங்களை அறிந்தவன் தவசியாவான். அறியாதவன் வேஷதாரியே. அத்துவிதத்தை அறிந்து உணர்ந்தவனே குருவாக முடியும். இல்லையேல் குருவாக முடியாது. சரக்கு முறையை அறிந்தவனே வாதியாவான். இல்லையேல் கழுதைக்குச் சமமாவான். பெண்ணாசையை விட்டவனே யோகி. விடாதவன் தெருநாய்க்கு சமமாவான்.

உலுத்தரவர் மாயிபதம் பண்ணாரோகோ
வோகோகோ வாதமென்று வோடிக்கேட்டு
வனுத்திளைத்துச் சுடுவா ரொன்றுங்காணா
ராதார மொன்றறியா ரகந்தை நாய்கள்
செலுத்துகிற முறையறியார் சிவனைக்காணார்
சேர்ந்துணர்ந்து சரக்கறியார் செவிட்டுமாடு
மலித்துநின்று மயக்கியதோர் பெண்ணைச் சொல்வார்
வாதமென்ன வெளிதோசொல் மனிதமாடே. 744

தெரு நாயானது தேவியைப் பூசிக்குமா? அதேபோல் மனிதர் களில் நாய் போன்றவர்கள் தாயை பூசிக்காமல் சரக்குகளைச் சுட்டுக் கரியாக்கி அகந்தை கொண்டு நாய் போல் அலைவார்கள். இவர்கள்

Koviloor Digital Library

யாவரும் சிவபெருமானையும், சரக்குகளின் வகையையும் அறியாத செவிட்டு மாடுகளுக்குச் சமமாவார்கள். மேலும் பெண்ணைக் கண்டு ஏங்கி நிற்கும் மனித மாடுகளேயாவர். வாதம் என்பது எளிதானதா?

மாடானால் விறகெடுக்கு முழுகுமப்பா
வாதியென்றாலதற்காகான் மாயக்கூடு
வீடானாற் காத்திருக்கு நாயேயானால்
வேட்டைக்குப் பலன்கொடுக்கும் விரவிக் கொள்வான்
நாடான கழுதையென்றா லழுக்கைத்தூக்கு
நலம்பெறவே யிதற்குமொவ்வா னாட்டுவாதி
யூடான தலமாறு முற்றுப்பாரா
னுலுத்தருக்குச் சொன்னமுறை யுண்மைகேளே. 745

மாடென்றால் சுமை தூக்கும். உழவுக்கு உதவும். பொய் வாதியானவன் அதற்கும் உதவ மாட்டான். வீட்டைக் காக்கும் நாயானது வேட்டைக்கும் உதவும். கழுதை என்றால் அழுக்கு மூட்டைகளைச் சுமக்கும். ஆனால் பொய் வாதியானவன் இவை எதற்கும் பயன்படமாட்டான். ஆறுதலத்தை அறியாதவர்களுக்கு நான் சொன்ன உவமைகள் சரியாகும்.

ஆமென்றாற் பிறந்ததப்பா வண்டங்கோடி
யல்லவென்று வழிந்ததப்பா வனந்தங்கோடி
வாமென்ற பானத்தால் மணித்தாய் செய்தாள்
மகத்துவந்தான் சிறுபிள்ளை வீடுமாச்சு
தாமென்ற வாண்மைவிட்டா லவளைக் காண்பார்
சாதகத்தா லேறிவந்தா லவளைக் காண்பார்
போமென்ற சாவுபொய்யா மேறினோர்க்குப்
பொற்குடம்போல் இருபதத்தைப் புகழந்துவாழே. 756

அவளுடைய உங்காரத்தால் கோடிக்கணக்கான அண்டங்கள் உண்டாயின. அதேபோல் அவளுடைய கோபத்தால் கோடிக் கணக்கான அண்டங்கள் அழிந்து போயின. ஆகவே, அவளுடைய பாதத்தில் மனதை வைத்து நான் என்ற அகங்காரத்தை விட்டு ஒருமைப்பட்ட மனதால் மேல்நோக்கி ஏறினால் சாவு பொய்யாய்ப் போகும்.

Koviloor Digital Library

வாழ்வார்க்குக் குருபதமே குகையுமாச்சு
மகத்துவத்தி னின்றோர்க்கு வீடுமாச்சு
கேழ்வோர்க்கு நாதமங்கே கேள்வியாச்சு
கெடியாகப் பேசுதற்குன் மனையுமாச்சு
தாழ்வோர்க்கு வீதிவிடக் குதிரைவாசி
யன்னமங்கே மதிக்குள்ள வமுதமாச்சு
தாழ்வோர்க்கு ராக்கால மணையவென்றால்
சச்சிதா னந்தப் பெண்ணைச் சார்ந்துபாரே. 757

மேலிருக்கும் குருபதமே குகையாகும். மகான்களுக்கு இதுவே வீடாகும். இங்கிருந்துதான் நாதம் உண்டாயிற்று வாசியான குதிர்ரை இவ்விடத்தை அடைந்தால் அமுதமாகும். உனக்கு இரவில் அணைப்பதற்கு பெண் தேவைப்பட்டால் சச்சிதானந்தப் பெண்ணைச் சார்ந்து பார்.

சார்ந்திந்தப் பெண்ணோடே கூடினாக்காற்
சதாநித்த மவளைவிட்டுத் தவறப்போகா
வேந்துகொங்கை யவளுக்கு விவேகமாச்சு
வேறில்லை கண்ணிரண்டு மொழியே யாச்சு
வாய்ந்து நின்று வவளதர முண்டாயானா
லாகாகா லகிரிக்கு ளவளாய்ப் போவாய்
போந்து பாரவள்புருஷ னாணோ பெண்தான்
போச்சுரெண்டு மொன்றாகப் பேணிப்பாரே. 758

இவளோடு கூடி நின்றால் சதாநேரமும் உன்னுடன் விளையாடிக் கொண்டிருப்பாள். விவேகமே அவளுடைய கொங்கையாகும். கண்ணிரண்டும் மொழிகளாகும். அவளிடத்தில் ஞானப்பால் உட்கொண்டால் உடனே லகிரியில் மயங்கிப் போவாய். அப்பொழுது அவள் புருஷருபமாய் நிற்பாள். பிறகு இருவரும் இணைந்து ஒன்றாவீர்கள்.

பாரப்பா சொரூபமணி வாயில் வைத்துப்
பரிவான கமலினியை உந்தியிலே கட்டி
நேரப்பா அஷ்டமா சித்திகாட்டி
நிலையாகச் சமாதியிலே புதைந்தபின்பு

Koviloor Digital Library

வேறப்பா வண்டமெல்லாந்தாண்டித் தாண்டித்
வெற்றுநின்ற பேரண்டப் புவனந்தாண்டிச்
சேரப்பா பதந்தாண்டி மனோன்மணியைக் கண்டு
தெண்டனிட்டே யப்பாலே செல்கின்றேனே. 759

சொருப மணியை வாயில் வைத்துக்கொண்டும் கமலினியை இடுப்பில் கட்டிக்கொண்டும் அஷ்டமாசித்திகளை அடைந்த பிறகு சமாதியில் இருந்தேன். அப்பொழுது நான் அண்டம் பேரண்டம் போன்றவைகளைக் கடந்து மனோன்மணியின் பதத்தை அடைந்தேன். அப்பதத்தை வணங்கி மேலே சென்றேன்.

செல்கின்றேன் மனவெளியி லாறுதளம் தாண்டி
சிறந்துநின்று வரிக்குள்ளே யாறுதலந்தாண்டிச்
செல்கின்றேன் ஞானதீபத்தைப் போற்றித்
திரும்பாமற் றமருக்குள் ளுள்ளேபுக்குச்
செல்கின்றே னகண்டத்திற் சென்றுதாண்டித்
திரும்பியொரு கோடிட்டேன் குளிகைமூன்றுந்
செல்கின்றன் வெட்டவெளிக் குள்ளேதானுந்
திரும்பியொரு கோடிட்டு வொளிகண்டேனே. 760

மனவெளியின் ஆறுதளமும் தாண்டிச் சென்றேன். பிறகு, வரிக்குள்ளே அறுதளம் தாண்டிச் சென்றேன். அப்பொழுது அங்கு கண்டஞானதீபத்தைக் கண்டு அதனுடைய தமரில் புகுந்து சென்றேன். அப்பொழுது முன்போல் வெட்ட வெளியைக் கண்டுவிட்டேன்.

வேறு

ஒளிகண்டே னொளியிற்குள்ளே யோடினேன் பாருபாரு
வெளிகண்டே னொளியுங் கண்டேன் விரைந்திட்டேன் கற்பமொன்று
தெளிகண்டேன் கோடிபானு திறந்திட்ட தெளிவுந்தாண்டி
யளிகண்டே னளிவுந்தாண்டி யப்புற முருவினேனே. 761

உருவியே யோடும்போதி லோகோகோ மணியைக் கண்டேன்
பருகியே பின்னுஞ்சென்றேன் பரவிய முரசுகேட்டேன்
தருகியே பின்னுஞ் சென்றேன் றனிச்சங்க நாதங்கேட்டேன்
அருகியே பின்னுஞ் சென்றே னஉறந்த பேரிகை போலாச்சே. 762

Koviloor Digital Library

ஆச்சொன்று பின்னுஞ்சென்றே னப்பனே மேகநாதம்
வாச்சென்று பின்னுஞ் சென்றேன் மகத்தான யிடிபோனாதம்
ஓச்சென்று வதற்குட் செல்ல வோகோகோ சிலம்பினோசை
மாச்சென்ற செவிடுமாச்சு மயங்கிற்று வொளியிற்கண்ணே. 763

கண்கெட்டேன் செவியுங் கெட்டேன் கருதிய நினைவுங்
கெட்டேன்
பண்கெட்டேன் குளிகைகெட்டேன் பறக்கிற விறகு கெட்டேன்
விண்கெட்டே னறிவுங் கெட்டேன் மேவுற பொருளுங்காணேன்
எண்கெட்டேன் சிலம்பினோசை யிழுக்குது வுயரக்காணே. 764

அவ்வொளியினுள்ளே மேன்மேலும் சென்றபொழுது ஒரு கற்ப காலம் முடிந்துவிட்டது. மேலும் செல்கையில் ஒரு பெரிய மணியைக் கண்டேன். அதையும் தாண்டிச் சென்ற பொழுது முரசு சத்தைக் கேட்டேன். மேலுஞ் செல்கையில் சங்கநாதமும் கேட்டேன். அதையும் தாண்டிச் செல்கையில் ஒரு பேரிசை சத்தம் உண்டாயிற்று. அதையும் கடந்து சென்றேன். அங்கு மேகநாதம் உண்டாயிற்று. மேலும் செல்லுகையில் இடிமுழுக்கம் கேட்டது. இவ்விடி முழக்கத்தினுள் செல்கையில் சிலம்போசை கேட்டது. அச்சிலம் போசையால் எனக்கு செவிடாகிவிட்டது. ஒளியால் என் கண்ணும் மங்கி விட்டன. அதைப் பற்றி என்னவென்று சொல்வேன்? கண், காது, நினைவு, குளிகை, கெவுனம், அறிவு போன்றவைகள் அனைத்தும் கெட்டுப்போய்விட்டன. சிலம்போசையில் சிக்கித் தவித்தேன்.

காணப்பா வென்ன சொல்வேன் கைவிடவோ கூடாது
வூணப்பா வெந்நீர் சூதமுணாதே யேகுதையோ
பூணப்பா வரைகளஞ்சும் புக்கினேன் பின்னொன்றேதோ
தோணப்பா கீழேனோக்கச் சூதமு நோக்கிற்றென்னே. 765

என்னவே கற்பமொன்று மெழும்பிநான் திரும்பிவந்தேன்
பன்னவே குளிகைகட்டிப் பறந்திட்டுப் பிழைத்து வந்தேன்.
மன்னவே யகண்டவீதி வரையொன்று காணேனையோ
முன்னவே குளிகைசித்தி முறைபார்த்தா லொக்கும்பாரே.766

ஓசைகள் என்னை மேலேமேலே இழுத்தன. கீழே வரவும் முடியாது. ஏனென்றால் கீழே கொப்புளிக்கின்ற வெந்நீர்போல் பாதரசம் ஓடிக் கொண்டிருந்தது. வரைகளைந்தும் தாண்டிப் பின்னே

Koviloor Digital Library

நோக்கச் சூதமும் என்னைப் பார்த்தது. இதற்குள் ஒரு கற்பகாலம் கடந்து விட்டது. குளிகை கொண்டு சென்றதால் பிழைத்தேன். இல்லையேல் அங்கேயே சிக்கித் தவித்திருப்பேன். இதுவரை யாரும் அந்த அகண்டவீதியைப் பார்த்ததில்லை. நீ பார்க்கவேண்டுமென்று ஆசை கொண்டால் முதலில் குளிகையைச் சித்தி செய்துகொள்.

வேறு

பார்த்ததொகுந் துரிசியுட சுன்னமப்பா
பரமான மணித்தாயும் பச்சைவர்ண
மேத்ததொக்கு மருள்பொருளும் ரெண்டுநேரா
யெடுத்துரைத்த முறைப்பாடு மியம்பக்கேளாய்
கோத்ததொக்கு நிஷ்களத்தைக் காணவென்றால்
குளிகையிட்டாற் காணாது கூடிடாது
மாத்ததொக்கும் லோகத்தோர் பூரணத்தைப் பார்க்கில்
மகத்தான பசியாலே வாய்த்திடாயே. 767

வாய்த்திட்ட வாதம் வந்தால் ஞானசித்தி
வாயாமற் போச்சுதென்றால் மனம் நில்லாது
வேத்திட்டுப் பொறியோடே யிழுத்துக் கொள்ளு
மெத்தனைதான் பிடித்தாலு மெடுத்துப் போடும்
காய்த்திட்ட மரமல்லோ கல்லைக்கொள்ளும்
காயாத மரமென்றுங் கல்லுண்ணாது
வோய்த்திட்ட வாதார மேறிப் பார்த்தே
யுரைந்த பின்பு வாதத்தை யூன்றிப்பாரே. 768

துருசின் சுன்னமும் மணித்தாயும் நிகரான வஸ்துக்களாகும் ஏன் எனில் மணித்தாயின் நிறமும் பச்சை. நிஷ்களத்தை குளிகையால் காண முடியாது. உலகத்தோர் பூரணத்தைப் பார்த்தால் மகாபெரிய பசியில் வாடுவார். (வறுமை கொல்லும்) ஆகவே வாதம் வந்தால் ஞானசித்தி உண்டாகும். இல்லையேல் மனம் ஒரு நிலைப்படாது. அப்படி வலுக்கட்டாயமாகப் பிடித்திழுத்தாலும் தள்ளிவிடும். காய்த்த மரமே கல்லால் அடிபடும். காயாத மரத்தின் மேல் யாரும் கல் எறிய மாட்டார்கள். ஆகவே ஆறாதாரத்தைப் பார்த்துப் பிறகு வாதம் செய்து பார்.

Koviloor Digital Library

ஊன்றுறது மாதார மூலமுன்னே
வோகோகோ பளிச்சென்ற வாறுங்காணும்
கான்றுறது சுடர்கோடி வன்னிவன்னி
கண்டுகொள்ள வண்டரண்டங் கைக்குட்காணும்
பூன்றுறது மெட்டுதிக்கி லெங்கென்றாலென்
போக்கேடே பார்த்தோர்க்குப் புகழாய்க்காணும்
ஆன்றுறது மங்கங்கே நின்றுநின்று
மளவிட்டுப் பார்த்துரைத்தே யகண்டஞ்சேரே. 769

மூலாதாரத்தில் சித்தி செய்தால் ஆறாதாரம் பளிச்சென்று காணும். கோடிசூரியனைப் போல் பிரகாசம் கொண்ட மூலப் பொருளைப் பார்க்கலாம். அண்டரண்டமும் கைக்குள்ளடங்கி நிற்கும் எத்திக்கிலிருந்தாலும் மூலத்தை முதலில் சித்தி செய்து பார்த்தால் பூரணப்பொருள் வெளியாகத் தோன்றும். அதைக் கண்ட பிறகு அகண்டத்தில் அடங்கி நில்.

வாசி யோகத்தின் பயனைக் கொங்கணவர் அற்புதமாக எடுத்துக் காட்டியுள்ளார். உணர்ச்சியோடு படிக்கும்போது கொங்கணவரோடு நாமும் விண்வெளியில் தாவிவிடுகிறோம்.

விண்வெளியைத் தாண்டி நட்சத்திர மண்டலத்தைக் கடந்து, பேரொளியாய்ப பரந்து கிடக்கும் தாயின் இருப்பிடத்திற்கே சென்றுவிடுகிறோம்.

அறிவியல் ஆய்வாளர் கூறுவதற்கும் இது பொருத்தமாக உள்ளது விந்தை. நட்சத்திர மண்டலத்திற்கப்பால் ஒரு பேரொளி உள்ளது. அதிலிருந்து நாள்தோறும் புதிய புதிய நட்சத்திரங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. பழைய நட்சத்திரங்கள் அழிந்து கொண்டும் இருக்கின்றன. இதை முற்றிலுமாக ஆராயும் திறன் இன்றைய மனிதனுக்கு இல்லை என்று கூறுகின்றனர்.

இதையே ஒளிப்பாழ் என்று சித்தாந்தம் கூறுகிறது. மணித் தாயின் இருப்பிடமாகச் சித்தர் கூறுவர். இந்த ஒளிப் பாழ்வரை சென்று கலீர் கலீர் என்று ஒலிக்கும் தாயின் சிலம்போசையைக் கேட்டதாகக் கொங்கணவர் கூறுகிறார். இதன் மூலம் சித்தர் நெறியின் இறுதி இலக்கையே கொங்கணவர் தொட்டுக்காட்டுகிறார்.

Koviloor Digital Library

வாசியோகத்தால் அடையும் பயன் இது. சித்தர் நெறியின் ஒரு பகுதியே வாசியோகம். மறு பகுதி கற்ப சாதனை. வாசியையும் கற்பத்தையும் இணையாகவே கையாள வேண்டும். ஒன்றை முதலிலும் இன்னொன்றைப் பிறகும் கைக்கொள்ள முடியாது.

பிராணாயாமம் செய்யத் தொடங்குகின்ற காலத்திலேயே கற்பம் உண்டு காயத்தைச் சித்தி செய்து கொள்ளவும் ஆரம்பிக்க வேண்டும்.

காயசித்தி என்பது உடம்பை அழியாத நிலைக்குத் தயாராக்குவது. அதற்கு வழி கற்ப மூலிகைகளையும் மற்ற மருந்துகளையும் உட்கொள்வது. யோக ஞான சாதனைகளுக்கு முதற்படியாக வைத்தியத்தையும் வாதத்தையும் சித்தர்கள் கூறியதன் காரணமே அதுதான்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவார். உடம்பார் அழியாமலிருக்கும் வரை உயிராரும் அழிய மாட்டார். தன் இறுதி இலக்கான இறைமை நிலையை அடையும்வரை இந்த உடம்பு தேவைப்படுகிறது. அதுவரை அதை அழியாமல் வைத்திருக்க வேண்டும். இதுவே சித்தர் நெறியின் அடிப்படை நோக்கம்!

இந்நூலில் உடல் தத்துவங்களைப் பற்றி அறிந்தோம். கற்பம் உண்ணாமல் காய சித்திபெறாமல் ஞானப் படிகளில் ஏறிச் செல்லவே முடியாது. அதனால் கற்பங்களைப் பற்றி அடுத்தபடியாகக் கவனிப்போம்.

எழுதியவர்கள் எல்லாம் கற்ப மூலிகைகளைப் பற்றி மட்டுமே எழுதியுள்ளனர். ஆனால் அதைத் தாண்டியும் அநேக கற்பங்கள் உள்ளன. சித்தர்கள் செய்தனர். உண்டனர். அவற்றையும் அறிந்து கொள்ள முயல்வோம்.

KOVILOOR ANDAVAN LIBRARY, KOVILOOR
A. No. 44965

Koviloor Digital Library

Koviloor Digital Library

தாமரை
நூலகம்